ஸ்ரீ

வில்லிபுத்தூராழ்வார் இயற்றிய

# மகாபாரதம்

தி.ப
2390

## கிருட்டிணன் தூதுச் சருக்கம்

உரையுடன்

370.288.4
வில்லி
SLIPR

LAKSHMI DEWI VETHAVANAM.
31 RAJASINGHA ROAD
WELLAWATTE
CEYLON
ASIA
WORLD
UNIVERSE

2390

சுன்னாகம்:

வட - இலங்கைத் தமிழ் நூற்பதிப்பகம்

பதிப்புரிமை பெற்றது] 1948 [விலை ரூபா 1-50

*Copyright Reserved*

PRINTED AT
THE THIRUMAKAL PRESS
CHUNNAKAM

# மகாபாரத வரலாறு

மகாபாரதம் சமஸ்கிருத மொழியிலே வியாசர் என்ற புலவராற் செய்யப்பட்டது. ஆதியில் துஷ்யந்தன் என்ற அரசனுக்குச் சகுந்தலைபாற் பிறந்த மைந்தனின் பெயர் பரதன். அவனே இந்தியாவை முதலில் அரசாட்சி செய்த காரணத்தால் இத் தேசத்திற்குப் பரதகண்டம் என்ற பெயர் உண்டாயிற்று என்று கூறுவர். பரதகண்டத்தைச் சமஸ்கிருதத்தில் **பாரத வர்ஷம்** என்றும் சொல்வர். இப் பாரத பூமியில் மிகப் பெரிய யுத்தமொன்று நிகழ்ந்ததாம். அந்த யுத்தத்தின் வரலாற்றை வியாசமுனிவர் **மகாபாரதம்** என்ற பெயரோடு எழுதி வைத்தார். வியாசர் என்னும் பெயரே காரணப்பெயர். சமஸ்கிருதத்திலே 'தொகுப்பவர்' என்பது பொருள். இருக்கு, யசுர், சாமம், அதர்வம் என்ற நான்கு வேதங்களும் கர்ண பரம்பரையாக வழங்கிவருங் காலத்து அவற்றைத் தொகுத்து நான்காக வகுத்து முறைப்படுத்திய காரணத்தால் இவருக்கு **வியாசர்** என்று பெயர் கொடுக்கப்பட்டது என்று கூறுவர்.

குரு என்ற ஓர் அரசனுடைய வம்சத்தில் திருதராட்டிரன் பாண்டு என்னு மிரு சகோதரர்களுதித்தனர். திருதராட்டிரனுக்குத் துரியோதனன் முதலாக நூறு புதல்வரும், பாண்டுவுக்குத் தருமன், வீமன், அருச்சுனன், நகுலன், சகாதேவன் ஆகிய ஐந்து மக்களும் உளர். பாண்டு புத்திரர் ஐவராகையால் இவர்கள் பஞ்சபாண்டவர் எனப் பெயர் பெற்றனர். பாண்டு இறந்த பின் தாய் குந்திதேவியுடன் அவர்கள் இந்திரப்பிரஸ்தம் என்ற நகரில் வாழ்ந்து வந்தனர். துரியோதனாதியர் அத்தினபுரி என்ற நகரில் இருந்து அரசியல் நடாத்தினர்.

அங்ஙாளில் பாண்டவர்கள் இராசசூயம் என்ற ஒரு பெரிய யாகத்தைச் செய்தபோது துரியோதனாதியர் இந்திரப்பிரஸ்தத்துக்குச் சென்று பாண்டவரின் சிறப்பைக் கண்டு பொறாமையுற்றனர். இப் பொறாமைதான் ஈற்றில் மகாபாரதப் போராக முடிந்தது.

துரியோதனனுக்குச் சகுனி என்றொரு மாமன்; மிக வஞ்சக நெஞ்சுள்ளவன். இவன் ஏவலால் துரியோதனன் பாண்டவர்களைத் தனது அரண்மனைக்கு அழைத்துத் தருமருடன் சூதாடி, நாடு நகர் யாவற்றையு மிழக்கச்செய்து காட்டிலே வசிக்க அனுப்பிவிட்டான். அன்றியும் பாண்டவர்களுக்கு ஒரே பத்தினியாகிய திரௌபதியை அரச சபையில் வைத்து அவளது துகிலையு முரிந்து மானபங்கஞ் செய்துவிட்டான்.

பாண்டவர்கள் தமது வாக்கை நிறைவேற்றுமாறு பன்னிரண்டு வருடம் வனவாசம் செய்தும் ஒரு வருடம் அஞ்ஞாதவாசம் (தம்மை யின்னாரெனக் காட்டிக்கொள்ளாது மறைந்துறைதல்) செய்தும் திரும்பிவந்து துரியோதனனிடம் தமது நாட்டைத் தரும்படி கேட்டனர். அவன் தர மறுத்ததால் பாரதப்போர் மூண்டு ஈற்றில் துரியோதனாதியர் அழிந்து பாண்டவரே நாட்டை யாண்டனர். பாண்டவர்களுக்குத் துணையாக ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா நின்று அவர்கள் வெற்றிபெறுமாறு உதவிபுரிந்தார்.

Lakshmi Devi Vethavanam.
31 Rajasingha Road
Wellawatte

# கிருட்டிணன் தூதுச் சருக்க வரலாற்றுச் சுருக்கம்

பாண்டவர்கள் வனவாசமும் அஞ்ஞாதவாசமும் முடித்த பின் உபப்பிலாவியம் என்னும் ஊரில் இருந்துகொண்டு ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியைத் துரியோதனனிடம் தூது செல்ல விடுத்த பகுதி இது. தருமன் முதலிய ஐவரும் திரௌபதியும் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியும் சாத்தகியென்ற அவன் தம்பியும் ஒரு நாள் கூடியிருந்து துரியோதனனிடம் தூதுபோகும் விஷயத்தை ஆலோசித்தனர். "துரியோதனன் நாடு திருப்பிக்கொடுக்க மறுத்தாலும், யுத்தம் செய்யவே எண்ணங்கொண்டிருந்தாலும், நாமும் அறநெறிகடந்து யுத்தம் செய்யத் துணிதல் நீதியாகாது. ஆகையால் துரியோதனன் கருத்தை நன்கறியவல்ல நீயே தூது போய்ச் சமாதானமாக வாழ்வதற்கு ஒழுங்குகள் செய்துவா" என்று தருமன் கிருஷ்ணனிடம் கூறினான்.

கிருஷ்ணன் மகாமாயன்; யாவரையும் சமாதானப்படுத்த எண்ணுவதல்லாமலும் தான் நினைத்த காரியத்தையும் சித்திபெறச் செய்வதில் நிகரற்றவன். ஆகவே, அவன் தந்திரமாகப் பாண்டவர்கள் ஒவ்வொருவரையும் தனித்தனி அபிப்பிராயம் கேட்டான்.

வீமன் தருமன் மேற் கோபித்தான். "முன் பாஞ்சாலியைச் சபையில் வைத்து மானபங்கம் செய்தபோதும் தருமன் எங்களை யெல்லாம் மௌனமாயிருக்குமாறு பணித்தான். இப்பொழுதும், நாங்கள் இவ்வளவு அவமானமடைந்திருக்க, இவன் சமாதானத்தை விரும்புவது அழகாகாது" என்று சீறினான்.

தருமன் தம்பியைப் பார்த்து, "குற்றமது பார்க்குங்காற் சுற்றமில்லை." ஆகையால் சகோதரர்களோடு கூடிவாழ்வதை விடுத்து அவர்களுடன் பகைக்கின் அது வசையாகும். துரியோதனாதியர் எங்கள் சகோதரர்கள். அவர்கள் எங்களுக்கு ஒரு குற்றம் செய்தால் மன்னித்துவிடுவதுதான் உத்தமம். அண்ணன் தம்பிமாரில் இப்படிப் பேதமுண்டாவது உலக வழக்கந்

தான். தன் கைவிரல் கண்ணிற் பட்டால் அதை வெட்டியெறிவதா? ஆகையால் சமாதானமே தகுந்தது" என்றான்.

அருச்சுனனும் வீமனைப்போலவே கனன்று பேசினான். "துரியோதனன் என்ன சொன்னாலும் கேட்கப் போவதில்லை. ஆகையால் கிருஷ்ணன்தான் தூதுபோனாலும் ஒன்றும் பலன் கிடையாது" என்று அவன் கூறினான்.

நகுலனு மவ்வண்ணமே கூறினான். "நமது வம்சத்துக் கடாத விதம் இரந்துகேட்பது வசை. முன்னர் எங்கள் குலத்திலுள்ளவர்கள் ஆண்மை படைத்தவர்கள். ஆகையால் நாமும் ஆண்மையிற் குன்றலாகாது. 'நாவலம்பூ தலத்தரசர் நாடிரந்தோமெனநம்மை நகையா வண்ணம், காவலன்றன் படைவலியும் எனதுதடம் புயவலியும் காண லாமே'" என்று அவ்விளையோன் தைரியமாகக் கூறினான்.

ஆனால், சகாதேவன் இவர்களைப் போலன்றிக் கிருஷ்ணனுடைய உள்ளக் கருத்தை நன்கறிந்தவன். ஆகையால் அவன் கிருஷ்ணனைப் பார்த்து, "யார் என்ன சொன்னாலு மென்ன; என்னதான் நடந்தாலுமென்ன; கடைசியில் நீ நினைத்ததுதான் செய்துமுடிப்பாய். உனது கருத்தையும் நானறிவேன். 'ஒருவருக்குந் தெரியாதிங் குன்மாயை யானறிவேன் உண்மை யாகத், திருவுளத்துக் கருத்தெதுவோ அதுவெனக்குங் கருத்தென்றான்.'"

ஸ்ரீ கிருஷ்ணன் உண்மையாகத் தனது மனதில் யுத்தத்தையே எண்ணியிருந்தானாகையால் அதைச் சகாதேவன் அறிந்துகொண்டான். கிருஷ்ணன் சந்தோஷத்தோடு அவனுக்கு இரகஸ்யமாக, "நீ இச் செய்தியை வேறொருவருக்கும் பேசாதே" என்று சொல்லிவிட்டுத் திரௌபதியைப் பார்த்தான். திரௌபதி அழத் தொடங்கினாள். தான் துரியோதனன் சபையிலே துகிலுரியப்பெற அங்கு கிருஷ்ணனேகாப்பாற்றிவைத்தான். இப்பொழுதும், துரியோதனாதியர் அழிந்த அன்றுதான் தனது அவிழ்த்துவிட்ட கூந்தலை முடிப்பதாக அவள் சபதம் கூறியிருக்கையில் அதை நிறைவேற்றி வைக்கக் கிருஷ்ணனே உதவி செய்யவேண்டுமென்று புலம்பினாள். கிருஷ்ணனுடைய தம்பி சாத்தகியும் திரௌபதிக்காகப் பரிந்து பேசினான். கிருஷ்ணன் திரௌபதியின் கண்ணீரைத் துடைத்து, "தங்காய், கவலைப்



படாதே; நான் தூதுபோய் மீண்டதன்பின் உனது கூந்தலை நானே முடித்து வைக்கிறேன்" என்று குறிப்பாகத் தனது எண்ணத்தைப் புலப்படுத்தினான்.

தருமன் கடைசியாக, "துரியோதனனிடம் நீபோய் எங்கள் இராச்சியத்தைக் கேள். தர மறுத்தால் ஐந்து ஊர் கேள்; அதுவுந் தர உடன்படாவிடில் ஐந்துவீடாவது குடியிருக்கக் கேட்டுப்பார். அதுவுந் தர மறுத்தால்தான் போருக்கழைக்கவேண்டும்" என்று சொல்லிக் கிருஷ்ணனைத் தூதனுப்பினான்.

அத்தினாபுரியில் கிருஷ்ணன் போய் இறங்கியதும் துரியோதனனது சிறிய தந்தை விதுரன்வீட்டில் தங்கியிருந்து மறுநாள் துரியோதனன் சபையில் சென்று தனது தூதை விளம்பினான். துரியோதனன் சிறிதும் இரங்கவில்லை. "அவர்களுக்கு நான் ஒரு ஈ இருக்குமிடமாவது கொடுக்கமாட்டேன்" என்று சொன்னான். கிருஷ்ணன் யாவற்றையும் பொறுத்துக்கொண்டிருந்துவிட்டுக் கடைசியாகப் போருக்குக் கையறையுமாறு ஒரு தூணிலறைந்து கேட்டான். துரியோதனன் சினந்து கிருஷ்ணனைத் தூஷித்தான். "உன் தகுதி யறியாது அரசனாகிய என்னிடம் போர் வேண்டுவதற்கு நீ யார்?" என்று சீறினான். கிருஷ்ணன் அவ்விடத்தை விட்டகன்றபின் விதுரன் அவனை வரவேற்றுபசரித்ததற்காகத் துரியோதனன் கோபித்தர்ன். விதுரனைத் திட்டினான். உடனே விதுரன் தனது வில்லை முறித்தெறிந்து "இனி நான் போரில் வில்லெடேன்" என்றுகூறிவிட்டு வெளியேறினான்.

கிருஷ்ணன் உடனே பாண்டவர்களின் தாயாகிய குந்தியைப் போய்க் கண்டு, கர்ணனே அவளுக்கு முதலில், சூரிய பகவான் அருளாற் பிறந்த முதற் குழந்தை என்று கூறி உண்மையை நிரூபித்தான். நிரூபித்துவிட்டு அவளைக் கர்ணனிடம் அனுப்பி இவ்விஷயத்தைச் சொல்லி அருச்சுனன்மேல் அவன் நாகாஸ்திரத்தை ஒருதரத்துக்குமேல் பிரயோகிக்காதவாறு வாக்குப்பண்ணுவித்தான். பின்னர் தந்திரமாக இந்திரனைக் கர்ணனிடம் அனுப்பி அவனிடமுள்ள கவசகுண்டலங்களைப் பெற்றுக்கொண்டான்.

இச் சூழ்ச்சிகளை முடித்துக்கொண்டு விதுரன் வீட்டுக்குத் திரும்பினான். துரியோதனாதியர் சும்மாவிருக்கவில்லை. அரசசபை

மண்டபத்தில் ஒரு நிலவறை சமைத்து, அதன்கீழ் அரக்கர் பலரை ஆயுதபாணிகளாக நிறுத்தி, மேலே பொறி வைத்து ஆசனமிட்டு மறுநாள் கிருஷ்ணனை அதிலுட்காரவைத்து வீழ்த்திப் பிடித்துச் சிறையிலிடச் சூழ்ச்சி செய்தார்கள். அங்ஙனமே மறுநாள் கிருஷ்ணன் அவ்வாசனத்திலிருந்து குழியில் விழுந்ததும் துரியோதனனது சூழ்ச்சியை உணர்ந்து உடனே விஸ்வரூபங் கொண்டு அரக்கர்களை அக்குழியில்தானே கொன்று வெளியேறினன். அங்கு துரியோதனனைப் பார்த்து, "துரியோதன, இக்கணமே உன்னையும் உன்னைச் சேர்ந்தோரையும் கொன்றொழித்துவிடுவேன். ஆனல் பாண்டவர்கள் தனித்தனி உங்களைக் கொல்லச் சபதமிட்டுள்ளனர். அவர்கள் கையால் மாழ்வதற்கு இடம் வைத்திருக்கிறேன்" என்று சொல்லிவிட்டுத் திரும்பி உபப்பிலாவியம் சேர்ந்தான். அங்கு பாண்டவர்களைக் கண்டு நடந்த வரலாற்றைக் கூறினன். ஆனல் கர்ணனிடம் சென்றதும், குந்திதேவியைக் கண்டதும் ஆகிய காரியங்களை மறைத்துவிட்டான் அக்கள்வன். ஏனெனில், கர்ணன் தங்கள் சகோதரன் என்றறிந்தால் தருமன் முதலியோர் யுத்தம்செய்ய மாட்டார்களல்லவா? அருச்சுனனும் அவனைக் கொல்ல ஒருப்படான். கிருஷ்ணனின் சூழ்ச்சி அத்தகைய திறமையானது.

---

# நூலாசிரியர் வரலாறு

வடமொழி மகாபாரதத்தைத் தமிழில் மொழிபெயர்த்தியற்றியவர்கள் பெருந்தேவனர், வில்லிபுத்தூராழ்வார், நல்லாப்பிள்ளை, அம்பலத்தாடுமையர், அஷ்டாவதானம் அரங்கநாதக் கவிராயர் என்பவர்கள். இவர்களுள் மிகச் சிறந்த நூலை யியற்றியவர் வில்லிபுத்தூரர் என்று யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. வில்லிபாரதமே சொற்சுவை, பொருட்சுவை கொண்டதென எவரும் எடுத்தாள்வர்.

ஸ்ரீ வில்லிபுத்தூரர் என்ற இவ் வைணவப் பிராமணர் கோயம்புத்தூரிலே சனியூர் என்ற இடத்தைச் சேர்ந்தவர். இவருடைய காலம் ஏறக்குறைய கி. பி. 15-ம் நூற்றுண்டின் பிற்பகுதி என்று ஆராய்ச்சியாளர் முடிவுகட்டியிருக்கின்றனர். **திருப்புகழ்** பாடிய அருணகிரிநாதரும் இவரும் ஒரே காலத்தவர். இக்காலமே சந்த விருத்தங்களில் புலவர்கள் அதிகமாக ஈடுபட்ட காலம். இவருடைய நூலிலேயுள்ள செய்யுள்களில் பெரும்பான்மையானவைகளில் இச் சந்த விருத்தங்களைக் காணலாம். கிருஷ்ணன் தூதுச் சருக்கத்திலேயே 191 முதல் முப்பது கவிகள் தனததனத்தன தனததனத்தன என்ற ஓசையிற் காணலாம். சகபாடியான அருணகிரிநாதர் பாடிய **கந்தரந்தாதி** என்ற நூலுக்கு உரை செய்தவர் வில்லிபுத்தூரர் என்று சொல்வர். இவ்வந்தாதி முழுவதும் யமகம்; அதாவது ஒவ்வொரு செய்யுளிலும் நான்கு வரிகளும் ஒரே முதலைக் கொண்டதாயிருக்கும். இந்நூலின் 54-ம் கவியாகிய,

திதத்தத்தத்தித்தத்திதிதாதைதாததுத்தித்தத்திதா
திதத்தத்தத்தித்ததிதித்தித்ததேதுத்துதித்தித்தத்தா
திதத்தத்தத்தித்தத்தைதாததீதேதுதைதாததத்து
திதத்தத்தத்தித்தித்திதீதீதிதிதுதிதீதொத்ததே.

என்ற செய்யுளுக்கு உரைகூறும்போது வில்லிபுத்தூரர் திகைத்ததாகவும் கூறுவர்.

வில்லிபுத்தூரர் தம்மிடம் தோற்றேடும் புலவரை அவமானப்படுத்துவதற்கு அவர்கள் காதை வெட்டுவார் என்று ஒரு

கதையுண்டு. இதனை "......குறும்பி யளவாக் காதைக் குடைந்து தோண்டி எட்டினமட் டறுப்பதற்கோ வில்லியில்லை......" என்பதனால் அறிக. அங்ஙனமே அருணகிரியிடம் தாமும் தோற்றபோது தமது அங்குசத்தை அவர் கையிற் கொடுத்து வெட்டச் சொன்னார் என்று கதை கூறும்.

வில்லிபுத்தூரரது புலமையைக் கேள்வியுற்றுக் கொங்குநாட்டிலே வக்கபாகை யென்னுமிடத்திலிருந் தரசாண்ட வரபதி யாட்கொண்டான் என்ற சிற்றரசன் புலவரை வரவழைத்து ஆதரித்துத் தமது சமஸ்தான வித்துவானாகச் சன்மானித்து வந்தான். அக்காலத்திற்றான் வடமொழி வியாச பாரதத்தைத் தமிழில் மொழிபெயர்க்குமாறு கேட்டுக்கொள்ள வில்லிபுத்தூராரும் அக்கால வழக்கிற்கேற்ப விருத்தப் பாக்களிற் பாடினார் என்று கூறுவர்.

வில்லிபுத்தூரர் என்ற பெயர் வைஷ்ணவஆழ்வார் பன்னிருவருள் ஒருவராகிய வில்லிபுத்தூராழ்வாருக்குப் பின் இவருக்கு இடப்பட்டது. திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள ஸ்ரீ வில்லிபுத்தூர் என்ற பதியில் பிறந்தவர் வில்லிபுத்தூராழ்வார். வைஷ்ணவ சம்பிரதாயப்படி அவர் பெயரால் வழங்கப்பட்டார் மகாபாரதம் பாடிய வில்லிபுத்தூரர்.

இப் பாரதத்தைத் தவிர இவர் **அழகரந்தாதி** என்று பெயரிய நூறு செய்யுட்கொண்ட ஓர் அந்தாதி நூலைச் செய்துள்ளார். இதற்கு அருணகிரிநாதர் உரை செய்தார் என்று கூறுவர்.

வில்லிபுத்தூரர் மதம் வைஷ்ணவமாயினும் சிவன்மேலும் பற்றுள்ளவரென்பது சிற்சிலசெய்யுட்களில் அவர் சிவனைக் குறிக்குமிடங்களிற் புலனாகும். ஆயினும், இதனை வைத்துக்கொண்டு சைவர்கள் இவர் மதம் சைவம் என்று வாதிப்பது பொருந்தாது. **மகாபாரதம்** முழுவதிலும் ஸ்ரீ கிருஷ்ணனைப் புலவர் வருணிக்குமிடங்களில் தெள்ளத்தெளிய அவர் வைஷ்ணவக் கொள்கையுடையவரென்பதும் துளசி பத்திரத்தில் விசேட பக்தியுள்ளவரென்பதும் தேற்றம். கிருட்டிணன் தூதுச் சருக்கத்தில் இது மிக விளக்கமாயிருக்கும். வில்லிபுத்தூரரது தனிப்பாடல்களெதுவும் கிடைத்தில.



வில்லிபுத்தூரர் இளமையிற் கல்லாத வரகவியென்று சொல்வது தவறு. அவரது நூலாகிய **பாரதச்** செய்யுள்களை யாராயும்போது பல வேறு நூல்களிலிருந்து சொற்றொடர்களையும் வருணனை மரபுகளையும் இரவல் கொண்டிருப்பது புலனாகும். கம்பர் தமது **இராமாயண**த்துள் பல விடங்களிலும் சடையப்ப வள்ளலின் பெயரை வைத்துப் பாடியதைப் பின்பற்றி இவரும் தமக்குதவிபுரிந்த கொங்கர்கோன் வரபதி ஆட்கொண்டான் பெயரை இடையிடையே நுழைத்துள்ளார். உதாரணமாக ஒன்று :

கோவல்சூழ் பெண்ணை நாடன் கொங்கர்கோன் பாவை வேந்தன்
பாவலர் மானங் காத்தான் பங்கயச் செங்கை யென்ன
மேவல ரெமரென் னாமல் வெங்களந் தன்னி னின்ற
காவலன் கன்னன் கையும் பொழிந்தது கனக மாரி.

**வில்லிபாரதத்**துள் மிகச் சுவையான பகுதிகள் கிருட்டிணன் தூதுச் சருக்கமும் பதினேழாம் பதினெட்டாம் போர்ச் சருக்கங்களுமாகும். சந்தச்செய்யுள் வல்லாராகையால் போர்ச் செய்யுட்கள் மிக வோசையோடு கூடியிருப்பதைக் காணலாம்.

காலத்துக்கேற்ற கோலமாக வில்லிபுத்தூரர் அளவுக்கு மிஞ்சி வடமொழிப் பதங்களையும் சந்தங்களையும் தத்திதம் அவ்வியம் முதலிய சொல் வகைகளையும் எடுத்தாண்டிருக்கிறார். இது ஆழ்வார் காலத்திலுண்டான மணிப்பிரவாளத்தை யொத்ததென்க. கிருட்டிணன் தூதுச் சருக்கத்துள் உரகபுங்கவன், புயங்கன், மந்தணம், ஆதபத்திரம், கோகநதம், நீராசனம் முதலிய சொற்கள் வந்தமை காண்க.

கிருட்டிணன் தூதினுள் வரும் வருணனைகள் யாவும் கவி மரபு வழி வந்தவைகளே. வாளை மீன் வாவியில் 'உகண்டெழு'தல், பூகமடல் பீறுதல், தாமரை வாவி, ஆம்பல் முல்லை முதலிய மலர்கள், வண்டு, சகோரம், சூரியோதயம், அஸ்தமனம், சந்திரன், தாரகைகள், மடந்தையர், 'அரவல்குல்', ஊடல், கணிகையர், சுறுமீன், 'வேலைசூழ்ஞாலம்' முதலிய யாவும் இரவற் பொருள்களென்பது புலனாகும். அன்றியும் இவர் புனைந்து சிறப்பிக்குமிடங்களிற் கற்பனாவேகம் பிரமாணப் புலன் தவறிவிடுவதை அத்தினாபுரியின் அகழி, மதில், சேனை

களின் தன்மை, நிலவறையில் அரக்கர் மல்லர் முதலியோர் எண்ணிக்கை முதலியவற்றினாலறியலாம். அடைச்சொற்கள் மிகுத்துக் காணப்படுகின்றன. அரசர் யாவ்ருக்கும் எந்த இடத்திலும் 'மாலையணிந்த' என்று அடை கொடுத்தது வில்லிபுத்தூரரது ஒரு வழக்கு. 'விரைசெய்தாரவன்,' 'கொந்தவி ழலங்கலான்,' 'மன்றலந் தெரியல் வெய்யோன்' முதலிய தொடர்களைக் காண்க. அன்றியும் துரியோதனன் தன் பகைவர் பாண்டவரைக் குறித்த போதும் 'வேய்மலர்த் தொடையலவர்' என வுரைத்தமையையும் அவதானிக்க.

ஆயினும், பொருட் டொடர்பு பற்றிய கதைப் போக்கு வில்லிபுத்தூரர் கைத்திறமையிற் காணப்படுகிறது. கிருஷ்ணன் தூதுச் சருக்கத்தில் தருமன் சமாதானமே சிறந்ததென எடுத்துக் கூறும் நியாயங்கள், 'குற்றமது பார்க்குங்காற் சுற்றமில்லை'; 'கண்மலரிற் கை படாதே' முதலியன அழகாயிருப்பதைக் காண்க. கர்ணனது தற்புகழ்ச்சி நிறைந்த பேச்சு; சகுனி முதலியோரால் துரியோதனன் கெடுமதிக்குள்ளானான் என்பதற் கடையாளமாகக் கிருஷ்ணனை வரவேற்கத் துரியோதனன் அணிசெய்யக் 'கொடுமை கூர்' சகுனி தடுத்தமை; கிருஷ்ணன் கர்ணனை நாகாஸ்திரம் பிரயோகிக்காது தடுக்கவும் தற்காப்புக்கான கவச குண்டலங்களைப் பெறவும் முன்னேற்பாடாகச் செய்த தந்திரங்கள், முதலிய சந்தர்ப்பங்கள் நன்கமைக்கப்பட்டிருக்கின்றன. ஓரோவிடங்களிற் கதா பாத்திரங்கள் வாயினாலே அரசதர்மம், உலகியல் வழக்கு முதலிய நீதிவாக்கியங்களைப் புகட்டும் அலங்காரம் ஒரு தனி. இதனைச் செய்யுள் 52, 95, 118, 128, 142, 143, 173, 177 ஆகியவற்றில் காண்க.

இப் பாரதத்துக்குப் பாயிரம் செய்தவர் வில்லிபுத்தூரரது மகனார் வரந்தருவார் என்பர்.

---

# கிருட்டிணன் தூதுச் சருக்கம்

### வணக்கம்

1. பேர்படைத்த விசயனுடன் மும்மைநெடும் பிறவியினும்
பிரியானாகிச், சீர்படைத்த கேண்மையினாற் றேரூர்தற் கிசைந்
தருளுஞ் செங்கண் மாலைப், பார்படைத்த சுயோதனற்குப் படை
யெடே னமரிலெனப் பணித்த கோவைக், கார்படைத்த நிறத்
தோனைக் கைதொழுவார் பிறவாழிக் கரைகண் டாரே.

### சஞ்சயன் சென்றபின்பு தருமன் கண்ணனைநோக்கிச் சொல்லுதல்

2. ஞானமன்பொ டினிதுரைத்து ஞானமுனி யகன்றதற்
பின் சாம பேத, தான தண்ட மெனநிருபர் தருமமுறை மையிற்
புகலுந் தகுதி நோக்கித், தூநறுந்தண் டுளவோனைத் தூதுவிடு
வதற்கெண்ணிச் சுனைக டோறு, மேனலந்தண் கிரிப்பெருந்தே
னிறைக்குமெழிற் குருநாட னியம்பு வானே.

### கண்ணனை விழித்துத் தருமன் கூறுதல்

3. செஞ்சொன்முனி சஞ்சயனுக் கியாமுரைத்த கருமமு
முன் சென்ற காலை, யஞ்சொன்முனி புரோகிதனுக் கவனிசைத்த
கருமமுநீ யறிதி யன்றே, நஞ்சுதனை மிகவருந்தி நன்மருந்து
மந்திரமும் விரைந்து நாடா, நெஞ்சினர்தங் களைப்போல விருக்கு
மதோ யார்மனத்து மிருக்குஞ் சோதீ.

### தருமனையும் அவன் தம்பியரையும் நோக்கிக் கண்ணன் கூறுதல்

4. அருஞ்சமரம் புரியும்வகை யவருரைத்தா ரானாலு மற
மொன் றின்றிப், பெருஞ்சமரம் விளைக்குமது கடனன்றென்
றருள்வெள்ளம் பெருகக் கூறும், பொருஞ்சமர நெடுமுரசப் பூங்
கொடியோன் றனைநோக்கிப் புயப்போர் வாண, னிருஞ்சமரந்
தொலைந்தபிரா னிளைஞரையு முடனிருத்தி யியம்பு வானே.

5. செய்வரா லினமுகளுந் திருநாடு பெறநினைவோ சென்று
மீளப், பைவரா யருங்கானிற் பயின்றுகிரி தரநினைவோ பகைத்த
போரி, லுய்வரா ரெனவிரைவி னுருத்தெழுந்து பொரநினைவோ
வுண்மை யாக, வைவரா மவனிபர்க்கு நினைவேதென் றருள்புரிந்தா
னமரர் கோமான்.

**சமாதானமே சிறந்ததெனத் தருமன் கண்ணனை நோக்கிக் கூறுதல்**

6. வயிரமெனுங் கடுநெருப்பை மிகமூட்டி வளர்க்கினுயர்
வரைக்கா டென்னச், செயிரமரில் வெகுளிபொரச் சேரவிரு திறத்
தேமுஞ் சென்று மாள்வேங், கயிரவமுந் தாமரையுங் கமழ்பழ
னக் குருநாட்டிற் கலந்துவாழ, வுயிரனையாய் சந்துபட வுரைத்
தருளென் றானறத்தி னுருவம் போல்வான்.

**கண்ணன் கூறுதல்**

7. அரவுயர்த்தோ னுடன்மறுசூ தாடிநீர் வென்றவந்நா
ளவன்றான் சொன்ன, விரதமொழி தவிராமல் வெங்கானம்
போய்மீண்டீர் வெய்யோ னுங்கள், குருநிலத்திற் பாதியினிக்
கொடாதிருந்தா லங்கவனைக் கொன்று போரி, லிருநிலத்தை
யாளவினித் துணிவதே கடனென்றா னெம்பி ரானே.

**தருமன் கூறுதல்**

8. சூரவரையுங் கிளைஞரையுங் குலத்துரிய துணைவரையுங்
கொன்று போர்வென், றரவநெடுங் கடலாடை யவனியெலாந்
தனியாளு மரசு தன்னிற், கரவுறையு மனத்தாதை முனிக்
குரைத்த மொழிப்படியே கானந் தோறு, மிரவுபகற் பலமூல
சாகநுகர்ந் துயிர்வாழ்த லினிது நன்றே.

**கண்ணன் அது தகுதியன்றெனல்**

9. கோதிலா னிந்தமொழி கூறுதலு மாமாயன் கூற லுற்
றான், மோதமருக் கிளைத்துநீர் மொய்த்தபெருங் கானகத்தே
முடுகிச் சென்றாற், பூதலத்தோ ரேசாரோ புகன்றபெரு வஞ்சின
மும் பொய்த்தி டாதோ, நீதியோ வெனவுரைத்தா னாங்கதற்கு
நிகழ்தரும னிகழ்த்த லுற்றான்.

**கண்ணனைத் தூதுபோகுமாறு தருமன் வேண்டுதல்**

10. நீதூது நடந்தருளி யெமதுநிலை வவர்க்குரைத்தா
னினைவின் வண்ணந், தாதூதி யளிமூரா லுந் தண்பதியுந் தாயமுந்
தான் றாரா னாகின், மீதூது விளக்குலமும் வலம்புரியு மிகமுழங்க
வெய்ய காலன், மாதூதர் மனங்களிக்கப் பொருதெனினும்
பெறுவனிது வசையு மன்றே.

11. முந்தூர்வெம் பணிக்கொடியோன் மூதூரி னடந்துழ
வர் முன்றி றோறு, நந்தூரும் புனனாட்டின் றிறம்வேண்டு



நாடொன்று நல்கா னாகி, லைந்தூர்வேண் டவையி லெனி லைந்திலம்
வேண் டவைமறுத்தா லடுபோர் வேண்டு, சிந்தூரத் திலகநுதற்
சிந்துரத்தின் மருப்பொசித்த செங்கண் மாலே.

**வீமன் வெறுப்பு**

12. மூத்தோன்மற் றிவையுரைப்ப விளையோன்வெஞ்
சினமனத்தின் மூள மூள, நாத்தோமி லுரைபதறக் கதுமென
வுற் றெழுந்திறைஞ்சி ஞால மெல்லாம், பூத்தோனே பூந்தவிசிற்
பூவைபுணர் மணிமார்பா புன்மை யாவுந், தீர்த்தோனே யூனமி
லான் மானமிலா துரைப்பதற்கென் செய்வ தென்றான்.

**தருமனைநோக்கி வீமன் கூறிய வெஞ்சினம்**

13. விரிகுழற்பைந் தொடிநாணி வேத்தவையின் முறை
யிடுநாள் வெகுளே லென்று, மரபினுக்கு நமக்குமுல குள்ளள
வுந் தீராத வசையே கண்டா, யெரிதழற்கா னகமகன்று மின்
னமும்வெம் பகைமுடிக்க விளையா நின்றா, யரவுயர்த்தோன்
கொடுமையினு முரசுயர்த்தோ யுனதருளுக் கஞ்சி னேனே.

14. கானாள வுனைவிடுத்த கண்ணிலா வருளிலிதன் காதன்
மைந்தன், றானாளுந் தரணியெல்லா மொருகுடைக்கீழ் நீயாளத்
தருவ னின்றே, மேனாணம் முரிமையறக் கவர்ந்தபெருந் துணைவ
னுனை வெறாத வண்ணம், வானாள வானவர்கோன் றன்பதமற்
றவன்றனக்கே வழங்கு வேனே.

**வீமன் கண்ணனை விழித்துக் கூறல்**

15. போர்முடித்தா னமர்பொருது புலம்புறுசொற் பாஞ்
சாலி பூந்தண் கூந்தற், கார்முடித்தா னிளையோர்முன் கழறிய
வஞ் சினமுடித்தான் கடவுட் கங்கை, நீர்முடித்தா னிரவொழித்த
நீயறிய வசையின்றி நிலையின் றேங்கும், போர்முடித்தா னிப்
படியே யார்முடித்தா ரிவனுடனே பிறப்பதே நான்.

16. அணிந்துவருஞ் சமரிலெதிர்ந் தரவுயர்த்தோ னுட
னரச ருடல் மெல்லாந், துணிந்திரண்டு படப்பொருது தொல்லை
யுல கரசாளத் துணிவ தல்லாற், றணிந்தறமுங் கிளையுறவுங்
கொண்டாடித் தானின்னந் தனித்தூ தேவிப், பணிந்திரந்து புவி
பெற்றுண் டிருப்பதற்கே துணிகின்றான் பட்ட பாடே.

### தருமன் சமாதானஞ் சொல்லுதல்

17. பரிவுடன்மற் றிவைகூறும் பவனகுமா ரனைமலர்க்கை பணித்து நோக்கிக், குருகுலத்தோர் போரேறே குற்றமது பார்க் குங்காற் சுற்றமில்லை, பொருகுலத்திற் பிறந்தார்க •ளுடன்வா ழும் வாழ்வினைப்போ லுறுதி யுண்டோ, விருவருக்கும் வசை யன்றோ விருநிலங்கா ரணமாக வெதிர்ப்ப தென்றான்.

18. உரிமையுடன் றம்பியரன் றுணர்வறியா மையினவைக்க ணுரைத்த மாற்றம், பரிபவமோ கேட்டோர்க்குப் பரிபவமென் பதுபிறராற் பட்டாலன்றோ, கருதிலது மற்றெவர்க்கு மொவ் வாதோ கண்மலரிற் கைபடாதோ, பொருதொழிலுங் கடைநிலத் திற் கிடந்ததே யெனமொழிந்தான் புகழே பூண்பான்.

### வீமன் தருமனை நோக்கிக் கூறுதல்

19. சூடுகின்ற துழாய்முடியோன் சுரருடனே முனிவர்க ளுஞ் சுருதி நான்குந், தேடுகின்ற பதஞ்சிவப்பத் திருநாடு பெறத் தூது செல்ல வேண்டா, வாடுகின்ற மடப்பாவை தன்வரமு மென்வரமும் வழுவா வண்ணங், கோடுகின்ற மொழியவன்பா லெனைத்தூது விடுகவினிக் கொற்ற வேந்தே.

20. மலைகண்ட தெனவென்கைம் மறத்தண்டின் வலிகண்டு மகவான் மைந்தன், சிலைகண்டு மிருவர்பொருந் திறல்கண்டு மெமக் காகத் திருமா னின்ற, நிலைகண்டு மிவள்விரித்த குழல்கண்டு மிமைப்பொழுதி னேரார் தம்மைக், கொலைகண்டு மகிழாம லவன் குடைக்கீ ழுயிர்வாழக் குறிக்கின் றாயே.

### கண்ணன் வீமனைச் சமாதானப்படுத்துதல்

21. வெம்புயலி மனும்வெகுண்டு மீண்டுமிவை யெடுத் துரைப்ப மேக மேனிப், பைம்பொனெடுந் தனித்திகிரிப் பரந் தாமன் கருணையுடன் பரிந்து நோக்கி, யம்புவியின் முன்பிறந்தோ ரரசுநெறி முறையுரைத்தா லதுகேளாமற், றம்பியரு மறுப்பரோ தலைவவினிக் கடுங்கோபந் தணிக வென்றான்.

### அருச்சுனன் கூறுவது

22. மைக்கால முகிலூர்தி வானவர்கோன் றிருமதலை வணங்கி நின்று, முக்காலங் களுமுணரு முகுந்தனுக்கு முதல்வ னுக்கு மொழிவான் மன்னோ, வக்காலம் பொறுத்தவெலா மமை



யாம வின்னமிருந் தறமே சொன்னு, லெக்காலம் பகைமுடித்துத் திரௌபதியுங் குழன்முடிக்க விருக்கின் றாளே.

23. தேவரா யினும்பழைய தெயித்தியரா யினுமற்றுஞ் செப்பு கின்றோர், யாவரா யினுமெதிர்ந்தோ ருயிருணவென் றிருப்பதுவே யென்கை வாளி, மூவரா யவர்களுக்கு முதல்வனு கியமூர்த்தி முகிறேய் பூக, மீவரா லுகளும்வயற் குருநாடென் னிவனவன்பால் வேண்டு மாறே.

24. தீண்டாத கற்புடைய செழுந்திருவைத் துகிலுரியச் செயலொன் றின்றி, தீண்டானே கரியானே நிமலாவென் றரற் றினளாய் நின்று சோர, மாண்டார்போ லதுகண்டு மன்னவை யில் யாமிருந்த மாசு தீர, வேண்டாவோ வேண்டுவது மேம்படு நல் லறமேயோ வேந்தர் வேந்தே.

25. பொன்னுருந் திகிரியினன் போனுலும் பொறைவேந் தன் புகன்ற வெல்லாஞ், சொன்னுலு மவன்கேளான் விதிவலி யாற் கெடுமதிகண் டோன்று தன்றே, யெந்நாளு மூவர்நிலத்தி னென்முளைவித் திடினும்விளை வெய்தி டாது, பன்னுகந் தனக் கமிர்தங் கொடுத்தாலும் விடமொழியப் பயன்கொ டாதே.

### நகுலன் சொல்வது

26. பார்த்தனிவை புகன்றிறைவன் பணித்தருள விருந்த தற்பின் பரிவி னேடுந், தீர்த்தனிரு பதமிறைஞ்சித் தருமனையுங் கைதொழுது சினங்கொள் வேலா, னீத்தநெடுங் கடலெழுபா ரடலைவர் பெறுவரெனு நிகழ்ச்சி பொய்யோ, கோத்தருமந் தனி லாண்மை கூறுதோ கூறுகநீ கொற்ற வேந்தே.

27. கேவலந்தீர் வலியபகை கிடக்கமுதற் கிள்ளமழைக் குக் கிரியொன் றேந்து, கோவலன்போ யுரைத்தாலுங் குருநாடு மரசுமவன் கொடுக்க மாட்டா, னுவலம்பூ தலத்தரசர் நாடிரந்தோ மெனநம்மை நகையா வண்ணங், காவலன்றன் படைவலியு மெனதுதடம் புயவலியுங் காண லாமே.

28. அன்னநடை யாம்பைதனை யவுணர்கவர்ந் திட விமையோ ரரசுக் காக, முன்னமவ ருடன்பொருது சிறைமீட்டா னங்குலத்து முதல்வ னன்றோ, மன்னவையில் யாம்காண மட வாலைத் துகிலுரிந்த வலியோன் றன்பா, லின்னமிரந் தவன் குடைக்கீ ழிருந்தக்கா ணம்மையுல கென்சொ லாதே.

29. கானெறிபோய்க் கரந்துறைந்து கடவநாள் கழித்த
தற்பின் கான நீங்கி, யீனமிலா வகைவந்தார் நந்துணைவ ரெனச்
சிறிது மிரங்கா னாகின், மாநகரும் வளநாடு முரிமையுந்தன்
மொழிப்படியே வழங்கா னாகிற், றானறியா தவன்பிறர்போய்க்
கற்பித்தா லறிவனோ தரணி வேந்தே.

சகாதேவன் கருத்து

30. நகுலனிவை யுரைத்ததற்பி னன்றெனக்கை யமைத்
தருளி நகுலன் சொல்லு, மிகல்விசயன் றன்மொழியுந் திறல்
வீம னியம்பியதும் யாவும் கேட்டோம், புகலரிய வுணர்வுடை
யோய் புகழுடையோய் திறலுடையோய் புகனீ யென்ன, முகி
லனைய திருமேனி முகுந்தனுக்கு மனமுருக மொழிகின் றானே.

31. சிந்தித்த படிநீயுஞ் சென்றாலென் னொழிந்தாலென்
செறிந்த நூறு, மைந்தர்க்குண் முதல்வனிலம் வழங்காம லிருந்
தாலென் வழங்கி னாலென், கொந்துற்ற குழலிவளு முடித்தா
லென் விரித்தாலென் குறித்த செய்கை, யந்தத்தின் முடியும்
வகை யடியேற்குத் தெரியுமோ வாதி மூர்த்தி.

32. முருகவிழ்க்கும் பசுந்துளப முடியோனே யன்றலகை
முலைப்பா லுண்டு, மருதிடைச்சென் றுயர்சகடம் விழவுதைத்
துப் பொதுவர்மனை வளர்ந்த மாலே, யொருவருக்குந் தெரியாதிங்
குன்மாயை யானறிவே னுண்மை யாகத், திருவுளத்துக் கருத்
தேதுவோ வதுவெனக்குங் கருத்தென்றான் றெய்வ மன்னன்.

கண்ணன் யுத்தமின்றி வேறு உபாயஞ் சொல்லும்படி
சகாதேவனை வேண்டுதல்

33. இவ்வண்ணம் சாதேவ னியம்புதலு நகைத்தருளி
யிகலோர் சொன்ன, வவ்வண்ணம் புகலாமல் விரகுரைத்தா னிவ
னென்ன வவனோ டாங்கோர், பைவண்ண மணிக்கூடந் தனி
லெய்திப் பாரதப்போர் பயிலா வண்ணம், முய்வண்ணஞ் சொல்
லுகநீ யுபாயமெனத் தொழுதுரைப்பா னாரங்கோள் வேலான்.

## வேறு

சகாதேவன் உத்தரம்

34. நீபா ரதவமரில் யாவரையு நீறாக்கிப்
பூபாரந் தீர்க்கப் புரிந்தாய் புயல்வண்ணா



கோபாலா போரேறே கோவிந்தா நீயன்றி
மாபா ரதமகற்ற மற்றார்கொல் வல்லாரே.

35. பாராளக் கன்னனிகற் பார்த்தனைமுன் கொன்றணங்கின்
காரார் குழல்களைந்து காலிற் றளைபூட்டி
நேராகக் கைப்பிடித்து நின்னையும்யான் கட்டுவனேல்
வாராமற் காக்கலாம் மாபா ரதமென்றான்.

கண்ணன் சகாதேவனது திறத்தைப் பரீக்ஷித்தல்

36. முன்னநீ கூறியவை யெல்லா முடித்தாலு
மென்னைநீ கட்டுமா றெவ்வா றெனமாய
னுன்னைநீ தானு முணராதா யுன்வடிவந்
தன்னைநீ காட்டத் தளைந்திடுவன் யானென்றான்.

37. மாயவனு மன்பன் மனமறிவான் கட்டுகவென்
றாய வடிவுபதி னாறா யிரங்கொண்டான்
றூயவனு மூலமாந் தோற்றமுணர்ந் தெவ்வுலகுந்
தாய வடியிணைக டன்கருத்தி னாற்பிணித்தான்.

கண்ணன் காட்சி கொடுத்தல்

38. நீதேவ னென்றறிந்து நெஞ்சாற் றனைக்கட்டுஞ்
சாதேவன் கண்களிக்கத் தானேயாய் முன்னின்றான்
பூதேவ ருங்கனகப் பூங்கா நிழல்வைகு
மாதேவ ருந்தேடிக் காணா மலரடியோன்.

கண்ணன் 'காவலவிடுக' எனலும் சகாதேவன் வரம் வேண்டுதல்

39. அன்பாலின் றென்னை யறிந்தே பிணித்தமைநன்
றென்பாதந் தன்னை யினிவிடுக வென்றுரைப்ப
வன்பா ரதப்போரில் வந்தடைந்தோ மைவரையு
நின்பார்வை யாற்காக்க வேண்டு நெடுமாலே.

கண்ணன் வரமளித்து நடந்ததை வெளியிடாதிருக்கும்படி கூறல்

40. என்றென் றிறைஞ்சி யிருதா மரைத்தாளி
லொன்றுங் கதிர்முடியாற் கோமென் றுரைத்தருளி
யின்றிங் கிருவேமு மிப்போ துரைத்தமொழி
யொன்றும் பிறரறிய வோதா தொழிகென்றான்.

**சகாதேவன் திரௌபதியை நோக்கி அபிப்பிராயங் கூறுதல்**

41. ஆண்டிருந்த வவைநீங்கி யறிவுடையோ ரிருவோரும்
பாண்டவர்கண் முன்னெய்திப் பழுதில்புகழ்ப் பாஞ்சாலி
நீண்டகருங் குழல்சோர நின்றாளை முகநோக்கி
யீண்டவரி விளையோனுஞ் சந்துமிக வினிதென்றான்.

**கண்ணனும் அங்ஙனங் கூற, திரௌபதி வருந்துதல்**

42. தருமனுக்குங் கருத்திதுவே தமருடன்போர் புரியாம
விருநிலத்தி லுடன்வாழ்த லெனக்குநினைவென் றுரைத்தான்
வரிமலர்க்கண் புனல்சோர மலர்மறந்த குழல்சோர
விரைமலர்ச்செஞ்சேவடிக்கீழ்வீழ்ந்தழுதாள்மின்னனையாள்.

**திரௌபதி புலம்பல்**

43. சாலக் கனகன் தனிமைந் தனைமுனிந்த
காலத் தவனுறைந்த கற்றூ ணிடைவந்தாய்
மூலப்பே ரிட்டழைத்த மும்மதமால் யானைக்கு
நீலக் கிரிபோன்முன் னின்ற நெடுமாலே.

44. கற்றைக் குழல்பிடித்துக் கண்ணிலான் பெற்றெடுத்தோன்
பற்றித் துகிலுரியப் பாண்டவரும் பார்த்திருந்தார்
கொற்றத் தனித்திகிரிக் கோவிந்தா நீயன்றி
யற்றைக்கு மென்மான மார்வேறு காத்தாரே.

45. மன்றி லழைத்தெனக்கு மாசளித்த மன்னவன்பாற்
சென்று தமக்கைந்தூர் திறல்வீரர் பெற்றிருந்தா
லன்று விரித்த வருங்கூந்தல் வல்வினையே
னென்று முடிப்பதினி யெம்பெருமா னென்றழுதாள்.

**சாத்தகி கூறுதல்**

46. தண்டிருந்த திவன்கரத்திற் றனுவிருந்த தவன்கரத்தில்
வண்டிருந்த பூங்குழன்மேல் மாசிருந்த தெனவிருந்தாள்
கண்டிருந்தீ ரெல்லீருங் கருதலர்பா லூர்வேண்டி
யுண்டிருந்து வாழ்வதற்கே யுரைக்கின்றீ ருரையீரே.

47. சண்டமுகி லுருமனைய சராசந்தன் றனக்கஞ்சி
வண்டுவரை யரணாக வடமதுரை கைவிட்ட
திண்டிறன்மா தவன்மதியோ திகழ்தருமன் றன்மதியோ
பண்டுமவர் கருத்தறிந்து பார்போய்வேண் டுவதென்றான்.



**திரௌபதியைக் கண்ணன் தேற்றுதல்**

48. சாத்தகிநின் றிவையுரைப்பச் சடைக்குழலா ளழுதாற்றக்
கோத்தருமன் முதலாய குலவேந்த ரைவரையும்
பார்த்தருளி யருள்பொழியும் பங்கயக்க ணெடுமாலு
மேத்தரிய பெருங்கற்பி னிளையாளுக் கிவையுரைப்பான்.

49. தொல்லாண்மைப் பாண்டவர்க்குத் தூதுபோய் மீண்டதற்பி
னல்லாயுன் பைங்கூந்த றானே முடிக்கின்றே
னெல்லாருங் காண வினிவிரிப்ப தெண்ணரிய
புல்லார்த மந்தப் புரமாதர் பூங்குழலே.

50. மைக்குழலாய் கேளாய் மருவா ருடற்புலத்துப்
புக்குழலா குங்கொழுவாம் போர்வா ளபிமன்னுத்
தொக்குழலும் வெங்கோன்மைத் தொல்வேந்தர் தங்குலமு
மிக்குழலுஞ் சேர முடியா திரானென்றான்.

51. பெண்ணீர்மை குன்றாப் பெருந்திருவின் செங்கமலக்
கண்ணீர் துடைத்திருதன் கண்ணிற் கருணையெனுந்
தெண்ணீரி னாற்பொருந்தத் தேற்றினான் சாற்றுகின்ற
மண்ணீ ரனலனிலம் வான்வடிவா மாமாயன்.

**மந்திரசபைக் காகாதவர்**

52. துன்று பிணியோர் துறந்தோ ரடங்காதோர்
கன்று சினமனத்தோர் கல்லா தவரிளையோ
ரொன்று முறைமை யுணரா தவர்மகளி
ரென்றுமிவர் மந்தணத்தி னெய்தப் பெறாரே.

**தருமன் கேள்விப்படி கண்ணன் தூதுபோதல்**

53. என்னக் கழறி யிருந்தோ ருரைதவிர்த்து
நின்னைப் பவரில்லாய் நீயே கெனவுரைப்ப
மன்னர்க்கு மன்னவன்பான் மாயோனுந் தூதாகிப்
பொன்னுற்ற நேமிப் பொருபரித்தேர் மேற்கொண்டான்.

**கண்ணன் அத்தினாபுரியைக் காணுதல்**

54. சங்கு மணிமுரசுஞ் சல்லரியுந் தாரைகளு
மெங்கு முழங்க வெழில்வெண் குடைநிழற்றப்
பொங்கு கவரி புடையிரட்ட வெண்ணிலா
வங்க மொருநான்கு மவனிபருந் தற்சூழ.

55. கல்வரையும் பாலைக் கடுசுரமுங் கான்யாறு
நல்வரையு நீர்நாடு நாளிரண்டிற் சென்றருளித்
தொல்வரைய கோபுரமு நீண்மதிலுஞ் சூழ்ந்திலங்கு
மல்வரைய தோளான் வளமா நகர்கண்டான்.

### வேறு

#### சோலைகளின் வருணனை

56. மேவு செந்துகிர்த் திரளுமா மரகத விதமுங்
கோவை வெண்கதிர்த் தாளமு நிரைநிரை குயிற்றித்
தாவும் வெம்பரித் தேரினன் தனக்கெதிர் சமைத்த
காவ ணங்களிற் றோன்றின பச்சிளங் கமுகம்.

57. வம்பு லாமகில் சந்தண வருக்கைமா கந்தஞ்
சம்பு கந்தமா லம்பல திசைதொறுந் தயங்க
வும்பர் நாயகன் வரவுகண் டுளங்களி கூர்ந்து
தும்பி பாடின தோகைநின் றாடின சோலை.

#### நீர்நிலை வருணனை

58. அணிகொ ளத்தின புரியெனு மணங்குசெந் திருவின்
கணவ னுக்கெதிர் காட்டுநீ ராசனங் கடுப்ப
மணமி குத்தசெந் தாமரை மலருடன் சிறந்த
புணரி யிற்பெரும் புனலையுங் கொள்வன பொய்கை.

#### அகழி வருணனை

59. நடந்த நாயகன் கோலமாய் வேலைசூழ் ஞால
மிடந்த நாளிடை யதுவழி யாகவந் தெழுந்து
படர்ந்த பாதல கங்கையைப் படர்மதில் சூழ்ந்து
கிடந்த தாமெனச் சிறந்தது தாழ்புனற் கிடங்கு.

#### மதில்களின் வருணனை

60. அடிநி லத்திலே படிவன விடிமுகி லனைத்து
முடிநி லத்தினுக் குடுபதத் தினுமுடி வில்லை
நெடிய சக்கரப் பொருப்பையு நிகரிலா விதற்கோர்
படிவ குத்ததா மெனும்படி பரந்தது புரிசை.

#### கொடிச்சீலைகளின் வருணனை

61. பகலி னுங்கடும் பரிதிதன் கதிர்பரப் பாம
லிகலி யெங்கணு மெறிந்துகால் பொருதலி னேத்திப்



புகலு கின்றமந் தாகினித் தரங்கமே போல
வகல்வி சும்பிடை மிடைவன நெடுங்கொடி யாடை.

#### மாடமாளிகைகளின் வருணனை

62. புயங்க பூமியோ புரந்தரற் கமைத்தபொன் னுலகோ
தயங்கு செல்வநீ டளகையோ நிகரெனுந் தரத்த
வியங்கு கார்முகில் வரையினின் றெழுவன போல
வயங்கு காரகி லரும்புகை யுயிர்ப்பன மாடம்.

#### வீதிகளின் இயல்பு

63. மன்னர் வேழமுஞ் சேனையு மெதிரெதிர் மயங்கப்
பின்னு முன்னுமெம் மருங்கினும் பெயரிடம் பெறுமற்
றுன்னி நின்றவ ரேகுமி னேகுமி னென்னு
மென்னு மோசையே யுள்ளன வீதிக ளெல்லாம்.

#### கடைத்தெருக்களின் வருணனை

64. வரையெ லாம்பல வனமெலாங் கடலெலாம் விளைந்த
தரையெ லாம்படு பொருளெலாந் தனித்தனி குவித்த
நிரையெ லாங்கவ ராவண நீர்மையைப் புலவோ
ருரையெ லாந்தொடுத் துரைப்பினு முவமைவே றுளதோ.

#### நால்வகைச் சேனைகளின் தன்மை

65. விரவு கான்மல ரினும்பல வீரரின் விதங்கள்
பரவை வெண்மண லினும்பல புரவியின் பந்தி
யிரவில் வானமீ னினும்பல யானையி னீட்ட
நிரைகொள் கார்த்துளி யினும்பல தேரணி நிலையே.

#### மாளிகைகளின் வகை

66. ஆசி லாமறை யந்தண ராலய மொருபான்
மாசி லாமுடி மன்னவர் மாளிகை யொருபாற்
காசி லாமதி யமைச்சர்தங் கடிமனை யொருபாற்
பேசி லாவள வணிகர்தம் பேரிட மொருபால்.

#### ஒலிகளின் சிறப்பு

67. மங்க லந்திகழ் மனையெலாம் வலம்புரி யோசை
திங்க டோய்நெடுந் தலமெலாஞ் செழுஞ்சிலம் போசை
யங்கண் மாநக ரனைத்துமும் முரசதி ரோசை
யெங்க ணுங்கட வுளரிடந் தொறுமுழ வோசை.

### துரியோதனனது அரண்மனைச் சிறப்பு

68. முன்றி லின்கணின் றிடம்பெறு வரசர்மா முடிக
ளொன்றொடொன் றறைந் தெற்றிமேலொளிர்பொறி சிதறிச்
சென்று சென்றறு திசைதொறுந் திகழ்ந்தது செம்பொற்
குன்றெ னும்படி குருகுல நாயகன் கோயில்.

### கண்ணன் நகரத் தென்புறச் சோலையில் தங்குதல்

69. என்றி சைக்குநல் லொளிநிமி ரெழில்மணி மகுடக்
குன்றி சைக்கும்வண் கோபுர நீணகர் குறுகித்
தென்றி சைக்குளிர் செண்பக மலர்தொறுஞ் சிறைத்தே
னின்றி சைக்கும்வண் சோலைவா யமர்ந்தன னெடுமால்.

### கண்ணபிரான் தங்கியிருத்தலைத் தூதுவர் துரியோதனனுக் கறிவித்தல்

70. அன்று தூதுகொண் டிலங்கைதீ விளைத்தவ ரைவர்க்
இன்று தூதுவந் தெயிற்புறத் திறுத்தன ரென்னாத்
துன்று தூதுவண் டினமுர றொடையலான் றனக்குச்
சென்று தூதுவ ரியம்பினர் சேவடி வணங்கி.

### நகர் அலங்கரித்தல்

71. தொல்லை நாயகன் வந்தன னென்றலுஞ் சுரும்பார்
மல்லன் மாலையா னேவலான் மாநகர் மாக்க
ளெல்லை நீண்மதில் வட்டம்யோ சனையெழு நாறுஞ்
செல்வ மாநகர்த் தெருவினை யொப்பனை செய்தார்.

### கண்ணனை எதிர்கொள்ளத் துரியோதனன் செல்லச் சகுனி தடுத்தல்

72. மின்னு மாமுகிற் பல்லிய விதங்கண்முன் முழங்க
மன்னர் மன்னவ னெழுந்தனன் மாலெதிர் கொள்வா
னென்னை நீயவற் கெதிர்செல்வ தென்றுதன் மருகன்
றன்னை வன்பொடு தகைந்தனன் கொடுமைகூர் சகுனி.

### துரியோதனன் கண்ணனுக்கு இருக்கையமைத்துச் சபையில் வீற்றிருத்தல்

73. சீர்வ லம்புரி திகிரிசேர் செங்கையான் றனக்குக்
கார்வ லம்புரி கோயிலுங் காட்சியு மமைத்துப்
போர்வ லம்புரி நிருபரு மிளைஞரும் போற்றத்
தார்வ லம்புரி யவனிருந் தனன்பொலந் தவிசின்.



### வீடுமன் முதலிய பெரியோர் கண்ணனை வரவேற்றல்

74. தொல்ப கீரதி மைந்தனுந் துரோணனுஞ் சுதனும்
வில்வி தூரனுங் கிருபனு முதலிய வேந்தர்
மல்கு மூவிரு பத்துநா றாயிர மகிபர்
செல்வ நாயகற் கியோசனை யிரண்டெதிர் சென்றார்.

### கண்ணன் விதுரனது மாளிகைக்குப் போதல்

75. வந்து வந்திரு மருங்கினு மன்னவர் வணங்கப்
பைந்து ளாய்முடிப் பரமனுங் கண்மலர் பரப்பி
யந்த மாநகர் புகுந்தபி னரசனிற் புகாமற்
புந்தி கூரருள் விதுரன்வாழ் வளமனை புகுந்தான்.

### கண்ணன் விதுரன் மாளிகையில் வீற்றிருத்தல்

76. வேந்தர் யாரையும் விடைகொடுத் தகன்றபின் விமலன்
வாய்ந்த மாளிகை நடுவணோர் மண்டபங் குறுகி
யாய்ந்து வல்லவர் நவமணி யழுத்திய வரியே
றேந்து மாசன மிடப்பொலிந் ததன்மிசை யிருந்தான்.

### விதுரன் கண்ணபிரானை வணங்குதல்

77. இருந்து வந்தரு ளிறைவனை யிறைஞ்சினா னிறைஞ்சிப்
பெருந்து வந்தனைப் பிறப்பையு மிறப்பையும் பிரித்தான்
மருந்து வந்தனை யமரருக் கருளிய மாயோன்
விருந்து வந்தன னென்றுள முருகிய விதுரன்.

78. கோடு கொண்டகைக் குரிசிலை யலர்ந்தகோ கனதக்
காடு கண்டெனக் கண்டுதன் கண்ணிணை களியாத்
தோடு கொண்டதார் விதுரனிப் பிறப்பையுந் தொலைத்தான்
வீடு கண்டவர்க் கியம்பவும் வேண்டுமோ வேண்டா.

79. உள்ளி னானுணர்ந் துள்ளமு முருகினா னெழுந்து
துள்ளி னான்விழுந் திணையடி சூடினான் றுயரைத்
தள்ளி னான்மலர்த் தடக்கையாற் றத்துவ வமுதை
யள்ளி னானெனக் கண்களா லருந்தினா னளியோன்.

80. முன்ன மேதுயின் றருளிய முதுபயோ ததியோ
பன்ன காதிபப் பாயலோ பச்சையா லிலையோ

சொன்ன நால்வகைச் சுருதியோ கருதிநீ யெய்தற்
கென்ன மாதவஞ் செய்ததிச் சிறுகுடி லென்றான்.

### கண்ணனுக்கு விருந்து சமைத்தல்

81. மும்மை யாகிய புவனங்கண் முழுதையு மருந்து
மெம்மை யாளுடை நாயகன் விருந்தினுக் கிசைந்தா
னம்ம வென்றன னூறுநூ றாயிர மடையர்
தம்மை நோக்கின னவர்களும் விரைவுடன் சமைத்தார்.

82. வந்த கொற்றவேல் வரிசிலை யவர்க்கும்வா ளவர்க்குங்
கந்த டர்ப்பன கரிக்கும்வெங் கவனவாம் பரிக்கு
மைந்து பத்துநூ றாயிர மரசர்க்கு மெவர்க்கு
மிந்தி ரர்க்குமெய் தாவமு தெனும்படி யியற்ற.

### கண்ணனும் உடன் வந்தோரும் விருந்துண்டு மகிழ்தல்

83. அமைத்த வாசநன் னீர்கொடு மஞ்சன மாடிச்
சமைத்த பல்கறி யடிசிறம் விருப்பினா லருந்தி
யுமைக்கு நாயக னிரவொழித் தருளினா னுதவ
விமைப்பி லாரமு தருந்திய வியல்பென விருந்தார்.

### தாம்பூலாதி தரித்தபின் கண்ணன் சிங்காசனத்திருத்தல்

84. வாச நீரும்வண் சுண்ணமு முறைமுறை வழங்கப்
பூசு றுந்தொழிற் பூசினார் சூடினார் புனைந்தார்
வீசு சாமர மிரட்டவெண் மதிக்குடை நிழற்றக்
கேச வன்மணிக் கேசரித் தவிசிடைக் கிளர்ந்தான்.

### சூரியாஸ்தமன வருணனை

85. ஞான கஞ்சுக விதுரன்வாழ் மனையினா யகனும்
போன கம்பரி வுடனுகர்ந் திருந்தவப் பொழுதிற்
றானு மேருவுக் கப்புறத் தவ்வமு தருந்தப்
பானு வும்பெருங் குடதிசைப் பரவையிற் படிந்தான்.

### செவ்வானத் தோற்றம்

86. கருதி யந்தணர் யாவருந் தங்கடன் கழிப்பச்
சுருதி யென்னும்வெஞ் சாபமே லம்புகை தொடுத்துப்
பரிதி தன்பெரும் பகைவர்மேல் விடுத்தலிற் பரந்த
குருதி யாமென நிவந்தெழச் சிவந்தது குடபால்.



### அந்திவான் தோற்றத்தில் கடலோரத்தில் விளங்கும் பவளக் கொடிகள்

87. தரங்க வாரிதிப் புறத்தெதிர் மலைந்தவெஞ் சமரி
லுரங்கொள் கூர்நெடும் படைகளா லுடன்றமந் தேகர்
துரங்க மேழுடைக் கடவுளை நிரைநிரை துணித்த
கரங்கள் போன்றன கரைதொறும் வளர்துகிர்க் காடு.

### தாமரை மலர்களின் வருணனை

88. நீதியிற் புகல் பகலெலா நீரர மகளிர்
மீதுறைத் தெழும் வெவ்வெயில் படாவகை விரித்துப்
போது புக்கதென் றினம்படச் சுருக்கிய பூம்பட்
டாத பத்திரம் போன்றன தாமரை யடவி.

### நகரத்தின் காட்சி

89. கலந்து மங்கல முழவுவெண் சங்கொடு கறங்க
மிலைந்த பூங்குழல் வனிதையர் மெய்விளக் கெடுப்பக்
கலந்த தாமரைத் தடமெலாங் குவிந்தது கண்டு
மலர்ந்த தாமரை வாவிபோன் றதுநகர் வட்டம்.

### விதுரன் கண்ணனை வணங்கி எழுந்தருளிய காரணம் வினவுதல்

90. உரக புங்கவன் மணிமுடி யொப்பன தீப
மிரும ருங்கினு மாயிர மாயிர மேந்த
வரிசு மந்தபே ராசனத் தழகுட னிருந்த
புரவ லன்றனைப் புண்ணிய விதுரனும் போற்றி.

91. பொங்க ராவணை பொலிவறப் போந்தபின் பொதுவர்
தங்கள் பாடியில் வளர்ந்துமா மருதிடைத் தவழ்ந்து
கங்கை மாநதி கால்வழி கருணையங் கடலே
யிங்கு நீதனி நடந்தவா றுரைத்தரு ளென்றான்.

### கண்ணன் தூதாக வந்தமை கூறுதல்

92. தோட்டு வந்துசெந் தேனுகர் சுரும்புசூழ் தொடையாய்
காட்டு வந்துமுன் றிருந்துதங் கடவநாள் கழித்து
நாட்டு வந்தபே ரைவர்க்கு நற்குரு நாடு
கேட்டு வந்தன னென்றனன் விதுரனுங் கேட்டான்.

LAKSHIMI DEVI

"சமாதானத்தால் துரியோதனன் அரசுகொடான்" என
விதுரன் கூறுதல்

93. முழக்கி னானுயிர் முரசுயர்த்த தவன்றனக் குரிமை
வழக்கி னாலறிந் தடலர வுயர்த்தகோன் வழங்கான்
றழக்கி னாலிரு திசையினு முரசெழச் சமரி
லுழக்கி னாலல துணர்வனோ வென்றவ னுரைத்தான்.

கண்ணன் 'அரசு கொடாவிடில் போரிலே பாண்டவர் பெறுவர்'
என்று கூறுதல்

94. வாளை வாவியி லுகண்டெழ வளரிளங் கமுகின்
பாளை வாயளி முரன்றெழும் பழனநா டுடையா
னாளை வாழ்வவர்க் களித்தில னெனிலெதிர் நடந்து
மூளை வாயுக முடிப்பர்வெம் போரென மொழிந்தான்.

இது உலக வழக்கம் என்றல்

95. விரைந்து பாய்பரி மன்னவ ரிதம்பட மெலிவுற்
றிரந்து வேண்டினுங் கிளைஞருக் கொருபொரு ளீயார்
பரந்த போரினி லெதிர்த்தவர் படப்படப் பகழி
துரந்த போதவர்க் குதவுவர் சொன்னவை யெல்லாம்.

கிருட்டிணன் துயிலுதல்

96. என்று பாரினி லியற்கையும் விதுரனுக் கியம்பி
வென்று போர்கெழு நேமியான் விடைகொடுத் தருளிக்
குன்று போற்புயக் காவலர் கொடுந்துடி கறங்க
மன்ற நாண்மலர்ப் பாயலின் மீதுகண் வளர்ந்தான்.

இராக்கால வருணனை

97. குளிரு மாமதி முகத்தொளிர் குமுதவாய் மலர்த்தித்
தவள வாணகை பரப்பிவண் சததள மலர்க்கை
யளவி லேகுவித் தளியொடு மகன்றிலா மையினாற்
களிகொ டோள்விலைக் கணிகையைப் போன்றதக் கங்குல்.

சூரியோதய வருணனை

98. அளைந்த வாரிருட் கடல்பொரு தொருபுடை யண்டம்
பிளந்த தாமெனக் கரும்படாம் பீறிய தென்ன
வளைந்த வேழ்கடல் வற்றமேல் வடவையின் முகத்தீக்
கிளர்ந்த தாமெனக் கிளர்ந்தன விரவியின் கிரணம்.



99. இகலும் வாளர வுயர்த்தவ னிருந்ததொல் பதியி
லகில நாயக னொருதனி நடந்தவா றறிந்து
மகர வாரிதி யகன்றுமா மருங்குற வணைந்த
திகிரி போலவந் தெழுந்தன் னிரவிகீழ்த் திசையில்.

## வேறு

துரியோதனன் கொலுச் சிறப்பு

100. சோதி வானநதி மைந்த னும்பழைய சுருதி யானு யர்து ரோணனு, மாதி யாகவுயி ரினும்வி யப்புற வடுத்த மன்னவ ரநேகரு, நீதி யாறுவகை யைந்து பத்தொடா றுபத்தொ ராயிரவர் நிருபருந், தீதி லாததிற லக்கு ரோணிபதி னொன்று பெற்றமிகு சேனையும்.

101. தொக்க வெண்கவரி யால வட்டநிரை சொட்டை வாள்பரிசை துகிலுடன், கைக்க ளாசியிவை கொண்டு லாவிவரு கன்னி மங்கையர்க ளனைவரு, மிக்க வேதியர்கள் வல்ல பல்கலைவி தத்தி னுள்ளவர்கள் யாவரும், தக்க தம்பியரும் வந்து சூழ வுயர் தரணி மேனிருபர் தம்பிரான்.

102. நிரைக திர்க்கனக நீள்சு வர்ப்பவள வுத்தி ரத் திடைநி ரைத்தவொண், பரும ணிக்கிரண பற்ப ராகவயி ரத்து லாமிசைப ரப்பிவெண், டரள வர்க்கவயி டூரி யப்புதிய கோம ளப்பலகை தைத்துமா, மரக தத்தினொரு கோடி தூணிரைய மைத்த மண்டபம ருங்கரோ.

103. முட்ட நித்திலநி ரைத்த பந்தரின கைத்த சீரிமு கத்தகால், வட்ட மெத்தைகொட மைத்த பீடமிசை வாச வன் கொலென வைகினான், பட்ட வர்த்தனரு மகுட வர்த்தனரும் வந்து சேவடிப ணிந்தபி, னிட்ட பொற்றவிசின் முறைமை யாலினி திருக்க வென்றவரை யேவியே.

கண்ணனை எதிர்கொள்ள லாகாதெனத் துரியோதனன் தடுத்தல்

104. காவன் மன்னவர்மு கங்க டோறுமிகு கண்ப ரப்பி யமர் கருதுவோ, ரேவ லின்கண்வரு தூத னாமிடைய னின்று நம்மனையி லெய்தினா, லோவ லின்றியெதிர் சென்று கண்டு தொழு துறவு கூரிலினி யுங்கனோர், தீவ லஞ்செயவ டர்ப்ப னென்றுநனி சீறி னன்முறைமை மாறினான்.

### கண்ணபிரான் துரியோதனன் சபைக்கு எழுந்தருளல்

105. இந்த வண்ணமுரை செய்து மன்னருமி ராச ராச
னுமி ருக்கவே, தந்த வண்ண னுடன் வந்த வண்ணமொளி தங்கு
கண்டுயி லுணர்ந்தபின், கந்த வண்ணமலர் கொண்டு கைதொழுது
சாலையிற்பலக டன்கழித், திந்த வண்ணமு னிருந்த பேரவையி
லேயி னானிசைகொள் வேயினான்.

### வீட்டுமன் முதலியோர் எதிர்கொண்டு வணங்குதல்

106. துன்னு கங்கைமக னுந்து ரோணனொடு சுதனு
நீதிபுனை விதுரனு, மன்னர் மன்னனையொ ழிந்த மன்னவரும்
வந்து சேவடி வணங்கினார், கன்ன னுந்தலைக விழ்ந்தி ருந்தனன
மூன்றுளஞ் சகுனி கருகினான், முன்ன நின்றவர்க ளிட்ட பீட
மிசை மொய்து ளாய்முகிலு மெய்தினான்.

### கண்ணன் தனது அரண்மனையிற் றங்காத காரணம் வினவுதல்

107. முன்ன கங்குடைக வித்த காளமுகின் முன்னி
ருந்தபின்மு கங்கொடா, தென்ன கந்தனையொ ழித்து நென்ன
லிடை யிந்த மாநகரி லெய்தியும், பொன்ன கங்கொள்புய விதுர
னில்லிடைபு குந்த தென்கொலிது புகலெனாப், பன்ன கந்தனையு
யர்த்த கோவுமுரை பகர மாலுமெதிர் பகருவான்.

### கண்ணபிரான் காரணங் கூறுதல்

108. என்னி னின்னிலொரு பேதமில்லையிது வென்னி
னின்னிலது வென்னினு, மின்னின் மின்னிலகு விறனொ டும்
படைவி தூரன் வந்தெதிர்வி ளம்பினா, னுன்னி லின்னமுள
தோன்று பஞ்சவரு ரைக்க வந்தவொரு தூதன்யா, னின்னி
லின்னடிசி லுண்டு நின்னுடன்வெ றுக்க வெண்ணுவது நீதியோ.

### நரகத்துக்குச் செல்லுதற்குரியோர் இவரெனல்

109. அரவ மல்கியப தாகை யாய்மதிய மைச்ச ராயரச
ழிப்பினும், குரவர் நல்லுரைம றுக்கி னும்பிறர்பு ரிந்த நன்றி
யது கொல்லினு, மொருவர் வாழ்மனையி லுண்டு பின்னுமவ
ருடன மூன்றுபொர வுன்னினு, மிரவி யுள்ளளவு மதிய முள்
ளளவு மிவர்க ளேநரகி லெய்துவார்.



### வந்த காரியம் வினவுதல்

110. சீத நாண்மலர்ம டந்தை கேள்வனிவை செப்பவும்
தெரிய வொப்பிலா, நாத நாயகன்மு கத்தில் வைத்தவிரு நயன
னாகிமிக நகைசெயாத், தூத னாகிவரு தன்மை சொல்லுகென
மன்னர் மன்னனிது சொன்னபின், வேத நாறுமல ருந்தி வண்
டுளப விரைசெய் தாரவனு முரைசெய்வான்.

### கண்ணபிரான் பாண்டவர் பாகத்தைக் கொடுக்கும்படி கூறல்

111. சூதி னாலரசி ழந்து நின்றுணைவர் சொன்ன சொல்
லும்வழு வாதுபோ, யேதி லார்களென நொந்து தண்ணிழலி
லாத கானினிடை யெய்தியுந், தீதி லாவகைகு றித்த நாள்பலக
ழித்து வந்தனர்செ கத்தினிற், கோதி லாதகுரு குலம கிபவவ
ருரிமை நண்பொடுகொ டுத்தியே.

112. சொல்ல வாவுரக துவச நின்னுரிய துணைவர் தங்
களை யழைத்துநீ, வல்ல வாறுசில நாட ளித்தவர்க டம்மு டன்
கெழுமி வாழ்தியே, னல்ல வாய்மைநிலை யுடைமை யென்றரசர்
நாடொ றும்புகழ்வர் நண்புகொண், டல்ல வாமெனம றுத்தி
யேலறமு மாண்மை யும்புகழு மல்லவே.

### துரியோதனன் மறுத்துக் கூறுதல்

113. என்று கேசவ னியம்ப வங்கெதிரி ராச ராசனுமி
யம்புவா, னன்று சூதுபொரு துரிமை யாவையுமி ழந்து போ
யினர்க ளைவரு, மின்று நீவிரகின் மீள வுங்கவர வெண்ணி
னானவரி லெளியனோ, சென்று கானிலவ ரின்ன முந்திரிவ துறுதி
யென்றுநனி சீறியே.

114. நீவெ றுக்கிலெ னிருந்த மன்னவர்தி கைக்கிலென்
பலவி னைக்கிலென், போய்ந கைக்கிலெ னுரைத்த வுண்மை
மொழி பொய்த்த தென்றமரர் புகலிலென், வேய்ம லர்த்தொ
டைய லைவ ரென்னுடன்மி கைத்து வெஞ்சமர்வி ளைக்கிலெ,
னீயி ருக்குமிட மெனினு மிப்புவியில் யான வர்க்கரசி னிக்
கொடேன்.

### கண்ணன் மீண்டும் கூறுவது

115. கார்வ ழங்குருமெ னச்சி னத்தினொடு கண்ணி
லான்மதலை கழறவும், பார்வ ழங்கினை வில்லை யேலவனி பாதி

யாயினும்வ ழங்குவாய், தார்வ ழங்குதட மார்ப வென்னவது தானு மன்னவன்ம றுக்கவைந், தூர்வ ழங்குகென வ்ற்றி ரங் தனனிவ் வுலகெலாமுதவு முந்தியான்.

### அதனையும் துரியோதனன் மறுத்தல்

116. மாட ளிக்குலநெ ருங்கு பைந்துளவ மாலை யாய் மகர வேலைசூழ், நாட ளித்திடவு மைந்து பேருடைய நகர ளித்திடவும் வேண்டுமோ, காட ளிக்கவத னிடைதி ரிந்துறைக ரந்து போயினர்கள் காணவோர், வீட ளிக்கினும்வெ றுப்ப ரோவிதனை விடுக வென்றெதிர்வி ளம்பினான்.

### கண்ணன் துரியோதனனுக்கு அறிவுறுத்தல்

117. தந்தை காதலுறு தன்மை கண்டிளைய தாய்ப யந்தவிரு தம்பியர்க், கிந்த வாழ்வுமர சுங்கொ டுத்தவனு நின்கு லத்தொருவ னிங்குளான், முந்த மாநில மனைத்தி னுக்குமுயர் முறைமை யானுரிய வரசருக், கைந்து மாநகரு நீகொ டாதொ ழியி னென்ன தாகுமுன தாசியல்.

118. ஒருகு லத்தினி லிரண்டு மன்னவரு டன்பி றந்துரிமை யெய்தினு, மிருகு லத்தவரு மொக்க வாழ்வுறுத லெக்கு லத்தினு மியற்கையே, பொருகு லக்களிறு வளர்தி சைக்கண் மிகு புகழ்ப ரப்பியெழு புவிபெறுங், குருகு லத்தவரி யற்கை நன்றெனமொ ழிந்த னன்கரிய கோவலன்.

### துரியோதனன் வெகுண்டுரைத்தல்

119. பேர ரவணைது றந்த மாயனிவை பேச வன்பினொடு பின்னையுஞ், சீர ரவினையு யர்த்த கோவும்விழி தீயெனும்படிசெ யிர்த்துளே, போர ராநிருபன் மணிநெ டுஞ்சுடிகை யாயி ரங்கொடுபொ றுத்தபார், வீர ரானவர தல்ல வோவுரிமை வேண்டு மோவெனவி ளம்பினான்.

### கண்ணன் கடைசியாகப் போர் வேண்டுதல்

120. பொய்வ ளர்ந்தமொழி மன்னன் மற்றிவைபு கன்ற பின்புபுய வலியினு, லைவர் தங்களர சுங்கொ டாமலட லாண்மை கொண்டெதி ரடர்த்தியேன், மெய்வி ளங்கவரு குருநி லத்தினிடை வந்து வெஞ்சமர் விளைக்கவே, கைவ ழங்குகென நின்ற தூணிடை யுறைந்து ரைக்குமிவை காவலன்.



### துரியோதனன் பழிப்புரை

121. புன்பி றப்புடைய பொதுவர் தங்களொடு புறவி லானிரை புரந்திடு, முன்பி றப்புமுற லோடு கோவியருனைப் பிணித்தது மறந்தனீ, மன்பி றப்பிலுயர் குருகு லத்தவர்தம் வாய்மை தானுமொரு மாசிலா, வென்பி றப்புமுண ராம லோசபையி லிந்தவாசக மியம்பினாய்.

122 ஏவி லங்குசிலை யைவர் வந்தணுகின் யானயர்ந் தெளி திருப்பனோ, கோவி லங்குபொர வஞ்சு மோகரட குஞ்ச ரங்கள்பகை கொண்டகான், மேவி லங்குமுன்ம லைத்தல் கையுறைய வேண்டு மென்றதுநின் மேன்மையோ, நாவி லங்குமென வெண்ணி யோமிகவு நன்றுநன் றாசர் ஞாயமே.

123. அளிவ ருங்குழல்பி டித்து மன்னவையி லைவ ருக்குமுரி யாளைநா, னெளிவ ருந்துகிலு ரிந்த போதரு கிருந்து கண்டவர்க ளல்லவோ, துளிவ ரும்புனல்ப ரிந்த ருந்தியிடு சோறு தின்றுயிர் சுமந்துதோ, ளிளிவ ரும்படி யிருந்த பாவியரு மின்று மானநிலை யுணர்வரோ.

124. அன்னை யானவரு மிருவ ராமுத லளித்த தந்தையர்களைவராம், பின்னை யாசைகொடு குருகு லத்துரிமை பெறுவ ராமொரு பிறப்பிலோர், மின்னை யாமிவர்க ளைவரும் பரிவி னுடுத னித்தனி விரும்புவா, ரென்னை யாமவரொ டொருகு லத்தரச னென்ப தம்மவிவை யென்கொலாம்.

### கண்ணன் புறப்பாடு

125. ஞால முற்றுமுடை யவன்மொ ழிந்திட நகைத்து வண்டுவரை நாதனுஞ், சால முற்றுமினி யவர்க ருத்தென நினைந்து பேரவை தணந்துபோய்க், கோல முற்றசிலை விது ரன் வாழ்வுபெறு கோயில் சென்றுநனி குறுகினான், சீல மற்றவர் சினந்த போதுமொரு தீதி லாதவர் செயிப்பரோ.

### கண்ணனுக்கு விருந்தளித்த விதுரனைத் துரியோதனன் சினந்து கூறுதல்

126. கரிந்து மாலைசரு காக வும்புதிய கமல வாண்முகம் வெயர்க்கவுந், திருந்து கண்ணிணை சிவக்க வுங்கொடிய செய்ய

வாயிதழ் துடிக்கவு, மிருந்த பேரவையி னெடிது யிர்த்திடு மிராச ராசனவ னுக்கிவன், விருந்து செய்தவுற வென்கொ லென்றரச ரெதிர்வி தூரனை விளம்புவான்.

### விதுரனைப் பழித்துக் கூறல்

127. வன்பி னலவனி வௌவ வென்றுகொலென் மனையி லுண்டிமை மறுத்தவன், றன்ப தாகினியொ டினித ருந்தும் வகை தன்னி லின்னமுதி யற்றினு, னென்பி தாவொடு பிறந்து மின்றளவு மென்னை யோதன மருந்தியு, மன்பு தானுடைய னல்ல னென்பகை தனக்கு முற்றபகை யல்லனோ.

128. முதல்வி னைந்தொருவ னுடனி யைந்தபொருள் பற்றி யின்புற முயங்கினு, மதிக மென்றபொரு ளொருவன் வேறுதரி னவனையே யொழிய வறிவரோ, பொதும டந்தை யர்த மக்குமண்ணிலிது புதுமை யல்லவவர் புதல்வனும், விதுர னின்றவனொ டுறவு கொண்டதொர்வி யப்பை யெண்சொலி வெறுப்பதே.

### விதுரன் தகுந்த விடைகூறி வில்லை முறித்தல்

129. இன்ன வாறவ னுரைத்த போதவனெழுந் திருந்து வசை யென்னை நீ, சொன்ன வாய்குருதி சோர வாள்கொடு துளைத்து நின்முடி துணிப்பன்யான், மன்ன வர்குருகு லத் திலே யொருவன் மைந்த னுருயிரை வௌவினு, னென்ன வானவர் நகைப்ப ரேயெனை யுரைத்த நாவுட னிருத்தியோ.

130. ஈண்ட வர்க்குதவி யாய தூதென விசைப்ப வற் குலக மெங்கணு, நீண்ட வற்குதவி யாயி னேனென நினைத்து நீயெனை யடர்த்தியே, மாண்ட வற்குதவி யாய பேரறமு மிசையு மாண்மையும் வளர்த்திடும், பாண்ட வர்க்குதவி யாகி லென்னை முடி மன்ன ரானவர் பழிப்பரோ.

131. சொல்லி ரண்டுபுக லேனினிச் சமரி னின்று வெங் கணை தொடேனெனு, வில்லி ரண்டினுமு யர்ந்த வில்லதனை வேறி ரண்டுபட வெட்டினுன், மல்லி ரண்டினையு மிருவ ராகி முன்ம லைந்த காளமுகில் வந்துதன், னில்லி ரண்டுதினம் வைகு தற்குலகி லெண்ணி லாததவ மெய்தினுன்.



### விதுரன் சபையை விட்டுச் சென்றபின் அரசர் வருந்துதல்

132. அந்த வில்லினைமு றித்த வில்லிதன தால யம்பு குத வச்சுதன், சந்த வில்லுமரன் வில்லு மொப்பதொரு தாம வில்லினைமு றிப்பதே, முந்த வில்லியரி லெண்ணும் வில்லு டைய விசயன் வந்தமரின் முடுகினு, வெந்த வில்லியெதிர் நிற் கும் வில்லியினி யென்று காவலரி ரங்கினுர்.

### வீடுமன் துரியோதனனைக் கண்டித்தல்

133. கார னைத்தும்விடு தாரை யன்னபல கணைக ளேவி யமர் கருதும்வில், வீர னைப்பழு துரைத்த நீபகையை யெங்ங னே தனிகொல் வெல்லுவாய், பார னைத்துமினி யைவ ராளும் வகை பண்ணு வித்தனைய ழிந்ததுன், பேர னைத்துமென வுள்ள ழிந்துசில பேசி னனுயர்பி தாமகன்.

### வீடுமனை நோக்கித் துரியோதனன் விதுரனை அலட்சியமாகக் கூறுதல்

134. பிதாம கன்பரி வுடன்மு னிந்துசில பேச நாசமுறு பேரனும், விதார மொய்ம்பனும்வி தூர னல்லதுவில் வல்ல வீரர்பிற ரில்லையோ, வுதார சிலனுய ரங்கர் கோன்வரிவி லொன்று மேயமையு முற்றெழும், பதாதி யோடமரி லைவ ரும் படம லைந்தி டாப்பரணி பாடவே.

135. நீயி ருக்கநெடு விற்கை யாசிரிய னவனி ருக்கநிக ரற்றவன், சேயி ருக்கவிறன் மன்ன ரிப்படிதி ரண்டி ருக்க வெதிர் சென்றுநீள், வேயி ருக்குமித ழிடைய னுக்குநல்வி ருந்துசெய் தவன்வெ றுக்கிலென், போயி ருக்கிலென்மு றிக்கி லென் சிலைம லைந்து நம்மொடவர் போர்செய்வார்.

### கர்ணன் கூறிய செருக்கு மொழிகள்

136. என்று கூறவிற லங்கர் பூபதியும் யானி ருக்க விகல் விசயனைச், சென்று சீறியுயிர் கொள்ள வல்லவர்கள் யாவ ரென்றுநனி செப்புவீர், கன்றி னல்விளவெ றிந்த கள்வனிவ னின்று தேர்நனி கடாவினு, மன்று போரிடை காண லாகு மென தாடல் வெஞ்சிலையி னுண்மையே.

137. அம்ப ரத்தவரு டன்று சீறினுமொ ரம்பி லேயழி வர் திண்ணம்யான், வெம்ப ணிப்பகழி யேவி லாவியுடன் மீளு

வானமரில் விசயனோ, விம்ப ரிற்புகல விருக ளத்தினுமெ னக்கு நேரொருவ ரில்லையென், றும்பர் கற்பகமு நாண வண்மையினு யர்ந்த வீரனிவை யுரைசெய்தான்.

### வீடுமன் கர்ணனைக் கடிதல்

138. திசை யனைத்தினும்வ ளைந்த தானவரை யிரவி வந்த தொரு திசையின்வாய், நிசைய னப்பொருது வான வர்க்கரச ளித்து வந்தவிற னீர்மையான், விசைய னுக்குநிகர் நீகொலோகட வுள் வெண்ம திக்குநிகர் வெள்ளியோ, வசைவில் விற்றொழிலும் வல்லை யோவெனவெ ரசைவி லாதவன றைந்தனன்.

### கர்ணன் வீடுமனை நிந்தித்தல்

139. அவன்மொ ழிந்தமொழி தன்செ விப்படலு மருகி ருந்தமுத ருந்துநீ, யிவனு டன்சிலர்ப கைக்கின் மற்றவர்த மிசையு மாண்மையு மியம்புவாய், புவன மொன்றுபட வரினு மென்றனொடு பொருவ ராயினெதிர் பொரவிடாய், சிவனு மென் கணையை யஞ்சு மென்றுநனி சீறி னானிரவி சிறுவனே.

### யாவரும் தத்தமிருப்பிட மேகுதல்

140. இரவி மைந்தனொடு கங்கை மைந்தனெதிர் வாய்மை யொன்றையுமி சைத்திலன், பொரவ நிந்திடுது மன்று வெஞ் சமரி லென்றெ ழுந்துதனி போயினா, னரவ வெங்கொடியு யர்த்த கோவுமிக லரச ருக்குவிடை நல்கினான், விரவு பைந் துளப மாலை யான்விதுரன் மனையி னுற்றதுவி ளம்புவாம்.

## வேறு

### விதுரன் வில் முறித்தமைக்குக் கண்ணன் காரணம் வினவுதல்

141. பொருசிலை முறித்த வீரன் கோயிலிற் புகுந்து நேமிக்
குருசிலை வணங்கி யாங்க ணிருப்பவக் குருசி னோக்கி
யிருசிலை யுண்டென் றிந்த விருநிலத் தியம்பும் வில்லி
னொருசிலைமுறித்தசீற்ற மென்கொலோவுரைசெய்யென்றான்.

### விதுரன் உத்தரம்

142. ஆவது கருதா னாகி லமைச்சர்சொற் கேளா னாகில்
வீவது குறியா னாகில் விளைவது முணரா னாகி
னாவது காவா னாகி லவனுக்கா நடந்து போரிற்
சாவது பழுதென் றன்றோ சகத்துளோர் சாற்று கின்றார்.



143. செல்வம்வந் துற்ற காலைத் தெய்வமுஞ் சிறிது பேணார்
சொல்வன வறிந்து சொல்லார் சுற்றமுந் துணையு நோக்கார்
வெல்வதே நினைவ தல்லால் வெம்பகை வலிதென் றெண்ணார்
வல்வினை விளைவு மோரார் மண்ணின்மேல் வாழு மாந்தர்.

144. நினைக்கவுந் தொழவு மெட்டா நீயெழுந் தருளப் பெற்றுந்
தனக்கிது தகுதி யென்று தமருடன் வாழ வெண்ணான்
மனக்கடுங் கனலி னான்றன் மனத்தினா லுரைத்த புன்சொ
லெனக்கிசை யாமல் யானு மிருஞ்சிலை யிறுத்த தென்றான்.

### கண்ணன் விதுரனை விழித்துக் கூறுதல்

145. மாயனு மகிழ்ந்து நோக்கி மாசுண முயர்த்த மன்னன்
போயருஞ் சேனை யோடு போர்க்களங் குறுகும் போது
நீயவ னருகு நில்ல தொழியினுன் னேய மைந்தர்
தாயமுஞ் செல்வ முற்றுந் தரணியும் பெறுவ ரன்றே.

146. எற்றிய நறுநெய் வீசி யிந்தன மடுக்கி னாலுங்
காற்றுவந் துற்ற போது கடுங்கனல் கதுவ வற்றோ
நீற்றணி நிமல னன்ன நின்கைவில் லிற்ற தாயிற்
சீற்றவே லரசன் சேனை தென்புலம் படர்கை திண்ணம்.

147. பன்னிய புரையில் கேள்விப் பயனுகர் மனத்தாய் நின்னை
மன்னவன் மொழிந்த வெல்லாம் பொறுத்தி யென்றருளி மாயோ
னந்நகர் தன்னில் வண்மை யருளழ காண்மை பேசுங்
கன்னனைப் பயந்த காதற் கன்னிதன் கோயில் புக்கான்.

### குந்தி கண்ணனைக் காணுதல்

148. மண்டல மதிய மன்ன மாசறு முகத்தி னாளுந்
திண்டிறன் மருகன் றன்னைச் சென்றெதிர் கொண்டு கண்டு
வெண்டிரை மகர வேலை விரிபுனன் முகந்து தோன்றுங்
கொண்டலைமகிழ்ந்துகாணுங் குளிர்பசுந்தோகைபோன்றாள்.

### கண்ணன் வந்த காரியம் யாதெனக் குந்தி வினவுதல்

149. யானுறை யில்லின் வந்த தென்னமா தவமென் றேத்திக்
கானுறை மைந்தர் தம்மைக் கண்டனள் போன்றா ளாகித்
தேனுறை துளவி னான்றன் செய்யமா முகத்தை நோக்கி
வானுறை புரிசை மூதூர் வந்ததென் னருடி யென்றான்.

### கண்ணன் நடந்த வரலாறு கூறுதல்

150. நின்பெரும் புதல்வர் சொல்ல நெடும்புன னாடு வேண்டி
வன்புடை யரசர் கோமான் மனக்கருத் தறிய வந்தேன்
றென்புல வேந்தன் வெஃகச் செருத்தொழில் புரிவ னென்றா
னென்பல சொல்லி னாளை யெதிர்க்கவே யிசைந்த தென்றான்.

### குந்தி வருந்துதல்

151. என்றலுங் குந்தி சால விரங்கின ளெதிர்ந்த போரில்
வென்றிடு வார்கள் யாரோ விதியினா லமர்க்க ளத்திற்
பொன்றிடு வார்கள் யாரோ வென்றுளம் புலர்ந்து நொந்தா
ளன்றவ டன்னைத் தேற்றி யாழியா னுரைக்க லுற்றான்.

### கண்ணபிரான் கன்னனது பிறப்புணர்த்துதல்

152. தன்மைநா னுரைப்பக் கேணின் றந்தைதன் மனையி னீயுங்
கன்னியா யிருந்து வாழுங் காலையோர் முனிவன் வந்து
சொன்னமந் திரமோ ரைந்தி னொன்றினாற் சூரன் றன்னை
முன்னினை யவனு மன்னு வந்துநின் முன்பு நின்றான்.

153. கதிரவ னருளி னாலோர் கணத்திடைக் காதல் கூர
மதலையங் கொருவன் றன்னைப் பயந்தபின் வடுவென் றஞ்சி
மிதவையம் பேழை தன்னிற் பொதிந்துநீ விடவப் போதந்
நதியுமம் மகவைக் கங்கை நதியிடைப் படுத்த தன்றே.

154. காதனின் புதல்வன் றன்னைக் கண்ணிலா வரசன் பொற்றேர்ச்
சூதன்வந் தெடுத்துக் கொண்டு சுதனென வளர்த்த காலை
யாதப னிவனை யாருங் கன்னனென் றழைக்க வென்றான்
றாதையும் விசும்பிற் சொன்ன நாமமே தக்க தென்றான்.

155. பண்புடைக் குமரன் கற்ற படைத்தொழில் பலவுங் கண்டு
நண்புடை யுரிமை யெல்லா நல்கிமா முடியுஞ் சூட்டி
வண்பணி யுயர்த்த கோமான் வாழ்வவற் களித்தான் மற்றைத்
திண்பரித் தேர்வல் லோரி லவனையார் செயிக்க வல்லார்.

156. அந்தநின் மைந்தன் றானே யருஞ்சிலை விசய னோடு
வந்தெதிர் மலைய நின்றா னுறவுமற் றறிய மாட்டான்
சிந்தையி னையந்தீர விதனைநீ தெளியச் சொல்லிக்
கொந்தவி ழலங்க லானைக் கூட்டுக விரைவி னம்மா.



157. தம்பிய ரைந்து பேருந் தனித்தனி யேவல் செய்ய
வம்பவி ழலங்க லோடு மாமணி மகுடஞ் சூட்டி
யம்புவி முழுது நீயே யாளலாம் வருக வென்றா
னும்பர்கா வனைய கையா னுன்னுரை மறுத்தா னாகில்.

158. எரியமு தருந்தக் கான மெரித்தநா ளகன்று போன
வரவினை யங்கர் கோமா னாசுக மாகக் கொண்டான்
வரிசிலை விசயன் றன்மேன் மறுகணை தொடுக்கா வண்ண
மொருவரம் வேண்டு கென்றா னுற்றவர்க் குறுதி சூழ்வான்.

### குந்தி வருந்தி இரங்குதல்

159. வன்றலந் தெரியல் வெய்யோன் மதலையென் மைந்தனென்ப
தன்றெனக் குரைத்தா யாயி னவனுட னனுச வொட்டேன்
சென்றுயி ரொழிக்கு மாறு செருவினை விளைத்துப் பின்னை
யின்றெனக் குரைத்தா யையா வென்னினைந் தென்செய் தாயே.

160. கான்பட்ட கனலிற் பாயுங் கடுங்கணை விலக்கி னேனேல்
வான்பட்ட புரவித் தேரோன் மகன்படு மகவான் மைந்தன்
றாண்பட்டு மடியுஞ் சென்று தடாதினி யிருந்தே னாகில்
யான்பட்ட கொடுமை நன்றென் றென்பட்டா ளிரங்கி வீழ்ந்தாள்.

### கண்ணன் குந்தியைத் தேற்றுதல்

161. தேக்குந்தி யகிலுஞ் சாந்துஞ் சிந்துநீர் நதிசூழ் செல்வக்
கோக்குந்தி யரசன் பாவை குலைந்தழுங் கொடுமை கண்டு
மீக்குந்தி யுறிக டோறும் வெண்ணெயுந் தயிரு முண்ட
வாக்குந்தி மலரோன் பின்னு மனத்தளர் வகற்றி னானே.

162. பைவருந் தலைக ளைந்து படைத்தபன் னகமே போல
வைவரும் படுத னன்றே வங்கர்கோன் படுத னன்றே
வுயவருஞ் சமரி லாவி யொருவர்போ யொருவ ருய்யார்
நைவருந் துயர மாறி நடப்பதே கரும மென்றான்.

### சூரியாஸ்தமன வருணனை

163. காளமா முகிலின் மேனி கரியநா யகனுந் தேற்றி
மீளமா தவத்தின் மிக்க விதுரன்வாழ் மனையி னெய்த
வாளமால் வரையில் வெய்யோன் குறுகினன் வருணன் றிக்கி
னீளமால் யானை நெற்றி நிறத்தசெந் திலகம் போன்றே.

164. நாற்றிசை யுலகு தன்னி னான்மறை யுணர்ந்தோர் தாமும்
போற்றிசை மாலை யென்னும் பொற்புடை யணங்கு வைக
மாற்றிசை விலாத செம்பொன் மண்டபந் தன்னி லாதி
மேற்றிசைக் கடவு ளிட்ட வெயின்மணிப் பீடம் போன்றான்.

165. கொண்டமென் சிறைவண் டென்னுங் கொழுநருக் கிடங்கொடாமல்
முண்டகக் குலத்து மாதர் முகங்குவிந் தூடி நிற்பக்
கண்டெதிர் நின்ற காதற் கயிரவக் கணிகை மாதர்
வண்டுறை நின்று தங்கள் வாய்மலர்ந் தழைக்க லுற்றார்.

சந்திரோதய வருணனை

166. கானெலா மலர்ந்த முல்லைக் ககனமீ தெழுந்த தென்ன
வானெலாம் வயங்கு தாரை நிரைநிரை மலர்ந்து தோன்ற
வேனிலான் விழவின் வைத்த வெள்ளிவெண் கும்பமென்னத்
தூநிலா மதியம் வந்து குணதிசைத் தோன்றிற் றம்மா.

167. தூவிய னிலவு தோன்றத் துணைவரைப் பிரிந்தோர் கண்கள்
காவியு மாம்ப லும்பைங் கருவிள மலரும் போன்ற
மேவிய மகளிர் கண்கண் மீனெறி பரவை யேழுந்
தாவிய லுழையுங் காதற் சகோரமும் போன்ற மாதோ.

கவியின் கூற்று

168. அரவிய லல்கு லாரு மகிழ்நரு மன்பு கூர
விரவிய வமளி யெய்தி வீதிமா நகரி யெங்கும்
பரவையி னிமிர்ந்த வோதை யமர்ந்தபின் பரித்தேர் வேந்த
னிரவிடைச் சூழ்ந்த வண்ண மின்னதென் றியம்பு கின்றாம்.

துரியோதனன் முதலியோர் செய்த சதியாலோசனை

169. தந்தையுந் தம்பி மாருங் கன்னனுஞ் சகுனி தானுஞ்
சிந்தையிற் றெளிந்த கல்விச் செழுமதி யமைச்சர் தாமு
முந்தர வுயர்த்த கோமா னேவலான் முழுது மெண்ணி
மந்திர மிருப்பான் வந்தோர் மண்டபங் குறுகி னாரே.

துரியோதனன் சூழ்ச்சி வினவுதல்

170. தீதறு மதிவல் லோரைச் செழுமதிக் குடையா னோக்கிப்
பாதவ வனத்திற் போன பாண்டவர் தம்மை மீண்டு
மேதக வழைத்து நாடு வேண்டுமி னென்று மூட்டும்
யாதவன் றனித்து வந்தா னென்செய்வ தியம்பு மென்றான்.



திருதராட்டிரன் கண்ணனைக் 'கொல்வதே சரி' எனக் கூறல்

171. பொரும்படைமைந்தன்கூறத்தந்தையும்பொருந்தச்சொல்வா
னிரும்புலி வலையிற் பட்டால் விடுவரோ வெயின ரானோர்
வரம்பில்வெஞ் சேனை யோடும் வளைந்தினி மாயன் றன்னைக்
கரும்பொழு தகலு முன்னே கொல்வதே கரும மென்றான்.

விகன்னன் தடுத்துக் கூறுவது

172. கண்ணிலா னுரைத்த மாற்றங் கேட்டலுங் காவ லோரின்
மண்ணிலா ரிதற்கு முன்பு தூதரை வளைந்து கொன்றா
ரெண்ணிலா விந்த வெண்ண மெவ்வுழிக் கற்ற தென்று
வெண்ணிலா முறுவல்செய் துவிகன்ன னும் விளம்ப லுற்றான்.

கொல்லத் தகாதவ ரிவரெனல்

173. மூத்தவ ரிளையோர் வேத முனிவரர் பிணியின் மிக்கோர்
தோத்திர மொழிவோர்மாதர் தூதரென் றிவரைக்கொல்லிற்
பார்த்திவர் தமக்கு வேறு பாவமற் றிதனி னில்லை
பூத்தெரி தொடையாய் பின்னு நரகினும் புகுவ ரென்றான்.

174. பழியுடைப் பகைஞ ரேனுந் தன்பெரும் பதியில் வந்தா
லழிவுறக் கோறல் பாவ மாண்மையு மன்றா மென்பார்
கழிகடற் சேனை சூழக் கங்குலின் வளைந்திட் டாலு
மெழிலுடைக்கொண்டல்வண்ண னகப்படானெவர்க்கு மென்றான்.

துச்சாதனன் சொல்வது

175. வெம்புய வலியான் மாதை விரிதுகி லுரிந்த வீரன்
தம்பியை முனிந்து சீறித் தமையனை நோக்கிச் சொல்வான்
வம்பவி ழலங்கன் மார்ப மந்தண முரைக்க லுற்றா
லிம்பர்மற் றியாது சொல்ல விளைஞரை யழைத்ததென்றான்.

176. அதிரதர் முதலா வுள்ள வவனிபர் வளைந்து நிற்ப
வெதிர்முகி றவழுங் கோயி லெரியினை யெங்கு மூட்டி
விதுரனு மவனுஞ் சேர வெந்திட மலைவ தல்லான்
மதிபிறி தில்லை பின்னை வல்விரைந் தெழுமி னென்றான்.

கன்னன் தற்புகழ்ச்சி

177. செங்கதி ரெழுந்து சீறிற் செறியிரு ணிற்ப துண்டோ
விங்கிவ னிருந்த வில்லி லெரியிட வேண்டு மோதான்
வெங்கணை யொன்றி னாலே விளிந்திட வென்று மீள்வேன்
கங்குலி னெழுமி னென்று கன்னனுங் கனன்று சொன்னான்.

### சகுனி, படுகுழியிற் பாய்ச்சிக் கண்ணனைக் கொல்ல வேண்டு மெனல்

178. பதிப்பெயர்ந் தேகி நாளைப் பகைவரைக் கூடு மாயின்
விதிப்பய னென்ன நம்மை வெஞ்சமர் வெல்ல வொட்டான்
மதிப்பதென் வேறு கள்ள மாயனை மனையிற் கோலிச்
சதிப்பதே கரும மென்று சௌபலன் பின்னுஞ் சொல்வான்.

179. கொல்லுவ தியற்கை யன்று குழிபறித் தாக்க ரோடு
மல்லரை யிருத்தி மேலோ ராசனம் வகுத்து நாளை
யெல்லிடை யழைத்து வீழ்த்தி யிகலுடன் விலங்கு பூட்டித்
தொல்லருஞ் சிறையில் வைத்த றாதருக் குரிமை யென்றான்.

### துரியோதனன் படுகுழி யமைத்தமை

180. மாதுல னுரைத்த மாற்றம் மருகனு மிசைந்து கங்குற்
போதிடை யனேக மல்லர் வருகெனப் புகன்று தானு
நீதியி னிருந்து தாழ நிலவறை சமைத்த பின்ன
ராதிநா ளுயி ரம்போ ராக்கரை யதனுள் வைத்தான்.

181. மல்லர்ப் பரவர் தம்மை மற்றதி னிரட்டி வைத்தான்
வில்லுடை வீரர் தம்மை வேறதி னிரட்டி வைத்தான்
பல்படை வல்லோர் தம்மைப் பதின்மடங் கதனில் வைத்தா
னல்லிலோர் கடிகை தன்னி லறிவனை யழைக்க வென்றே.

182. பெரும்பில வறையை வேயின் பிளப்பினா னிரைத்து மூடி
யரும்பெறன் மணிக ளாலோ ராசன மதன்மே லாக்கிச்
சுரும்பிமிர் மாலை தூக்கித் தொழிலுடை விதான மேற்றி
வரம்பிலா வென்றி வேலான் மாறிலா வண்ணஞ் செய்தான்.

### சூரியோதய வருணனை

183. அடியவர் மனத்தி லுள்ள வாரிருட் கங்கு றீர்க்கு
நெடியவ னிருக்க வென்று நிலவறை விரகிற் செய்த
கடியவ னியற்கை யஞ்சிக் கங்குலுங் கடிதிற் போகப்
படியவர் துயிலும் போகப் பரிதியு முதயஞ் செய்தான்.

184. சிரந்தரு சுடிகை நாகத் திரண்மணி பலவுஞ் சிந்தி
நிரந்தர மருவி வீழ நிறந்திக ழுதயக் குன்றிற்
பரந்தெழு மருக்கண் சூழ்ந்த படரிருட் கங்குல் கண்டு
புரந்தரன் கோயி லிட்ட பொங்கொளித் தீபம் போன்றான்.



185. தொடர்ந்தொளி ருதய ராகத் தோடுற நெருங்கி மேன்மே
லடர்ந்தரி பரந்து காம னுகம வேதம் பாடத்
தடங்கயண் மலைந் துலாவத் தாமரை முகமுங் காதன்
மடந்தையர் முகமுஞ் சேர மணம்பெற மலர்ந்த மாதோ.

### கண்ணன் காலைக்கடன் முடித்தல்

186. இருந்துயி லுணர்ந்து வேந்தர் யாவரு மிரவிற் சற்றும்
வருந்துயி லிலாத கண்ணன் வாழ்பெருங் கோயில் புக்கார்
பெருந்துயி லநந்த போகப் பேரணை துறந்த மாலு
மருந்துயி லெழுந்து காலை யருங்கடன் முறையிற் செய்தான்.

### தூதரழைக்க, கண்ணன் துரியோதனன் அரண்மனை சேர்தல்

187. மாதவ னிருந்த கோயில் வந்தடி வணங்கி மன்னன்
றூதுவ ராழி யங்கைத் தோன்றலை துளப மாலை
யாதவ குலத்தோ ரேறே யெழுந்தருள் கென்று நின்றெம்
மேதகு மரச னென்றார் முகுந்தனும் விரைந்து சென்றான்.

### துரியோதனன் கொலுச் சிறப்பு

188. கந்திடு களிற்று வேந்தன் கண்ணிலா வரசுங் கங்கை
மைந்தனு முதலா வுள்ள மன்னரு மதிவல் லோருந்
தந்திர வகையு மேனை யிளைஞருந் தன்னைச் சூழ
விந்திர னிருக்கை யன்ன கோயிலூ டினிதி ருந்தான்.

### கண்ணனைத் தனியே வர விடுமாறு துரியோதனன் கட்டளையிடுதல்

189. நாமவே லரச ரோடு நால்வகைச் சேனை யோடு
மாமுகில் வண்ணன் வந்தா னென்றவர் வரவு கண்டோர்
வீமலர்த் தொடையி னானும் வேத்திரத் தவரை நோக்கி
தாமரைத் தடங்கண் மாயன் றன்னையே விடுமி னென்றான்.

190. தன்பெருஞ் சேனை நிற்கத் தண்டுழா யலங்க லானு
மின்புற நகைத்து வேந்த ரிருந்தபே ரவையி னெய்த
மின்புணர் துவச நாக விடநிகர் மனத்தி னானு
மன்பொடு திகிரி யானை யதன்மிசை யிருக்க வென்றான்,

## வேறு

### கண்ணன் விசுவரூபங் கொள்ளுதல்

191. இறைவனெழிற்கதிர் மணிகளழுத்திய தவிசினிருந்தலுமே
நெறுநெறெனக்கொடு நிலவறையிற்புக நெடியவ னப்பொழுதே
மறலி யெனத்தகு நிருப னியற்றிய விரகை மனத்துணரா
முறுகு சினத்துட னடிய தலத்துற முடிகக னத்துறவே.

192. அஞ்சினமஞ்சின மென்றுவிரைந்துய ரண்டர்பணிந்திடவுந்
துஞ்சின மின்றென வன்பணியின்கிளை துன்பமுழந்திடவும்
வஞ்ச மனங்கொடு வஞ்சக னின்றிடு வஞ்சனை நன்றிதெனு
நெஞ்சில் வெருண்டுல கொன்று படும்படி நின்றுநி மிர்ந்தனனே.

193. மல்ல ரரக்கர் குலத்தொடு பப்பரர் வாளினர் வேலினர்போர்
வில்லின ரிப்படி துற்ற நிலத்தறை மேவிய வீரரெலாந்
தொல்லை யிடிக்கயர் வுற்றுயி ரிற்றுறு கடிகைய ராவெனவே
கல்லெனவுட்கினர் தத்தமுடற்பல காலொடு தைத்திடவே.

194. அற்புத பங்கய நற்பத முந்தலி னக்குழி யின்புடையே
சற்பத லந்தொறு மற்று விழுந்தன தத்தநெடுந் தலைபோய்
முற்பவனன்பொர முக்குவடுந்துணி பட்டுமுடங்கிய பொன்
வெற்பெனநின்றனர் வெற்றுடலங்கொடு விற்படை கொண்டவரே.

195. மேல்வலி யுற்றெதிர் வீசி யெழிற்கரு மேக நிறத்திருமால்
கால்விசையிற்படமோது தலிற்பொருகாமர்புயத்துணைபோய்
நீல நிறக்கவின் வாசவன் வச்சிர நீள்படை யிற்சிறகிர்
மால்வரை யொத்தனர் வாகைபெ றக்கதிர் வாள்க ளெடுத்தவரே.

196. வெயில்விடு பைத்தலை யமளி மிசைத்துயில் விபுதர்களுக்கரியோன்
பயில வுதைத்தலி னவர்க ளுரத்திடை பதமலர் பட்டுருவா
மயில்கட விக்கட வுளர்பகை யைக்கதிர் மகுட முருக்கியவே
ளயில்கொடு குத்திய நெடுவரை யொத்தன ரயில்க ளெடுத்தவரே

197. மின் சுடி கைப்புயகங்கள் வெருக்கொளும்வெங்கருடக்கொடியோன்
வன்பத பற்பந கங்கொ டெடுத்துயர் வண்கக னத்திடலான்
முன்பு வனத்திடை வந்து கவிக்கிறை மொய்ம்புண ரப்புகல்போ
தென்பு மலைக்குறு பண்பை யடுத்தன ரெஞ்சிய பப்பரரே.



198. மைந்து படைத்துயர் பஞ்சவர் சொற்படி வந்தம லர்க்கழலா
லுந்தியுதைத்துடலம்புதையப்பில மொன்றியொளித்திடலா
லந்தணன்முற்பகல்வந்துபுடைத்திட வஞ்சிநிலத்திடைவீழ்
விந்தமொ டொத்தனர் வன்குழி யிற்றிகழ் வெங்க ணரக்கருமே.

199. அந்த விடத்தெறி பம்பர மொத்துட லஞ்சுழ லச்சுழலக்
குந்தி யுறித்தயி ருண்டவர் பொற்கழல் கொண்டு சுழற்றுதலான்
முந்தம ரர்க்கமு தந்தர மைக்கடன் முன்சுழ லச்சுழலு
மந்தர மொத்தனர் குந்தமெ டுத்தெதிர் வந்துமலைந்தவரே.

200. முட்டிய தொல்குரு திக்கடன் மல்கலின் முட்டிகொள் பல்விரலா
னெட்டுட லம்வகிர் பட்டத னுள்விழ நித்தர்செய் கொல்வினையான்
மட்டற வல்விற லுற்றெதிர் செல்கவி மைக்கட லெல்லையிலே
யிட்டன கல்வரை யொத்தனர் வெல்கழ லெக்குல மல்லருமே.

201. எப்புவி நிற்பன வெக்கிரி நிற்பன வெக்கட னிற்பனவென்
றிப்புவனத்துயிர்முற்று மயக்குறவுட்கினரெய்த்திமையோர்
மைப்புய லொத்தொளிர் பச்சை நிறத்தி னன்வர்க்க மலர்க்கழலா
லொப்பற மட்குழி யுற்றவ ரைப்பட வொத்திமி தித்தலுமே.

202. கொண்டன் முழக்கென வம்புலியைக் கடல்கொண் டெழுதற்கெதி
சண்ட முழக்கென வன்பவ னக்கிளை தந்தமுழக் கெனவே [ருஞ்
வண்டின மொய்த்தெழுவண்டுளவத்தொடை வண்டுவரைத்திருமா
லண்டமு கட்டுற நின்றுசி ரித்தன னங்கணெ ருப்பெழவே.

203. ஒன்றுப டக்கட லம்புமு கப்பன வும்பர்கு லத்தருவுஞ்
சென்றுமு றிப்பன வெண்டிசை யிற்குல சிந்துர மெற்றுவவெண்
குன்றமுடைப்பன பைம்பொனுரக்கிரி கொண்டுதிரிப்பனவா
லன்றுத னித்தனி நின்றும லைத்தரு ளங்கைகள் பற்பலவே.

204. துகிரிதழ் வைத்துநல் வளைகண்மு ழக்கின தொடர்சில கைத்தலமே
யகிலம்வெ ருக்கொள வரிமழுவெற்றின வடுசில கைத்தலமே
புக லும்வடிக்கணை யுதணமெ டுத்தன பொருசில கைத்தலமே
திகழ்வி சயத்தொடுசிலைகள் குனித்தன சிலசிலகைத்தலமே.

205. வெங்கணை யத்திரள் குந்தனி றப்படை வெம்புமு லக்கைகள்போர்
பொங்கிய வச்சிர முந்துக லப்பைகள் புன்கழு வர்க்கமயி
லெங்குமலைத்தெழுசெஞ்சுரிகைத்திரடண்ட மிலற்றினெடுந்
தங்கிய சக்கர பந்திதரித்தன தண்டல கைத்தலமே.

206. மேலெழுமங்கதிர்வாளுறைபோம்படிவீசினவான்புடையே
தோலின மேந்தின நீள்கவ ணேந்தின சோரிகள் சோர்ந்திடவே
ஞாலமெ லாம்பொரு தோமரம் வாங்கின நாவொரு மூன்றனவாஞ்
சூலமொ டோங்கின பாசமொ டோங்கின சூழ்சில பூங்கரமே.

207. சிலசில கைத்தல மடுகழ லிற்பல செறிகழல் கட்டினவே
சிலசிலகைத்தலமறுகுபுயத்திடை செறிதொடையிட்டனவே
சிலசில கைத்தல மணிகொளு ரத்திடை பணிகடி ருத்தினவே
சிலசிலகைத்தலம்விரல்கொடுசுட்டினசெறுநர்திகைத்திடவே

208. மாயிரு ஞாலமே லாம்வெளி யாயொளிர் மரகதசோபையுறப்
போயிருபாலும் வளைந்துவளைந்தெதிர் பொருமுனைவெம்படையோ
டாயிர மாயிர மங்கைபு றப்பட வண்டரு மாதவரும்
பாயிர நான்மறை பாடிவி யந்துப ணிந்துபு கழ்ந்தனரே.

209. ஆரண னேயர னேபுவ னங்க ளனைத்தையு மன்றுதவுங்
காரண னேகரு ணாகர னேகம லாசனி காதலனே
வாரண மேபொது வேயொரு பேரிட வந்தரு ளும்புயலே
நாரண னேமுனி யேன்முனி யேலென நாகர்ப ணிந்தனரே.

210. மாதவ னேமுனி யேலெமையாளுடைவானவனேமுனியேல்
யாதவ னேமுனி யேலித யத்திலி ருப்பவ னேமுனியே
லாதவ னேமுனி யேன்மதி வெங்கன லானவ னேமுனியே
னீதவ னேமுனி யேன்முனி யேலென நின்றுப ணிந்தனரே

211. கங்கைம கன்கதி ரோன்மக னம்பிகை காதன்ம கன்றனய
ரங்கவை யின்கணி ருந்தந ராதிப ரடையவெழுந் தடைவே
செங்கைகுவித்தசி ரத்தின ராயுணர்வொன்றிய சிந்தையரா
யெங்கள் பிழைப்பினை யின்று பொறுத்தரு ளென்றுப ணிந்தனரே

212. கண்ணபொறுத்தருள்வெண்ணெய ருந்தியகள்வபொறுத்தருள்கார்
வண்ணபொ றுத்தருள் வாமபொ றுத்தருள் வாதபொ றுத்தருணீ
திண்ணமனத்துணர் வொன்றுமிலாதவர் செய்தபெரும்பிழையென்
றண்ணன்மலர்க்கழல்சென்னியில்வைத்தெதிரன்று துதித்தனரே.

கண்ணன் விசுவரூபத்தை அடக்குதல்

213. தேவரும் வாசவ னுந்தவ ருந்திசை முகனுந ராதிபரும்
யாவரு மன்பினொ டாயிர நாமமு மெண்ணியிறைஞ் சுதலான்



மூவரு மொன்றென நின்றரு ளுதனு முனிவுத விர்ந்தருளா
மீவரு மண்டமு றுந்திரு மேனியொ டுங்கினன் மீளவுமே.

துரியோதனன் இறுமாப்பு

214. தன்னி னுயர்ந்தவர் யாருமி லாமுகில்சதுர்மறையின்படியே
யெந்நில முந்திரு வடியின்ம றைந்திட விப்படி நின்றிடவும்
பின்னையு மஞ்சிய யர்ந்தில னெஞ்சுபெ யர்ந்தில னாசனமுஞ்
சென்னியி லுங்கரம்வைத்திலன் வண்புகழ் சிறிதுமொழிந்திலனே.

துரியோதனனை நோக்கி கண்ணன் கூறியவை

215. தொல்லவை யின்க ணிருந்த நராதிப துன்மதி யாலெனைநீ
கொல்லநினைந்தது நன்றெனவன்றிறல்கூறின னெம்பெருமா
னெல்லையினின்குலமுற்று மடிந்திடவுற்றுமலைந்தொர்கணத்
தெல்லையின்வெஞ்சமர்நூறுவன் யாவருமேறுவர்வானுலகே.

216. அஞ்சினநின்னையழித்திடவின்னுடனன்றுபெருஞ்சமர்வாய்
வெஞ்சுட ராயுத மொன்றுமெ டுக்கில மென்றுவி ளம்பியது
மெஞ்சம லைந்தெதிர் வந்துயிர் கொள்ளுது மென்றுத னித்தனியே
பஞ்சவர் கூறிய வஞ்சின வாசக மும்பழு தாமெனவே.

கண்ணன் வெளியேறுதல்

217. என்றுரை யாடிநெடுங்கடல் வண்ணனெ ழுந்தரு ளப்பிறகே
சென்றனரெம்முடிமன்னவரும் பணிசேர்கொடியோனையலார்
நின்றுப சாரமு ரைத்தவர் தம்மைநி றுத்திய நந்தரமே
வன்திற லங்கர்பி ராணொடு கூறினன் மற்றொரு வாசகமே.

கன்னனின் பிறப்புணர்த்தல்

218. வண்மை யினாலுய ரங்கர்கு லாதிப மதிகுலம் வாழ்வுறவுந்
தண்மையினாலுயர்மன்னவரை வருமுன்னினுனக்கிளையோர்
பெண்மையினாலுயர்குந்தி வயிற்றிடைபெருமையினாலிதயத்
திண்மையினாலுயர்நின்னையுமன்பொடுதினகரனல்கினனே.

219. ஏயுநெ டுங்கொடி முரசுடை யோனையெ ழிற்றரு மன்தரவே
வாயுவ ழங்கினன் வீமனை நல்கினன் விசயனை வாசவனு
மாயுநி கழ்ந்திடு வேதம ருத்துவ ரன்பொட ளித்தனர்செந்
தேயுவெ னுந்திற னகுலனை யுஞ்சக தேவனை யும்பெரிதே.

220. அந்தணன் முன்றரு மந்திர மைந்தினி லறுவரை யுங்கடவுட்
குந்திப யந்தனள் யானினி யென்பல கூறுவ துங்களினீ
ரிந்தநி லம்பெறு வீர்தவிர் கிற்பெற யாரினி வேறுரியார்
வந்தினி நும்பியர் தம்மொடுசேர்கெனமாயன்மொழிந்தனனே

## வேறு

### கன்னன் கண்ணனுக்குக் கூறிய உத்தரம்

221. கன்றால் விளவின் கனியுகுத் தங்கழையா னிரையின் கணமழைத்துங், குன்றான் மழையின் குலந்தடுத்துங் குலவுஞ் செல்வக் கோபாலா, வின்று லெனது பிறப்புணர்ந்தே னென்றன் புருகி யெம்பியர்பாற், சென்று லென்னை நீயறியச் செகத்தா ரென்றுஞ் சிரியாரோ.

222. ஆரென் றறியத் தகாதவெனை யரசு மாக்கி முடிசூட் டிச், சீருந் திறமுந் தனதுபெருந் திருவு மெனக்கே தெரிந்தளித் தான், பாரின் றறிய நூற்றுவர்க்கும் பழிதீர் வென்றிப் பாண்ட வர்க்கும், போரென் றறிந்துஞ் செய்ந்நன்றி போற்று தவிரற் போவேனே.

### கண்ணன் அசுவத்தாமாவை அழைத்தல்

223. இரவிக் குரிய திருமதலை இவ்வா றுரைக்க விசை வண்டு, விரவிப் பயிலுந் துழாய்முடியோன் வேறோர் மொழியும் விளம்பாம, லுரவிற் றடந்தோ ளரவோனை யேகென் றருளி யொருசார்வெம், புரவித் தாமா னின்றானை வருகென் றழைத்துப் புகல்கின்றான்.

### மித்திரபேதஞ் செய்தல்

224. போயே கானம் பலதிரிந்து புகன்ற விரதம் பொய் யாதோ, ராயே வந்த பாண்டவர்களைந்தூர் வேண்ட மறுத்ததற் குச், சேயே யனைய சிலைமுனிவன் சேயே நாளைச் செருக்களத்தி, னீயே கரியென் றெடுத்துரைத்தா னெடியோன் றுளப முடி யோனே.

225. ஆறு வுனதாண் மைக்குநிக ரவனி தலத்தில் வே றுண்டோ ஞானு திபனே போர்க்களத்தி னுகைக்கொடியோன் பணிந்துன்னைச், சேனு பதியா கென்றாலுஞ் செலுத்தேனென் றுநீமறுத்தி, யானு லுய்வ ரைவருமற் றவர்பா லுனக்கு மன் புண்டே.



226. ஆயோ தனத்தி லடலரியே றனையான் றன்னை யிவ் வாறு, மாயோ னுரைத்துத் தன்விரலின் மணியா ழியைமண் ணிடை வீழ்த்தான், சேயோ னதனை யெடுத்தவன்றன் செங்கை கொடுக்க வாங்காமற், றாயோ யூர்கோள் பரிதிதனைச் சூழ்ந்த தகல்வான் மீதென்றே.

227. வரித்தா மரைக்கட் டிருநெடுமால் வான்வாய் நோக்க வரிவிற்கைப், பரித்தா மாவு மாழியுடன் பரிதி வடிவந் தனைப் பார்த்தான், கிரித்தாழ் கவிகைக் கருங்கள்வன் கிளர்நான் முனி வன் மைந்தனையும், பிரித்தா னவனுஞ் சூளுற்று னென்று ரிருந்த பேரவையோர்.

### அசுவத்தாமாவை நம்பலாகாதெனத் துரியோதனன் கூறுதல்

228. தனிவந் தகலுந் தூதனைப்போய்த் தானே யணுகித் தடஞ்சாப, முனிவன் புதல்வன் மோதிரந்தொட் டருஞ்சூண் முன்னர் மொழிகின்று, னினிவந் துறவாய் நின்றாலு மெந்நன் றெளிவ திவனையெனத், துணிவந் தாசர் முகநோக்கிச் சொன்னு னிடியே றன்னானே.

### அசுவத்தாமன் வருந்துதல்

229. துளியார் மதுவின் வலம்புரித்தார்த் துரியோ தனன் முன் சொல்லியது, மொளியா ரவையில் வாள்வேந்த ரொருவர்க் கொருவ ருரைத்தனவுங், களியா னையனுன் செவிப்படலுங் கலங் கிச் சித்த மிவரென்னைத், தெளியா வண்ணம் பேதித்தான் றிருமா லென்றே சிந்தித்தான்.

### கண்ணன் இந்திரனை நினைத்தல்

230. தண்ணந் துளப முடியோனுந் தனித்தங் கிருந்து தன்மனத்தி, னெண்ணம் பலித்த தெனமகிழ்ந்தே யிளையோன் றனக்கு விடைநல்கி, விண்ணின் றமரர் மிகத்துதிக்க விதுரன் மனையின் மேவியபின், றிண்ணங் கடவுட் குலவரசன் வருமா றறிந்து சிந்தித்தான்.

### இந்திரனை நோக்கிக் கண்ணன் கூறுதல்

231. அந்தக் கணத்தில் வந்திறைஞ்சு மாகண் டலனை
முகநோக்கிக், கந்தத் துளப முடியோனுங் கண்ணுங் கருத்துங்
களிகூரத், தந்தத் தொழிலி னரிசுமந்த தவிசி னிடையே யுட
னிருத்தி, முந்தக் கருது கின்றவினை முடிப்பா னுபாய மொழி
கின்றான்.

### இந்திரனுக்கு உபாயங் கூறல்

232. கிரியின் சிறகை யரிபடையாய் கேண்மோ வாண்
மைக் களமீதில், வரிவெஞ் சிலைக்கை விசயனுக்கு மாறாய்
முனிந்து வருகின்ற, வெரியுங் கனல்வாய் விடவரவொன் றிவ
னுக் குற்ற பகையான, வரியின் புதல்வன் றனக்கொருபே
ரம்பா கியதா ரறியாதார்.

233. கன்னன் விசயன் றனைக்கொல்லிற் கடற்பார் முழு
துங் கண்ணில்லா, மன்னன் புதல்வன் றனக்கேயா மொழிந்
தோர் தாமு மடிந்திடுவார், முன்னஞ் சூதின் மொழிந்தபகை
முடியா திருக்கி னவர்க்கன்று, நின்னெஞ் சறிய யானறிய
நினக்கே வசையு நிலையாமே.

234. கவசங் கனக குண்டலமென் றிரண்டு புனையிற்
கற்பாந்த, திவசம் பொரினுங் கன்னனுயிர் செகுப்பார் மண்
ணிற் சிலருண்டோ, வவசங் கிளைஞ ருறத்துணைவ ராற்றக்
களத்தி லடுகுராங்குத், துவசம் படைத்தோன் படும்பயந்த
துணைவா வின்னே சொன்னேனே.

235. வல்லார் வல்ல கலைஞருக்கு மறைநூ லவர்க்குங்
கடவுளர்க்கு, மில்லா தவர்க்கு முள்ளவர்க்கு மிரந்தோர் தமக்
குந் துறந்தவர்க்குஞ், சொல்லா தவர்க்குஞ் சொல்பவர்க்குஞ்
சூழுஞ் சமயா திபர்களுக்கு, மல்லா தவர்க்கு மிரவிமக னரிய
தான மளிக்கின்றான்.

236. மைந்தற் குறுதி நீவேண்டின் வல்லே முனிவர்
வடிவாகிச், சந்தப் பனுவ லிசைமாலைத் தானு கரனை விரைந்
தெய்தி, யந்தக் கவச குண்டலங்க ளளிப்பா யென்று லவ
னென்று, மிந்தப் புவியின் மறுத்தறியா னுயிரே யெனினு
மீந்திடுவான்.



237. இரண்டு மவன்பா னீகவரி னிருந்தே னூர்ந்திப்
படியரசர், திரண்டு வரினும் வெஞ்சமரிற் றிண்டேர் விசய
னெதிர்நில்லார், முரண்டு பொருவிற் கன்னனுந்தன் முன்னே
யெய்தி முடிசிதறிப், புரண்டு மறியு மெனவணங்கிப் புத்தே
ளரசன் போகின்றான்.

## வேறு

### இந்திரன் கிழ வடிவத்துடன் கன்னனை அடைதல்

238. தண்டு தாளெனக் குனிந்துட லலமரத் தாளிணை
தளர்ந்துதள் ளாடக், கண்டி யாவருங் கைதொழக் கவித்தகைக்
குடையுடன் கங்கைநீர் நுரையை, மொண்டு மேலுறச் சொரிந்
ததா மெனநரை திரையுடன் மூப்பொரு வடிவங், கொண்ட
தாமென வொருமுனி யாகியே கொற்றவன் வாயில்சென்
றடைந்தான்.

### கன்னன் இந்திரனை வணங்கி உபசரித்தல்

239. அடுத்த தானமும் பரிசிலு மிரவலர்க் கருளுடன்
முற்பக லளவுங், கொடுத்து நாயகன் புகுந்தன னுளோநீர் குறு
குமி னென்றவன் கோயிற், றடுத்த வாயிலோர் மீளவு முணர்த்
தலிற் றலைவனுந் தருகென விரைவின், விடுத்த நான்மறை
முனியைமுன் காண்டலும் வேந்தனுந் தொழுதடி வீழ்ந்தான்.

### ‘விரும்பியதைக் கொடுப்பேன்’ என்று கன்னன் கூறல்

240. என்ன மாதவம் புரிந்தனன் பரிந்துநீ யீண்டெழுந்
தருளுதற் கென்று, பொன்னி னாசனத் திருத்திமெய் யருளு
டன் பூசையு முறைமுறை புரிய, வன்ன வேதியன் றளர்ந்த
வென் னடையினு லானதே பிற்பக லென்று, சொன்ன வேளையி
னகைத்துனக் களிப்பனீ சொன்னவை யாவையு மென்றான்.

### கன்னன் சபதமுரைத்தல்

241. அருத்தி யீதல்பொற் சுரதரு வினுக்குமற் றரிதுநீ
யளித்தியோ வென்று, விருத்த வேதியன் மொழிந்திட நகைத்து
நீ மெய்யுயிர் விழைந்திரந் தாலுங், கருத்தி னேடுனக் களித்
திலே னெனினெதிர் கறுத்தவர் கண்ணிணை சிவப்ப, வுருத்த
போரினிற் புறந்தரு நிருபர்போ யுறுபத முறுவனென் றுரைத்
தான்.

### கவச குண்டலம் அளித்தல்

242. வந்த வந்தணன் கவசகுண் டலங்களை வாங்கிநீ
வழங்கெனக் கென்னத், தந்த னன்பெறு கெனவவன் வழங்க
விண் டலத்திலோர் தனியச ரீரி, யிந்தி ரன்றனை விரகினான்
மாயவ னேவினான் வழங்கனீ யெனவுஞ், சிந்தை யின்கணோர்
கலக்கமற் றளித்தனன் செஞ்சுடர்த் தினகரன் சிறுவன்.

### இந்திரன் வேல் கொடுத்தல்

243. அண்டர் யாவரு மலர்மழை பொழிந்தன ரந்தர
துந்துபி யார்ப்பக், கொண்டல் வாகனன் கொண்டமெய் யொழிந்
துதன் கோலமெய் யுடன்வெளி நின்றான், கண்டு மாமன முரு
கியே களித்திடுங் கன்னனுக் கந்நெடுங் கடவுண், மண்டு போரி
னில் வயந்தரு மிதுவென மற்றொரு கொற்றவே லெடுத்தே.

244. வெலற்க ருந்திறல் விசயன்மே லொழித்துநீ வெஞ்
சின மடங்கல்போ னெஞ்சிற், கலக்க மொன்றறப் பொருதிறல்
புனைந்திடு கடோற்கசக் காளை தன் னுயிரே, யிலக்கு வந்தெதிர்
மலைந்தபோ திதற்கென வேவென மறையையு மியம்பிச்,
சொலற்க ரும்புகழ்ச் சுரபதி கொடுப்பவத் தோன்றலுந் தொழுது
கைக் கொண்டான்.

### இந்திரன், நடந்தவற்றைக் கண்ணனுக்குக் கூறல்

245. நிரந்த ரம்புகழ் நிலைபெறுங் கன்னனை நெஞ்சுற
மகிழ்ந்தவ ணிறுத்திப், புரந்த ரன்பசுந் தண்டுழா யணிந்திடும்
புயல்வண னிருந்துழிப் போந்தே, யிரந்து சென்றுதான் மொழிந்
தது மவ்வள வீந்தது மாங்கவற் கிசைத்தான், தரந்த ருந்திரு
மாலதை வினவியவ் வாசவன் றனக்குரை வழங்கும்.

### கண்ணன் இந்திரனுக்குக் கூறுவது

246. உண்மை யாகவெஞ் சமர்முகத் தெறிபடை யொன்
றும்வந் துடலுற வொட்டாத், திண்மை யாலுயர் கவசகுண்
டலங்களைச் சென்றிரந் தவர்க்கிவன் கொடுத்தா, னெண்மை யாயி
னுங் கிளைஞரே யேற்பினு மியல்பிலாப் புன்செல்வ ரீயார்,
வண்மை யாளர்தம் மாருயிர் மாற்றலார் கேட்பினு மறுக்கிலா
ரென்றே.



### குந்தியைக் கன்னனிடம் போகெனல்

247. வாசவன் றனக்கு விடைகொடுத் ததன்பின் வந்தகா
ரியந்தனை முடிப்பான், கேசவன் றனது தாதையோ டுதித்த
கேண்மைகூர் தெரிவையைக் கிட்டித், தேசவன் றந்த குரிசில்பால்
விரைவிற் செல்கெனப் பயந்தசே யிழையும், பாசமுன் னுறமா
லேவலாற் றனது பாதபங் கயஞ்சிவப் பித்தாள்.

### குந்திதேவியைக் கன்னன் உபசரித்தல்

248. வந்து குந்திநின் கோயிலெய் தினளென வாயிலோ
ருரைத்திட மைந்தன், முந்து மன்புடன் றொழுதெதிர் கொண்டு
நன் முறைமையா லாசனத் திருத்தி, யிந்து வின்கதிர் கண்டு
மேன் மேலுமுற் றிரங்கிவான் கரைகடந் தேறுஞ், சிந்து வெண்
டிரைச் சிந்துவொத் துருகுந் தெரிவையோ டுரைசில செப்பும்.

### குந்தி, 'நான் உனது தாய்' எனக் கன்னனுக்குக் கூறல்

249. அன்னை வந்ததென் னருந்தவப் பயனென வன்பினா
லின்புற வணங்கி, யென்னை வந்தவா றென்னமற் றவளுமே
யீன்றதா யானுனக் கென்று,முன்னை வந்தொரு மந்திரந் தவமுனி
மொழிந்ததுங் கதிரவ னருளாற், பின்னை வந்ததும் பேழையில்
விடுத்ததும் பிழையிலா துரைத்திடக் கேட்டே,

### கன்னன் மறுத்துக் கூறல்

250. மாய னார்விர கிதுவென மனத்தினின் மதித்துவந்
தளித்திடும் வள்ள, னீய நாளெனைப் பயந்தவ ளென்னினு நின்
மொழி நெஞ்சுறத் தேறேன், பேய னார்சிலர் பேரறி வின்மை
யாற் பெற்றதா யெனக்கென வந்து, தூய நாகரி னமைந்ததோர்
துகிலாற் றுன்பமுற் றென்புரு வானார்.

## வேறு

### கன்னனளித்த ஆடையைத் தரித்த குந்தி அழியாதிருத்தல்

251. அடாது செய்தவர் படாதுபட் டனரெனு மங்கர்கோ
னருண்மொழி கேட்டுத், தடாத வன்புடைக் கெடாதது மொழி
பகர் தையலு மையலிற் றவிர்ந்து, படாம தென்கையிற் றருகென
வருதலும் பயந்திலே னெனிலெனை முனியென், றெடா விரித்த
லைத் துடற்படப் போர்த்தெதி ரீன்றதா யாமென விருந்தாள்.

### வியப்புற்ற கன்னனை நோக்கிக் குந்தி கூறுதல்

252. இருந்ததா யீன்ற வன்றுபோ லுருகி யிருதடங் கொங்கைபால் சொரிந்தா, ளருந்துவான் போல விரவிசேய் விரும்பி யாதரத் துடன்புள் கானன், புரிந்ததா யன்போ டிறுகுறத் தழுவிப் பொன்முடி மோயின ளுயிராப், பரிந்துநா னன்றே யுனைவளர்த் தெடுக்கப் பாக்கியஞ் செய்திலே னென்றாள்.

253. வருகவென் மதலா யிளைஞரை வருநின் மலரடி யன்பி னால் வணங்கி, யுரிமையான் மனமொத் தேவலே புரிய வொரு தனிச் செய்யகோ லோச்சி, யரசெலாம் வந்துன் கடைத்தலை வணங்க வாண்மையுஞ் செல்வமும் விளங்கக், குருகுலா திபர்க் குங் குரிசிலாய் வாழ்வு கூர்வதே கடனெனக் குறித்தாள்.

### கன்னன் குந்தியை விழித்துக் கூறுதல்

254. பெற்றநீர் மகவன் பிலாமையோ வன்றிப் பெரும்பழி நாணியோ விடுத்தீ, ரற்றைநாட் டொடங்கி யென்னையின் றளவு மாருயிர்த் துணையெனக் கருதிக், கொற்றமா மகுடம் புனைந்தர சளித்துக் கூடவுண் டுரியதம் பியருஞ், சுற்றமா னவரு மென் னடி வணங்கத் தோற்றமு மேற்றமு மளித்தான்.

255. மடந்தைபொற் றிருமே கலைமணி யுகவே மாசறத் திகழுமே காந்த, விடந்தனிற் புரிந்தே நானயர்ந் திருப்ப வெடுக் கவோ கோக்கவோ வென்றான், றிடம்படுத் திடவே விராசரா சனுக்குச் செருமுனைச் சென்றுசெஞ் சோற்றுக், கடன்கழிப் பதுவே யெனக்கினிப் புகழுங் கருமமுந் தருமமு மென்றான்.

### குந்தி துயருறுதல்

256. பின்னையும் பற்பன் மொழிந்தபின் பலவும் பேசியென் பூசலோ விளைந்த, துன்னிநீ ரிங்கு வந்ததென் கரவா துண்மையா லுள்ளவா றுரைமி, னென்னமைந் தனுமிப் பரிசினு லுரைப்ப வின்றறத் துறந்தவன் றையினு, மன்னைநெஞ் சழிந்தே யிருக ணீர் சொரிய வலறிவாய் குழறிநொந் தழுதாள்.

### கன்னன் குந்தியைத் தேற்றல்

257. ஆண்டுமா மகனு மிருகணீர் துடைத்தவ் வன்னையைப் பன்முறை தேற்றி, மூண்டவல் வினையின் பயனலா தியார்க்கு முயற்சியால் வருவதொன் றுண்டோ, வேண்டும்யா வையுமே தருகுவே னீரும் வேண்டிய வேண்டுக வென்னப், பாண்டுவின் றிருமா மனைவியு மதற்குப் பண்பினு லின்னன பகர்வாள்.



### கன்னனிடம் குந்தி வரங்கேட்டல்

258. பார்த்தன்வெஞ் சமரி னின்னுடன் மலைந்தாற் பகைப் பெரும் பாந்தளம் பகழி, கோத்தலும் பிழைத்தான் மறுத்துநீ விடுத்துக் கோறலென் றொருவரங் குறித்தாள், வாய்த்தமற் றவர்க ளிளைஞரென் றவரை மலையலென் றொருவரங் குறித்தாள், மூத்தவன் காத லிளைஞர்தம் பொருட்டான் மொழிந்தமை கேட் டிவை மொழிவான்.

### கன்னன் உத்தரம்

259. தெறுகணை யொன்று தொடுக்கவு முனைந்து செருச் செய்வோன் சென்னியோ டிருந்தான், மறுகணை தொடுப்ப தாண் மையோ வலியோ மானமோ மன்னவர்க் கறமோ, வுறுகணை யொன்றே பார்த்தன்மேற் றொடுப்ப னொழிந்துளோ ருய்வரென் றுரைத்தான், தறுகண ரலர்க்குந் தறுகணு னவர்க்குந் தண்ணளி நிறைந்தசெங் கண்ணன்.

### குந்தியை நோக்கிக் கூறுவன

260. பெருவர மிரண்டும் பெற்றபின் றன்னைப் பெற்றதா யினைக்கரங் குவித்துத், தருவா மெனக்கு மிரண்டுள வுலகிற் சரா சரங் களுக்கெலாந் தாயீர், வெருவரு மமரிற் பார்த்தனு லடியேன் வீழ்ந்தபோ தவனிப ரறிய, மருவரு முலைப்பா லெனக்களித் தருந்த மகனெனு வாய்மையு முரைப்பீர்.

261. உய்வருந் திறல்வெம் போர்முடிப் பளவு முமக்குநான் மகனெனுந் தன்மை, யையரு மறியா வண்ணநீர் காப்பீ ரல்லதங் கவர்சிறி தறியின், மைவருங் கடற்பா ரனைத்தையு மெனக்கே வழங்குவர் வழங்கினல் யானென், கைவருந் துணைவன் றனக் கலால் வழங்கேன் கடைப்பிடி கருமமீ தென்றான்.

### குந்தி கண்ணபிரானிடம் போதல்

262. என்றது மதுகேட் டீன்றதா யொக்கு மென்றுகொண் டிவ்வா ரோர்ந்து, வன்றுயர் மேன்மேல் வளரயான் றளரா வகை

யுபி ருனக்குழற் பெயர்வ, தென்றினி யெனத்தன் கண்கணீர் சொரிய வினைந்துகைந் தழுதழு திரங்கி, யென்றருண் மதலை தனைத்தழீஇ நிறுத்தி யாதவ னிருந்துழிச் சென்றாள்.

கண்ணன் நிகழ்ந்தன யாவு மறிந்து பாண்டவரிடம் வருதல்

263. கண்ணனுங் குந்தி கன்னனோ டுரைத்த கருத்தெலாந் திருத்தமாக் கேட்டாங், கெண்ணமு முடிந்த தெனமகிழ்ந் தந்த வணங்கையு மில்லிடை யிருத்தித், தண்ணளி யுடன்றன் பின்வரு நிருபர் தம்மையு முறைமுறை நிறுத்திப், பண்ணமை தடந்தேர் மீதுகொண் டன்றே பாண்டவ ருறைநக ரடைந்தான்.

264. தூதுபோ யரவத் துவசனோ டுறுதி சொன்னது மறுத்தவன் சினந்து, மோதுபோர் புரியத் துணிந்ததும் விதுரன் முரிவில் லிறுத்ததுங் கங்கூற், போதுபோர் வஞ்சம் விளைத்ததுங் கன்னன் புரந்தரற் கீந்ததும் பயந்த, மாதுபோய் வரங்கள் பெற்றவை யொழிய மற்றெலா மைத்துனர்க் குரைத்தான்.

# கிருட்டிணன் தூதுச் சருக்க உரை

1. பேர்படைத்த.........

**இதன் பொருள் :** பேர் படைத்த விசயனுடன் - கீர்த்தியைப் பெற்றவனாகிய அருச்சுனனோடு, மும்மை நெடும் பிறவியினும் - சிறப்புடைய மூன்று அவதாரங்களிலும், பிரிபான் ஆகி - நீங்காதவனுய் கூட விருந்து, சீர்படைத்த கேண்மையினல் - உள்ளன்புடைய நட்பினுல், தேர் ஊர்தற்கு இசைந்தருளும் செங்கண்மாலை - தேர் செலுத்துவதற்கு உடன்பட்ட திருமாலவதாரமானவனை, பார்படைத்த சுயோதனற்கு - இராச்சியத்தைப் பெற்றுள்ள துரியோதனனுக்கு, அமரில் படை எடேன் என பணித்த கோவை - யுத்தத்தில் அவனுக்கெதிராக ஆயுதம் தொட்டுச் சண்டை செய்யேன் என்று வாக்களித்த தலைவனை, கார்படைத்த நிறத்தோனை - மேகம் போன்ற கரிய நிறத்தையுடையவனாகிய கண்ணபிரானை, கைதொழுவார் - கைகூப்பி வணங்குபவர், பிற ஆழி கரை கண்டாரே - பிறவியாகிய கடலைக் கடந்து நற்கதி யடைவர்.

அருச்சுனனுக்குத் தேர் செலுத்தியவனும் துரியோதனனுக் கெதிராக ஆயுதம் எடுக்கமாட்டேனென்று வாக்குக் கொடுத்தவனுமாகிய கிருட்டிணமூர்த்தியை வணங்குபவர் பிறவித்துன்பத்தைத் தவிர்ப்பவர்களாவர். பிற - பிறப்பு; ஆழி - ஆழ்ந்திருப்பது. 'மாலை, கோவை, நிறத்தோனைக் கைதொழுவார் கரைகண்டாரே' என முடிக்க.

2. ஞானமன்பொ டினிதுரைத்து.........

**இ - ள் :** அன்பொடு ஞானம் இனிது உரைத்து - தத்துவ மொழிகளை (தருமருக்கு) அன்புடனும் விளக்கமாகவும் கூறி, ஞானம் முனி அகன்றதன் பின் - முக்காலமும் உணர்ந்த சஞ்சயமுனிவன் திரும்பிப் போனபின்னர், சுனைகள்தோறும் - அருவிகளிலெல்லாம், ஏனல் அம் தண் கிரி - தினைப்புனங்கள் நிறைந்த அழகிய குளிர்ச்சி பொருந்திய மலைகள், பெருந்தேன் இறைக்கும் - மிக வதிகமாகத் தேனை வாரி இறைக்கும், எழில் குருநாடன் - அழகிய குருநாட்டையுடைய தருமன், சாம பேத தான தண்டம் என - சாமம் பேதம் தானம் தண்டம் என்று, முறைமையின், நிருபர் தருமம் புகலும் - ஒழுங்கு முறையில் அரச நீதி (மனு தர்மம்) சொல்லுகின்ற (நால்வகை யுபாயங்களின்), தகுதி நோக்கி - தன்மையை யுணர்ந்து, தூ நறுந் தண் துளவோனை தூது விடுதற்கு எண்ணி - பரிசுத்தமான வாசனையும் குளிர்ச்சியும் பொருந்திய துளசி மாலையணிந்த கிருட்டிணனைத் தூதுவனாக (துரியோதனனிடம்) அனுப்ப நினைத்து, இயம்புவான் - (பின் வருமாறு) கூறுகின்றான்.

சஞ்சய முனிவன் போன பின்னர் தருமன் கிருட்டிண பகவானைத் துரியோதனனிடம் தூதனுப்ப நினைத்துப் பின்வருமாறு கூறுகின்றான்; சாம பேத தான தண்டம் என்பன மனு தர்மத்திலுள்ள நால்வகை யுபாயங்கள் : சாமம் - சமாதானம் ; பேதம் - மனத்தைப் பேதித்தல் தானம் - கொடுத்து வெல்லுதல் ; தண்டம் - தண்டித்தல். குருநாடன் நினைத்து இயம்புவான், என முடிக்க.

3. செஞ்சொன் முனி.........

இ - ள்: யார் மனத்தும் இருக்கும் சோதீ - அடியார்கள் எல்லார் மனத்திலும் வீற்றிருக்கின்ற பேரொளி யுடையவனே, செம் சொல் முனி சஞ்சயனுக்கு யாம் உரைத்த கருமமும் - நல்ல வார்த்தைகளை யுபதேசித்த சஞ்சய முனிவனுக்கு நாங்கள் கொடுத்த விடையும், அம் சொல் முனி புரோகிதனுக்கு - அழகிய வார்த்தைகளைப்பேசும் உலூக முனிவனாகிய புரோகிதனுக்கு, முன் சென்ற காலை அவன் இசைத்த, கருமமும் - முன்னே தூது சென்றபோது துரியோதனன் சொன்ன செய்தியும், நீ அறிதி அன்றே - நீதான் அறிவாயல்லவா?, நஞ்சுதனை மிக அருந்தி - விஷத்தை அதிகமாக அருந்தி, நல் மருந்தும் மந்திரமும் விரைந்து நாடாது - (அவ்விஷத்தை மாற்ற) நல்ல மருந்தையும் மந்திரத்தையும் உடனே தேடாது, எஞ்சினர் தங்களைப் போல - உயிரொடுங்கியவர்களைப் போல, இருக்கும் அது ஓ - (யாமும்) இருப்பது தகுதியாமோ?

கண்ணபிரானே! நாங்கள் சஞ்சயனுக்குச் சொன்னதும், துரியோதனன் உலூக முனிக்குச் சொன்னதும் நீயறிவாய். இன்னும் நாங்கள் பேசாதிருத்தல் தகுதி யாகாது. உடனே அபாயத்தை நீக்க வழி தேடவேண்டும் என்பது. இருக்கும் அது - இருக்கும் தன்மை. ஓ - எதிர்மறை. இதுவும் அடுத்த கவியும் ஒரு தொடர்.

4. அருஞ்சமரம்.........

இ - ள்: அருஞ் சமரம் புரியும் வகை - பலாத்காரம் பொருந்திய போர் புரியும் வண்ணம், அவர் உரைத்தாராலும் - துரியோதனாதியர் சொல்லி யனுப்பினாராலும், அறம் ஒன்று இன்றி - சிறிதும் தரும நியாயம் இல்லாமல், பெருஞ் சமரம் விளைக்கும் அது கடன் அன்று - பெரிய போரில் (பலரை) அழிப்பது நீதியாகாது, என்று, அருள் வெள்ளம் பெருகக் கூறும் - கருணையின் பெருக்கோடு கூறிய, பொரும் சமரம் நெடு முரசப் பூ கொடியோன் தனை நோக்கி - மோதுகின்ற போருக்குரிய பெரிய பேரிகையின் வடிவ மெழுதப்பெற்ற அழகிய கொடியை யுடையவனான தருமனைப் பார்த்து, புயம் போர் வாணன் இருஞ் சமரம் தொலைத்த பிரான் - (தனது ஆயிரம்) கைகளாலும் போர் செய்ய வல்ல



பாணாசுரனது கொடிய போரை ஒழித்த கண்ணபிரான், இளைஞரையும் உடன் இருத்தி - தருமனுக் கிளைய தம்பிமாரையும் கூடவைத்து, இயம்புவான் - சொல்லத் தொடங்கினான்.

போரிலே அநியாயமாக உயிர்களை அழிப்பது தருமமாகாது என்று கூறிய தருமனையும், அவன் தம்பிமாரையும் பார்த்துக் கிருட்டிணன் பின்வருமாறு கூறினான், என்பது. கூறும் பூங்கொடியோன் றனை நோக்கி பிரான் இயம்புவான் என முடிக்க. தருமனுக்குக் கொடி முரசு பாணாசுரன் மகளான உஷா என்பவள் கிருஷ்ணனது பௌத்திரன் அநிருத்தனை காதலித்து அவனைத் தன் தோழி மூலம் அழைத்து வைத்து உடனிருக்க, பாணன் அவனை நாகாஸ்திரத்தால் பிணித்தபோது கிருஷ்ணன் சென்று பாணனின் ஆயிரம் தோள்களையும் சேதித்த கதை இதில் நினைவு கூறற்பாலது.

5. செய்வரா லினமுகளும்.........

இ - ள்: செய் வரால் இனம் உகளும் - கழனிகளிலே வரால் மீன்களின் கூட்டம் துள்ளுகின்ற, திரு நாடு பெற நினைவோ - அழகிய குரு நாட்டைப் பெற்றுக்கொள்ள எண்ணமோ, மீள அருங் கானில் சென்று பைவராய் பயின்று திரிதர - மறுபடியும் கொடிய காட்டில் போய்த் துன்பத்தோடு திரிய, நினைவோ - எண்ணமோ, பகைத்த போரில் உய்வார் ஆர் என - எதிர்த்துச் செய்கின்ற யுத்தத்தில் யார் பிழைப்பர் என்று, விரைவின் உருத்து எழுந்து பொர நினைவோ - விரைவாக எழுந்து கோபத்துடன் போர் செய்ய எண்ணமோ, ஐவர் ஆம் அவனிபர்க்கும் - அரசர்களாகிய உங்கள் ஐவர்க்கும், உண்மை ஆக நினைவு எது - உண்மையான மனக் கருத்து என்ன? என்று, அமரர் கோமான் அருள் புரிந்தான் - தேவர் தலைவனான கண்ணபிரான் அன்போடு வினவினான்.

சமாதானத்தில் இராச்சியம் கிடைப்பதானால் போதுமா, அல்லது மறுபடியும் காட்டிலேதான் வாசஞ்செய்ய எண்ணமா, அன்றி மானத்தையும் வீரத்தையும்வேண்டித் துரியோதனாதியருடன் போர்செய்யப் பிரியமா? ஒவ்வொருவரும் உங்கள் கருத்தைத் தெரிவியுங்கள் என்று கண்ணன் கேட்டான். பைவு - பைதல் என்ற தொழிற் பெயரின் பை என்னும் பகுதியடியாற் பிறந்தது ; துன்பம் என்பது பொருள். அர் விகுதி பெற்றுப் பைவர் என வந்தது. அவனி - பூமி. அவனிபர் - பூமியை யாளும் அரசர்கள். இது வடசொல்.

6. வயிரமெனுங் கடுநெருப்பை.........

இ - ள்: அறத்தி னுருவம் போல்வான் - தருமமே வடிவமெடுத்தது போன்ற யுதிட்டிரன், (கண்ணனை நோக்கி) உயிர் அனையாய்-

(எங்கட்கு) உயிர் போன்ற துணைவனே, வயிரம் எனும் கடுநெருப்பை மிகமூட்டி வளர்க்கின் - பகைமையாகிய கொடிய தீயை அதிகமாக மூளச்செய்து வளர்த்தால், உயர் வரைக்காடு என்ன - உயர வளர்ந்த மூங்கிற் காடு (தானே அழிந்து போதல்) போல, செயிர் அமரில் - உக்கிரமான யுத்தத்தில், வெகுளி பொர சென்று இரு திறத்தோரும் சேர மாள்வோம் - கோபத்தோடு போய் நாமிரு கட்சியாரும் சேர்ந்து அழிந்து போவோம், (ஆகையால்), கயிரவமும் தாமரையும் கமழ் பழனம் குருநாட்டில் - ஆம்பல் மலரும் தாமரை மலரும் வாசனை வீசுகின்ற வயல்களையுடைய குருநாட்டிலே, கலந்து வாழ - (நாங்கள் இருதிறத்தாரும்) ஒன்றாகக் கூடி வாழும்படி, சந்துபட உரைத்தருள் என்றான் - சமாதான முண்டாகுமாறு நீ தூதுபோய்ச் சொல்வாய் என்றான்.

கொடிய யுத்தத்தில் நாங்கள் இருதிறத்தாரும் வீணாக மாள்வதைத் தடுக்க நீ போய்ச் சமாதானமாக்கி வா என்று சொன்னான் தருமன். அறத்தினுருவம் போல்வான் 'உயிரனையாய்! உரைத்தருள்' என்றான், என முடிக்க. 'வயிரமெனும் நெருப்பு' உருவகம்; 'வரைக்காடென்ன மாள்வோம்' உவமை.

7. அரவுயர்த்தோனுடன்........

இ - ள்: அரவுயர்த்தோனுடன் - பாம்புக்கொடியை யுயர எடுத்த துரியோதனனோடு, மறு சூதாடி நீர்வென்ற அந்நாள் - இரண்டாம்முறையாகச் சூதாடி நீவிர் வெற்றி கொண்ட அவ்வேளையில், அவன் தான் சொன்ன விரதமொழி தவிராமல் - அவன் கூறிய கட்டளையை மறுக்காது, வெம் கானம் போய் மீண்டீர் - கொடிய காட்டுக்குப் போய்த் திரும்பி வந்தீர்கள், வெய்யோன் உங்கள் குருநிலத்தில் பாதி இனிக் கொடாதிருந்தால் - அந்தக் கொடியோன் உங்களுடைய குருநாட்டில் பாதியை இனிமேலாவது கொடானாயின், ஆங்கு அவனைப் போரில் கொன்று - அவ்விடத்தில்தானே அத் துரியோதனனை யுத்தத்தில் கொன்று, இரு நிலத்தை ஆள இனி துணிவதே கடன் - இருவருக்கு முரிய முழுநாட்டையும் ஆளும்படி தீர்மானிப்பதுதான் இனி நமது கடமை, என்றான் எம்பிரான் - என்று நமக்கெல்லாம் தலைவனாகிய கிருட்டிணமூர்த்தி கூறினான்.

துரியோதனன் இனிமேல் தன் வாக்கின்படி நாட்டிற்பாதி கொடாதிருந்தால் உடனே அவனைப் போரில் கொன்று முழுநாட்டையும் ஆள்வதுதான் சரி என்றான் கண்ணன். 'மறு சூதாடி வென்றது' முதலில் எல்லாவற்றையும் தோற்றுத் தாமும் அடிமைப்பட்டார்கள். பாண்டவர்கள்; பின்னர் திரௌபதியின் வார்த்தைப்படி மீண்டும் ஓராட்டமாடி வென்று அதில் தமது அடிமை நீங்கப்பெற்றனர்.



8. குரவரையுங் கிளைஞரையுங்........

இ - ள்: குரவரையும் - பெரியோர்களையும், கிளைஞரையும் - சுற்றத்தவரையும், குலத்துரிய துணைவரையும் - ஒரே குலத்திற் பிறந்த தம்பிமார்களையும், கொன்று போர் வென்று - கொன்று போரில் வெற்றி கொண்டு, அரவ நெடுங் கடலாடை அவனியெலாம் - சப்திக்கின்ற பெருஞ் சமுத்திரம் சூழ்ந்த பூமி முழுவதையும், தனியாளு மரசு தன்னில் - ஏக சக்ராதிபதியாக ஆளும் அரசைக்காட்டிலும், கரவு உறையும் மனம் தாதை - வஞ்சனை கூடிய மனத்தையுடைய பெரிய தந்தை திருதராட்டினன், முனிக்குரைத்த மொழிப்படியே - சஞ்சயமுனிவனுக்குச் சென்னவாறு, இரவு பகல் கானந் தோறும் - இரவும் பகலும் எப்பொழுதும் காடுகள் தோறும் (திரிந்து), பலம் மூலம் சாகம் நுகர்ந்து உயிர் வாழ்தல் இனிது நன்றே - பழங்களையும் கிழங்குகளையும் இலைகளையும் புசித்துப் பிழைத்திருத்தல் மிகவும் நல்லதாம்.

எமது சனங்களைக் கொன்று அரசாளுவதிலும் பார்க்க, காட்டில் வாழ்தல் மேல், என்பது. 'அரசு தன்னின் கானந் தோறும் உயிர் வாழ்தல் இனிது நன்று' என முடிக்க. கடலாடை அவனி, என்பது கவி மரபு.

9. கோதிலா னிந்த மொழி.........

இ - ள்: கோதிலான் இந்தமொழி கூறுதலும் - குற்றமற்றவனாகிய தருமன் இவ் வார்த்தைகளைச் சொன்னதும், மா மாயன் கூறலுற்றான் - மிக்க மாயத் தன்மையையுடைய கிருட்டிணன் சொல்லத் தொடங்கி, நீர் மோது அமருக்கு இளைத்து - நீங்கள் எதிர்த்த போருக்குப் பின்னிடைந்து, மொய்த்த பெருங் கானகத்தே முடுகிச் சென்றால் - அடர்ச்சியான பெரிய காட்டுக்கு விரைந்துபோனால், பூதலத்தோர் ஏசாரோ - உலகிலுள்ளோர் இகழ மாட்டார்களோ?, புகன்ற பெரு வஞ்சினமும் பொய்த்திடாதோ - நீங்கள் முற்கூறிய பெரிய சபதமெல்லாம் பொய்யாகி விடாதா, நீதியோ - இது அரசருக்கு நியாயமானதோ?, என உரைத்தான் - என்று (கிருட்டிணன்) கூறினான், ஆங்கு அதற்கு நிகழ் தருமன் நிகழ்த்தலுற்றான் - அப்போது அதற்கு விடையாகத் தருமன் உத்தரங் கூறினான்.

'இப்படி நீவிர் வனம் புகுந்தால் வெட்கமாயிராதா, அரச நீதிக் கடுக்குமா உங்கள் சபதம் பொய்யாகிவிடுமே!' என்று கண்ணன் கூறினான். நிகழ்த்துதல் - சொல்லுதல், விடை பகரல்.

10. நீ தூது நடந்தருளி........

இ - ள்: நீ தூது நடந்தருளி - நீ எங்களுக்காகத் தூது சென்று, எமது நினைவு அவர்க்கு உரைத்தால் - எங்களுடைய அபிப்பிராயத்தைத் துரியோதனாதியருக்கு எடுத்துச் சொன்னால், நினைவின் வண்ணம் - எங்

கள் எண்ணத்தின்படி, அளி தாது ஊதி மூரலும் தண் பதியும் - வண்டு கள் மகரந்தப் பொடிகளை யூதுவதனால் உண்டாகும் ஒலியை யுடைய குளிர்ச்சி பொருந்திய நாட்டையும், தாயமும் தான் தாரான் ஆகில் - அந் நாட்டின் அதிகாரங்களையும் எமக்குக் கொடுக்க மறுப்பானாயின், மீது ஊது வளைக்குலமும் வலம்புரியும் மிக முழங்க - (வண்டுகளைப் பார்க்கிலும்) அதிகமாகச் சப்திக்கும் சிறு சங்கினங்களும் வலம்புரிச் சங்கும் மிக ஒலி செய்யவும், வெய்ய காலர் மா தூதர் மனம் களிக்க - கொடிய எமனது பயங்கரமான தூதுவர் மனம் மிக மகிழ்ச்சியடையவும், பொருது எனினும் பெறுவன் - சண்டைசெய்தாயினும் இராச்சியம் பெறுவேன், இது வசையும் அன்றே - இப்படிச் செய்வது பழியும் ஆகாது.

நீ தூது போயும் துரியோதனன் நாடு கொடானாயின் யுத்தம்செய்து இராச்சியம் பெறுவேன்; அது பழியாகாது, என்பது. இதுவும் அடுத்த கவியும் ஒரு தொடர்.

## 11. முந்தூர்வெம் பணிக்கொடியோன்..........

இ - ள்: சிந்தூர திலக நுதற் சிந்துரத்தின் - சிந்தூர சந்தனத் திலகத்தை யணிந்த நெற்றியையுடைய (குவலாய பீடமென்ற) யானையின், மருப்பு ஒசித்த செங்கண் மாலே - தந்தத்தை முரித்த சிவந்த கண்களையுடைய கிருட்டிண மூர்த்தியே, முந்து ஊர் வெம் பணிக் கொடியோன் மூதூரில் நடந்து - விரைவாக ஊர்ந்து செல்லும் கொடிய பாம்பின் கொடியை யுயர்த்திய துரியோதனனது பழைய ஊராகிய அஸ்தினபுரிக்குச்சென்று, உழவர் முன்றில் தோறும் நந்து ஊரும் - உழவர்களின் முற்றங்களி லெல்லாம் நத்தைகள் ஊர்ந்து திரியும், புனல் நாட்டின் திறம் வேண்டு - நீர்வளத்தையுடைய நாட்டின் (எமது) பாகத்தைக் கேள், நாடு ஒன்றும் நல்கானாகின் - எமக்கு ஒரு நாடு தர மறுத்தானாயின், ஐந்து ஊர் வேண்டு - (எங்கள் ஐவருக்குமாக) ஐந்து ஊர்களைக் கேட்டுப்பார், அவை இல் எனில் ஐந்து இலம் வேண்டு - ஐந்து ஊரும் இல்லையென்றால் ஐந்து வீடுகளாவது தரும்படி கேள், அவை மறுத்தால் அடு போர் வேண்டு - வீடுகளும் தர மறுத்துவிட்டால் (அதன் பின்னர் தான்) கொலைக்குரிய யுத்தத்துக்கு அழைப்பாய்.

நமது நாட்டைக் கேள்; அது தர மறுத்தால் ஐந்து ஊராவது அல்லது ஐந்து வீடாவது கேட்டுப்பார், மறுத்தால்தான் போருக்கழைப் பாய்.

கிருட்டிணனும் பலராமனும் கம்சனது அரண்மனையில் நடந்த வில்விழாவுக்குப் போகையில் வாயிலில் நிறுத்தப்பட்டிருந்த குவலாய பீடம் என்ற மதயானை எதிர்த்தது. அதன் தந்தங்களைப் பிடுங்கி அதனாலே யானையைக் கொன்ற கதைதான் 'சிந்துரத்தின் மருப்பொசித்த' எனக் கூறப்பட்டது. முதுமை + ஊர்—மூதூர்; இல்முன்—முன்றில், இது போலி எனப்படும்.



## 12. மூத்தோன்மற் றிவையுரைப்ப.........

இ - ள்: மூத்தோன் இவையுரைப்ப - மூத்தவனாகிய தருமன் இங்ஙனம் கூற, மற்று இளையோன் வெஞ்சினம் மனத்தில் மூளமூள - (அவனுக்கு) அடுத்த தம்பியாகிய வீமன் மனதில் கடுங் கோபம் பொங்க, நா தோம் இல் உரை பதற - நாவிலே குற்றமற்ற சொற்கள் தடுமாற, கதும் என எழுந்து இறைஞ்சி உற்று - விரைந்து எழுந்து வணங்கிநின்று, ஞாலம் எல்லாம் பூத்தோனே - உலகமெல்லாவற்றையும் நாபித் தாமரைப்பூவில் மலர்வித்தோனே, பூந்தவிசில் பூவை புணர் மணி மார்பா - செந்தாமரை மலர் ஆசனத்தில் வீற்றிருக்கும் இலக்குமி யணைந்த அழகிய மார்பை யுடையவனே, புன்மை யாவுந் தீர்த்தோனே - (அன்பர்களின்) குறைகளெல்லாவற்றையும் தீர்ப்பவனே, ஊனம் இலான் மானம் இலாது உரைப்பதற்கு என் செய்வது என்றான் - குற்றமற்ற தருமன் இங்ஙனம் மானமில்லாது பேசுவதற்கு நாம் என்ன செய்வது? என்று கூறினான்.

தருமன் சொன்னதைக் கேட்ட வீமன் கண்ணனைப் பார்த்து, 'அண்ணன் இப்படி மானமில்லாமல் பேசுவதற்கு என்ன செய்யலாம்' என்றான் என்பது. 'பூத்தோனே, மார்பா, தீர்த்தோனே என்செய்வது என்றான்' என முடிக்க.

## 13. விரிகுழற் பைந்தொடி..........

இ - ள்: விரிகுழற் பைந்தொடி வேத்தவையில் நாணி - அவிழ்த்து விட்ட கூந்தலோடு திரௌபதி அரசசபையில் மானமிழந்து, முறை இடுநாள் - அழுது முறையிட்ட காலத்திலே, வெகுளேலென்று - கோபிக்க வேண்டா மென்று (எங்களைத் தடுத்து), உலகுள்ளளவும் மாபினுக்கும் நமக்கும் தீராத வசையே கண்டாய் - இந்த உலகமுள்ளவரையும் நமது குலத்துக்கும் நமக்கும் நீங்காத பழியைத் தேடினாய், எரிதழல் கானகம் அகன்றும் - எரிகின்ற நெருப்புப்போன்ற காட்டிலே திரிந்து முடிந்தும், இன்னமும் வெம்பகை முடிக்க இளையா நின்றாய் - (அஞ்ஞாதவாசம் செய்துகூட) இப்பொழுதாவது கொடிய பகைவரை அழிக்கப் பின் நிற்கிறாய், முரசுயர்த்தோய் - முரசுக் கொடியையுடைய அண்ணாவே, அரவுயர்த்தோன் கொடுமையினும் உன தருளுக்கு அஞ்சினேன் - பாம்புக் கொடியையுடைய துரியோதனனின் இரக்கமில்லாத குணத்திலும் பார்க்க உனது கருணைக்கு யான் பயப்படுகின்றேன்.

திரௌபதியின் மானத்தைக் காக்கவேண்டிய வேளையில் எங்களைக் கோபிக்கவேண்டாமென்று நீங்காத பழி தேடித்தந்தாய். இப்பொழுதும் பேசாதிருக்கலாமா, என்பது பொருள். பைந்தொடி - பசுமையான வளையலை யணிந்தவள்; இங்கு அன்மொழித்தொகை.

14. கானாள வுனைவிடுத்த.........

இ - ள் : உனை கான் ஆள விடுத்த - உன்னைக் காட்டிலே சென்று வாசஞ் செய்ய அனுப்பிய, கண் இலா அருள் இலி தன் காதல் மைந்தன் - பிறவிக் குருடனும் கொஞ்சமும் இரக்க மற்றவனுமான திருதராட்டிரனது அன்புடைய புத்திரன் துரியோதனன், தானாளும் தரணி யெல்லாம் - தான் இப்போதாளுகின்ற இராச்சிய மெல்லாவற்றையும், ஒரு குடைக்கீழ் நீ ஆள இன்றே தருவன் - ஏக சக்கிராதிபதியாக நீ அரசாட்சி செய்யும்படி இப்பொழுதே நான் பெற்றுத்தருகின்றேன், மேல் நாள் நம் உரிமை அறக் கவர்ந்த பெருந் துணைவன் - முன் ஒரு நாள் எங்கள் உரிமை முழுவதையும் கவர்ந்து கொண்ட பெரிய தம்பி துரியோதனன், உனை வெறாத வண்ணம் - (அதற்காக) உன்னை வெறுக்காதவாறு, வானாள - வானுலகத்தை யாளும்படி, வானவர் கோன் பதம் அவன் தனக்கே வழங்குவேன் - தேவர்களுக் கரசனான இந்திரனுடைய தகுதியை நான் அவனுக்குக் கொடுப்பேன்.

போரில் துரியோதனனைக் கொன்று அவனது இராச்சியம் முழுவதையும் உனக்குக் கொடுப்பேன, என்பதாம். மற்று - வினை மாற்று. 'துரியோதனனைக் கொல்வேன்' என்பதை 'அவன் தனக்கு வானாள வானவர்கோன் பதம் வழங்குவேன்' என்றது பிறிதுநவிற்சியணி அல்லது **பரியாயவலங்காரம்.** இது இங்கு இகழ்ச்சி தோன்றக் கூறியது.

15. போர்முடித்தா னமர்பொருது........

இ - ள்: கடவுட் கங்கை நீர் முடித்தான் - தெய்வத் தன்மை பொருந்திய கங்கையின் நீரைத் தனது சடையில் தரித்த சிவபெருமானது, இரவு ஒழித்த நீ அறிய - இரத்தற்றொழிலை நீக்கியருளிய நீ அறியும் வண்ணம், போர் முடித்தான் - (சபதத்தின்படி) யுத்தஞ் செய்து முடித்தான், அமர் பொருது - அங்ஙனம் யுத்தஞ் செய்து, புலம்புறு சொல் பாஞ்சாலி பூந் தண் கூந்தல் கார் முடித்தான் - கவலையுடன் அழுதுகொண் டிருக்கும் திரௌபதியின் பூ மணக்கும் குளிர்ச்சியுடைய கரிய கூந்தலை முடிக்கச் செய்தான், இளையோர் முன் கழறிய வஞ்சினம் முடித்தான் - தம்பிமாராகிய நாங்கள் முன்னர்க் கூறிய சபதங்களை நிறைவேறச் செய்துவிட்டான், வசை இன்றி நிலை நின்று ஓங்கும் பேர் முடித்தான் - பழிப்புக் கிடமில்லாமல் எப்பொழுதும் நிலைத்து விளங்கும் கீர்த்தியைப் பெற்றுவிட்டான், இப்படியே யார் முடித்தார் - இம்மாதிரி யார்தான் செய்யக்கூடும்?, இவனுடனே நான் பிறப்பதே - இவனுக்கு நான் தம்பியாகப் பிறந்தேனே !

இவையொன்றும் செய்து முடிக்கவில்லை; நான் இவனுடன் தம்பியாகப் பிறந்தது வெட்கம் என்றது பொருள். இது இகழ்ச்சிபற்றி



எதிர்மறையாகக் கூறியது. பிரமன் தலையொன்றைக் கொய்துவிட்ட சிவனது கையிலே அக் கபாலம் ஒட்டிக்கொண்டது. தேவர்களும் முனிவர்களும் 'இப்பாவந் தொலையப் பிச்சை யெடுக்க வேண்டும்; எப்பொழுது கபாலம் நிறையுமோ அப்பொழுது கபாலம் விழும்' என்றனர். அங்ஙனம் பிச்சையேற்ற சிவபிரான் ஒரு நாள் ஸ்ரீ மகா விஷ்ணுவிடம் வர, அவர் இட்ட பிச்சையினால் கபாலம் நிறைந்து விழுந்ததாம். அன்றோடு பிச்சையேற்றல் நீங்கியதென்பது கதை.

16. அணிந்து வருஞ்சமரி........

இ – ள் : அணிந்து வரும் சமரில் - அணிவகுக்கப்பட்டு எதிர்க்கும் யுத்தத்தில், அரவுயர்த்தோனுடன் எதிர்த்து - பாம்புக்கொடியையுடைய துரியோதனனை யெதிர்த்து, அரசர் உடலமெல்லாம் துணிந்து இரண்டுபட பொருது - பல அரசர்களின் உடல்களெல்லாம் இருதுண்டாக வெட்டுப்படும்படி போர்செய்து, தொல்லை உலகு அரசு ஆள துணிவது அல்லால் - பழைமையாக உரிமையையுடைய இராச்சியத்தை அரசாட்சி செய்ய நிச்சயிப்பதல்லாமல், தான் தணிந்து அறமும் கிளை உறவும் கொண்டாடி - இந்தத் தருமன் சமாதானமாகித் தருமத்தையும் உறவுமுறையையும் பாராட்டி, இன்னம் தனித்தூது ஏவி - மறுபடியும் ஒரு தூதுவனை யனுப்பி, பணிந்து இரந்து புவி பெற்று உண்டு இருப்பதற்கே துணிகின்றான் - வணங்கி இரந்து இராச்சியத்தைப் பெற்று உண்டு உயிர்வாழ்வதற்கே தீர்மானிக்கிறான், பட்ட பாடே - இது மிகவும் துன்பத்தைக் கொடுக்கிறது.

கௌரவத்தோடு போர்புரிந்து வெல்வதை விடுத்து யாசித்து அரசு பெற்று மானமின்றி வாழ்வது பழிப்புக்கிடமாகும், எனபது. அணிந்து - அண்மையினடியாகப் பிறந்த வினையெச்சம்.

17. பரிவுடன்மற் றிவைகூறும்........

இ – ள் : மற்று பரிவுடன் இவைகூறும் பவன குமாரனை நோக்கி - பின்னர், வருத்த மிகுதியால் இங்ஙனம் புகன்ற வாயுபுத்திரனானவீமனைப் பார்த்து, மலர்க்கை பணித்து - (தருமன் தனது) தாமரை மலர்போன்ற கையால் அமர்த்தி யிருக்கச்செய்து, குருகுலத்தோர் போரேறே - குருகுலத்தில் பிறந்த யுத்தத்தில் ஆண்சிங்கம் போன்றவனே, குற்றமது பார்க்குங்காற் சுற்றமில்லை - குற்றத்தையே பார்த்தால் உறவில்லை, ஒருகுலத்தில் பிறந்தார்கள் உடன்வாழும் வாழ்வினைபோல் உறுதிஉண்டோ - ஒரு குடும்பத்திற் பிறந்தவர்கள் ஒத்து வாழ்வதைப்போல் தைரியம் வேறு உண்டோ, இருநிலம் காரணமாக எதிர்ப்பது - பரந்த நிலத்துக்காகச் சண்டை செய்வது, இருவருக்கும் வசையன்றோ என்றான் - இரு கட்சியாருக்கும் இழிவல்லவா என்றான்.

ஒரு குலத்திலுள்ள நாங்கள் சண்டைபோடுவது வசை, என்பது 'குற்றம் பார்க்கிற் சுற்றமில்லை' யென்ற ஒளவையார் வாக்கையெடுத்து இக் கவியில் ஆண்டிருக்கிறார் ஆசிரியர்; அது, கால் என்று வலிந்து கொண்ட அடைச்சொற்கள் காட்டுகின்றன.

18. உரிமையுடன் றம்பிய.........

இ – ள்: அவைக்கண் அன்று தம்பியர் - சபையிலே அன்று தமது தம்பிமாராகிய துரியோதனனாதியர், உணர்வறியாமையின் உரிமையுடன் உரைத்த மாற்றம் - பக்குவ அறிவில்லாமல் தங்கள் புத்தி போனவாறு சொன்ன சொற்களை, கேட்டோர்க்குப் பரிபவமோ - கேட்ட நமக்கு அவமானமாகிவிடுமோ?, பரிபவமென்பது பிறராற் பட்டாலன்றோ - (ஒரு குலத்திலல்லாத) வேறொருவரால் சொல்லப்பட்டாலன்றோ அவமானமாகும், கருதில் அது மற்றெவர்க்கும் ஒவ்வாதே - ஆலோசித்துப் பார்த்தால் இவ்விஷயம் உலகத்திலே எல்லார்க்கும் உடன்பாடாகாதா?, கண் மலரில் கைபடாதோ - கண் மணியில் கைவிரல் குத்தாதோ, பொருதொழிலும் கடைநிலத்திற் கிடந்ததே - யுத்தம் செய்யும் உபாயமும் இறுதியில் செய்யத்தக்கது, என மொழிந்தான் புகழே பூண்பான் - என்று கீர்த்தியையே ஆபரணமாகக் கொண்ட தருமன் கூறினான்.

எல்லாரும் ஒரு ஆட்கள்; தற்செயலாக அவர்கள் தவறாக நடந்தால் நாம் மன்னித்தலாகாதா? இது உலக வழக்கந்தானே, என்பது. 'கண் மலரில் கை படாதோ' என்பது சாதாரண பழமொழி. 'களைபவோ கண்குத்திற் றென்று தங்கை' என்பது நாலடியார்.

19. சூடுகின்ற துழாய்முடியோன்........

இ – ள்: கொற்ற வேந்தே - வெற்றி கொள்ளுகின்ற அரசனே, சூடுகின்ற துழாய் முடியோன் - அணிகின்ற துளசிமாலை பொருந்திய முடியையுடைய கிருட்டிணமூர்த்தி, சாருடனே முனிவர்களும் சுருதி நான்கும் தேடுகின்ற பதம் சிவப்ப - தேவர் முனிவர் நால்வேதங்கள் யாவும் தேடப்பெற்ற திருப்பாதங்கள் சிவக்க, திருநாடு பெற தூது செல்ல வேண்டா - செல்வப் பெருக்குள்ள இராச்சியத்தை வேண்டித் தூது செல்ல வேண்டியதில்லை, வாடுகின்ற மடப்பாவை தன்வாழும் என்வாழும் வழுவாவண்ணம் - துக்கத்தால் வாடுகின்ற திரௌபதியின் சபதமும் எனது சபதமும் தவறாதபடி, கோடுகின்ற மொழியவன்பால் இனி எனை தூது விடுக - நீதி தவறி யுரைப்பவனாகிய துரியோதனனிடம் இப்பொழுது என்னைத் தூதுவனாக அனுப்புக.

கிருஷ்ணனை விடுத்து என்னைத் தூது விடுக, என்பது, மடப்பாவை - மடந்தையுடையவளும் சித்திரப்பாவை போன்றவளும்.

2390.



20. மலை கண்டதென.........

இ - ள்: மலைகண்டது என என்கை மறத்தண்டின் வலிகண்டும் - மலையைக்கண்டதுபோல எனது கையிலிருக்கும் வலிமையுடைய கதாயுதத்தின் தைரியத்தைக் கண்டும், கைவாள் மைந்தன் சிலை கண்டும் - இந்திரன் புதல்வனாகிய அருச்சுனனின் வில்வலிமை கண்டும், இருவர் பொரும் திறல் கண்டும் - மற்றை யிருவருமான நகுல சகாதேவரின் போர் வலிமையைக் கண்டும், எமக்காக திருமால் நின்ற நிலை கண்டும் - எமது பக்கத்துக்காக விஷ்ணுவின் அவதாரமாகிய கிருட்டிணன் நிற்கும் உறுதி நிலையைக் கண்டும், இவள் விரித்த குழல் கண்டும் - இதோ நிற்கும் திரௌபதி விரித்திருக்கும் கூந்தலைப் பார்த்தும், இமைப்பொழுதில் நேரார் தம்மை கொலைகண்டு மகிழாமல் — ஒரு கொடிப் பொழுதிலே எதிரிகளைக் கொன்று அதைப் பார்த்து மகிழாது, அவன் குடைக்கீழ் உயிர்வாழ குறிக்கின்றாயே - (இன்னும்) அத் துரியோதனன் ஆட்சியின்கீழ் உயிர்வாழ வேண்டுமென்று அபிப்பிராயப்படுகின்றாயே.

இத்தனை துன்பும் அனுபவித்தும் இன்னும் இழிவோடு துரியோதனனாதியரோடு சமாதானஞ் செய்யலாமா, என்பது. மகவான் - இந்திரன், யாகங்களை யுடையவனென்று பொருள். 'வலிகண்டும், சிலை கண்டும், திறல் கண்டும், நிலை கண்டும், குழல் கண்டும், குறிக்கின்றாயே' என முடிக்க.

21. வெம்புய வீமனும்.........

இ - ள்: வெம்புய வீமனும் வெகுண்டு - பயங்கரமான தோள்களையுடைய வீமசேனன் கோபித்து, மீண்டும் இவை எடுத்துரைப்ப - இச்சொற்களைத் திரும்பவும் எடுத்துக்கூற, மேகமேனி பைம்பொன் நெடுந் தனித் திகிரிப் பரந்தாமன் - மேகம்போன்ற கருமையான திருமேனியையும் பசும்பொன்போன்ற ஒப்பற்ற பெரிய சக்கராயுதத்தையும் உடைய கிருட்டிணன், கருணையுடன் பரிந்து நோக்கி - அன்போடு வீமசேனனை இரங்கிப் பார்த்து, தலைவ - வீரனே, அம்புவியில் முன் பிறந்தோர் அரசு நெறி உரைத்தால் - இவ்வுலகத்திலே தமையன்மார் இராசநீதியின் முறைமையை எடுத்துக் கூறினால், அது கேளாமல் தம்பியரும் மறுப்பரோ - அதைக் கேளாமல் தம்பிமார்கள் எதிர்த்துக் கூறுவாரோ, இனிக் கடுங் கோபந் தணிக என்றான் - ஆகையால் இனி மேலாவது உனது கோபத்தை ஆற்றிக்கொள் என்றான்.

உலகத்திலே தமையன் சொல்லைத் தம்பிமார் மறுத்தலாகாது. ஆகையால் கோபங் கொள்ளாது தருமன் புத்தியைக் கேள், என்பது.

22. மைக்கால முகிலூர்தி.........

இ — ள்: மைக்கால முகிலூர்தி - கரிய கார்காலத்து முகிலை வாகனமாகக் கொண்ட, வானவர்கோன் திருமதலை - இந்திரனுடைய அழகிய மகனான அருச்சுனன், வணங்கி நின்று - எழுந்து தொழுது, முக்காலங்களு முணரும் முகுந்தனுக்கும் - மூன்று காலங்களையு மறியும் கிருட்டிணனுக்கும், முதல்வனுக்கும் - மூத்த தமையனாகிய தருமனுக்கும், மொழிவான் - பின்வருமாறு கூறினான், அக்காலம் பொறுத்தவெலாம் அமையாமல் இன்னம் இருந்து அறமே சொன்னால் - முன்பு (நாங்கள்) பொறுத்த பிழைகளெல்லாம் போதாதென்று பின்னரும் தருமமே போதித்துக் கொண்டிருந்தால், எக்காலம் பகை முடித்து - இனி எப்போது நமது பகைவரை யொழித்து, திரௌபதியுங் குழல் முடிக்க இருக்கின்றாளே - திரௌபதியும் தனது அவிழ்ந்த கூந்தலை முடிப்பாள்?

இனிமேலும் பொறுத்துக்கொண்டிருந்தால் எப்பொழுதுதான் திரௌபதியின் சபதம் நிறைவேறுவது, என்பது. ஊர்தி - ஊர்தல் என்பதிலிருந்து வந்தது. முக்காலம் - இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம். மன்னோ - அசைச்சொல், செய்யுள் மரபு.

23. தேவராயினும்..........

இ — ள்: மூவராயவர்களுக்கும் முதல்வனாகிய மூர்த்தி - மும்மூர்த்திகளிலும் சிறப்புடைய பெருமானே, தேவராயினும் - தேவர்களாயினும், பழைய தெயித்தியராயினும் - பழைமையுடைய அசுரர்களானாலும், மற்றும் செப்புகின்றோர் யாவராயினும் - இன்னும் சொல்லப்படுகின்றோர் எவராயினும், எதிர்ந்தோர் உயிர் உண என்றே - எதிர்ப்பட்டோர் உயிரைக் குடிப்பதற்கென்றே, என் கை வாளி இருப்பது - எனது கையில் அம்பு இருக்கிறது, (அப்படியிருக்க) முகில் தோய் பூகம் மீ வரால் உகளும் வயல் குருநாடு - முகிலிற் படியும்படி உயர்ந்த கமுகுகளின் மீது வரால் மீன்கள் பாய்ந்து விழுகின்ற வயலையுடைய குருநாட்டை, இவன் அவன்பால் வேண்டுமாறு என் - இத் தருமன் துரியோதனனிடம் இரந்து கேட்பது எங்ஙனம் கௌரவமாகும்?

எனது கையில் ஒப்பற்ற காண்டீபமிருக்க யுத்தத்துக்கு அஞ்சவேண்டியதில்லை, என்பது. திதி யென்பவளது புத்திரராகையால் அசுரர்க்குத் தைத்தியர் எனப் பெயர். மூவர் - பிரமா, விஷ்ணு, உருத்திரன்.

24. தீண்டாத கற்புடைய.........

இ — ள்: வேந்தர் வேந்தே - அரசர்க்கரசனே, தீண்டாத கற்புடைய செழுந்திருவை - பிறரால் தொடுதலுமாகாத பதிவிரதையாகிய அழகிய இலக்குமி போன்ற திரௌபதியை, துகில் உரிய - துச்சாதனன் பிடித்து ஆடையைக் களையும்போது, செயலொன்றின்றி - அவள் ஒன்றுஞ் செய்ய முடியாதவளாய், நீண்டானே கரியானே நிமலா என்று - நெடியவனே கருமையானவனே குற்றமற்ற கண்ணனே என்று, அரற்றினளாய் நின்று சோர - கதறியவளாய் நின்று வருந்த, அது கண்டும் யாம் மாண்டார்போல் மன்னவையிலிருந்த - அதைப் பார்த்திருந்தும் நாங்கள் ஐவரும் பிணங்கள்போல அரச சபையில் உட்கார்ந்திருந்த, மாசு தீர வேண்டாவோ - பழியானது நீங்க வேண்டாமோ, வேண்டுவது மேம்படு நல்லறமேயோ - நாம் விரும்புவது சிறந்த தருமமாகிய பொறுமை மாத்திரந்தானோ?



திரௌபதியைச் சபையில்வைத்து, மானபங்கப்படுத்தியபோது நாம் பார்த்திருந்த குற்றம்தீர யுத்தம் நடத்தியே தீரவேண்டுமென்பது. 'தீண்டாத கற்பு' என்பதற்கு, திரௌபதி அவ்வேளையில் தீண்டக்கூடாது விலக்காயிருந்தாள் என்றும் கொள்வர்.

25. பொன்னாருந் திகிரியினான்.........

இ — ள்: பொன்னாருந் திகிரியினான் போனாலும் - பொன்மயமான சக்கரத்தையுடைய கிருட்டிணன் தூதுசென்றாலும், பொறைவேந்தன் புகன்ற எல்லாம் சொன்னாலும் - பொறுமைக் கரசன்போன்ற தருமன் சொன்னதை யெல்லாம் (துரியோதனனுக்கு) கூறினாலும், அவன் கேளான் - அவன் கேட்கப்போவதில்லை, விதிவலியால் கெடுமதி கண் தோன்றாது அன்றே - கால வித்தியாசத்தால் புத்திகெட்டுப்போகக் கண்ணுக் தெரியாதல்லவா?, எந்நாளும் உவர்நிலத்தில் நெல் முளை வித்திடினும் விளைவெய்திடாது - எக்காலத்திலும் உவர்ப் பற்றுள்ள நிலத்தில் நெல் முளைக்கவைத்து விதைத்தாலும் அது விளையாது, பன்னகம் தனக்கு அமிர்தம் கொடுத்தாலும் விடம் ஒழிய பயன் கொடாதே - பாம்புக்கு அமிர்தத்தைக் கொடுத்தாலும் அது விஷத்தையன்றி வேறு ஒருபயனையுங் கொடாது.

உவர்நிலத்தில் நெல் விதைத்தால் அது விளையப்போவதில்லை; பாம்புக்குப் பால் வார்த்தாலும் அது விஷத்தையே கக்கும் என்றவாறு துரியோதனனுக்குப் புத்திசொல்லிப் பலனில்லை என்பது. 'உவர் நிலத்தினென்முளை வித்திடினும்' என்பதில் 'என்முளை' என்று பிரித்தலும் கூடும். ஆயினும் இங்கு 'நெல் முளை வித்து இடினும்' எனப் பிரித்தல் சிறப்புடையது. பன்னகம் - பந்நகம் என்பதன் விகாரம்.

26. பார்த்தனிவை..........

இ — ள்: பார்த்தன் இவை புகன்று - அர்ச்சுனன் இவ்வாறு கூறி, இறைவன் பணித்தருள இருந்ததன்பின் - கண்ணன் உத்தரவிட்டதால் உட்கார்ந்த பின்னர், சினங்கொள் வேலான் - கோபங்கொள்ளும் வேலா

யுதத்தையுடைய நகுலன், பரிவினோடும் தீர்த்தன் இருபதம் இறைஞ்சி- அன்புடனே பரிசுத்தமான கிருட்டிணனின் இருபாதங்களையும் வணங்கி, தருமனையும் கைதொழுது - தமையனாகிய தருமனையும் கைகூப்பி வணங்கி, (அவனை நோக்கி) கொற்ற வேந்தே - வெற்றியையுடைய அரசனே, நீத்தம் நெடுங்கடல் எழு பார் - வெள்ளமாகிய நெடிய சமுத்திரம் சூழ்ந்த எழு தீவுகளுள்ள பூமி முழுவதையும், அடல் ஐவர் பெறுவர் எனும் நிகழ்ச்சி பொய்யோ - வலிமையுடைய பஞ்சபாண்டவர் பெறுவார்கள் என்று உலகம் கூறும் சொல் பொய்யாகுமா, கோத்தருமந்தனில் ஆண்மை கூறுதோ - மனுதர்மத்தினிலே ஆண்மையைப்பற்றிச் சொல்லப்படவில்லையோ, நீ கூறுக - நீ சொல்வாயாக.

ஆண்மையைக் கைவிடலாகாது என்றான் நகுலன். நீத்தம் - வெள்ளம். புராணங்களில் பூமி எழு பிரிவுகளாகப் பிரித்துக் கூறப்பட்டுள்ளது. அவை: ஜம்பு, பிலட்சம், குசம், கிரௌஞ்சம், சாகம், சால்மலி, புஷ்கரம்.

27. கேவலந்தீர் வலியபகை.........

இ - ள்: கேவலந்தீர் வலிய பகை கிடக்க - மிகப் பெரிய வைரமுடைய பகைமை எங்களுக்கிடையிலிருக்க, முதல் கிளர் மழைக்கு கிரி ஒன்று ஏந்து கோவலன் போய் உரைத்தாலும் - முன்னொரு போது மழை அதிகமாய்ப் பெய்ய அதைத் தடுப்பதற்கு ஒரு மலையைத் தூக்கிப் பிடித்த கிருட்டிணன் தூதுபோய்ச் சொன்னாலும், அவன் குருநாடும் அரசும் கொடுக்கமாட்டான் - அரியோதனன் குருநாட்டையும் ராச்சியத்தையும் கொடுக்கமாட்டான், நாவலம் பூதலத்தரசர் - நாவலந்தீவிலுள்ள அரசரெல்லாரும், நாடு இரந்தோம் என நம்மை நகையா வண்ணம் - இராச்சியத்தை இரந்து கேட்டோம் என்று நம்மைப் பரிகசிக்காதவாறு, நாவலன் தன் படைவலியும் - அரியோதனனுடைய சேனைப் பலத்தையும், எனது தடம்புயவலியும் காணலாமே - என்னுடைய அகன்ற தோள்களின் பலத்தையும் பார்க்கலாமே.

கிருட்டிணன் போனாலும் அரியோதனன் அரசு கொடுக்கமாட்டான். மற்றைய அரசர்கள் எங்களை நகைக்காதவாறு நாம் யுத்தம் செய்வதுதான் சரி, என்பது. ஆயர்பாடியிலே இந்திரன் மழை வருஷித்தபோது ஸ்ரீ கிருஷ்ணபகவான் கோவர்த்தனகிரியைக் குடையாகப் பிடித்துக் காத்தருளிய கதை இங்கு 'மழைக்குக் கிரியொன்றேந்து' கதையாகக் குறிப்பிட்டது. கேவலம் - அதிகமாக.

28. அன்னநடை யரம்பைதனை.........

இ - ள்: முன்னம் - ஒரு காலத்தில், அன்னநடை அரம்பைதனை அவுணர் கவர்ந்திட - அன்னம்போன்ற நடையையுடைய ஊர்



வசியை அசுரர்கள் கவர்ந்துசெல்ல, இமையோர் அரசுக்காக அவருடன் பொருது - தேவர்களுக்கதிபதி இந்திரனுக்காக அவ்வசுரர்களுடன் போர்செய்து, சிறைமீட்டான் நம் குலத்து முதல்வன் அன்றோ - அவ்வூர்வசியைச் சிறையினின்றும் கொண்டுவந்தவன் நமது குலத்தில் புரூரவனன்றோ? (அப்படியிருக்க,) மன் அவையில் யாம் காண - அரச சபையில் எங்கள் பார்வையிலே, மடவாலைத் துகிலுரிந்த வலியோன் தன்பால் - இளமையுடைய திரௌபதியின் சேலையையுரிந்த கொடுமையையுடைய அரியோதனனிடம், இன்னம் இரந்து அவன் குடைக்கீழ் இருந்தக்கால் - இன்னமும் யாசித்து அவனது ஆளுகைக்குட்பட்டிருந்தால், உலகு நம்மை என்சொலாது - உலகத்தவர் எங்களை என்னதான் சொல்லமாட்டார்கள்.

எமது குலத்துப் புரூரவன் ஒருகாலத்தில் ஒரு பெண்ணின் மானத்தைக் காத்தான்; அதுபோல நாமும் எங்கள் பெண்ணின் மானத்தைக் காப்பது கடன், என்பது. ஊர்வசியை அசுரர்கள் கவர்ந்து சென்றபோது புரூரவன் தேரேறிப்போய் யுத்தம் செய்து அவளை மீட்டு வந்தான் என்று ஒருகதையுண்டு. அரம்பை என்ற ஒரு தேவமாதின் பெயர் பொதுப்பெயராக உபயோகிக்கப்படும். இங்கு ஊர்வசியைக் குறிக்கும்.

29. கானெறிபோய்க் கரந்துறைந்து.........

இ - ள். தரணி வேந்தே - இவ்வுலகத்தையாளும் அரசனே, நம் துணைவர் கானெறிபோய் கரந்து உறைந்து கடவ நாள் கழித்து - எமது சகோதரர்கள் வனவாசஞ் செய்தும் அஞ்ஞாத வாசஞ் செய்தும் கட்டளைக்குட்பட்ட பதின்மூன்று வருட காலத்தைக் கழித்துவிட்டு, அதன்பின் கானம் நீக்கி ஈனம் இலா வகை வந்தார் - அதன் பின்னர் காட்டைவிட்டுத் தம்மில் குறையில்லாதவாறு மீண்டு வந்தனர், எனவறிந்தும் இரங்கான் ஆகில் - என்று அரியோதனன் கொஞ்சமும் இரங்காவிட்டால், மாநகரும வளநாடும் உரிமையும் - பெரிய இந்திரப் பிரஸ்த நகரத்தையும் வளம்பொருந்திய குருநாட்டையும் அரசுரிமையையும், தன் மொழிப்படியே வழங்கான் ஆகின் - தனது வாக்கின்படி கொடுக்க மறுத்தால், தானறியாதவன் பிறர்போய்க் கற்பித்தால் அறிவனோ?- தானாகவே கொடுக்கவேண்டுமென்பதை யுணராதவன் வேறுபேர் போய்ச் சொன்னால் கேட்கப்போகிறானோ?

தான் செய்யவேண்டியதை உணராத அரியோதனன் பிறர்போய்ச் சொன்னாலும் கேட்கமாட்டான், என்பது. இரங்கானாகின், வழங்கானாகின் என்பன, இரங்கவில்லையாதலால், வழங்கவில்லையாதலால், என உறுதிப்பாடுடையன,

30. நகுலனிவை யுரைத்ததற்பி........

இ - ள் : நகுல னிவை யுரைத்தற் பின் - இங்ஙனம் நகுலன் கூறிய பின்னர், நன்று என கை அமைத் தருளி - நல்லது உட்கார் என்று சொல்லிக் (கிருட்டிணன்) கையமர்த்தி யருளி, (சகாதேவனைப் பார்த்து) நகுலன் சொல்லும் - நகுலனுடைய வார்த்தைகளும், இகல் விசயன் தன் மொழியும் - வெற்றியையுடைய அருச்சுனன் சொன்ன வற்றையும், திறல் வீமன் இயம்பியதும் யாவும் கேட்டோம்—, புகலரிய உணர் வுடையோய் திறலுடையோய் - சொல்லுதற் கரிய அறிவுடைய வனே வலிமையுடையவனே, புகழ் உடையோய் - கீர்த்தி பெற்றவனே, புகல் நீ என்ன - நீ கூறு என்று கேட்க, முகில் அனைய திருமேனி முகுந்தனுக்கு - மேகம்போன்ற திருமேனியையுடைய கிருட்டிணனுக்கு, மன முருக மொழிகின்றான் - திருவுள்ள முருகும்படி (சகாதேவன்) கூறுகின்றான்.

கிருட்டிணன் சகாதேவனைப் பார்த்து உன் கருத்தென்ன என்று கேட்டான், என்பது.

31. சிந்தித்த படிநீயுஞ்.........

இ – ள் : ஆதி மூர்த்தி-எல்லாவற்றிற்கும் முதல்வனாகிய கடவுளே, சிந்தித்தபடி நீயுஞ் சென்றாலென் - ஆலோசித்தவாறு நீ தூது போனாலு மென்ன, ஒழிந்தாலென் - போகாவிட்டாலுமென்ன, செறிந்த நூறு மைந்தர்க்குண் முதல்வன் - நெருங்கிய உறவினராகிய திருதராட்டிரன் மக்கள் நூற்றுவருள் தலைவனாகிய துரியோதனன், நிலம் வழங்காம லிருந்தாலென் வழங்கினாலென் - நாடு தந்தாலென்ன தராது விட்டாலு மென்ன, கொந்துற்ற குழல் இவளும் முடித்தாலென் விரித்தாலென் - மிக அடர்த்தியான கூந்தலைத் திரௌபதி எடுத்து முடித்தாலுமென்ன அவிழ்த்தபடி விட்டாலுமென்ன, குறித்த செய்கை - நீ நினைத்திருக்கும் காரியம், அந்தத்தில் முடியும் வகை அடியேற்குத் தெரியுமோ - கடைசி யாக எப்படி முடியுமோவென்று நான் எங்ஙனம் அறிவேன்.

என்னதான் நடைபெற்றாலும் நீ நினைத்தவாறு முடிப்பாய்; அதை நான் எங்ஙனம் அறிவேன், என்பது.

32. முருகவிழ்க்கும் பசுந்துளப.........

இ - ள் : முருகவிழ்க்கும் பசுந் துளப முடியோனே - வாசனை வீசும் பசுமையான துளசி தரித்த முடியை யுடையவனே, அன்று அலகை முலைப்பா லுண்டு - முன்னொரு நாள் பூதத்தின் முலைப்பாலை யுண்டு, மருது இடை சென்று - இரண்டு மருத மரங்களி னிடையிலே சென்றும், உயர் சகடம் விழ உதைத்து - உயர்ந்த சகடன் என்ற அசுரன் இறந்து விழும்படி உதைத்ததும், பொதுவர் மனை வளர்ந்த மாலே - (இங்ஙனம் திருவிளையாடல்கள் செய்து) இடையர் வீட்டிலே வளர்ந்த கிருட்டிணமூர்த்தியே, உன் மாயை இங்கு ஒருவருக்கும் தெரியாது - உனது மறைமுகமான காரியங்களை இங்கே ஒருவரும் அறியமாட்டார்கள், உண்மையாக யான் அறிவேன் - உள்ளவாறு எனக்குமாத்திரம் தெரியும், திருவுளத்து கருத்து எதுவோ அது எனக்கும் கருத்து என்றான் - உனது திருவுள்ளத்திலே என்ன எண்ணியிருக்கின்றனையோ அது எனக்கும் சம்மதமானதே என்று கூறினான், தெய்வம் அன்னான் - (மூன்று கால நிகழ்ச்சிகளையும் கூறவல்ல) தெய்வம் போன்ற சகாதேவன்.

‘கிருஷ்ணா உனது பால்ய லீலைகள்போன்று என்ன திருவிளையாடல்களை இன்னும் புரிய எண்ணியிருக்கின்றாய் என்பதை நான் அறிவேன். ஆகையால் உன் கருத்துக்கு நானும் சம்மதிக்கிறேன்’ என்றான் என்பது. அலகை முலைப்பா லுண்டமை, மருதிடைச் சென்று வீழ்த்தியமை, சகடாசுரன் விழ வுதைத்த கதைகளைப் பாகவதத்தில் காண்க.

33. இவ்வண்ணஞ் சாதேவ.........

இ - ள் : இவ்வண்ணஞ் சாதேவன் இயம்புதலும் - இவ்வாறு சகாதேவன் கூறியவுடன், நகைத்தருளி - (கண்ணன்) புன்சிரிப்புக்கொண்டு, இகலோர் சொன்ன அவ்வண்ணம் புகாமல் - வலிமையுடைய தனது சகோதரர் சொன்னவாறு கூறாமல், இவன் விரகு உரைத்தான் என்ன - இச் சகாதேவன் தந்திரமாகக் கூறிவிட்டான்-என்று சிந்தித்து, அவனோடு ஆங்கு ஓர் பைவண்ணம் மணிக்கூடம் தனில் எய்தி - அச் சகாதேவனுடன் அங்கேயுள்ள பசுமை நிறமான மாணிக்க மிழைக்கப்பெற்ற மண்டபமொன் றினுள் போய், பாரதப் போர் பயிலா வண்ணம் உய்வண்ணம் - பாரதயுத்தம் நிகழாது எல்லாரும் பிழைக்கும்படியாக, சொல்லுக நீ உபாயமென - நீ ஓர் உபாயம் கூறு என்று கேட்க, தொழுது உரைப்பான் உரங்கொள் வேலான் - வலிமையுடைய வேலைக் கையிலே கொண்ட சகாதேவன் வணங்கிப் பின்வருமாறு கூறுவான்.

சகாதேவனுடைய தந்திரமான விடையைக் கேட்டு கிருட்டிணன் அதிசயித்து, பாரதப் போரைத் தவிர்க்க வழி சொல் என்று வினவினான், என்பது. ‘பாரதப்போர்’ என்பது கவியின் வைப்பு.

34. நீ பாரதவமரில்.........

இ - ள் : புயல் வண்ணா - மேக நிறத்தையுடைய கண்ணனே, கோபாலா - இடையனாகப் பிறந்தவனே, போர் ஏறே - அமரில் ஆண் சிங்கம் போன்றவனே, கோவிந்தா - கோவிந்தன் என்ற பெயருடையவனே, நீ பாரத அமரில் யாவரையுந் நீறு ஆக்கி - நீ பாரத யுத்தத்தில் எல்லாரை

யும் அழித்து, பூபாரம் தீர்க்கப் புரிந்தாய் - பூமியில் சுமையைக் குறைக்க எண்ணங்கொண்டிருக்கின்றாய், (ஆகையால்) நீயன்றிமாபாரதம் அகற்ற மற்றார்கொல் வல்லாரே - உன்னையல்லாமல் இந்தப் பெரிய பாரதப் போரை நிகழாமற் செய்ய வேறு யாரால் முடியும்.

‘துஷ்ட நிக்ரக சிஷ்ட பரிபாலனம்’ செய்யுந் தொழில் உன்னுடையது. இவ்வுலகில் தீயோரை அழித்துப் பூமியின் பாரத்தைக் குறைப்பதற்காக இப் பாரதப் போரைச் செய்துமுடிக்க நீ ஏலவே திட்டம் வகுத்துள்ளாய். ஆகையால் அதற்குக் காரணனாயுள்ள உன்னையன்றி வேறு யாரால் இப்போரை நிகழாமற் றடுக்க முடியும்? என்பது. கோபாலன் - பசுக்களைக் காப்பவன். இடையன்.

35. பாராளக் கன்ன........

இ - ள்: கன்னன் பார் ஆள - கர்ணன் பூமியை ஆளுவதற்கு, இகல் பார்த்தனை முன் கொன்று - (கர்ணனின்) விரோதியாகிய அர்ச்சுனனை முதலில் கொன்று, அணங்கின் காரார் குழல் களைந்து - திரௌபதியின் கருமையான கூந்தலைச் சேதித்து, காலில்தளை பூட்டி நேராகக் கைபிடித்து நின்னையும் நான் கட்டுவேனேல் - உனது காலிலே விலங்கிட்டு உன்னைச் சரியான வகையில் கைகளைப் பிடித்து யான் கட்டுவேனாகில், மாபாரதம் வாராமல் காக்கலாம் என்றான் - பெரிய பாரதப்போர் வாராமல் தடுக்கலாம் என்றான்.

அர்ச்சுனனைக் கொன்று கர்ணனுக்குப் பட்டஞ்சூட்டி, திரௌபதியின் கூந்தலைக் களைந்து, உனது கால்களில் விலங்கு பூட்டிக் கட்டிவைத்தால் பாரதப்போர் நிகழாது என்றான், என்பது. இக் காரியங்கள் செய்து முடிக்கக் கூடாதனவாகையால் பாரதப்போர் நிகழ்ந்தே தீரும் என்ற பொருள் புலப்படும். அணங்கு - பெண்தெய்வம்.

36. முன்ன நீ கூறியவை........

இ - ள்: முன்ன நீ கூறியவை யெல்லாம் முடித்தாலும் - முதலில் நீ கூறியவற்றையெல்லாம் சரிவரச் செய்து முடித்தாலும், என்னை நீ கட்டுமாறு எவ்வாறு என மாயன் - என்னை நீ எவ்வாறு பிடித்துக் கட்டி வைக்க முடியும் என்று கிருட்டிணன் கேட்க, (அதற்குச் சகாதேவன்) உன்னை நீ தானும் உணராதாய் - உன் திறமைகளை நீயே தானும் அறியமாட்டாதவனே, உன் வடிவந்தன்னை நீ காட்ட - உன்னுடைய உண்மையான வடிவத்தை நீயே எனக்குக் காட்டுவாயானால், தளைந்திடுவன் யான் என்றான் - (அவ்வடிவத்தை என் மனத்தினால்) யான் கட்டி விடுவேன் என்றான்.



உனது திவ்விய சொரூபத்தை என் மனக்கண்ணுக்குத் தோற்றச் செய்யின் நான் எனது பக்தியின் வலையில் சிக்க வைப்பேன் என்பது. முன்ன நீ கூறியவை இதற்கு முதற் கவியில் வந்த பாராளக் கன்னன் முதலியன. ‘உன்னை நீதானு முணராதாய்’ என்பது ஒருவராலு மளந்தறியப்படாத தன்மையை விளக்கியது.

37. மாயவனு மன்பன்........

இ - ள்: மாயவனும் அன்பன் மனம் அறிவான் கட்டுக என்று - மாயச் சக்திகள் வாய்ந்த கிருட்டிணன் தன்மீது அன்பு கொண்ட சகாதேவனது மனத்தைச் சோதிக்கும் பொருட்டு கட்டு பார்க்கலாம் என்று சொல்லி, ஆய வடிவு பதினாறாயிரம் கொண்டான் - சொல்லப்பட்ட வடிவங்களாகிய பதினாறாயிரம் மூர்த்தங்களிலும் ஒருங்கே தோன்றி நின்றான், தூயவனும் மூலம் ஆம் தோற்றம் உணர்ந்து - பரிசுத்தவானாகிய சகாதேவன் (அவ்வவ்வடிவங்களுக்கெல்லாம்) ஆதி காரணமாகவுள்ள தோற்றத்தை யறிந்து, எவ்வுலகும் தாய அடி இணைகள் - எல்லாவுலகங்களையும் தாவி நின்ற இரண்டு பாதங்களையும், தன் கருத்தினாற் பிணித்தான் - தனது மனத்தினாலே கட்டி விட்டான்.

கிருட்டிணன் தனது வடிவங்கள் பதினாறாயிரத்தையும் ஒருங்கே தோற்றிநிற்க, சகாதேவன் அவற்றிற்கெல்லாம் காரணமாகிய மூலவடிவத்தைத் தனது மனதிலிருத்திக் கிருட்டிணனின் சக்தியைக் கட்டினான் என்பது. ஆய - ஆகி, அறிவான் = அறியும்பொருட்டு, வான் வினையெச்சச் சாரியை. தாய - தாவிய, மகாபலி அரசன் தேவர்களை வென்று மூவுலகையும் ஆண்டிருந்தபோது, அவர்கள் விஷ்ணுவுக்கு முறையிட்டனர். அவர் குள்ள வடிவமான வாமனாவதாரமெடுத்து ஆம் மகாபலிச் சக்கரவர்த்தியிடஞ் சென்று அவனிடம் தன் காலால் மூன்றடி நிலம் தானம்பண்ணுமாறு கேட்டார். அவன் அதற்கிசைந்து தத்தஞ்செய்ய உடனே விஷ்ணுமூர்த்தி பூவுலகை ஓரடியாலும், விண்ணுலகை மற்றோரடியாலும் அளந்து இன்னுமோரடி வைக்க இடமில்லாது அவ்வரசனின் தலையில் மிதித்துப் பாதாளத்திற் சேர்த்ததாக ஒரு கதை, ‘மூவுலகுந்தாய்’ என்று கூறப்பட்டது.

38. நீ தேவ னென்றறிந்து........

இ - ள்: பூதேவரும் - பூமியில் வசிக்கின்ற பக்தர்களும், கனகப் பூங்கா நிழல் வைகும் மாதேவரும் - பொன்மயமான அழகிய கற்பக விருக்ஷ நிழலில் வீற்றிருக்கும் சிறந்த தேவர்களும், தேடிக் காணா மலரடியோன் - தேடியுங் கண்டுகொள்ள முடியாத தாமரை மலர்போன்ற பாதங்களையுடையவனாகிய கிருட்டிணமூர்த்தி, நீ தேவன், என்றறிந்து

நெஞ்சாற் றனைக் கட்டும் சாதேவன் கண் களிக்க-நீயே தெய்வம் என்று உணர்ந்து தனது மனதினால் கட்டிய (பக்தன்) சகாதேவனுடைய கண்கள் கண்டு மகிழ, தானேயாய் முன்னின்றான் - தனது (மாயா ரூபங்களை விடுத்து) உண்மையான ரூபத்தில் காட்சி தந்தருளினான்.

ஸ்ரீ கிருஷ்ணபகவான் தனது அன்பன் சகாதேவனுக்குத் தனது விஸ்வ ரூப தரிசனமளித்தான், என்பது.

39. அன்பாலின் றென்னை.........

இ - ள்: அன்பால் இன்று என்னை யறிந்தே பிணித்தமை நன்று - பக்தியினால் இன்று என்னுடைய சுய ரூபத்தை யறிந்து கட்டியது நல்லது, என்பாதந் தன்னை யினி விடுக என்றுரைப்ப - எனது பாதத்தை இனி விட்டுவிடு என்று (கிருட்டிணன் சகாதேவனுக்குக்) கூற, (சகாதேவன் அவனைப் பார்த்து) வன் பாரதப் போரில் - கொடிய பாரதப் போரிலே, வந்தடைந்தோம் ஐவரையும் - உன்னை வந்து சரணாகதி யடைந்த எங்கள் ஐவரையும், நின் பார்வையாற் காக்க வேண்டும் நெடுமாலே - உனது திருக்கண் நோக்கிக் காத்தருள வேண்டும் பெருமையுடைய அண்ணலே (என்று தொழுதான்).

பாரதப் போரில் தம்மைக் காத்துவைக்க வேண்டுமென்று சகாதேவன் விண்ணப்பித்தான், என்பது.

40. என்றென் றிறைஞ்சி........

இ - ள்: என்று என்று இறைஞ்சி - என்று இப்படியாகச் சொல்லித் தொழுது, இரு தாமரைத் தாளில் ஒன்றுங் கதிர்முடியாற்கு - தனது இரு மலர்ப் பாதங்களில் பொருந்த வைத்த ஒளி வீசும் முடியை யுடைய சகாதேவனுக்கு, ஓம் என்று உரைத்தருளி - அப்படி யாகுக என்று வாக்குக் கொடுத்து, இன்று இங்கு இருவேமும் இப்போது உரைத்த மொழி ஒன்றும் - இன்று இங்கே நாமிருவரும் இப்பொழுது பேசியவற்றில் ஒன்றையேனும், பிறர் அறிய ஓதாது ஒழிக என்றான் - மற்றவர்கள் அறியத்தக்கதாகச் சொல்லாதே என்று கேட்டுக்கொண்டான்.

நாம் பேசிக்கொண்ட வார்த்தைகளைப் பிறரறியச் சொல்லாதே, என்றான் கிருட்டிணன், என்பது. என்று என்று - அடுக்குத்தொடர்.

41. ஆண்டிருந்த வவைநீங்கி........

இ - ள்: அறிவுடையோர் இருவோரும் ஆண்டிருந்த அவை நீங்கி - புத்தியிற் சிறந்தவர்களாகிய கிருட்டிணன் சகாதேவன் இருவரும் அங்கு கூடியிருந்த மண்டபத்தை நீங்கி, பாண்டவர்கள் முன் எய்தி - தருமன் முதலானோரிருந்த இடத்துக்கு வர, அவரில் இளையோனும் - அவர்களில்



இளையவனாகிய சகாதேவனும், ஈண்டு - (இவர்கள் கூடிய) இந்த இடத்தில், பழுதில் புகழ் பாஞ்சாலி நீண்ட கருங்குழல் சோர நின்றாளை முக நோக்கி - குற்றமற்ற பதிவிரதா கீர்த்தியையுடைய திரௌபதி தனது நீண்ட கருமைபொருந்திய கூந்தல் விரிந்துகிடக்க நின்றவளைப் பார்த்து, சந்து மிக இனிதென்றான் - சமாதானமே மிகவும் வேண்டத்தக்கது என்றான்.

பாண்டவர்முன்பு வந்தவுடன் சகாதேவன் திரௌபதியைப்பார்த்து, சமாதானமே விரும்பத்தக்கது என்றான், என்பது. ஆண்டு - அவ்விடத்தில்; ஈண்டு - இவ்விடத்தில்; அங்கே கிருஷ்ணனுடன் பாரதப்போரைப் பற்றிப் பேசியவன், இங்கே சமாதானம் நன்றெனக் கூறியதன் சூழ்ச்சி புலனாயிற்று. சந்து - பொருந்த வைத்தல். பாஞ்சாலி - பாஞ்சாலதேசத்தவள்; துருபதனின் மகள். பழுதில் புகழ் - ‘தீண்டாத கற்பு’ என்பது போல. நின்றாளை நோக்கி இளையோன் இனிதென்றான், என முடிக்க.

65. தருமனுக்குங் கருத்திதுவே........

இ - ள்: தருமனுக்கும் கருத்து இதுவே - தருமனுக்கும் இதுதான் எண்ணம், தமருடன் போர்புரியாமவ் இருநிலத்தில் உடன் வாழ்தல் - சுற்றத்தவர்களுடன் வீணாகச் சண்டை செய்யாமல் இந்தப் பெரிய உலகத்திலே ஒன்றுகூடி வாழ்தலே, எனக்கும் நினைவு என்று உரைத்தான் - எனக்கும் சரியென்று தோற்றுகிறது என (கண்ணன்) கூறினான், (அதைக் கேட்ட) மின் அனையாள் - மின்னற் கொடிபோன்ற திரௌபதி, வரிமலர்க் கண் புனல் சோர - செவ்வரிபடர்ந்த குவளைமலர்போன்ற கண்களிலிருந்து நீர் வடிய, மலர் மறந்த குழல் சோர - பூவை வைத்து முடித்தலை நீங்கியிருக்கும் அவிழ்ந்த கூந்தல் கீழே புரளவும், விரைமலர்ச் செஞ் சேவடிக்கீழ் வீழ்ந்தழுதாள் - வாசனை பொருந்திய தாமரை மலர்போன்ற செழுமையான (கண்ணனுடைய) பாதங்களில் விழுந்து புலம்பினாள்.

கண்ணனும் சமாதானம்தான் சரி என்று சொன்னவுடன் திரௌபதி வருந்தத் தொடங்கினாள், என்பது. செம் அடி - சே அடி; சேவடியில் ல் உடம்படுமெய்-

43. சாலக் கனகன்........

இ - ள்: கனகன் - இரணியன் என்பவன், தனி மைந்தனை சால முனிந்த காலத்து - தனது ஒரே புதல்வனாகிய பிரகலாதனை மிகவும் கோபித்தபோது, அவன் அறைந்த கற்றூணிடை வந்தாய் - அவன் (இரணியன்) கைகொண்டு தாக்கிய கற்றூணைப் பிளந்து தோற்றமளித்தாய், மூலப் பேரிட்டழைத்த மும்மதமால் யானைக்கு - ஆதிமூலமேயென்று

உன் பெயர் சொல்லி யழைத்த மும்மதங்கொண்ட பெரிய யானைக்கு, நீலக் கிரிபோல் முன்நின்ற நெடுமாலே - நீலமலைபோல அந்த யானைக்கு முன்னே தோற்றமளித்த பெருமானே.

பிரகலாதன் அழைக்க உதவிக்கு வந்தாய்; கஜேந்திரன் என்ற யானை யழைத்தபோதும் அங்கு தோன்றினாய், என்பது. இரணியன் தன் மகன் பிரகலாதன் நாராயண நாமத்தை உச்சரித்த போது கோபித்து, தன் பெயரைச் சொல்லும்படி வற்புறுத்தினான். ஆனால் பிரகலாதன் பிடிவாதமாய் நின்றான். இரணியன் "நீ சொல்லும் நாராயணன் எங்கேயிருக்கிறான்?" என்று கேட்க, மகன் "அவன் எங்குமிருப்பான்; இதோ இந்தத் தூணிலும் இருப்பான்" என்று சொல்லி ஒரு கற்றூணைக் காட்ட, இரணியன் சினந்து அத்தூணை அறைய அங்கிருந்து நாராயணன் நரசிங்க வடிவமாகத் தோன்றினான், என்பது கதை. இரணியம் என்பது வடமொழியில் பொன்னுக்குப் பெயர். கனகம் - பொன். இரணியன் - கனகன் எனப்பட்டது. கஜேந்திரனாகிய யானையும் ஒரு முதலையும் முன்பு விஷ்ணுபக்தர்களாயிருந்து. சபிக்கப்பட்ட பிறவிகள். ஒருநாள் யானையின் காலை முதலை யெதிர்ப்பட்டுக் கௌவிக்கொள்ள, அதை விடுவிக்க முடியாது கஜேந்திரன் 'ஆதிமூலமே' என்று விஷ்ணுவை அழைக்க அவர் சாட்சியளித்து இரு பிறவிகளையும் சாபவிமோசனஞ் செய்து நீக்கினார் என்பதும் ஒரு கதை.

44. கற்றைக் குழல்பிடித்து........

இ - ள்: கொற்றத் தனித் திகிரிக் கோவிந்தா - வெற்றி பொருந்திய ஒப்பற்ற சக்கராயுதத்தை யேந்திய கண்ணபிரானே, கண்ணிலான் பெற்றெடுத்தோன் - கண்கெட்ட திருதராட்டிரனுக்குப் புதல்வனான துச்சாதனன், கற்றைக் குழல்பிடித்து துகில்பற்றி உரிய - (எனது) அடர்த்தியான கூந்தலைப் பிடித்து ஆடையை இழுத்து அவிழ்த்த போது, பாண்டவரும் பார்த்திருந்தார் - (எனது கணவன்மாராகிய) பாண்டவர்கள்கூடப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். அற்றைக்கும் என் மானம் நீயன்றி ஆர் வேறு காத்தாரே - அன்றும் எனது மானத்தை நீதான் காத்தாயல்லாது வேறுயார் காத்தார்?

துச்சாதனன் துகிலுரிந்து மானபங்கஞ் செய்யத் துணிகையில் நீயல்லவா வந்து உதவினாய், என்பது. பாண்டவரும்: உம்மை உயர்வு சிறப்பு; காக்க வேண்டிய பெரிய கடமையுடையவர்கள் அவர்கள், ஆகையால், இப்போதும் எனது சபதத்தைக் காப்பாற்ற நீ உதவவேண்டும் என்பது தோன்றுகின்றது.



45. மன்றி லழைத்தெனக்கு..........

இ - ள் - எம்பெருமான் - எங்கள் தலைவனே, மன்றில் அழைத்து எனக்கு மாசு அளித்த மன்னவன்பால் - சபையிலே வருவித்து எனக்கு அபராதம் செய்வித்த அரசனாகிய துரியோதனனிடம், சென்று - நீ தூதுபோய், திறல் வீரர் தமக்கு ஐந்தூர் பெற்று இருந்தால் - வலிமையுடைய வீரர்களாகிய பாண்டவர் ஐவருக்கும் ஐந்து ஊர் பெற்று வந்து வாழ்ந்திருந்தால், அன்று விரித்த அருங்கூந்தல் - அக்காலத்து விரித்துவிட்ட அருமையான கூந்தலை; இனி என்று முடிப்பது என்று அழுதாள் - இனிமேல் எப்பொழுதுதான் வாரி முடிக்கப்போகிறேன் என்று அழுதாள்.

சமாதானஞ் செய்துவிட்டால் நான் சபதஞ் செய்தபடி கூந்தலை முடிக்க முடியாதே, என்பது.

46. தண்டிருந்த திவன் கரத்தில்.........

இ - ள்: இவன் கரத்தில் தண்டிருந்தது - (துகிலுரிந்த அப்போது அச்சபையிலே) இந்த வீமனின் கையில் தண்டாயுதம் இருந்தது, தனுவிருந்தது அவன் கரத்தில் - வில்லிருந்தது அருச்சுனனுடைய கையிலே, வண்டிருந்த பூங்குழல் - வண்டுகள் மொய்க்கின்ற பூக்களையணியும் கூந்தலையுடைய திரௌபதி, மேல் மாசு இருந்தது என இருந்தாள் - தன்மேல் பழி வந்தது என அவமானமடைந்திருந்தாள், கண்டிருந்தீர் எல்லீரும் - நீங்கள் எல்லாரும் பார்த்துக்கொண்டுதானே இருந்தீர்கள், கருதலர் பால் ஊர் வேண்டி உண்டு இருந்து வாழ்வதற்கே உரைக்கின்றீர் - கொஞ்சமும் மதியாத எதிரிகளிடத்திலே போய் ஐந்து ஊர் யாசித்து (மானமில்லாமல்) உண்டு வாழ்வதற்கே (இப்போது) பேசுகிறீர்கள், உரையீரே - (அப்போது) பேசமாட்டாதவர்களே.

முன்னம் திரௌபதி அவதியுற்றபோது பார்த்துக்கொண்டு வாய் திறவாதிருந்த நீவிர் இப்போது வெட்கமில்லாது பகைவர்களிடம் ஊர் யாசித்து வாங்கி வாழ்வதற்கு வாய் திறந்து பிரசங்கம் செய்கிறீர்களோ என்பது. இது சாத்தகியின் பழிச்சொல். கண்டிருந்தீர் உரையீர் உரைக்கின்றீர் என முடிக்க.

47. சண்டமுகி லுருமனைய.........

இ - ள்: சண்டமுகில் உரும் அனைய சராசந்தன் தனக்கு அஞ்சி - உக்கிரமான மேகத்தில் தோன்றும் இடியை ஒத்த சராசந்தனுக்குப் பயந்து, வண் துவரை அரணாக வடமதுரை கைவிட்ட - அழகிய துவாரகாபுரியைக் காவலிடமாகக் கொண்டு உத்தர மதுராபுரியை விட்டு நீங்

கின, திண்திறல் மாதவன் மதியோ - உறுதியும் வலிமையுமுடைய கிருட்டிணனது யோசனையோ, திகழ் தருமன் தன்மதியோ - விளங்குகின்ற தருமனுடைய யோசனைதானோ, பண்டும் அவர் கருத்தறிந்து பார்போய் வேண்டுவது என்றான் - முன்னமேயே அத் துரியோதனாதியரின் மனக் கருத்தையறிந்துகொண்டும் இப்பொழுது இராச்சியம் தரும்படி போய்க் கேட்பது, என்றான்.

சராசந்தனுக்குப் பயந்து வடமதுரையைவிட்டு ஓடித் துவாரகையில் ஒளித்த கிருஷ்ணனுடைய யோசனையா அல்லது தருமனுடைய யோசனையா இது, என்று சாத்தகி மேலும் கிருஷ்ணனைப் பழித்துக் கூறுவது.

48. சாத்தகிநின் றிவையுரைப்ப.........

இ - ள்: சாத்தகி நின்று இவை உரைப்ப - சாத்தகி அங்கு நின்று இங்ஙனம் கூறவும், சடைக் குழலாள் அழுது அரற்ற - சடையாகத் திரித்துக் கிடந்த கூந்தலையுடைய திரௌபதி அழுது புலம்பவும், கோத் தருமன் முதலாய குல வேந்தர் ஐவரையும் பார்த்தருளி - தலைவனாகிய தருமன் முதலிய நற் குலத்திற் பிறந்த அரசர்கள் ஐவரையும் கருணையோடு பார்த்து, அருள் பொழியும் பங்கயக் கண் நெடு மாலும் - கருணை வெள்ளம் பொழியும் தாமரை மலர் போன்ற கண்களையுடைய கிருட்டிணன், எத்தரிய பெருங் கற்பின் இளையாளுக்கு - போற்றுதற்கரிய சிறந்த கற்புடைய தங்கை திரௌபதிக்கு, இவை உரைப்பான் - பின்வருமாறு கூறினான்.

எல்லாரையும் பார்த்துக் கிருஷ்ணன் அருட்கணோக்கிக் கூறத் தொடங்கினான், என்பது. பார்த்தருளி என்பதற்குச் செயப்படுபொருள்களாக 'உரைசாத்தகி, அரற்று குழலாள், குலவேந்தர் ஐவர்' மூவினத்தையுங் கொள்க.

49. தொல்லாண்மைப் பாண்டவர்க்கு.........

இ - ள்: நல்லாய் - நல்ல குணமுடையவளே, தொல் ஆண்மைப் பாண்டவர்க்குத் தூதுபோய் மீண்டதன்பின் - பழமையான பராக்கிரமத்தையுடைய பாண்டவர்களுக்காகத் தூதுபோய்த் திரும்பியபின்னர், உன் பைங்கூந்தல் நானே முடிக்கின்றேன் - உனது பசுமையான கூந்தலை நானாக முடிக்கச் செய்துவைப்பேன், எல்லாரும் காண இனி விரிப்பது - அனைவரும் பார்க்கும்படியாக இனிமேல் அவிழ்க்கச்செய்வது, எண்ணரிய புல்லார்தம் அந்தப்புரமாதர் பூங்குழலே - அளவிறந்த சிறுமையோராகிய துரியோதனாதியரின் அந்தப்புர மாதராகிய மனைவியர்களின் பூச்சூடிய கூந்தல்களே.



நான் இப்போது தூதுபோய்த் திரும்பியவுடன் உனது கூந்தலை முடிக்க வழி கூறுவேன்; இனிமேல் துரியோதனாதியரின் மனைவிமார் தலைவிரிகோலமாக நிற்கவும் செய்வேன், என்பது. 'உனது சபதம் நிறைவேறவும், துரியோதனாதியர் அழியவும் வழிவரும்' என்பது உட்பொருள்.

50. மைக்குழலாய் கேளாய் .........

இ - ள்: மைக்குழலாய் கேளாய் - மைபோன்ற கருமையான கூந்தலையுடையவளே கேள், மருவார் உடற்புலத்து புக்கு - சேராத பகைவர்களது உடலமாகிய வயலிலே நுழைந்து, உழலாகும் கொழுவாம் போர்வாள் அபிமன்னு - உழுகின்ற கொழுவூசியைப் போன்ற போரிற் சிறந்த வாளை ஏந்திய அபிமன்னு, தொக்கு உழலும் வெங்கோன்மை தொல்வேந்தர் தங்குலமும் - ஒன்றாகக் கூடி வசிக்கின்ற கொடுங்கோலராகிய பழமையான அரசகுலத்தையும், இக் குழலும் சேர முடியாதிரான் என்றான் - இந்த உனது கூந்தலையும் சேர்த்து முடியாதிருக்கமாட்டான் என்றான்.

அபிமன்னு பகைவர்களையும் கொன்று உனது கூந்தலையும் முடிவிப்பான், என்பது. முடியாது என்பது இரட்டுறமொழிதல், அல்லது சிலேடை. வேந்தர் குலத்தை முடிப்பது - அழித்தல். குழலை முடிப்பது - கட்டுதல். மருவார் - சேராதவர், பகைவர். 'உடற்புலத்து ...... போர்வாள்' உருவகம். உடலாகிய வயலை யுழும் வாளாகிய கொழு.

51. பெண்ணீர்மை குன்று ..........

இ - ள்: சாற்றுகின்ற (நூல்களில்) சொல்லப்படுகின்ற, மண் நீர் அனல் அனிலம் வான் வடிவாம் மாமாயன் - பூமியும் தண்ணீரும் தீயும் காற்றும் ஆகாயமும் ஆகிய (பஞ்சபூதங்களின்) வடிவங்களையெல்லாம் கொள்ளும் மிக்க மாயாரூபியான கண்ணபிரான், பெண்ணீர்மை குன்றாப் பெருந்திருவின் - பெண்மைக்குரிய சிறந்த குணங்களில் குறைவுபடாத உயர்வு பொருந்திய இலக்குமி போன்ற திரௌபதியின், செங்கமலக் கண்ணீர் துடைத்து - செந்தாமரை மலர்போன்ற கண்களில் வழிந்த நீரைத் துடைத்து, தன் இரு கண்ணின் கருணை எனும் தெள் நீரினால் - தனது இரண்டு கண்களிலிருந்து பொழிகின்ற அருளாகிய தெளிந்த நீரினால், பொருந்தத் தேற்றினான் - தகுந்தவாறு அவளைத் தேறுதல் கூறிச் சமாதானப்படுத்தினான்.

கிருட்டிணமூர்த்தி திரௌபதி வருந்தாதிருக்கத் தனது கிருபாகடாட்சத்தால் தேற்றினான், என்பது. 'கண்ணிற் கருணையெனுந் தெண்ணீர்' - அன்போடு பார்க்கும் அருள்நோக்கம். பெண்ணீர்மை - பெண்களுக்கமைந்த நாணம் மடம் அச்சம் பயிர்ப்பு ஆகிய குணங்கள். மண் நீர் அனல் அனிலம் வான் - முறையே பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாயம் என்ற பஞ்சபூதங்கள்.

52. துன்று பிணியோர் ..........

இ - ள் : துன்று பிணியோர் - நீங்காத நோயை யுடையவர்கள், துறந்தோர் - உலக வாழ்வைத் துறந்த சந்நியாசிகள், அடங்காதோர் - வணக்கமில்லாத கல்நெஞ்சர், கன்று சின மனத்தோர் - மூர்க்கத்தன மாகக் கோபங்கொள்ளும் மனத்தையுடையவர்கள், கல்லாதவர் - கல்வி யறிவில்லாத கசடர்கள், இளையோர் - வயதில் இளமையுள்ளவர்கள், ஒன்றும் முறைமை உணராதவர் - நீதிநெறி பழக்க வழக்கங்களாகிய வற்றை அறியாதவர்கள், மகளிர் - பெண்கள், இவர் - ஆகிய இந்த வகை யினர், என்றும் மந்தணத்தின் எய்தப் பெறுதாரோ - எக்காலத்திலும் ஆலோசனைச் சபைகளில் வருவதற்குத் தகுதியில்லாதவர்களாவர்.

இதனால் ஆலோசனைச் சபையில் சேர்க்கப்படாதவர்களின் வகை கூறப்பட்டது. இது மனுதர்ம சாஸ்திர விதியிற் சொல்லப்பட்டு, கவி யினால் எடுத்தாளப்பட்டது. மந்தணம் - மந்த்ரம், மந்தாணம் என்ற வட சொற்களின் விகாரம். இது தருமன் உபதேசம் என்பது. இதற்கடுத்த கவியில் 'என்னக் கழறி' என்பதனை லறியப்படும்.

53. என்னக் கழறி ..........

இ - ள் : என்னக் கழறி - இப்படியாக (தருமன்) சொல்லி, இருந் தோர் உரை தவிர்த்து - மற்று அங்கு இருந்தவர்களின் கருத்துக்களை அங்கீகரிக்காது, நின்னொப்பவரில்லாய் நீ ஏகு என உரைப்ப - உனக்குச் சமானமானவ ரில்லாத கிருட்டிணமூர்த்தியே! நீ சென்றுவரக்கடவை என்று விடை கொடுக்க, மாயோனும் - கண்ணபிரானும், மன்னர்க்கு மன்னவன்பால் தூதாகி - அரசர்க் கரசனாகிய துரியோதனனிடம் செல் லும் தூதுவனாகி, பொன்னுற்ற நேமிப் பொருபரித் தேர்மேற் கொண் டான் - பொன்னாற் செய்யப்பெற்ற சக்கரங்களையுடையதும், போருக் குரிய குதிரைகள் பூட்டினதுமான தேரின்மீது ஏறி வீற்றிருந்தான்.

தருமன் விடைகொடுத் தனுப்ப, கிருட்டிணமூர்த்தி தூதுவனாகிச் செல்லத் தேரிலேறினான் என்பது. கழறி தவிர்த்து உரைப்ப - மாயோன் தேர்மேற் கொண்டான் என முடிக்க. 'நின்னொப்பவரில்லாய்' சிறப்பின் மரபு. 'தனக்குவமை யில்லாதான்' என்றார் வள்ளுவரும். மன்னர்க்கு மன்னவன் சக்கரவர்த்தி.

54. சங்கு மணிமுரசுஞ் ..........

இ - ள் : சங்கும் - சங்கவாத்தியங்களும், அணி முரசும் - அழகிய பேரிகைகளும், சல்லரியும் - சல்லரியென்ற தாளவாத்தியங்களும், தாரை களும் - குழல் வாத்தியங்களும், எங்கும் முழங்க - எத்திசைகளிலும் சப் திக்க, எழில் வெண்குடை நிழற்ற - அழகிய வெண் கொற்றக்குடை



நிழலைச்செய்யும்படி பிடிக்கவும், பொங்கு கவரி புடை இரட்ட - விரிந்து மிகுகின்ற கவரிமான் மயிராகிய சாமரைகள் இருபுறத்திலும் வீசவும், எண்ணிலா அங்கம் ஒருநான்கும் - கணக்கில்லாத நால்வகைச்சேனையங்கங் களும், அவனிபரும் தற்சூழ - பல அரசர்களும் தன்னைச் சூழ்ந்து வர.

வாத்தியங்கள் ஒலிக்கவும், குடை சாமரை நால்வகைச் சேனைகள் அரசர்கள் சகிதமாக, என்பது. இக் கவியின் தொடர்ச்சி அடுத்த கவி யில் வரும். முழங்க, நிழற்ற, இரட்ட, சூழ என்பன வினையெச்சங் கள். பொங்கு கவரி - சாமரை வீசும்போது அம் மயிர்த்திரள் பொங் கும் தன்மைச் சிறப்பு. இக்கவியில் வரும் நயங்களை யுய்த்துணர்க.

55. கல்வரையும்..........

இ - ள் : கல்வரையும் - கற்கள் நிறைந்த மலைகளையும், பாலைக் கடுஞ்சுரமும் - பாலைநிலமாகிய கொடிய வெப்பமுள்ள வனாந்தரத்தை யும், கான்யாறும் - காட்டாறுகளையுடைய பிரதேசத்தையும், நல்வரை யும் நீர்நாடும் - நல்ல மலைவளம் ஆற்றுவளம் பொருந்திய நாடுகளையும், நாள் இரண்டில் சென்றருளி - இரண்டு நாட்களில் நடந்து போய், தொல்வரைய கோபுரமும் - பழமையாகக் கட்டப்பட்டுள்ள கோபுரங் களாலும், நீள்மதிலும் சூழ்ந்து இலங்கும் - நெடிய மதில்களாலும் சூழப் பெற்று விளங்கும், மல்வரைய தோளான் வளம் மா நகர் கண்டான் - மல்யுத்தத்துக்கு ஏற்றதாயுள்ள தோள்களையுடைய துரியோதனனது வளப்பமிக்க பெரிய நகரத்தைக் கண்டான் (கண்ணன்).

மலைகளையும் பாலைவனங்களையும் காடுகளையும் வயல்களையும் கடந்து சென்று அத்தினாபுரியையடைந்தான் என்பது. இங்கு முறையே குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம் ஆகிய நால்வகை நிலத்திணைகளும் கூறப்பட் டன காண்க. கடல் சார்ந்த நிலம் அங்கு இல்லையாதலால் நெய்தல் கூறப்படவில்லை.

56. மேவு செந்துகிர்த் திரளு..........

இ - ள் : பச்சிளங் கமுகம் - பச்சை நிறமுள்ள இளம் பாக்கு மரங்கள், மேவு செந்துகிர்த் திரளும் - விளங்குகின்ற செந்நிறமுள்ள பவளங்களின் கூட்டத்தையும், மா மரகத விதமும் - சிறந்த (பச்சை நிறமுள்ள) மரகத மணிகளின் வகைகளையும், கோவை வெண்கதிர்த் தாளமும் - கோக்கப்பட்ட (மாலைபோன்ற) வெண்ணிறமான ஒளி வீசும் முத்துக்களையும், நிரை நிரை குயிற்றி - வரிசை வரிசையாக அமைத்து, தாவும் வெண்பரித் தேரினன் தனக்கு - பாய்கின்ற விரை வுள்ள குதிரைகள் பூட்டிய தேரில் வருகின்ற கிருட்டிணமூர்த்திக்கு, எதிர் சமைத்த காவணங்களின் தோன்றின - எதிரிலே (வரவேற்க) அமைக்கப்பெற்ற பந்தல்களைப் போன்று காட்சியளித்தன.

இது அங்நகரத்தின் சோலைகளில் கண்ட கமுக மரங்களின் காட்சியை வருணிக்கும் வகை. சிவந்த பழம்பாக்கு - பவளம், பச்சைப் பாக்கு - மரகதம், வெண்ணிறமான பூங்கொத்து - முத்துவடம்; இவைகளைக் கொண்டு அமைத்த ஒரு பந்தல்போன்றிருந்ததாம் கமுகமரம். காவணங்களின் என்பதில் இன் - போன்று. மேவு - உயரப் பொருந்திய.

57. வம்புலாமகில் சந்தனம்.........

இ - ள்: சோலை - அங்நகரத்தின் சோலைகளில், வம்பு உலாம் அகில் - வாசனை வீசுகின்ற அகில் மரங்களும், சந்தனம் - சந்தன மரங்களும், வருக்கை - பலா மரங்களும், மாகந்தம் - மாமரங்களும், சம்பகம் - சண்பக மரங்களும், தமாலம் - பச்சிலை மரங்களும், பலதிசை தோறும் தயங்க - பல திசைகளிலெல்லாம் அசைந்து ஆடிக்கொண்டிருக்க, உம்பர் நாயகன் வரவு கண்டு உளம் களி கூர்ந்து - தேவர்களுக்குத் தலைவனாகிய கண்ணனின் வரவைக் கண்டு (உபசரிக்க) மனம் மகிழ்ச்சியுற்று, தும்பி பாடின - வண்டுகள் ரீங்காரம் செய்தன, தோகை நின்றாடின - மயிற்கூட்டங்கள் (அப்பாடலுக்கிசைய) நின்று தோகை விரித்தாடின.

கிருட்டிணன் வரவைக்கண்டு களிப்புற்றன என்று, சோலை விசேடத்தை உருவக வகையாற் கூறப்பட்டது. இங்கு மரவகை கூறப்பட்டது காண்க.

58. அணிகொ ளத்தினபுரி.........

இ - ள்: அணிகொள் அத்தினபுரியெனும் அணங்கு - அழகையுடைய அத்தினபுரியென்ற பெண், செந்திருவின் கணவனுக்கு - சிவந்த மேனியுடைய இலக்குமியின் கணவனாகிய கண்ணனுக்கு, எதிர் காட்டும் நீராசனம் கடுப்ப - எதிரிலே ஏந்திக் காண்பிக்கின்ற ஆலத்தியை ஒப்ப, பொய்கை - (அங்நகரத்திலுள்ள) தடாகங்கள், மணம் மிகுந்த செந்தாமரை மலருடன் - வாசனை மிக்க சிவந்த தாமரை மலர்களுடன், சிறந்த புணரியிற் பெரும் புனலையுங் கொள்வன - நிரம்பிய கடலினும் பார்க்க மிகுதியான நீர் நிறைந்திருக்கும்.

கிருட்டிணனை வரவேற்க அத்தினபுரியென்ற அணங்கு ஆலத்தியெடுத்தது போன்று தடாகங்களில் தாமரை மலர்ந்திருந்தன என்பது. ஆலத்தித் தட்டமும் மஞ்சள் நீரும் - தடாகங்கள்; திருவிளக்குச் சுடர் தாமரை மலர்கள்.

59. நடந்த நாயகன்.........

இ - ள்: நடந்த நாயகன் - (அத்தினபுரிக்கு) தூதுவனாக வந்தருளிய தலைவனாகிய கிருட்டிணமூர்த்தி, கோலமாய் - (முன்பு ஒரு



போது) வராக அவதார வடிவமெடுத்து, வேலைசூழ் ஞாலம் இடந்த நாளிடை - கடல்சூழ்ந்த பூமியைப் பிளந்த காலத்தில், அது வழியாக வந்து எழுந்து படர்ந்த - அதன்வழியாக வந்து மேலெழுந்து பரவிய, பாதல கங்கை - பாதாள கங்காநதியானது, அ படர் மதில் சூழ்ந்து கிடந்ததாம் என - அந்தப் பரந்த மதிலை வளைந்து கிடந்ததாம் என்று சொல்லும்படியாக, தாழ்புனல் கிடங்கு சிறந்தது - ஆழமாக நீரையுடையதாக அகழியானது சிறப்புடன் விளங்கியது.

அத்தினபுரி மதிலைச் சூழவிருந்த அகழி, பாதாள லோகத்திலிருந்து மேலெழுந்த கங்கைபோன்று ஆழமாயும், அகலமாயுமிருந்தது என்பது. கோலம் - வடிவம்; இங்கே 'ஞாலம் இடந்த நாளிடை', என வருதலால் பன்றி வடிவம் எனக் கொள்ளத்தக்கது. இரணியாக்கன் என்ற அசுரன் ஒருகாலத்தில் பூமியைப் பாயாகச் சுருட்டிக்கொண்டு கடலுட் சென்றபோது மகாவிஷ்ணு வராக அவதாரமெடுத்துச் சென்று அவ்வசுரனைக் கோட்டாற் குத்திக் கொன்று பாதாள லோகத்தோடிருந்த பூமியையும் குத்தியெடுத்து மேலெழுந்தார் என்பது இங்கு கூறப்பட்ட கதை. அங்ஙனம் குத்தியெடுத்தபோது பாதாள கங்கை பூமிக்கெழுந்துவந்ததோவென இங்கு அணியாகக் கூறப்பட்டது.

60. அடி நிலத்திலே .........

இ - ள்: இடிமுகிலனைத்தும் - இடியேற்றுடன் கூடிய மேகங்களெல்லாம், அடி நிலத்திலே படிவன - (அங்நகரத்து மதிலின்) அடிப்புறத்திலே படியும், முடி நிலத்தினுக்கு - அம்மதிலின் உச்சிக்கு, உடுபதத்தினும் முடிவில்லை - நக்ஷத்திரமண்டலத்திலும் முடிதலில்லை, நெடிய சக்கரப் பொருப்பையும் நிகரிலா இதற்கு ஓர் படி வகுத்தது ஆம் எனும்படி - மிகவுயர்ந்த சக்கரவாள மலையும் ஈடாகாத இம்மதிலுக்கு (அச் சக்கரவாள மலையே) ஒரு கீழ்ப்படியாக அமைந்ததென்று சொல்லும்படி, பரந்தது புரிசை - பரவியுள்ளது அங்நகரத்து மதில்கள்.

அத்தினபுரியின் புறமதில் உயரத்திலும் அகலத்திலும் மிக்கது; சக்கரவாள மலைகூட அம்மதிலுக்கு இணையில்லை. ஆனால் ஒருவாறு அம்மதிலுக்கு அமைக்கப்பட்ட கீழ்ப்படியாக இருக்கக்கூடும், என்பது. பூமியைச் சுற்றியுள்ள கடற்பரப்புக்கு எல்லையாகவுள்ளது சக்கரவாள மலையென்ற மலை. இது ஒரு கற்பனை.

61. பகலினுங் கடும்பரிதி .........

இ - ள்: நெடுங் கொடி ஆடை - நீண்ட கொடிகளின் சீலைகள், பரிதி கடும் பகலினும் தன் கதிர் பரப்பாமல் - சூரியன் நடுப்பகலிலும் தனது கிரணங்களைப் பரப்ப முடியாதவாறு, இகலி எங்கணும் கால்

எறிந்து பொருதலின் - (சூரியனோடு) எதிர்த்து எல்லாப் பக்கங்களிலும் தமது சிறகுகளைப் பரப்பிக் காற்று மோதுதலினால், ஏத்தி புகலுகின்ற மந்தாகினி தரங்கமே போல - போற்றப்படுகின்ற தேவகங்கையின் அலைகளைப்போல, அகல் விசும்பிடை மிடைவன - அகன்ற ஆகாயத்திலே நெருங்கியிருக்கும்.

சூரிய கிரணங்கள் மறைத்துக் கொடிச்சீலைகள் எத்திசையும் பறந்து கொண்டிருக்கும், என்பது. கடும்பகலில் கிரணங்கள் செங்குத்தாக விழுதலின் கொடிச்சீலைகள் மறைக்கமுடியா. ஆகலின் 'எங்கணும் எறிந்து கால் பொருதலின்' எனக் கூறி அங்ஙனமாயினும் அவைகள் பறந்து மறைக்கும் எனக் கருத்து வருவிக்கப்பட்டது.

62. புயங்க பூமியோ .........

இ - ள்: இயங்கு கார்முகில் வரையினின்று எழுவன போல - அசைந்து திரியும் கரிய மேகங்கள் மலையிலிருந்து மேல் எழுதல்போல, வயங்கு கார் அகில் நறும் புகை மாடம் உயர்ப்பன - விளங்குகின்ற கரிய அகிலின் மணமுள்ள புகைகள் (அந்நகரத்து) உயர்ந்த வீடுகளிலிருந்து எழுந்தன, புயங்க பூமியோ - நாகலோகமோ, புரந்தரற்கு அமைத்த பொன் உலகோ - இந்திரனுக்காக அமைக்கப்பட்ட பொன்மயமான உலகமோ, தயங்கு செல்வம் நீடு அளகையோ - சிறந்த செல்வம் நிறைந்த (குபேரனது) அளகாபுரியோ, நிகர் என்னும் தரத்த (மாடம்) - ஒத்தது என்று சொல்லத்தக்கது.

மலையிலிருந்து எழும் மேகம்போன்று அந்நகரத்து வீடுகளிலிருந்து அகிற்புகை எழும். அந்த மாடங்களைப் பார்த்தால் நாகலோகமோ, இந்திரலோகமோ அல்லது குபேரபட்டினமோ என்று சொல்லும்படியாயிருந்தது, என்பது. புயங்கம் - பாம்பு புஜங்கம், என்ற வடமொழி விகாரம்; மார்பினால் ஊர்ந்து செல்வது என்பது பொருள். தரத்த - தகுதி வாய்ந்தன. இதனால் அந்நகரத்து வீடுகளின் அழகும் செல்வப் பெருக்கும் கூறப்பட்டது.

63. மன்னர் வேழமுஞ் .........

இ - ள்: வீதிகள் எல்லாம் (அத்தனபுரியின்) பெரிய தெருக்கள் தோறும், மன்னர் வேழமும் சேனையும் - அரசர்களது யானைகளும் சேனைகளும், எதிர் எதிர் மயங்க - எதிருக்கெதிராக நெருங்கிக் கலத்தலால், பின்னும் முன்னும் எம் மருங்கினும் பெயர் இடம் பெறுமல் - பின்பக்கம் முன்பக்கம் எப்பக்கத்திலும் இடம்விட்டு விலகிச் செல்ல இடமின்மையால், துன்னி நின்றவர் ஏகுமின் ஏகுமின் என்னும் என்னும் ஓசையே உள்ளன - நெருங்கி நின்றவர்கள் 'போங்



கள் போங்கள்' என்று பலதரம் சொல்லுகின்றதனால் உண்டான சத்தமே நிறைந்திருந்தது.

அதிக நெருக்கத்தினால் விலகிச்செல்ல முடியாமலிருக்கும் படைகளெல்லாம் 'விலகுங்கள் விலகுங்கள்' என்று பலர் கூவும் சப்தம் நிறைந்திருந்தது வீதிகளில், என்பது. இதனால் சேனைப்பெருக்கும் வீதி நடமாட்டமும் கூறப்பட்டது. 'ஏகுமின் ஏகுமின்' என்னும் என்னும் அடுக்குகள்.

64. வரையெலாம் பல.........

இ - ள்: வரை எலாம் - மலைகளிலெல்லாம், பல வனம் எலாம் - பலவகைப்பட்ட காடுகளிலெல்லாம், கடல் எலாம் - கடல்களிலெல்லாம், வளைந்த தரை எலாம் - அக்கடல் சூழ்ந்த நிலங்களிலெல்லாம், படுபொருள் எலாம் தனித்தனி குவித்த - (இவைகளில்) உண்டாகின்ற திரவியங்களையெல்லாம் வெவ்வேறாகக் குவித்துவைத்த, நிரை எலாம் கவர் ஆவண நீரமைய - வரிசைகளையெல்லாம் கொண்டுள்ள கடைவீதியினது தன்மையை, புலவோர் உரையெலாம் தொடுத்து உரைப்பினும் - புலவர்கள் புனைந்து கூறும் வருணனைகளையெல்லாம் திரட்டி வருணித்தாலும், உவமை வேறுளதோ - அக்கடைத்தெருவுக்கு நிகரானது (அதேயன்றி) வேறு உவமை யுண்டா?

மலைபடுதிரவியம், காடுபடுதிரவியம், கடல்படுதிரவியம், நாடுபடுதிரவியம் எல்லாம் நிறைந்தது கடைவீதி. அக்கடைவீதிக்கு புலவர்களின் கற்பனாசக்தியோடு கூடிய எல்லா வருணனைச் சொற்களையும் தொகுத்துச் சொன்னாலும் வேறு உவமானம் கிடைக்காது. அதற்கு அதுவே உவமையாம், என்பது.

65. விரவுகான் மலரினும்.........

இ - ள்: வீரரின் விதங்கள் - (அந்நகரத்து) காலாட்படைகளின் வகைகள், வான் விரவு மலரினும் பல - காட்டிலே பரவிக்கிடக்கும் மலர்வகைகளிலும் பல, புரவியின் பந்தி - குதிரைப்படையின் வரிசைகள், பரவை வெண் மணலினும் பல - கடலின் (கரையிலுள்ள) வெண்மையான மணலினும் பலவாம், யானையின் ஈட்டம் - யானைப் படைகளின் கூட்டங்கள், இரவில் வானம் மீனினும் பல - இராக் காலத்திலே ஆகாயத்தில் தோன்றும் நக்ஷத்திரக் கூட்டங்களிலும் அதிகமாம், தேர் அணிநிலையே - தேர்ப்படைகளின் வரிசைகள், நிரைகொள் கார்த்துளியினும் பல - தொகுதியாயுள்ள மழைநீர்த்துளியினும் பலவாம்.

இதனால் நால்வகைச் சேனைகளின் தொகுதியும் கூறப்பட்டது.

66. ஆசிலாமறை..........

இ - ள் : ஒருபால் ஆசிலாமறை அந்தணர் ஆலயம் - ஒரு பக்கத்திலே குற்றமற்ற வேதங்களை யோதும் பிராமணர்களது வீடுகளும், ஒருபால் மாசு இலாமுடி மன்னவர் மாளிகை - ஒரு பக்கத்திலே குற்றமற்ற முடியையுடைய அரசர்களின் மாளிகைகளும், ஒருபால் காசு இலா மதி அமைச்சர்தம் கடிமனை - ஒரு பக்கத்திலே குற்றமற்ற அறிவையுடைய மந்திரிகளின் வீடுகளும், ஒருபால் பேசு இலா வளம் வணிகர்தம் பேர்இடம் - ஒரு பக்கத்திலே சொல்லுதற்கரிய செல்வத்தையுடைய வியாபாரிகளின் பெரிய வீடுகளும் (உள்ளன).

அந்நகரத்து நான்கு தெருக்களிலும் முறையே அந்தணர், அரசர், மந்திரி பிரதானிகள், வணிகர் என்பவர் இருப்பிடங்களுள, என்பது. ஆலயம், மாளிகை, கடிமனை, பேரிடம் என்பன அவ்வவ் வருணத்தாரது வீட்டின் இயல்புபற்றிக் கூறப்பட்டது காண்க. உள்ளன என்ற வினைமுடிவை இயைத்துக் கொள்க.

67. மங்கலந் திகழ்..........

இ - ள் : மங்கலந் திகழ் மனையெலாம் வலம்புரி ஓசை - நற்கருமங்கள் விளங்குகின்ற வீடுகளில் எல்லாம் வலம்புரிச் சங்கின் ஒலியும், திங்கள் தோய் நெடுந்தலம் எலாம் - சந்திரகிரணங்கள் படிகின்ற நிலா முற்றங்களில் எல்லாம், செழும் சிலம்பு ஓசை - (பெண்களின்) அழகிய சிலம்புகளின் ஒலியும், அம்கண் மாநகர் அனைத்தும் மும்முரசு அதிர் ஓசை - அழகிய இடத்தையுடைய 'பெரிய நகரம் எங்கும் மூன்று வகைப் பேரிகைகளும் ஒலிக்கின்ற சத்தமும், எங்கணும் கடவுளர் இடந்தொறும் முழவு ஓசை - தேவாலயங்களில் எல்லாம் மத்தளங்களின் ஒலியும் (உள்ளன).

வீடுகளில் மங்கல வாத்தியமாகிய வலம்புரி ஓசையும், நிலா முற்றங்களில் சிலம்பொலியும், நகரமுழுவதும் முரசொலியும், கோவில்களில் மத்தளங்களும் ஒலிக்கும். இதற்கும் உள்ளன என்று ஒரு வினைமுடிவு வருவிக்க. நிலாமுற்றங்களில் பெண்கள் நடனமாடுவதால் காற்சிலம்பின் ஒலி கேட்கும்.

6?. முன்றிலின்க ணின்றிடம்பெறு.........

இ - ள் : முன்றிலின்கண் நின்று இடம் பெறு அரசர் - வெளி முற்றத்திலே நின்று நெருக்கத்தில் (உள்ளே செல்ல) இடம் பெறுத சிற்றரசர்களின், மாமுடிகள் ஒன்றொடு ஒன்று அறைந்து எற்றி - சிறப்புடைய முடிகள் ஒன்றோடொன்று இடிபட்டுத் தாக்கியதினால், ஒளிர் பொறி மேல் சிதறி - பிரகாசமுடைய பொறிகள் (பொற்பொறிகள்) உயரப் பறந்து சிதறி, சென்று சென்று உறு திசைதொறும் - போய்ப் போய்ப் பரவுகின்ற திசைகளிலெல்லாம், செம்பொன் குன்று எனும்படி - சிவந்த பொன் மலை என்று சொல்லும்படி, குரு குல நாயகன் கோயில் திகழ்ந்தது - குருவம்சத்தி லுதித்த அரசனாகிய துரியோதனனது அரண்மனை விளங்கிற்று.

துரியோதனனை வணங்க வந்த மன்னர்களின் முடிகள் ஒன்றோடொன்று உரோஞ்சுதலால் எழுந்த பொற் பொடிகள் படிந்த அரண்மனை பொன் மலைபோல் விளங்கிற்று, என்பது. மன்னர்களின் தொகுதி கூடியதால் துரியோதனனது கீர்த்தியும் சக்ராதிபத்தியச் சிறப்பும் பெறலாயிற்று. கோயில் திகழ்ந்தது என முடிக்க.

69. என்றிசைக்க.........

இ - ள் : என்று இசைக்கும் - என்று இங்ஙனம் சொல்லத்தக்க, நல் ஒளி உமிழ் எழில் மணி மகுட - சிறந்த ஒளி மிகுந்த அழகு பொருந்திய இரத்தினங்களைப் பதித்த முடிகளையுடைய, குன்று இசைக்கும் வண் கோபுர நீள் நகர் குறுகி - மலைகளையொத்த அழகிய கோபுரங்களையுடைய நெடிய நகரத்தை யணுகி, நெடுமால் - கண்ணபிரான், தென் திசை - அந் நகரத்தின் தெற்குப் பக்கத்தில், குளிர் செண்பக மலர் தொறும் இறை தேன் நின்று இசைக்கும் வண் சோலை வாய் - குளிர்ச்சியுடைய செண்பக மலர்களில் இறகுகளையுடைய வண்டுகள் மொய்த்து ஒலிக்கின்ற அழகிய சோலையில், அமர்ந்தனன் - போய்த் தங்கியிருந்தான்.

அத்தினபுரியின் தெற்கேயுள்ள சோலையில் கிருஷ்ணன் தங்கியிருந்தான் என்பது. நெடுமால் குறுகி அமர்ந்தனன் என முடிக்க.

70. அன்று தூது.........

இ - ள் : அன்று தூது கொண்டு இலங்கை தீ விளைத்தவர் - 'முன்பு அனுமானைத் தூது அனுப்பி இலங்கைக்கு நெருப்பு வைத்தழித்த திருமால், இன்று ஐவர்க்குத் தூது வந்து - இப்பொழுது பாண்டவர்களுக்குத் தூதுவராக வந்து, எயிற்புறத்து இறுத்தனர் என்று - நகரின் மதிற்புறத்திலே தங்கியுள்ளார்' என்று, அன்று வண்டினம் தூது முரல் தொடையலான் தனக்கு - நெருங்கிய வண்டுக் கூட்டங்கள் தூ தூ என்று ஒலிக்கும் மாலையையணிந்த துரியோதனனிடத்தில், தூதுவர் சென்று சேவடி வணங்கி இயம்பினர் - அவனது காவலாளர் போய்ச் சிவந்த பாதங்களை வணங்கிச் சொன்னார்கள்.

கிருஷ்ணன் பாண்டவர்களுக்காகத் தூது வந்தார், என்று துரியோதனனுக்குக் காவலர் கூறினர், என்பது. திருமாலே இராமாவதா

ரத்தில் இராமனாகி அனுமானை இலங்கைக்குச் சீதையைத் தேடும் பொருட்டுத் தூதனுப்ப, அனுமன் இலங்காபுரிக்குத் தீ மூட்டியதை 'அன்று தூதுகொண் டிலங்கை தீ விளைத்தவர்' என்று கூறப்பட்டது. 'விளைத்தவர் இறுத்தனர் என்று தூதுவர் இயம்பினர்' என முடிக்க.

71. தொல்லை நாயகன்.........

இ - ள் : தொல்லை நாயகன் வந்தனன் என்றலும் - யாவர்க்கும் பழம் பொருளாகிய தலைவன் வந்தான் என்று கூறியவுடன், சுரும்பு ஆர் மல்லன் மாலையான் ஏவலால் - வண்டுகள் மொய்க்கின்ற அழகிய மாலையணிந்த துரியோதனன் கட்டளைப் பிரகாரம், மா நகர் மாக்கள் - பெரிய நகரத்துச் சனங்கள், நீள் மதில் வட்டம் யோசனை எழுநூறும் எல்லை - நீண்ட மதிலைச் சுற்றி எழுநூறு யோசனை தூர எல்லையையுடைய, செல்வ மாநகர்த் தெருவினை - செல்வ வளமுடைய பெரிய நகரத்துத் தெருக்களையெல்லாம், ஒப்பனை செய்தார் - அலங்கரித்தார்கள்.

கிருஷ்ணனுடைய வரவைக் கேள்வியுற்ற துரியோதனன் கட்டளை பிறப்பிக்க, நகர மாந்தர் வீதி யலங்கரித்தனர், என்பது. தொல்லை நாயகன் - ஆதிமூலம். மாக்கள் ஒப்பனைசெய்தார், என முடிக்க.

72. மின்னு மாமுகிற்.........

இ - ள் : மின்னு மாமுகிற் பல்லிய விதங்கள் - மின்னும்போது (இடியிடிக்கின்ற) பெரிய முகிற்கூட்டம் போன்று பல (பேரிகை) வாத்தியங்கள், முன் முழங்க - தமக்கு முன்னே ஒலிக்க, மன்னர் மன்னவன் - அரசர்க் கரசனான துரியோதன், மால் எதிர் கொள்வான் எழுந்தனன் - திருமாலவதாரமான கிருட்டிணனை வரவேற்க எழுந்தான், (அப்பொழுது), என்னை நீ யவற்கு எதிர் செல்வது என்று - நீ அக் கிருட்டிணனை எப்படி வரவேற்கலாம் என்று, கொடுமைகூர் சகுனி - வஞ்சகமுள்ள சகுனியானவன், தன் மருகன் தன்னை வன்பொடு தகைந்தனன் - தனது மருகனான துரியோதனனைக் கோபத்தோடு தடுத்தான்.

கிருட்டிணமூர்த்தியை வரவேற்கச் சென்ற துரியோதனனை அவன் மாமன் சகுனி போகவொட்டாது தடுத்தான், என்பது. சகுனி தகைந்தனன் என முடிக்க.

73. சீர் வலம்புரி.........

இ - ள் : தார் வலம்புரியவன் - நந்தியாவர்த்தம் மலர்மாலையணிந்த துரியோதனன், சீர் வலம்புரி திகிரிசேர் செங்கையான் தனக்கு - சிறப்புடைய வலம்புரிச் சங்கையும் சக்கராயுதத்தையும் சிவந்த திருக்கைகளிலே அணிந்த கிருட்டிணமூர்த்திக்கு, கார் வலம்புரி கோயிலும்,



காட்சியும் அமைத்து - மேகங்கள் சூழ்ந்து செல்லத்தக்க விதமாக அழகிய மண்டபமும் அதற்கலங்காரங்களும் செய்து வைத்து, போர் வலம்புரி நிருபரும் இளைஞரும் போற்ற - போரிலே சூழ்ந்துநிற்கும் அரசர்களும் தம்பிமாரும் வணங்கி நிற்க, பொலம் தவிசின் இருந்தனன் - பொன்மயமான சிங்காசனத்தில் வீற்றிருந்தான்.

துரியோதனன் கிருட்டிணனுக்கு ஒரு மண்டபம் அமைக்க ஏற்பாடு செய்துவிட்டுக் கொலு வீற்றிருந்தான், என்பது. பொன் + தவிசு = பொலந்தவிசு. 'தார் வலம்புரியவன் இருந்தனன்' என முடிக்க.

74. தொல் பகீரதி.........

இ - ள் : தொல் பகீரதி மைந்தனும் - பழமையான கங்கையின் புதல்வனாகிய பீஷ்மனும், துரோணனும் - துரோணாசாரியாரும், சுதனும் - அவரது புதல்வனாகிய அசுவத்தாமனும், வில்விதுரனும் - வில்வித்தையில் வல்ல விதுரனும், கிருபனும் - கிருபாசாரியாரும், முதலிய வேந்தர் மல்கு - முதலான பெரிய அரசர்கள் நிறைந்த, மூவிருபத்து நூறாயிரமகிபர் - அறுபது லக்ஷம் மகிபர்களும். செல்வநாயகற்கு - செல்வம் நிறைந்த தலைவனான கண்ணனுக்கு, இரண்டு யோசனை எதிர் சென்றார் - இரண்டு யோசனை தூரத்தில் வரவேற்கச் சென்றனர்.

பீஷ்மர் முதலியோர் கிருட்டிணனை வரவேற்கச் சென்றனர், என்பது. வேந்தர் மல்கு......மகிபர், என்றதால் முன்னையோர் உயர்வும் பின்னையோர் சிறப்பின்மையும் அறிக. 'வேந்தர் மகிபர் சென்றார்' என முடிக்க.

75. வந்து வந்திரு.........

இ - ள் : இருமருங்கினும் மன்னவர் வந்து வந்து வணங்க - இருபக்கங்களிலும் இங்ஙனம் அரசர்கள் வந்து வந்து தொழுது நிற்க, பைந்துழாய் முடிப் பரமனும் - பசிய துளசிமாலை சூடிய முடியையுடைய கண்ணபிரானும், கண்மலர் பரப்பி - தனது தாமரைக் கண்களாற் பார்த்து, அந்தமாநகர் புகுந்தபின் (சோலையிலிருந்து) அப்பெரிய நகராகிய அஸ்தினபுரியில் பிரவேசித்ததும், அரசன் இல் புகாமல் - துரியோதனன் தனக்காக அமைத்த மண்டபத்தினுள் போகாமல், புந்திகூர் அருள் விதுரன் வாழ்மனை புகுந்தான் - உள்ளன்போடு அருளையுமுடைய விதுரன் வாழும் அழகிய வீட்டினுள் பிரவேசித்தான்,

வந்த அரசர்களையெல்லாம் பார்த்துவிட்டுக் கிருட்டிணன் விதுரன் வீட்டினுள் பிரவேசித்தான், என்பது. 'பரமன் புகுந்தான்' எனமுடிக்க

76. வேந்தர் யாரையும்.........

இ - ள்: வேந்தர் யாரையும் விடை கொடுத்து அகன்ற பின் - அரசரெல்லாரையும் விடை கொடுத்து அனுப்பி விட்டு அவர்கள் போனபின்னர், விமலன் - குற்றமற்றவனாகிய கண்ணபிரான், வாய்ந்த மாளிகை நடுவண் ஓர் மண்டபங் குறுகி - பொருந்திய (விதுரனுடைய) இல்லத்தின் நடுவே ஓர் மண்டபத்தை யடைந்து, ஆய்ந்து வல்லவர் நவமணி அழுத்திய - வல்லவர்களால் ஆராய்ந்து நவரத்தினங்கள் பதிக்கப்பட்ட, அரி ஏறு ஏந்தும் ஆசனம் இட - ஆண் சிங்கம் (உருவங்கள்) தாங்கிய ஆசனத்தை (விதுரன்) கொடுக்க, அதன்மிசை பொலிந்து இருந்தான் - அவ்வாசனத்தின்மீது சிறப்பாக உட்கார்ந்தான்.

விதுரன் மாளிகையில் கண்ணன் ஓர் சிங்காசனத்தில் வீற்றிருந்தான், என்பது. ஆய்ந்து வல்லவர் - இரத்தினங்களைத் தெரிவதில் வல்லவர்கள். 'விமலன் அமர்ந்தான்' என முடிக்க.

77. இருந்துவந்தரு ளிறைவனை.........

இ - ள்: வந்தனை அமரருக்கு மருந்து அருளிய மாயோன் - வணக்கஞ் செய்த தேவர்களுக்கு அமிர்தத்தைக் கொடுத்த கண்ணபிரான், விருந்து வந்தனன் என்று - (எனது வீட்டில்) விருந்துண்ண வந்தான் என்று கருதி, உளம் உருகிய விதுரன் - மனமானது மகிழ்ச்சியடைந்த விதுரன், இருந்து உவந்தருள் இறைவனை இறைஞ்சினான் - சிங்காசனத்தில் வீற்றிருந்து சந்தோஷத்தோடு பார்த்த கண்ணனைத் தொழுதான், இறைஞ்சி - (அங்ஙனம்) தொழுகையினால், பெருந் துவந்தனைப் பிறப்பையும் இறப்பையும் பிரித்தான் - பெரிய இரு வினைகளாகிய பிறப்பையும் இறப்பையும் ஒழித்தான்.

விதுரன் சந்தோஷங்கொண்டு கண்ணபிரானைத் தொழுது பிறத்தல் இறத்தல் என்ற இரு வினைகளினின்றும் நீங்கப்பெற்றான், என்பது. துவந்தம் - இரு வினைகள். துவி - இரண்டு. பாற்கடல் கடைந்த காலத்தில் தேவர்களுக் கமிர்தம் அளித்தமை இங்கு 'மருந்து வந்தனை அமரருக் கருளிய' எனப்பட்டது. 'விதுரன் பிரித்தான்' என முடிக்க.

78. கோடு கொண்ட..........

இ - ள்: தோடு கொண்ட தார் விதுரன் - அலர்ந்த இதழ்களையுடைய மாலை யணிந்த விதுரன், கோடு கொண்ட கைக் குரிசிலை - சங்கை யேந்திய கையினனாகிய கண்ணனை, அலர்ந்த கோகனதக் காடு கண்டெனக் கண்டு - மலர்ந்த தாமரைக் காட்டைக் கண்டாற்போலத் தரிசித்து, தன் கண் இணை களியா - தனது இரு கண்களும் களிப்



படைந்து, இப் பிறப்பையும் தொலைத்தான் - இப் பிறவித் துன்பத்தையும் நீக்கினான்,' வீடு கண்டவர்க்கு இயம்பவும் வேண்டா - முத்தியின் தன்மையை யறிந்தவர்களுக்கு (வேறொருவர்) சொல்லவும் வேண்டுமோ? வேண்டாம்.

விதுரன் கிருட்டிணனைத் தரிசித்து முத்தி பெற்றது போலானான், என்பது. முகம், கண்கள், கைகள், பாதங்கள் முதலியன தாமரை போன்றவை யாகையால் 'கோகனதக்காடு' எனக் கூறப்பட்டது.

79. உள்ளினா னுணர்ந் துள்ளமு.........

இ - ள்: அளியோன் - அருள் பெற்றவனாகிய விதுரன். உள்ளினான் - மனத்தால் தியானித்தான், உணர்ந்து உள்ளமும் உருகினான் - அறிந்து மனமுங் கரைந்தான், எழுந்து துள்ளினான் - எழுந்து நின்று ஆனந்தக் கூத்தாடினான், விழுந்து இணையடி சூடினான் - கீழே விழுந்து கண்ணனின் இரு பாதங்களையும் தலையின்மேல் வைத்தான். துயரைத் தள்ளினான் - தனது துன்பங்களை நீக்கினான், மலர்த்தடக் கையால் தத்துவ அமுதை அள்ளினான் என - தாமரை மலர்போன்ற பெரிய கைகளால் மெய்ப் பொருளாகிய அமிர்தத்தை அள்ளியவன்போல, கண்களால் அருந்தினான் - தனது கண்களால் உண்டான்.

விதுரன் கண்ணனை தரிசித்துப் பாவசமாய் நின்றான், என்பது. கண்களால் அருந்துதல் - ஒரே பார்வையாகப் பார்த்துப் பாவசப்படுதல்.

80. முன்னமே துயின்றருளி.........

இ - ள்: முன்னமே துயின்றருளிய முதுபயோததியோ - ஆதியிலே (நீ) நித்திரை செய்த பழமையான பாற்கடலோ, பன்னக அதிபப்பாயலோ - சர்ப்பங்களுக்குத் தலைவனான ஆதிசேஷனாகிய படுக்கை தானோ, பச்சை ஆல் இலையோ - பச்சை நிறமுள்ள ஆலமிலையோ, சொன்ன நால்வகைச் சுருதியோ - சொல்லப்பட்ட நான்கு வேதங்களோ, கருதி நீ எய்தற்கு - நீ நினைத்து இங்கு வருவதற்கு, இச் சிறு குடில் என்ன மா தவம் செய்தது என்றான் - எனது இச்சிறு வீடு என்ன பெரிய தவத்தைச் செய்ததோ என்று வியந்தான்.

'எனது வீடு உன்னை வரவேற்க என்ன தவம் செய்ததோ' என்று விதுரன் புகழ்ந்தான், என்பது. திருப்பாற்கடல், ஆதிசேஷன், ஆலிலை நால்வகை வேதங்களும் - திருமாலின் இருப்பிடங்களாகையால் அவற்றை விதுரன் தனது சிறு வீட்டுக்கு உவமித்தான்.

81. மும்மை யாகிய.........

இ - ள்: மும்மை யாகிய புவனங்கள் முழுதையும் - மூன்று வகையான உலகங்கள் முழுதையும், அருந்தும் - உட்கொண்ட, எம்மை ஆள்

உடை நாயகன் - எம்மை ஆண்டருளிய தலைவன், விருந்தினுக்கு இசைந்தான் - விருந்துண்ண ஒத்துக்கொண்டான், அம்ம என்றனன் - இது ஆச்சரியம் என்று, ஆறு நூறாயிரம் மடையர் தம்மை நோக்கினன் - ஆறு லக்ஷம் சமையற்காரரைப் பார்த்தான், அவர்களும் விரைவுடன் சமைத்தார் - அச்சமையற்காரரும் துரிதமாகச் சமையல் செய்தார்கள்.

கிருட்டிணனுக்கும் உடன் வந்தவர்க்கும் சமையல்செய்து உபசாரம் செய்ய ஆறு லக்ஷம் வேலைக்காரரை ஆக்ஞாபித்தான் விதுரன், என்பது. உலகம் யாவும் அழியுங்காலத்தில் திருமால் அவைகளை உண்பதாகப் புராணங்கள் கூறும். (விதுரன்) நோக்கினான்; அவர்களும் சமைத்தார் என முடிக்க.

82. வந்த கொற்றவேல்...........

இ - ள்: (கண்ணனுடன்) வந்த கொற்றவேல் வரிசிலையவர்க்கும் - வெற்றியைத்தரும் வேலையும் பலம் பொருந்திய வில்லையும் கொண்ட வீரர்க்கும், கந்தடர்ப்பன கரிக்கும் - கட்டுத்தறியை முறிக்கும் யானைகளுக்கும், வெம்கவன வாம்பரிக்கும் - வேகமுள்ள நடையுடைய தாவிப் பாயும் குதிரைகளுக்கும், ஐந்து பத்து நூறு ஆயிரம் அரசர்க்கும் - ஐம்பது லக்ஷம் அரசர்களுக்கும், எவர்க்கும் - மற்றும் எல்லோருக்கும், இந்திரற்கும் எய்தா அமுது எனும்படி இயற்ற - இந்திரன் தனக்கும் கிடைத்தற்கரிய அமிர்தமென்னும்படி ஆயத்தஞ் செய்ய.

விதுரன், யானை, குதிரை, அரசர்கள் எல்லோர்க்கும் உணவு ஆயத்தம் செய்ய, என்பது. இக்கவியின் முடிபு அடுத்த கவியில் காண்க.

83. அமைத்த வாசநன்னீர்.........

இ - ள்: அமைத்த வாசம் நல் நீர்கொடு மஞ்சனம் ஆடி - (விதுரனால்) சித்தஞ் செய்யப்பட்ட வாசனை ஊட்டிய நல்ல நீரைக்கொண்டு ஸ்நானஞ் செய்து, சமைத்த பல்கறி அடிசில் தம் விருப்பினால் அருந்தி - சமைக்கப்பட்ட பல கறி வகைகளுடன் உணவைத் தம் விருப்பப்படி உண்டு, உமைக்கு நாயகன் இரவு ஒழித்து அருளினன் - உமாதேவியின் கணவனான சிவனது இரத்தற்றொழிலை நீக்கியருளிய கண்ணபிரான், உதவ - கொடுத்தபோது, இமைப்பிலார் அமுதருந்திய இயல்பென - தேவர்கள் (பாற்கடல்) அமுதத்தைப் பருகிய தன்மைபோல, இருந்தனர் - (அரசர்களும் மற்றையோரும்) திருப்தியோடிருந்தார்கள்.

எல்லோரும் உண்டு மகிழ்ந்திருந்தனர், என்பது. மஞ்சனம் - நீராடுதல்; திருப்பாற்கடல் கடைந்தபோது திருமால் கொடுத்த அமுதத்தையுண்ட தேவர்களிருந்தவாறு, இங்கு விதுரன் வீட்டில் யாவரும் கண்ணன் கடாட்சத்தால் மகிழ்ந்திருந்தனரென்க. சிவனது இரவு ஒழித்த கதையை முன்னேரிடத்தில் 15 - வது கவியில் கூறியது காண்க.



84. வாசநீரும்..........

இ - ள்: வாச நீரும் - (யாவரும் புசித்த பின்னர்) நல்ல வாசனையுடைய பனிநீரும், வண் சுண்ணமும் முறைமுறை வழங்க - அழகிய வாசனைப்பொடிகளையும் அடுக்கடுக்காகக் கொடுக்க, பூசுறும் தொழில் பூசினார் - அவற்றைப் பூசவேண்டிய முறைப்படி பூசினார்கள், சூடினார் புனைந்தார் - தலைமுடியிற் பூச்சூடி உடம்பில் மாலையைத் தரித்தார்கள், கேசவன் - கண்ணபிரான், வீசு சாமரம் இரட்ட - வீசுதற்குரிய வெண் சாமரம் வீசவும், வெண்மதி குடை நிழற்ற - வெள்ளை நிறமுடைய சந்திரவட்டக்குடை நிழல் செய்யவும், மணி கேசரி தவிசு இடை இளர்ந்தான் - நவரத்தினங்கள் பதிக்கப்பெற்ற சிங்காசனத்தில் வீற்றிருந்தான்.

போசனம் முடித்துக் கொண்டு சந்தனம் தாம்பூலம் முதலியன தரித்து, கிருட்டிணன் ஓர் சிங்காசனத்தில் வீற்றிருந்தான், என்பது. (யாவரும்) பூசினார், சூடினார், புனைந்தார்; கேசவன் இளர்ந்தான், என முடிக்க.

85. ஞான கஞ்சுக........

இ - ள்: ஞான கஞ்சுக விதுரன் வாழ் மனையில் - ஞானமாகிய கவசத்தைத் தரித்த விதுரன் வசிக்கும் வீட்டிலே, நாயகனும் - கண்ணபிரானும், போனகம் பரிவுடன் நுகர்ந்து இருந்த அப்பொழுதில் - போசனத்தை அன்புடனே உண்டு இருந்த அந்த வேளையிலே, பானுவும் - சூரியனும், தானும்—, மேருவுக்கு அப்புறத்து அவவமுதருந்த - மகாமேரு மலைக்கு மேற்புறத்திலே போய் அப்படிப்பட்ட தேவாமிருதத்தை உண்பதற்கு, பெருங் குடதிசைப் பரவையிற் படிந்தான் - பெரிய மேற்கடலில் நுழைந்தான்.

சூரியன் அஸ்தமித்தான் என்பது. சூரிய அஸ்தமனத்தை மேல் கடலில் ஆழ்வதாகக் கூறுவது கவிமரபு. திருப்பாற்கடலமுதத்தை உண்பதற்கு என உருவகப்படுத்தியது இங்கு கண்ணன் உணவருந்தியிருப்பதனால் என்க.

86. சுருதி யந்தணர்.........

இ - ள்: அந்தணர் யாவரும் தம்கடன் கழிப்ப கருதி - பிராமணரெல்லோரும் தமது நித்திய கருமங்களைக் கழிக்க எண்ணி, சுருதி என்னும் வெம் சாபம் மேல் - வேத மந்திரமாகிய கொடிய வில்லின் மேல், அம்புகை தொடுத்து - நீராகிய பாணத்தைத் தொடுத்து, பரிதி

தன் பெரும் பகைவர் மேல் விடுத்தலின் - சூரியனுடைய பெரிய பகைவர்களின் - (அசுரர்களின்) மேல் எய்தலும், பாந்த குருதி ஆம் என - (அங்கே) பாவிய இரத்தமாம் என்று சொல்லும்படி சிவந்து எழ குடபால் சிவந்தது - மிகுந்துத் தோன்றுதலால் மேற்குத்திசை செந்நிறமடைந்தது.

மேற்குத் திசை சூரிய னஸ்தமித்தமைபால் சிவந்தது, என்பது. பிராமணர்கள் சந்தியாவந்தனத்துக்காக அர்க்கியம் செய்ய நீரைக் கையில் ஏந்தி எறிவதை அம்பு தொடுத்தல் என உவமிக்கப்பட்டது. அம்பு நீரும், பாணமுமாம், அது இங்கு சிலேடை.

87. தரங்வாரிதி..........

இ - ள்: கரை தொறும் வளர் துகிர் காடு - கடற்கரை யெங்கும் வளர்ந்து கிடந்த பவளக் கொடிகளின் தொகுதி, தரங்க வாரிதிப் புறத்து - அலைகளையுடைய கடலின்மேலே, எதிர் மலைந்த வெம் சமரில் - எதிர்த்துத் தாங்கிய கொடிய போரில், உடன்ற மந்தேகர் - கோபங்கொண்ட மந்தேகர் என்ற அரக்கர்கள், உரங்கொள் கூர் நெடும் படைகளால் - வலிமையுடைய கூர்மையான பெரிய ஆயுதங்களால், துரங்கம் ஏழ் உடைக் கடவுளை - ஏழு குதிரைகளையுடைய சூரியனை, நிரை நிரை துணித்த கரங்கள் போன்றன - வரிசை வரிசையாகத் துண்டு செய்த கிரணங்களாகிய கைகளை யொத்தன.

கடற் கரையிலுள்ள பவளக் கொடிகள் சூரியனின் துணிக்கப்பட்ட கைகளைப் போன்றன, என்பது. மந்தேகர் என்ற அரக்கர் தவஞ் செய்துகொண்டு எப்பொழுதும் சூரியனை எதிர்த்துப் போராடுகின்றனரென்பது வேதத்தில் ஒரு கதை.

88. நீதியிற்புகல்.........

இ - ள்: தாமரை அடவி - தாமரையின் தொகுதிகள், நீதியிற் புகல் பகல் எலாம் - முறையாகச் சொல்லப்படுகின்ற பகற்பொழுதெல்லாம், உறைத்து எழும் வெம் வெயில் - உக்கிரமாக எறிக்கின்ற சூரியனின் வெப்பமான கிரணங்கள், நீர் அர மகளிர் மீது படா வகை - நீரில் வசிக்கின்ற தெய்வப் பெண்கள்மீது படாதவாறு, விரித்து - முதலில் விரிக்கப்பட்டு, போது புக்கது என இனம்பட சுருக்கிய - பொழுது சென்றது என்று எண்ணி வரிசையாக (இதழ்கள்) மடக்கப்பட்ட, பூம்பட்டு ஆதபத்திரம் போன்றன - அழகிய பட்டுக் குடைகள் போன்றிருந்தன.

நீரில் வசிக்கும் தெய்வ கன்னிகைகள் மீது உஷ்ணம் படாதவாறு குடை விரித்தாற்போன்று மலர்களை விரித்து, பின் சூரியன் அஸ்த



மித்தது கண்டு சுருக்கியது போன்றிருந்தன தாமரைகள், என்பது. நீரிலே ஒருவகைத் தெய்வப் பெண்கள் உறைவதாகப் புராணக் கதை. அடவிபோன்றன, என முடிக்க. மாலைக்காலத்துத் தாமரை கூம்பியிருத்தலால் கவி இங்ஙனம் உவமித்து வருணித்தார்.

89. கலந்து மங்கல.........

இ - ள்: மங்கலமுழவு வெண் சங்கொடு கலந்து கறங்க - (மாலைக் காலத்திலே) பேரிகைகள் வெண்மையான சங்குடன் கலந்து ஒலி செய்ய, மிலைந்த பூங்கழல் வனிதையர் - கூந்தலில் பூக்களைச் சூடிய பெண்கள், மெய்விளக்கெடுப்ப - பிரகாசம் பொருந்திய தீபங்களையேந்தவும், நகர் வட்டம் - அத்தினபுரியின் பாந்த இடமானது, கலந்த தாமரைத் தடமெலாம் குவிந்ததுகண்டு - பொருந்தியுள்ள தாமரைக்குளத்தி லெல்லாம் மலர்கள் கூம்பியது கண்டு, மலர்ந்த தாமரை வாவிபோன்றது - மலரப்பெற்ற தாமரைகளையுடைய ஒரு குளம்போன்றிருந்தது.

மாலைப்போதில் தாமரைகள் கூம்பின; அத்தினபுரியில் அவ்வேளை முரசொலியும் சங்கொலியும் கேட்க, மகளிர் வீடுகளில் விளக்கேற்ற, அவ்வொலிகளும் தீபச்சுடர்களும் கலந்து அலர்ந்த தாமரை வாவி போன்றிருந்தது, என்பது. ‘மெய்விளக்கு’ என்பதன் பொருள் சிறப்பின்மையால் ‘நெய் விளக்கு’ என மூலம் இருத்தலும் பொருந்தும். நகர் வட்டம் போன்றது, என முடிக்க.

90. உரக புங்கவன்.........

இ - ள்: உரக புங்கவன் மணிமுடி ஒப்பன தீபம் - பாம்புகளுக்குத் தலைவனான ஆதிசேஷனின் தலையிலிருக்கும் இரத்தினங்களைப்போன்ற விளக்குகளை, இருமருங்கினும் ஆயிரம் ஆயிரம் ஏந்த - இரண்டு பக்கங்களிலும் பல்லாயிரக்கணக்கான பேர் ஏந்தி நிற்க, அரி சுமந்த போசனத்து - சிங்கத்தினுருவம் தாங்கி நின்ற சிங்காசனத்திலே, அழகுடனிருந்த புரவலன்றனை - அழகாக வீற்றிருந்த காவற்கடவுளாகிய கிருட்டிணமூர்த்தியை, புண்ணிய விதுரனும் போற்றி - நல்வினைப் பயன் பெற்ற விதுரனை வணங்கி,

கிருட்டிணமூர்த்தியை விதுரன் வணங்கி, என்பது. இக்கவியின் முடிவு அடுத்த கவியில் வரும். போற்றி - வினையெச்சம். அடுத்தகவியில் என்றான் என்பதில் முற்றும்.

91. பொங்க ராவணை.........

இ - ள்: பொங்குஅரா அணை - சீற்றத்தையுடைய ஆதிசேஷனின் மேற் படுக்கையினது, பொலிவு அறப் போந்தவுடன் - அழகு கெடும்படி

யாக (நீ அதைவிட்டு)ப் பிரிந்தபின்னர், பொதுவர் தங்கள் பாடியில் வளர்ந்து - ஆயர் பாடியிலே வளர்ந்து, மாமருதிடைத் தவழ்ந்து - பெரிய மருத மரங்களிடையே தவழ்ந்து விளையாடி, (இங்ஙனம் சிறப்புற்ற) கங்கைமாநதி கால்வழி கருணையங் கடலே - சிறப்புற்ற கங்கை நதியானது பாதங்களின் வழியாகப் பாயும் அருள் நிறைந்தவனே, இங்கு நீ தனி நடந்தவாறு உரைத்தருள் என்றான் - இங்கே நீ தனியாக வந்த காரணம் என்னவென்று சொல், என்றான்.

கிருட்டிணமூர்த்தியைப் பார்த்து விதுரன், நீ இங்கு வந்த காரியம் யாது என்று வினவினான், என்பது. கிருஷ்ணனது பழைய வரலாறுகளைக் கூறியமை காண்க. மகாவிஷ்ணு சத்தியலோகஞ்சென்ற போது பிரமன் கால் கழுவியபோது பாய்ந்த தீர்த்தமே கங்கையென்பது புராணக் கதை. அதுவே இங்கு, 'கங்கை மாநதி கால்வழி' எனப்பட்டது. 'கருணையங்கடல்' உருவகம்.

92. தோட்டு வந்து........

இ - ள்: (கண்ணபிரான் கூறுவது) தோட்டு வந்து செந்தேன் நுகர் சுரும்பு சூழ் தொடையாய் - பூவிதழ்களில் வந்து செழுமையான தேனைப் பருகுகின்ற வண்டுகள் மொய்க்கும் மாலையையுடையவனே, முன் காட்டு வந்து திரிந்து தம் கடவநாள் கழித்து - முன்னே காட்டிலே போய்த் தங்கள் கடமையான காலவெல்லையைப் போக்கிவிட்டு, நாட்டு வந்தபேர் ஐவர்க்கு - இப்போது நாட்டுப்புறத்திலே வந்துள்ள பாண்டவர் ஐவர்க்கும், நற்குரு நாடு கேட்டு வந்தனம் என்றனன் - நல்ல குருநாட்டினுரிமையைத் தரும்படி கேட்க வந்தேன் என்றான், விதுரனுங் கேட்டான் - விதுரனும் (ஆவலோடு) கேட்டுக்கொண்டிருந்தான்.

பாண்டவருக்குச் சேரவேண்டிய குருநாட்டைத் தரும்படி துரியோதனனைக் கேட்க வந்தேன் என்றான் கிருட்டிணன், என்பது. தோடு, காடு, நாடு என்பன முறையே தோட்டு, காட்டு, நாட்டு என ஒற்று மிகுந்து ஏழாம் வேற்றுமைப் பொருளைத் தந்தன. (கண்ணன்) என்றனன், விதுரன் கேட்டான் என முடிக்க.

93. முழக்கி னாலுயர்..........

இ - ள்: முழக்கினாலுயர் முரசுயர்த்தவன் தனக்கு - சப்தத்தில் மிக்க முரசுக் கொடியையுடைய தருமனுக்கு, வழக்கினா லறிந்து - நியாயப் பிரமாணத்தினா லுணர்ந்து, அடலரவு உயர்த்தகோன் உரிமை வழங்கான் - கொடுமையுடைய பாம்புக் கொடியையுடைய துரியோதனன் இராச்சிய உரிமையைக் கொடுக்கமாட்டான், தழக்கின் நால் இரு திசையினும் முரசுஎழ - ஆரவாரத்துடனே எட்டுத் திக்குகளி



லும் பேரிகை முழங்க, சமரில் உழக்கினால் அலது உணர்வனோ - போரிலே வைத்துக் கலக்கினால் அல்லது துரியோதனன் உணர்ச்சி பெறுவானோ, என்று அவன் உரைத்தான். என்று விதுரன் கூறினான்.

சமாதானத்தால் துரியோதனன் அரசு கொடான். அவனைப் போரிலே வைத்துக் கலக்கினால்தான் உணர்ச்சி பெறுவான் என விதுரன் கூறினான், என்பது.

94. வாளை வாவியி........

இ - ள்: வாளை வாவியில் உகண்டு எழ - நீர் நிலைகளிலுள்ள வாளை மீன்கள் துள்ளி யெழுவதினால், வளர் இளங் கமுகின் பாளை வாய் - வளர்ந்துள்ள இளமையான கமுகு மரங்களின் பாளைகளிலுள்ள, அளி முரன்று எழும் - வண்டுகள் ஒலித்து எழுகின்ற (தன்மையான), பழன நாடுடையான் - வயல்களைக்கொண்ட குரு நாட்டையுடைய துரியோதனன், நாளை வாழ்வு அவர்க்களித்திலன் எனில் - நாளைக்கே பாண்டவர்க்கு இராச்சியம் கொடுக்க மறுத்தால், எதிர் நடந்து - பாண்டவர்கள் எதிர்த்து வந்து, மூளை வாயுக, முடிப்பர் வெம்போர் - துரியோதனனது மூளை சிதறி வாய்வழியாக ஒழுகும்படி கொடிய யுத்தத்தில் வெற்றிகொள்வர், என மொழிந்தான் - என்று கிருட்டிணமூர்த்தி கூறினான்.

துரியோதனன் கொடுத்தால் சரி, இல்லையேல் பாண்டவர்கள் யுத்தந் தொடுப்பர், என்பது. மருதநில வருணனையில் வாளை மீன்களும் கமுகுகளும் கவி மரபு. 'மூளைவாயுக' என்பது சீற்றச்சொல்லின் வகை 'பல்லைக் கொட்டிக் கையில் வைத்தல்' என்பது போல. (கிருஷ்ணன்) மொழிந்தான் என முடிக்க.

95. விரைந்து பாய்பரி........

இ - ள்: விரைந்து பாய்பரி மன்னவர் - விரைவாகப் பாய்ந்துசெல்லும் குதிரைகளையுடைய அரசர்கள், மெலிவுற்று இதம்பட இரந்து வேண்டினும் - தளர்ச்சியடைந்து இனிமையாகக் கூறி யாசித்துக் கேட்டாலும், கிளைஞருக்கு ஒரு பொருள் ஈயார் - உறவினர்க்கு ஒன்றும் கொடார், அவர் - அவ்வுறவினரே, எதிர்த்துப் பாந்தபோரினில் படப் படப் பகழி தூர்ந்தபோது - எதிர்த்து வந்து பெரிய போரிலே மேலும் மேலும் அம்புகளை யெய்து தொடுத்தபோது, அவர்க்கு உதவுவர் சொன்னவை யெல்லாம் - அவர்களுக்குக் கேட்டதையெல்லாம் கொடுப்பார்கள்.

சிலர், உறவினர் இரந்து கேட்டால் கொடார்கள்; எதிர்த்து யுத்தம் செய்தால் கேட்டதையெல்லாம் கொடுப்பார்கள், என்பது. இது கிருஷ்ணன் கூறிய உலக வழக்கம். மன்னவர் ஈயார், உதவுவர் என முடிக்க. இக்கவி அடுத்த கவியுடன் தொடரும்.

96. என்று பாரினி.........

இ : ள் : என்று பாரினில் இயற்கையும் விதுரனுக்கியம்பி - என்று இவ்வாறு உலகினியல்பையும் விதுரனுக்குக் கூறி, போர்வென்று கெழு நேமியான் - போரில் வெற்றிகொள்ளும் சிறந்த சக்கராயுதத்தையுடைய கிருட்டிணன், விடைகொடுத்தருளி - விதுரனைப் போக விடைகொடுத்து விட்டு, குன்றுபோல் புயம் காவலர் கொடும் அடி கறங்க - மலைகள் போன்ற தோள்களையுடைய மெய்காப்பாளர் சப்திக்கும் உடுக்கையென்னும் வாத்திபத்தை ஒலிக்க, மன்றல் நாள்மலர் பாயலின்மீது கண் வளர்ந்தான் - வாசனையுடைய அன்று மலர்ந்த மலரணையின்மீது படுத் துறங்கினான்.

விதுரனுக்கும் விடைகொடுத்து விட்டுத் தானும் நித்திரைக்குப் போனான் கிருஷ்ணன், என்பது. படுக்கைக்குப் போகும் வேளையை யறிவிக்கக் காவலர் பறையறைதல் மரபு. நேமியான் அருளிவளர்ந்தான், என முடிக்க.

97. குளிரு மாமதி.........

இ - ள் : குளிரும் மாமதி முகத்து ஒளிர் குமுத வாய்மலர்த்தி - குளிர்ச்சி பொருந்திய பூரண சந்திரன்போன்ற தனது முகத்திலே விளங்குகின்ற ஆம்பல் மலர்போன்ற வாயைத் திறந்து, தவள வாள் நகை பரப்பி - முல்லை அரும்புகள் போன்ற பிரகாசமான பற்களைக் காட்டிப் புன்சிரிப்புச் செய்து, வண்சததள மலர்க்கை அளவிலே குவித்து - அழகிய தாமரை மலர்போன்ற கைகளை (பொருள் கிடைத்தவரையில்) சிறுகக் குவியச் செய்து, அளியொடும் அகன்றிராமையினால் - வண்டுகளோடு நீங்காமையினால், அக்கங்குல் - அன்றைய இராத்திரியானது, கன்கொள் தோள்விலைக் கணிகையைப் போன்றது - (பொருள் கொடுப்பவர் தழுவி) இன்பம் பெறும் விலைமாதைப் போன்றிருந்தது.

இது இராக்கால வருணனை ; கணிகைமாதருக்குவமித்தது. கணிகையர் புன்னகை கூட்டிப் பொருள் வந்த அளவிலே அன்பு காட்டுவர். இங்கு இராக்காலமும் சந்திரன், குமுதம், முல்லை, கூபிம்ய தாமரை, அளி முதலியன கொண்டுள்ளது. இவை முறையே முகம், வாய், பல், கை, அன்பு எனக் கொண்டமை காண்க. அளி - வண்டுக்கும் அன்புக்கும் சிலேடை.

98. அளைந்த வாரிருட் கடல்.........

இ - ள்: அளைந்த ஆர் இருட்கடல் பொருது - பாவி நிறைந்த இருட்கூட்டமாகிய கடல் வெள்ளத்தைப் பொறுக்க முடியாது, அண்டம் பிளந்ததாமென - அண்டகோளமானது (கிழக்கே) வெடித்தது



என்று சொல்லும்படியாகவும், கரும்படாம் பீறியதென்ன - கருநிறமான திரைச்சீலை கிழிந்ததென்று சொல்லவும், வளைந்த எழுகடல் வற்ற - உலகத்தைச் சூழ்ந்துள்ள எழு கடல்களும் வற்றி, வடவையின் முகத் தீமேல் கிளர்ந்ததாமென - வடவாமுகாக்கினியானது மேலே எழுந்தது என்று சொல்லவும், கிளர்ந்தன இரவியின் கிரணம் - சூரியனின் கிரணங்கள் தோன்றின.

சூரியன் உதயமாகியதை வருணித்த காட்சி இது. வடவை என்பது வடமொழியில் பெண் குதிரை. கடலினிடையே ஒரு பெண், குதிரையுண்டென்றும், அதன் முகத்தில் நெருப்பு உளதென்றும், யுகாந்தகாலத்தில் அது எழுந்து உலகங்களை யெரிப்பதென்றும் புராணங்கள் கூறும். அதனையே வடவாமுகாக்கினி யென்பர். கிரணம் கிளர்ந்தன, என முடிக்க.

99. இகலும் வாளர.......

இ - ள்: இகலும் வாள் அரவு உயர்த்தவன் - பகைக்கும் தன்மையையுடைய கொடிய பாம்புக்கொடியையுடைய துரியோதனன், இருந்த தொல்பதியில் - அரசு வீற்றிருக்கும் பழமையான அஸ்தினாபுரத்தில், அகிலநாயகன் ஒருதனி கடந்த ஆறு அறிந்து - எல்லார்க்கும் தலைவனான கிருட்டிணன் தனிமையாகத் தூதுவந்த விதத்தையுணர்ந்து, மகரவாரிதி அகன்று மா மருங்குற அணைந்த - சுறா மீன்களையுடைய கடலினின்று நீங்கி (கண்ணனின்) சிறப்புடைய பக்கத்திலே பொருந்த வந்த, திகிரிபோல - சக்கராயுதம்போல, வந்துகீழ்த்திசையிலெழுந்தனன் இரவி - சூரியன் கிழக்குத்திசையில் உதித்து வந்தான்.

சூரியன் உதித்தமை, கிருட்டிணன் தனிமையாகத் தூதுவந்தானாகையால் அவனுக் குதவிக்குத் திருப்பாற்கடலிலிருந்து வந்த சக்கராயுதம்போன்றிருந்தது, என்பது.

100. சோதி வானநதி..........

இ - ள்: சோதி வானம் நதி மைந்தனும் - ஒளியையுடைய ஆகாய கங்கையின் குமாரனான பீஷ்மனும், பழைய சுருதியால் உயர் துரோணனும் - அநாதியான வேத சாஸ்திரங்களில் வல்ல துரோணனும், ஆதியாக உயிரினும் வியப்புற அடுத்த மன்னவர் அநேகரும் - முதலிலிருந்தே (துரியோதனன்) தன் உயிரினும் மேலாக வைத்திருந்த நண்பராகிய அரசர்கள் அநேகரும், நீதி ஆறுவகை ஐந்துபத்தொடு அறுபத்தொராயிரவர் நிருபமும் - முறைமையுடைய மூன்றுலக்ஷத்து அறுபத்தொராயிரம் அரசர்களும், தீதிலாத திறல் - குற்றமற்ற வலிமையையுடைய, அக்குரோணி பதினொன்று பெற்ற மிகுசேனையும் - பதினொரு அக்குரோணி சேனைகளும்.

பீஷ்மர் துரோணர் நண்பர்களாகிய அரசர்கள், திறை கொடுக்க வந்த அரசர்கள், சேனைகள், (சூழ்ந்துநிற்க துரியோதனன் கொலு வீற்றிருந்தான்) என்பது. ஆறுவகை ஐந்து பத்தொடு அறுபத்தொராயிரவர் - $(6 \times 50 + 61)\ 1000 = 3{,}61{,}000$. அக்குரோணி - இரண்டு லக்ஷத்துப் பதினெண்ணாயிரத் தெழுநூறு.

101. தொக்க வெண்கவரி.........

இ - ள்: தொக்க வெண் கவரி - தொதியாகவுள்ள வெண் சாமரங்களும், ஆலவட்டநிரை - வரிசையாகவுள்ள ஆலவட்டங்களும், சொட்டை - வளை தடிகளும், வாள் - வாளாயுதங்களும், பரிசை - கேடகங்களும், இவை கொண்டு உலாவி வரு கன்னி மங்கையர்கள் அனைவரும் - இவற்றைக்கொண்டு ஒழுங்காக வருகின்ற கன்னிப் பெண்கள் பலரும், மிக்க வேதியர்கள் - பல வேதமோதும் அந்தணர்களும், வல்ல பல்கலை விதத்திலுள்ளவர்கள் - அநேக சாஸ்திரங்களில் வல்ல பண்டித வகையினர்களும், யாவரும் - மற்றும் பலரும், தக்கதம்பியரும் - தகுந்த தம்பிமார்களும், வந்து சூழ - தன்னைச் சுற்றிலுமிருக்க, உயர் தரணிமேய் நிருபர்தம் பிரான் - சிறந்த பூமியிலுள்ள அரசர்களுக்கெல்லாம் தலைவனான துரியோதனன்.

துரியோதனன் கொலுவீற்றிருந்த அணிவகைகள் கூறப்பட்டன. இது அடுத்த கவியுடன் தொடரும். களாசி - படிக்கம், களாஞ்சி என்பதுமாம். பரிசை - மறைக்கும் திரை.

102. நிரைகதிர்க் கனக.........

இ - ள்: நிரைகதிர் கனக நீள்சுவர் - தொகுதியாக ஒளியையுடைய பொன்மயமான நீண்ட சுவர்களின்மேல், பவள உத்திரத்திடை - பவளத்தினால் செய்யப்பட்ட உத்திரத்தினிடையே, நிரைத்த ஒள் பருமணிக்கிரண பற்பராக வயிரத் துலாமிசை பரப்பி - வரிசையாகவுள்ள ஒளிபொருந்திய பெரிய மாணிக்கம் பற்பராகம் வயிரமென்ற இரத்தினங்களாலான வரிச்சல்களை மேலே பரப்பி, வெண்தரளவர்க்கம் வயிடூரியம் புதிய கோமளப் பலகை தைத்து - வெண்மையான முத்தின் வகை வயிடூரியம் ஆகியவற்றால் செய்த புதிய அழகான பலகை வைத்துத் தைத்து, மா மரகதத்தின் ஒருகோடி தூண்நிரை அமைத்த - சிறந்த மரகத ரத்தினத்தினாலாய ஒருகோடி தூண்களை வரிசையாக அமைக்கப்பட்டுள்ள, மண்டபம் மருங்கு - மண்டபத்தினிடத்திலே. (அரோ-அசை)

பொன்னாலும் நவரத்தினத்தினாலும் அமைந்துள்ள மண்டபம், என்பது. கனகம், பவளம், மணி பற்பராகம், வயிரம், தரளம், வயிடூரியம், மரகதம் என்ற வகைகளைக் காண்க.



103 முட்ட நித்தில.........

இ : ள் : முட்ட நித்தில நிரைத்த பந்தரின் - மிக நெருங்கும்படி முத்துக்களை வரிசையாகக் கோத்து அமைக்கப்பட்ட பந்தரில், நகைத்த சீர் அரி முகத்தகால் - சிரித்த பாவனையிலுள்ள சிங்கத்தின் முகத்தையுடைய கால்களையுடையதும், வட்ட மெத்தை கொடு அமைத்த பீடமிசை - வட்டமான மெத்தையையுடையதுமான பீடத்தின்மேல், வாசவன் கொல் என வைகினான் - தேவேந்திரன் தானோ என்னும்படி வீற்றிருந்தான் (துரியோதனன்), பட்டவர்த்தனரும் மகுடவர்த்தனரும் வந்து சேவடி பணிந்தபின் - பட்டந்தரித்த அரசர்களும் மகுடந்தரித்த அரசர்களும் ஒழுங்காக வந்து சிவந்த பாதங்களை வணங்கிய பின்னர், இட்ட பொற்றவிசின் முறைமையாலினிது இருக்க என்று அவரை ஏவியே - அவரவர்களுக்கு ஒழுங்காக இடப்பட்ட இருக்கைகளில் மகிழ்ந்திருக்குமாறு அவர்களைப் பணித்து,

துரியோதனன் சிங்காசனத்தில் வீற்றிருந்து மற்றைய அரசர்களையும் உட்காரும்படி பணித்தான், என்பது. வைகினான் - முற்றும். ஏவி - என்ற எச்சத்தின் தொடர் அடுத்த கவியில் வரும்.

104. காவன் மன்னவர்..........

இ - ள்: முறைமை மாறினான் - (பாண்டவர் விஷயத்தில்) நீதி தவறினவனான துரியோதனன், காவல் மன்னவர் முகங்கள் தோறும் இரு கண் பரப்பி - இராச்சியங்களை ஆளுகின்ற அரசர்களின் முகங்களையெல்லாம் தனது இரு கண்களாலும் பார்த்து, அமர் கருதுவோர் ஏவலின்கண் வரு தூதனும் இடையன் - போரை விரும்பும் பாண்டவர்களது கட்டளையினால் வந்த தூதனாகிய இடைக்குலத்தவன், இன்று நம் அவையில் எய்தினால் - இன்றைக்கு நமது சபையில் வந்தால், ஓவல் இன்றி எதிர் சென்று கண்டு தொழுது உறவு கூறில் - (உங்களில் யாராவது) சும்மா இராமல் அவனெதிரில் போய்க் கண்டு வணங்கி உறவு முறை கொண்டாடினால், இனி உங்களூர் தீ வலம்செய அடர்ப்பன் என்று நனி சீறினான் - இனிமேல் உங்கள் ஊரையெல்லாம் தீயானது சூழும்படி கொளுத்திவிடுவேன் என்று மிகவும் சீற்றத்தோடு கூறினான்.

கிருஷ்ணனை வரவேற்பவர்கள் ஊர்களைத் தீக்கிரையாக்கி விடுவதாகத் துரியோதனன் எச்சரிக்கை செய்தான் என்பது. இடையன் - இடையர் குலத்திற் பிறந்த கண்ணன். முறைமை மாறினான் சீறினான், என முடிக்க.

105. இந்த வண்ணமுரை.........

இ - ள்: இந்த வண்ணம் உரை செய்து - இங்ஙனமாக கூறிவிட்டு, இராசராசனும் மன்னரும் இருக்கவே - அரசர்க்கரசனான துரி

யோதனனும் மற்றும் அரசர்களும் இருக்கையில், தந்த வண்ணனுடன் வந்த அண்ணல் - யானைத் தந்தம் போன்ற வெண்ணிறமான பலராமனுடன் பிறந்தவனாகிய கண்ணன், ஒளி தங்கு கண் துயில் உணர்ந்த பின் - பிரகாசம் பொருந்திய கண்கள் நித்திரையை நீங்கியபின்னர், கந்தம் வண்ணம் மலர் கொண்டு கைதொழுது காலையிற் பல கடன் கழித்து - வாசனையையும் அழகையுமுடைய பூக்களைக் கொண்டு கை கூப்பி வணங்கிக் காலையிற் செய்யவேண்டிய பல கடமைகளையும் கழித்து விட்டு, இந்த வண்ணம் முன் இருந்த பேரவையில் ஏயினான் இசை கொள் வேயினான் - இப்படியாக முன்னர் (துரியோதனன் முதலியோர் இருந்த) பெரிய சபையிலே போனான் புகழ்பெற்ற புல்லாங்குழலையுடைய கண்ணன்.

கிருட்டிணன் துயிலெழுந்து காலைக்கடன்களை முடித்துக்கொண்டு துரியோதனனிருந்த சபைக்குப் போனான், என்பது. யாராயிருந்தாலும் மலர் கொண்டு சூரியனை வழிபட்டுக் காலைக் கடன் கழிப்பது மரபு. வேயினான் ஏயினான், என முடிக்க.

106. துன்னு கங்கை.........

இ - ள்: துன்னுகங்கை மகனும் - அங்கிருந்த பீஷ்மனும், துரோணனொடு சுதனும் - துரோணனும் அவன் மகன் அசுவத்தாமனும், நீதி புனை விதுரனும் - நீதி முறைமையறிந்த விதுரனும், மன்னர் மன்னனையொழிந்த மன்னவரும் - சக்கரவத்தியாகிய துரியோதனனைத் தவிர்ந்த மற்றைய சகல அரசர்களும், வந்து சேவடி வணங்கினார் - எதிர் சென்று கிருட்டிணனின் செவ்விய பாதங்களை வணங்கினார், கன்னனும் தலை கவிழ்ந்திருந்தனன் - கன்னன் தலையைக் கவிழ்த்துக்கொண்டிருந்தான் சகுனி உளம் அழன்று கருதினான் - சகுனி மனம் புழுங்கி யெரிந்துகொண்டிருந்தான், முன்னம் நின்றவர்கள் இட்ட பீடமிசை மொய் துழாய் முகிலும் எய்தினான் - எதிரில் நின்றவர்கள் கொடுத்த ஆசனத்தின்மேல் நெருங்கிய துளசிமாலை யணிந்த முகில் போன்ற கருநிறத்தையுடைய கிருட்டிணன் உட்கார்ந்தான்.

துரியோதனன் கட்டளைக்கு மாறாக அரசர்களெல்லோரும் கண்ணன் வந்தவுடன் வரவேற்றனர்; கிருட்டிணனும் அங்கு போடப்பட்ட ஒரு ஆசனத்தில் உட்கார்ந்தான், என்பது. நீதி புனை விதுரன் - தர்மத்தையே ஆபரணமாகப் பூண்ட விதுரன். பின்னர் துரியோதனன் அபிப்பிராயத்தை எதிர்த்துப் பேசிவிட்டு வில் முறித்தெறிந்து சத்தியஞ் செய்வதைக் கவனிக்க.

107. முன்னகங்குடை.........

இ - ள்: முன் நகம் குடை கவித்த காளமுகில் - முன்னொரு காலத்தில் மலையை (கோர்வர்த்தனகிரியை) குடையாகப் பிடித்த கரிய



மேகம்போன்ற (திருமேனியையுடைய) கண்ணபிரான், முன் இருந்த பின் - முன்னே வீற்றிருந்த பின்னர், பன்னகந்தனை யுயர்த்த கோவும் - பாமபுக்கொடியையுடைய அரசனாகிய துரியோதனனும், முகம்கொடாது - கவனிக்காது, நென்னலிடை இந்த மாநகரில் எய்தியும் - நேற்றைப் பொழுதிலே இந்தப் பெரிய நகரத்தில் வந்து சேர்ந்தும், என் அகம் தனை ஒழித்து - எனது மாளிகைக்கு வராது, பொன் அகம் கொள்புய விதுரன் இல்லிடை - பொன்னாபரணங்களை யணிந்த தோள்களையுடைய விதுரன் வீட்டிலே, புகுந்த தென்கொல் எனா உரைபகர - நீ போன காரணமென்ன என்று கேட்க, மாலும் எதிர் பகருவான் - கிருட்டிணனும் பதில் சொல்வான்.

துரியோதனன் கிருட்டிணனைப் பார்த்து, தனது மாளிகைக்கு வராது விதுரன் மாளிகைக்குப் போன காரணத்தை வினவினான். அதற்கு கிருட்டிணன் விடைகூறுவான், என்பது. ‘முகம் கொடாது’ என்பது ஒரு வழக்குச் சொல்.

108. என்னி னின்னிலொரு.........

இ - ள்: என் இல் நின் இல் ஒருபேதம் இல்லை - என்வீடென்றும் உன் வீடென்றும் எனக்கு ஒரு வித்தியாசமுமில்லை, இது என் இல் - இந்த உனது வீடு எனது வீடாயிருந்தாலும், நின் இல் அது எனினும் - எனது (துவாரகை) வீடு உனதாயிருந்தாலும், மின்னின் மின் இலகு விறல் நெடும்படை விதுரன் வந்து எதிர் விளம்பினான் - மின்னலைக் காட்டிலும் மிகுதியாக ஒளிபொருந்திய வெற்றியைத்தரும் பெரிய ஆயுதத்தையுடைய விதுரன் எதிரேவந்து பேசினான், உன்னில் இன்னம் உளது ஒன்று - ஆலோசித்துப் பார்த்தால் இன்னும் ஒரு காரணம் உண்டு, பஞ்சவர் உரைக்க வந்த ஒரு தூதன் யான் - பாண்டவர்களுக்காக வந்த ஒரு தூதுவன் யான், நின் இல் இன் அடிசில் உண்டு நின்னுடன் வெறுக்க எண்ணுவது நீதியோ - உனது வீட்டில் இனிய உணவை யருந்திவிட்டு உன்னைப் பின்னர் வெறுக்கக் கருதுவது நியாயமாகாது.

யார் வீடாயிருந்தாலும் எனக்குச்சரிதான், ஆனால் விதுரன் உனக்கு முன்னரே என்னை எதிர்கொண்டான்; அன்றியும் பாண்டவர்க்காகத் தூதுவந்த யான் உன் வீட்டில் உணவருந்திவிட்டுப் பின்னர் ஒருவேளை உன்னை வெறுக்கவேண்டி வந்தால் அது தருமமாகாது, என்பது. உண்ட வீட்டுக்கு இரண்டகஞ் செய்யலாகாது’ என்பது முதுமொழி.

109. அரவமல்கிய பதாகையாய்.........

இ - ள்: அரவம் மல்கிய பதாகையாய் - பாம்பின் படம்பொருந்திய கொடியை யுடையவனே, மதி அமைச்சராய் அரசு அழிப்பினும் -

விவேகமுடைய மந்திரிகளாயிருந்துகொண்டும் அரசனுடைய ஆட்சியைக் கெடுத்தாலும், குரவர் நல்லுரை மறுக்கினும் - பெரியோர்களது உபதேசத்தைத் தட்டி நடந்தாலும், பிறர் புரிந்த நன்றியது கொல்லினும் - பிறர் செய்த செய்ந் நன்றியை மறந்தாலும், ஒருவர் வாழ் மனையில் உண்டு பின்னும் அவருடன் அழன்று பொர உன்னிலும் - ஒருவருடைய வீட்டிலே உணவருந்திவிட்டுப் பின் அவரோடு பகைத்துச் சண்டை செய்ய நினைத்தாலும், இவர்களே - இத்தகையவர்கள், இரவி உள்ளளவும் மதியம் உள்ளளவும் நரகம் எய்துவார் - சூரிய சந்திரர் உள்ளவரையிலும் நரகத்தில் சேர்ந்து துன்பப்படுவர்.

அரசருக்குக் கேடு நினைத்த மந்திரி, பெரியோர் வாக்கு மறுத்தோர், செய்ந்நன்றி மறந்தவர், உண்ட வீட்டுக்கு இரண்டகம் நினைத்தவர் - ஆகிய நால்வகையினரும் நரகத்தில் வீழ்வர், என்பது. இவர்களே எய்துவார், என முடிக்க. இதனால் கிருட்டிணன் தான் அப் பாவங்களினிருந்து விலகியதாயும், துரியோதனன் சகுனி முதலியோர்தான், பீடிக்கப்பட்டதாயும் குறிப்பிடுவதை, இவர்களே என்ற தேற்ற ஏகாரத்தாலறிக.

110\. சீதநாண்மலர்........

இ - ள்: சீத நாண்மலர் மடந்தை கேள்வன் - குளிர்ச்சியான தாமரைப் பூவிலிருக்கும் இலக்குமியின் கணவனாகிய கண்ணபிரான், இவை தெரிய செப்பவும் - இவ்வார்த்தைகளை விளக்கமாக எடுத்துரைக்கவும், மன்னர் மன்னன் - அரசர்க்கரசனாகிய துரியோதனன். ஒப்பிலாத நாயகன் முகத்தில் வைத்த இரு நயனமாகி - தனக்குவமையில்லாத தேவர்களுக்குத் தலைவனான கிருட்டிணனது முகத்தில் தனது இரு கண்களையும் (பார்வை) செலுத்தி, மிக நகை செயா - (இகழ்ச்சியாக) மிகச் சிரித்து, தூதன் ஆகி வருதன்மை சொல்லுக என - நீ தூதனாக வந்த காரியத்தைச் சொல் என்று கேட்க, வேத நாறு மலர் உந்தி வண் துளபம் விரைசெய் தாரவனும் - வேதங்கள் பரிமளிக்கின்ற உந்தித் தாமரை மலரையும் அழகிய துளசி மலரையும் வாசனையுடைய மாலையையும் அணிந்த கண்ணன், உரைசெய்வான் - அதற்கு விடை கூறுவான்.

துரியோதனன் நகைத்து, நீ தூதுவந்த காரணம் யாது என்று வினவ, கிருஷ்ணன் சொல்லுவான், என்பது. திருமாலின் உந்திக் கமலத்தில் பிரமா இருந்து வேதத்தை ஓதிக்கொண்டிருப்பதால் 'வேதம் நாறும்' எனப்பட்டது. கேள்வன் செப்பவும் மன்னன் சொன்னபின் தாரவன் உரைசெய்வான் என முடிக்க.

111\. சூதினா லரசிழந்து..........

இ - ள்: செகத்தினிற் கோதிலாத குருகுல மகீப - இப்பூமியில் குற்றமற்ற குருகுலத்திலுதித்த அரசனே, நின் துணைவர் சூதினால் அரசிழந்து - உனது சகோதரர்களாகிய பாண்டவர்கள் சூதாட்டத்தினால் அரசுரிமையிழந்து, சொன்ன சொல்லும் வழுவாது போய் - நீ கட்டளையிட்டபடி தவறாது சென்று, ஏதிலார்கள் என - ஒரு துணையும் இல்லாதவராய், நொந்து தண்ணிழல் இலாத கானினிடை எய்தியும் - வருந்தி குளிர்ச்சியான நிழலில்லாத காட்டிலே சேர்ந்தும், நீதிலாவகை குறித்த நாள் பல கழித்து வந்தனர் - தம்மேற் குறைவிலாது நீ குறித்த நாட்களைக் கழித்துத் திரும்பி வந்திருக்கின்றனர். (ஆகையால்) அவர் உரிமை நண்பொடு கொடுத்தியே - அவர்களின் அரசுரிமையைச் சமாதானத்தோடு திருப்பிக் கொடுத்துவிடு.

பாண்டவர்கள் வனவாசமும் அஞ்ஞாதவாசமும் கழித்துத் திரும்பி வந்தனர். அவர்களின் அரசுரிமையைக் கொடு, என்பது. துணைவர் வந்தனர் மகீப கொடுத்தி, என முடிக்க.

112\. சொல்லவா வுரக........

இ - ள்: சொல் அவாவு உரக துவச - புகழையே விரும்புகின்ற பாம்புக் கொடியை யுடையவனே, நீ நின் உரிய துணைவர் தங்களை அழைத்து - நீ உனது சொந்தமான சகோதரர்களை வரவழைத்து, வல்ல ஆறு சில நாடு அளித்து - தக்கபடி சில நாடுகளைக் கொடுத்து, அவர்கள் தம்முடன் கெழுமி - அவர்களோடு இணக்கம் பூண்டு, வாழ்தியேல் - வாழ்வாயானால், நல்ல வாய்மை நிலை உடையை என்று - சிறந்த சத்திய வேந்தன் என்று, அரசர் நண்புகொண்டு நாள்தோறும் புகழ்வர் - அரசர்கள் உன்னை விரும்பி எப்பொழுதும் புகழ்ந்து பேசுவர் அல்லவாம் என மறுத்தியேல் - அங்ஙனம் கொடாது மறுப்பாயானால், அறமும் ஆண்மையும் புகழும் அல்லவே - இது தருமமும் ஆண்மகனுக்குரிய அழகும் கீர்த்தியும் ஆகாது.

பாண்டவர்களை யழைத்துச் சில நாடு கொடு; அல்லாவிடில் இது உனக்குத் தருமமாகாது, என்பது. வல்லவாறு - நீதிக்குத் தக்கபடி.

113\. என்று கேசவ னியம்ப..........

இ - ள்: என்று கேசவ னியம்ப - என்று இங்ஙனமாக கண்ணன் கூறியதும், அங்கு எதிர் இராசராசனும் இயம்புவான் - அப்போது அதற்கு மொழியாக அரசர்க்கரசனான துரியோதனன் கூறுகின்றான், அன்று சூது பொருது உரிமை யாவையும் இழந்து போயினர்கள் ஐவரும் - அக்காலத்திற் சூதாடித் தமது உரிமைகள் எல்லாவற்றையும் இழந்து காட்டுக்குப் போனார்கள் பாண்டவர்கள், இன்று நீ விரகின் மீளவுங் கவர எண்ணின் - இப்பொழுது நீ தந்திரமாகத் திரும்பவும் பறித்துக்கொள்ள எண்ணினால், நான் அவரில் எளியனோ - நான்

அவர்களைக் காட்டிலும் வலிமையிற் குறைந்தவனே, இன்னமும் அவர் கானில் சென்று திரிவது உறுதி - மீளவும் அவர்கள் காட்டுக்குப் போய் அலைந்து திரிவது திண்ணம், என்று நனி சீறியே - என்று அவன் மிகவும் கோபித்து (கூறினான்).

பாண்டவர்களுக்காகத் தந்திரமாக நீ வந்து அரசுபெற்றுப்போகப் பார்க்கிறாய்; நான் அவர்களிலும் வலிமையிற் குறைந்தவனல்ல, மீண்டும் காட்டுக்குப் போகச் செய்கிறேன் பார், என்பது. விரகு - தந்திரம் இராசராசன் சீறியே இயம்புவான், என முடிக்க.

114. நீ வெறுக்கிலெ னிருந்த.........

இ - ள்: நீ வெறுக்கிலென் - நீ என்னை வெறுத்தாலென்ன, இருந்த மன்னவர் திகைக்கில் என் - இங்கு இருக்கப்பட்ட அரசர்கள் ஆச்சரியப்பட்டாலென்ன, பல நினைக்கிலென் - எல்லோரும் பலவாறு எண்ணினாலென்ன, போய் நகைக்கிலென் - இங்கிருந்து போனபின்னர் (மறைவாக) இழித்து நகைத்தாலுமென்ன, உரைத்த உண்மை மொழி பொய்த்தது என்று அமரர் புகலின் என் - நான் சொன்ன சொல் தவறிவிட்டேனென்று தேவர்கள் சொன்னாலுமென்ன, வேய்மலர்த் தொடையல் ஐவர் என்னுடன் மிகைத்து வெஞ்சமர் விளைக்கிலென் - பூமாலையணிந்த பாண்டவர்கள் என்னை வெறுத்துக் கொடுமையான போரைச் செய்தாலுமென்ன, ஈ இருக்கும் இடம் எனினும் இப்புவியில் யான் அவர்க்கு அரசு இனிக்கொடேன் - ஒரு ஈ இருக்கும் இடந்தானும் இவ்வுலகத்தில் நான் அவர்களுக்கு அரசுரிமையாக இனிமேல் கொடுக்கமாட்டேன்.

யாரென்ன சொன்னாலும் ஒரு ஈ இருக்குமிடமாவது பாண்டவர்களுக்குக் கொடுக்கமாட்டேன், என்பது.

115. கார்வழங் குருமென.........

இ - ள்: கண்ணிலான் மதலை - குருடனாகிய திருதாட்டிரனது மகன் துரியோதனன், கார்வழங்கு உரும் எனச் சினத்தினொடு கழறவும் - மேகத்திலிருந்து தோன்றும் இடியேறுபோலக் கர்ச்சித்துச் சொல்லவும், இவ்வுலகு எலாம் உதவும் உந்தியான் - இந்த உலகம் யாவையும் படைத்த (பிரமா வைகும்) நாபிக்கமலத்தையுடைய கண்ணபிரான், தார் வழங்கு தடமார்ப மாலை - விளங்குகின்ற அகன்ற மார்பையுடைய துரியோதனனே, பார் வழங்க நினைவில்லையேல் அவனி பாதியாயினும் வழங்குவாயென்ன - (அவர்களுக்குரிய) இராச்சியத்தைக் கொடுக்க விருப்பமில்லையேல் அவ்விராச்சியததில் பாதியையாகுதல் கொடு என்று கேட்க, அதுதானும் மன்னவன் மறுக்க - அதைத்தானும் துரியோத



னன் கொடுக்க மறுக்க, ஐந்தூர் வழங்குக என உற்று இரந்தனன் - ஐந்து ஊராவது கொடு என்று தாழ்மையோடு வேண்டினான்.

பாண்டவர்கள் இராச்சியத்தைக் கொடுக்க விருப்பமில்லையேல் அதில் பாதியாகுதல் கொடென்றான் கண்ணன்; துரியோதனன் மறுக்க, ஐந்து ஊராவது கொடு என்று பணிவாகக் கேட்டான், என்பது. துரியோதனன் கொடுமையைக் காட்ட 'உருமெனக் கழற' என்றும் கிருட்டிணன் பெருமையைக் குறிக்க 'உற்றிரந்தனன்' எனவும் கூறியதைக்காண்க. மதலை கழற, உந்தியான் என்ன, மன்னவன் மறுக்க (உந்தியான்) இரந்தனன்; என முடிக்க.

116. மாடளிக்குல.........

இ - ள்: மாடு அளிக்குலம் நெருங்கு பைந்துளப மாலையாய் - பக்கங்களிலே வண்டுகளின் கூட்டம் மொய்க்கின்ற பசிய துளப மாலையை அணிந்தவனே, மகர வேலைசூழ் நாடு அளித்திடவும் - சுறா மீன்கள் நிறைந்த சமுத்திரம் சூழ்ந்த நாடு - (அவர்களுக்குக்) கொடுக்கவும், பேர் உடைய நகர் அளித்திடவும் வேண்டுமோ - பெயர் பெற்ற நகரங்களைக் கொடுக்கவும் வேண்டுமோ, காடளிக்க அதனிடை திரிந்து - காட்டை வசிப்பதற்குக் கொடுக்க அதிலே அலைந்து திரிந்து, உறைகரந்து போயினர்கள் - தம்மை மறைத்து வசிக்கப்போனவர்கள், காணவோர் வீடளிக்கினும் வெறுப்பரோ - இப்போது பார்க்கும்படியாக ஒரு வீடுதானும் கொடுத்தால் வேண்டாமென்று சொல்வார்களோ?, இதனை விடுக என்று எதிர் விளம்பினான் - இந்த வீண் வார்த்தையை விடு என்று (துரியோதனன்) மறுமொழி கூறினான்.

'அவர்களுக்கு நாடும் நகருமா? காட்டிலே வசித்தவர்களுக்கு ஒரு வீடு கிடைத்தால் வேண்டாமென்பார்களா? உன் வார்த்தை இங்கு செல்லாது' என்று துரியோதனன் இழித்துக் கூறினான், என்பது. கரந்துறைதல் - அஞ்ஞாதவாசம்.

117. தந்தை காதலுறு.........

இ - ள்: தந்தை காதலுறு தன்மை கண்டு - தனது தந்தையானவன் ஒரு பெண்ணைக் காதலித்தமையைப் பார்த்து, இளையதாய் பயந்த இரு தம்பியர்க்கு இந்தவாழ்வும் அரசும் கொடுத்தவனும் - தனது சிற்றன்னைக்குப் பிறந்த தம்பிமார்க்கு இவ்வுலக வாழ்க்கையையும் (பிறப்பிற்குக் காரணமாக அவர்கள் தாயை மணஞ்செய்துவைத்தும்) அரசுரிமையையும் கொடுத்தவனும், நின்குலத் தொருவன் இங்குளான் - உனது குலத்திலே பிறந்தவனுமாகிய பீஷ்மன் இங்கிருக்கிறான். மாநிலம் அனைத்தினுக்கும் முந்த உரிய அரசருக்கு - இப்பூமி முழுவதுக்கும் பழமையாகவே

உரிமையுடைய பாண்டவர்க்கு, நீ ஐந்து மாநகரும் கொடாதொழியின் - நீ ஐந்து ஊர்களையாவது கொடுக்க மறுத்தால், எனதாகு முன தரசியல் - உன்னுடைய இராச்சிய பரிபாலனம் என்ன நீதியுடையதாகும்?

பாண்டவர்களுக்கு இவ்வுலகமே புராதனமாக உரிமையானது; அப்படியிருக்க நீ ஐந்து ஊர்களையாவது அவர்க்குக் கொடுக்க மறுக்கிறாய்; உனது குலத்திற்கடாது இது; உன்குலத்து பீஷ்மன் பெருந்தன்மையை யாவது நினைத்துப்பார்; அவனும் சாகவில்லை. இதோ உன் முன்னிலையில் இருக்கிறான்; உனது அரசியல் நீதியற்றது என்பது. சந்தனு கங்கையை மணந்து பெற்ற பிள்ளை பீஷ்மன். பின்னர் சந்தனு, பரிமளகந்தி என்பவளைக் காதலிக்க, அவள் தந்தை தன் மகளைக் கொடுத்தால் அவளுக்குப் பிறக்கும் பிள்ளைக்கரசுரிமை கிடையாது முதல் மனைவியின் பிள்ளை பீஷ்மனை யடையுமென வறிந்து மறுத்தான். இதையறிந்த பீஷ்மன் தனதுரிமையைப் பரிமளகந்திக்குப் பிறக்கும் பிள்ளைகளுக்குத் தானஞ்செய்து கொடுத்து, தனது தந்தை சந்தனுவுக்குப் பரிமளகந்தியை மணஞ்செய்து வைத்தான் என்பது வரலாறு.

118. ஒருகுலத்தினி லிரண்டு ..........

இ - ள்: ஒரு குலத்தினில் இரண்டு மன்னவர் உடன்பிறந்து உரிமை எய்தினால் - ஒரே மரபில் இரண்டு அரசர்கள் ஒக்கத் தோன்றி அரசுரிமை பெற்றால், இரு குலத்தவரும் ஒக்க வாழ்வுறுதல் - அந்த இரண்டு அரசவம்சத்தவரும் ஒன்றாகக்கூடிவாழ்தல், எக்குலத்தினும் இயற்கையே - எந்த மரபிலாவது இயல்பாகும். திசைக்கண் - எட்டுத் திக்குகளிலும், பொருகுலக் களிறுவளர் - போரில் வல்ல சிறந்த யானைகள் சஞ்சரிக்கப் பெற்றவரும், மிகு புகழ் பரப்பி - மிக்க கீர்த்தியைப் பரவச்செய்தவரும், எழுபுவி பெறும் - எழு தீவுகளாலான பூமி முழுவதையுமாண்டவருமான, குருகுலத்தவ ரியற்கை நன்று - குருகுலத்திற் பிறந்த (உனது) இயல்பு நன்றாயிருக்கிறது! என மொழிந்தனன் கரிய கோவலன் - கருமையான மேனியையுடைய கண்ணபிரான் இங்ஙனம் கூறினான்.

நன்றாயிருக்கிறது உன் செய்கை, எனக் கிருஷ்ணன் இழித்துக் கூறினான், என்பது. ஒரு குலத்தில் இரு மன்னவர் தோன்றினால் இருவருக்கும் அரசுரிமையுண்டு. அப்படியிருக்க நீ பாண்டவருக்கு மறுத்தல் விநோதமாயிருக்கிறதே, என்றான், எனக் கொள்க. நன்று - என்பது உபரோதம்; எதிர்மறையாற் கூறுவது.

119. பேரரா வணை துறந்த ..........

இ - ள்: பேர் அரா அணை துறந்த மாயனிவை பேச - பெரிய பாம்பாகிய ஆதிசேஷனின் படுக்கையை நீக்கி (இங்கு எழுந்தருளிய) கண்ணன் இங்ஙனம் கூறியதும், சீராவினை யுயர்த்த கோவும் - சிறந்த பாம்புக் கொடியையுடைய துரியோதனன், பின்னையும் வன்பினொடு விளி தீ எனும்படி உளே செயிர்த்து - மீண்டும் உக்கிரமாகக் கண்கள் நெருப்புப்போலாகும்படி மனத்தினுள் சினந்து, போர் அரா நிருபன் - போர் செய்ய வல்ல பாம்புகளின் தலைவனான ஆதிசேஷன், மணிநெடும் சுடிகை ஆயிரம் கொடு பொறுத்த பார் - மாணிக்கத்தையுடைய நீண்ட ஆயிரம் தலைகளைக் கொண்டு தாங்கப்பட்ட பூமி, வீரர் ஆனவரது அல்லவோ - தைரியமுடைய வீரர்களது பொருளல்லவோ, உரிமை வேண்டுமோ என விளம்பினான் - உரிமையின்படி கொடுப்பது தகுதியோ எனக் கூறினான்.

வல்லவர்கள் ஆள்வதல்லால் உரிமையின்படி ஆள்வதல்லவென்றான், என்பது. சுடிகை - உச்சிக்கொண்டை, பூமியை ஆதிசேஷன் என்ற பெரிய பாம்பு தனது ஆயிரம் தலைகளாலும் தாங்கி நிற்கின்றதென்பது புராண நம்பிக்கை. கோ விளம்பினான் என முடிக்க.

120. பொய் வளர்ந்தமொழி..........

இ - ள்: பொய் வளர்ந்த மொழி மன்னன் மற்று இவை புகன்ற பின்பு - பொய்யே நிறைந்த சொற்களையுடைய துரியோதனன் இங்ஙனம் கூறிய பின்னர், காவலன் - காத்தற்றொழிலையுடைய கண்ணபிரான், ஐவர் தங்கள் அரசங் கொடாமல் - பாண்டவர்க்குரிய அரசுரிமையைக் கொடாது, புயவலியினால் அடல் ஆண்மை கொண்டு எதிர் அடர்த்தியேல் - உனது தோள் வலிமையை மாத்திரம் வைத்துக்கொண்டு மிக்க ஆண்மையோடு (அவர்களை) எதிர்த்து நீ போர் செய்வாயானால், மெய் விளங்கவரும் - உண்மையைத் தீர்த்துவைத்தற்கு, குருநிலத்தினிடை வந்து வெம்சமர் விளைக்க - குருக்ஷேத்திரத்திலே வந்து கொடுமையான யுத்தம் செய்வதற்கு, கை வழங்குக என - கைபோட்டுக் கொடுப்பாயாக என்று, நின்ற தூணிடை யறைந்து இவையுரைக்கும் - அங்கு நாட்டப் பட்டிருந்த ஒரு தூணின்மீது கையால் மோதி இங்ஙனம் கூறினான்.

நீ ஆண்மையோடு யுத்தம் செய்ய ஆயத்தமானால் இதோ கை போட்டுக் கொடு, என ஒரு தூணிற் கையால் அறைந்து நீட்டினான் கிருஷ்ணன், என்பது. சத்தியத்துக்கு அறிகுறியாகக் கையிற் கையால் தட்டுதல் மரபு. மெய் விளங்க - உண்மையைத் தாபிக்க; காவலன் அறைந்து உரைக்கும், என முடிக்க.

121. புன்பிறப் புடைய ..........

இ - ள்: புன் பிறப்புடைய பொதுவர் தங்களொடு - இழிவான பிறப்பாளராகிய இடையரோடு கூடி, புறவில் ஆன் நிரை புரந்திடும் உன் பிறப்பும் - நாட்டின்புறத்தே பசுக் கூட்டங்களை மேய்த்திடும்

உனது குலத்தையும், உரலோடு கோவியர் உன்னைப் பிணித்ததும் நீ மறந்து - இடைச்சியர் உன்னை ஒரு உரலோடு சேர்த்துக் கட்டிவைத்ததையும் நீ மறந்துபோய், மன் பிறப்பில் உயர் குருகுலத்தவர்தம் வாய்மைதானும் - மனிதப் பிறவியி லுயர்ந்த குரு வம்ச அரசர்களுடைய சத்தியத்தையும், ஒரு மாசிலா என்பிறப்பும் உணராமலோ - ஒரு குற்றமுமற்ற எனது பிறப்பின் உயர்வையும் அறியாமலோ, சபையில் இந்த வாசகம் இயம்பினாய் - இந்த அரசசபையிலே இங்ஙனம் (கைபோட்டுத் தரும்படி) கூறினாய்.

இடைக்குலத்திலே பிறந்த நீ அரச குலத்திற் பிறந்த என்னை யுத்தத்திற்குக் கை கொடுக்கும்படி கேட்பது இருந்தவாறென்னே என்பது. கிருஷ்ணன் ஆயர் சேரியில் வளர்ந்ததையும் யசோதையினால் (விஷயத்தனத்துக்காக) உரலோடு சேர்த்துக் கட்டப்பட்டமையும் இங்கு துரியோதனனால் இழிவாக எடுத்தாளப்பட்டன. கோவியர் - கோபி என்ற வடமொழி விகாரம் - இடைப் பெண்கள் என்பதுபொருள். நீ உணராமலோ இயம்பினாய். என முடிக்க.

122. ஏவிலங்கு சிலை..........

இ - ள்: ஏ இலங்கு சிலை ஐவர் வந்து அணுகின் - (அம்புகளை எய்வதிற் சிறந்த விற்களைக் கொண்ட பாண்டவர்கள் வந்து நெருங்கினால், யான் அயர்த்து எளிது இருப்பனோ - நான் சோர்வடைந்து பராமுகமாக இருப்பேனோ, காடகுஞ்சரங்கள் பகைகொண்டகால் - மதயானைகள் எதிர்த்து வ தால், கோவிலங்கு பொர அஞ்சுமோ - விலங்குகளுக்கு வேந்தனாகிய சிங்கம் சண்டைசெய்யப் பயப்படுமோ, அங்கு மலைத்தல் மேவில் - அங்கே யுத்தஞ்செய்ய எண்ணினால், முன் கை அறைய வேண்டும் என்பது நின் மேன்மையோ - முதலில் கைபோட்டுக் கொடுக்க வேண்டும் என்று கேட்டது உனது செருக்கினாலோ, நா விலங்கும் என எண்ணியோ - (அல்லது) எனது சொல் தவறிவிடும் என்ற நினைவோ, மிகவும் நன்று நன்று அரசர் ஞாயம் - அரசர்களது நியாயம் மிகவும் நன்றாயிருக்கிறது!

அரசனாகிய என்னை நீ இங்ஙனம் மதித்தது தகாது, என்பது யானையை எதிர்க்கச் சிங்கம் அஞ்சாதவாறுபோல, பாண்டவரையெதிர்க்க நான் பயமிலேன். இதற்கெல்லாம் முன்னாகவே கைபோட்டுக் கொடுப்பது ஆண்மைக்கிழுக்கு, என்றான். நன்று - இழிவாகக் கூறப்பட்டது. ஞாயம் - நியாயம், உலகவழக்கு.

123. அளிவருங் குழல்........

இ - ள்: ஐவருக்கும் உரியாளை - பாண்டவரைவருக்குமுரியமனைவியான திரௌபதியை, மன்னவையில் அளிவருங் குழல் பிடித்து - அரசசபையிலே அவளுடைய வண்டு மொய்க்கும் கூந்தலிற் பிடித்து, எளிவருந் துகில் நான் உரிந்தபோது - அவளுடைய மானம் கெடும்படி சீலையை அவிழ்த்தபோது, அருகு இருந்து கண்டவர்கள் அல்லவோ - பக்கத்திலிருந்து ஒன்றும் செய்யவியலாது பார்த்துக்கொண்டிருந்தவர்களல்லவா, அளிவரும் புனல் பரிந்து அருந்தி - (காட்டிலே) சிறு துளிகளாக வரும் நீரை ஆர்வத்தோடு குடித்து, இடு சோறு தின்று உயிர் சுமந்து - யாராவது இட்ட சோற்றையுண்டு உயிர் தரித்திருக்கும், தோள் இளி வரும்படி இருந்த - கைகள் இழிவடையும்படி இருந்த, பாவியரும் இன்று மானநிலை யுணர்வரோ - கொடியவர்களும் இப்போது தங்கள் மானத்தைப்பற்றி அறிவார்களோ?

தங்கள் பெண்ணை அவமானஞ் செய்கையில் பார்த்திருந்தவர்கள் இப்பொழுதா மானமறியப்போகிறார்கள், என்பது. காட்டிலே நீர் எந்திப் பருகியும், யாராவது இடும் பிச்சையை எற்று உண்டும் இழிவடைந்த இவர்கள் கைகள் (அப்போது திரௌபதிக்கு வஸ்திராபகரணஞ் செய்தபோது சும்மா இருந்தன) இப்பொழுதா மானத்தைக் காப்பாற்றப் போகின்றன, எனத் துரியோதனன் இழித்துக் கூறியவாறு.

124. அன்னையானவரு .........

இ - ள்: அன்னையானவரும் இருவர் ஆம் - (பாண்டவர்களுக்கு) தாயானவரும் இரண்டுபேர், முதலளித்த தந்தையர்கள் ஐவர் ஆம் - இவர்களுக்குப் பிரதானமாயுள்ள பிதாக்கள் ஐந்துபேர், பின்னை - பிறகும், ஆசைகொடு குருகுலத் துரிமை பெறலாம் - விருப்பங்கொண்டு குருகுலத்தி னுரிமை வேண்டுமாம், ஒரு பிறப்பில் ஓர் மின்னையாம் இவர்கள் ஐவரும் பரிவினொடு தனித்தனி விரும்புவார் - ஒரு பிறவியிலேயே இந்த ஐவரும் அன்போடு தனித்தனி ஒரு பெண்ணைக் காதலிப்பாராம், அவரொடு ஒருகுலத் தரசன் என்பது என்னையாம் - அவர்களோடு சமனொத்து ஒரு குலத்திலே பிறந்த அரசனென்பது (ஒரு குற்றமில்லாத) என்னையாம், அம்ம இவை என்கொலாம் - இவையெல்லாம் என்ன ஆச்சரியம்.

தாய் இரண்டு; தந்தை ஐந்து; மனைவி ஒன்று. இங்ஙனம் இழிவு பெற்ற பாண்டவர்கள் என்னோடு சரிவா ஒருகுலத்தவர் என்று பேசுவது ஆச்சரியமாயிருக்கிறது, என்பது. அன்னையர் இருவர்-குந்தியும் மாத்திரியும்; தந்தையர் ஐவர் - யமன், வாயு, இந்திரன், அசுவினி தேவர்கள் இருவர்.

125. ஞாலமுற்று முடையவன் .........

இ - ள்: ஞாலமுற்று முடையவன் மொழிந்திட - இப்பூமி முழுவதையும் ஆள்பவனாகிய துரியோதனன் இவ்வாறு கூறியதும், வண்

துவரை நாதனும் நகைத்து - அழகிய துவாரகையில் வீற்றிருப்பவனுகிய கிருட்டிணனும் சிரித்து, இனி அவர் கருத்து சால முற்றும் என நினைந்து - இனி அப் பாண்டவர்களது எண்ணம் மிகவும் முடிவுபெறு மென்று நினைத்து, பேர் அவை தணந்து போய் - அரசசபையை விட்டு நீங்கிப் போய், கோலம் உற்ற சிலை விதுரன் வாழ்வு பெறு கோயில் சென்று நனி குறுகினன் - அழகு பொருந்திய வில்லையுடைய விதுரன் வாழ்கின்ற வீட்டிலே சென்று சந்தோஷத்தோடு சேர்ந்தான், சீலம் அற்றவர் சினந்த போதும் ஒரு தீது இலாதவர் செயிர்ப்பரோ - நல்லொழுக்கமற்ற சிறியோர் கோபித்த காலத்தும் ஒழுக்கமுள்ள பெரியார் அதற்காக எதிரில் கோபிப்பாரோ?

துரியோதனன் கூறியதைக் கேட்ட கிருட்டிணன், இனிப் பாண்டவர்கள் கருதியவாறு யுத்தம் முடிக்கலாம் என்று மகிழ்ந்து விதுரன் வீட்டிற்குப் போனுன், என்பது. ஞால முற்று முடையவன் - ஏக சக்கிராதிபதி. நான்காமடி கவியின் நீதிவாக்கியம். கோயில் - அரசர் வாழும் வீடு.

126. கரிந்து மாலை.........

இ - ள்: மாலை கரிந்து சருகாகவும் - தானணிந்திருந்த மாலைகள் கருகி உலர்ந்துபோகவும், புதிய கமல வாள்முகம் வெயர்க்கவும் - அன்றலர்ந்த தாமரை மலர் போன்ற முகமானது வெயர்வை கொள்ளவும், இருந்து கண் இணை சிவக்கவும் - அழகிய இரு கண்கள் சிவப்படையவும், கொடிய செய்ய வாய் இதழ் துடிக்கவும் - கொடுஞ் சொற்களைச் சொல்லும் சிவந்த வாயுதடுகள் துடிக்கவும், நெடி துயிர்த்திடும் இராசராசன் - பெருமூச்சு விடும் துரியோதனன், அவனுக் கிவன் விருந்து செய்த உறவு என் கொல் என்று - அக் கண்ணனுக்கு இவ் விதுரன் உபசாரம் செய்ததற்கு ஏற்பட்டுள்ள சம்பந்தம் யாது என்று, அரசரெதிர் இருந்த பேரவையில் விதுரனை விளம்பினன் - அரசர்கள் பலர் எதிரில் வீற்றிருந்த சபையிலே வைத்து விதுரனை நிந்தித்தான்.

துரியோதனன் மிக வுக்கிரமான கோபங்கொண்டு, கிருட்டிணனை வரவேற் றுபசரிக்க விதுரனுக் கவ்வளவு அதிகாரமோ என்று சினந்தான், என்பது. கோபக் குறிகளின் சாயலை முதலிரண்டு வரிகளிற் காண்க.

127. வன்பினுலவனி.........

இ - ள்: வன்பினுல் அவனி வெளவ என்று கொல் - பலவந்தமாக இராச்சியத்தை(ப் பாண்டவர்) கவர நினைத்தோ, என் மனையில் உண்டியை மறுத்தவன் தன் பதாகினியொடு இனிது அருந்தும் வகை தன் இல்லின் அமுது இயற்றினன் - எனது வீட்டில் உணவருந்த மறுத்த



கண்ணனும் அவனது சேனைகளும் இனிமையாக உண்ணும்படி தனது வீட்டிலே (விதுரன்) இனிமையான நல்ல உணவை அளித்தான், என் பிதாவோடு பிறந்தும் - (இவ்விதுரன்) எனது தந்தையுடன் கூடப் பிறந்தும், இன்றளவும் என் கை ஓதனம் அருந்தியும் - இன்றைத் தினம் வரையும் எனது கையால் கொடுக்கப்பட்ட அன்னத்தை யுண்டும், அன்புதான் உடையன் அல்லன் - என்மீது அன்புதா னில்லாதவனுயினும், என் பகை தனக்கும் உற்ற பகை யல்லனே - எனது பகைவர்கள் அவனுக்கும் பகைவர்களல்லவோ?

விதுரன் எனது நெருங்கிய உறவினன்; தந்தையுடன் கூடப் பிறந்து எனக்குச் சிறிய தந்தையானவன். அன்றியும் என் கையால் இன்றுவரையும் அன்னமுண்டு எனக்கு மிகவும் கடமைப்பட்டிருக்கிறுன்; ஆகையால் இவன், என்மீது அன்பில்லாவிட்டாலும் தனது நன்றியை மறந்து கடமையை மறந்து நடக்கலாமா, என்பது. பாண்டவர்கள் துரியோதனனுக்குப் பகைவராதலால் விதுரனும் அவர்களைப் பகைக்க வேண்டுமென்பது துரியோதனனுக்குக் கடமைப்பட்டுள்ளான் என்றதற்காக என்க. கர்ணன் "துரியோதனன் அன்னத்தைப் புசித்துவிட்டு, 'செஞ்சோற்றுக் கடன் கழிக்க' அவனுக்காக யுத்தம் செய்தே தீருவேன்" என்று குந்தியிடம் கூறுவதைப் பின்னர் காண்க.

120. முதல்விழைந்தொருவ.........

இ - ள்: இயைந்த பொருள் பற்றி - மனமாரக் கொடுத்த பொருளைப் பெற்றுக்கொண்டு, முதல் விழைந்து ஒருவனுடன் இன்புற முயங்கினும் - முதலிலே மிக விருப்பத்தோடு ஒரு புருஷனுடன் கூடி இன்பமனுபவித்தாலும், வேறொருவன் அதிகம் என்ற பொருள் தரின் - வேறொரு புருஷன் அதிகமான பொருளைத் தந்தால், அவனையே ஒழிய அறிவரோ - அப்படி அதிகமாகக் கொடுத்தவனையே தவிர (முன்னவனை) மதிப்பாரோ, பொதுமடந்தையர் தமக்கு மண்ணில் இது புதுமை அல்ல - தாசிகளுக்கு இந்த உலகத்தில் இப்படி நடப்பது ஒரு புதுமையான வழக்கமல்ல (பழமையான இயல்பு), ஆகையால் அவர் புதல்வனும் விதுரன் இன்று அவனொடு உறவு கொண்டது - அப்படிப்பட்ட விலைமாதர் மகனுகிய விதுரன் இன்று கிருட்டிணனுடன் உறவுகொண்டாடிய, ஓர் வியப்பை என்சொலி வெறுப்பதே - ஒரு அதிசயத்தை எங்ஙனம் சொல்லி வெறுப்படைவது?

தாசியின் குணம் அவன் புதல்வனுகிய விதுரனுக்கு முண்டு, என்பது. இதனுல் விதுரனை இழித்துக் கூறினன்.

129. இன்னவா றிவனுரைத்த.........

இ - ள்: இன்னவா றிவன் உரைத்தபோது - இங்ஙனம் துரியோதனன் கூறியவுடன், அவன் எழுந்திருந்து - விதுரன் (கோபத்தோடு)

எழுந்து நின்று, வசை என்னை நீ சொன்ன வாய் - என்னை நீ பழித்துக் கூறிய வாயானது, குருதி சோரா வாள்கொடு துளைத்து - இரத்தம் வடியும்படியாக வாளினால் துளைசெய்து, யான் நின் முடி துணிப்பன் - நான் உனது தலையையும் கொய்துவிட முடியும், (ஆனால் அப்படி நான் செய்யாமல் விடுவதற்குக் காரணமென்னவெனில்) மன்னவா - அரசனே, குருகுலத்திலே ஒருவன் மைந்தனுருயிரை வௌவினானென்ன - குருகுலத்திலுதித்த ஒருவன் தனது புத்திரனுடைய அருமையான உயிரைக் கவர்ந்தான் என்று, வானவர் நகைப்பரே - தேவர்கள் சிரிப்பார்களே, எனை உரைத்த நாவுடன் இருத்தியோ - (அல்லாவிடில்) நீ என்னை இழித்த நாவுடன் உயிர் வாழ்வாயோ?

உன்னை நான் இப்பொழுதே கொன்றுவிடுவேன்; ஆனால் குருகுலத்தில் ஒருவன் தனது மைந்தனைக் கொன்றான் என்று உலகம் பழிக்குமாகையால் விட்டுவைத்தேன், என்பது.

130. ஈண்டவர்க் குதவியாய தூதென .........

இ - ள்: ஈண்டு அவர்க்கு உதவி ஆய - இங்கு அப் பாண்டவர்களுக்குத் துணையான, தூது என இசைப்பவர்க்கு - தூதன் என்று சொல்லப்படுபவனும், உலகம் எங்கணும் நீண்டவற்கு - எல்லா உலகங்களிலும் நீண்டு வளர்ந்த புகழை யுடையவனுமாகிய கிருட்டிணனுக்கு, உதவி ஆயினேன் என - விருந்துபசாரம் செய்தேன் என்று கருதி, நீ எனை அடர்த்தியே - நீ என்னை நிந்தித்து வருத்துகின்றாயே, மாண்டவர்க்கு உதவி ஆய பேர் அறமும் இசையும் ஆண்மையும் வளர்த்திடும் பாண்டவர்க்கு - மாட்சிமை பொருந்தியவர்களும் (இம்மை மறுமைகளில்) உதவும் சிறந்த தருமம், கீர்த்தி, பராக்கிரமம் ஆகியவற்றை வளர்ப்பவர்களுமாகிய பாண்டவர்க்கு, உதவியாகில் - யான் போரிலே உதவி செய்வேனாகில், என்னை முடிமன்னர் ஆனவர் பழிப்பரோ - முடியைத் தரிப்பவர்களாகிய அரசர்கள் என்னை நிந்திப்பார்களோ.

தருமம் குன்றாத பாண்டவர்களுக்கு நான் போரில் உதவிசெய்தால் ஒருவரும் குறைகூறார்; அது நியாயமே, என்பது. நீண்டவன் - புகழால் நீண்டவன்; மாண்டவர் - தகைமையையுடையவர். 'முடிமன்னர் ஆனவர் பழிப்பாரோ' என்பதனால் துரியோதனன் அரசுக்குத் தகாதவன் என்பதை உணர்க.

131. சொல்லிரண்டு புகலே.........

இ - ள்: சொல் இரண்டு புகலேன் - யான் (ஒருவார்த்தையன்றி) இரண்டு வார்த்தை சொல்லமாட்டேன், இனி சமரில் நின்று வெம்கணை தொடேன் - இனிமேல் யுத்தத்தில் நின்று கொடிய அம்பை யார் மேலும் தொடுக்கமாட்டேன், என - என்று சொல்லி, வில் இரண்டினும் உயர்ந்த வில்லதனை - உலகத்திற் சிறந்த இரண்டு விற்கள் என்று சொல்லப்படுவனவாகிய (சிவதநுசு, விஷ்ணுதநுசு) என்பவைகளில் உயர்ந்த விஷ்ணுதநுசை, வேறு இரண்டுபட வெட்டினான் - தனித் தனி இரண்டு துண்டாகும்படி வெட்டி எறிந்தான். மல் இரண்டினையும் இருவராகி முன் மலைந்த காளமுகில் - இரண்டு மல்லர்களையும் (தாமும் பலராமனுமாக) இரண்டுபேராக இருந்து முன்னொருபோது எதிர்த்து அழித்த கரிய மேகம்போன்ற கண்ணபிரான், தன் இல் வந்து இரண்டு தினம் வைகுதற்கு - தனது வீட்டிலே வந்து இரண்டு நாள் தங்கி அருளுதற்கு, உலகில் எண் இலாத தவம் எய்தினான் - அளவற்ற தவப்பேற்றை இவ்வுலகிற்றானே பெற்ற விதுரன்.

இனி ஒரு பக்கத்திலும் நின்று போர் செய்வதில்லை யென்று விதுரன் சபதஞ்செய்து தனது வில்லை வெட்டினான், என்பது. வில் இரண்டு - சிவனுடைய வில்லும், விஷ்ணுவினுடைய வில்லும்; பின்னையது விதுரன் கையில் உண்டென்றவாறு. மல் இரண்டென்பது சாணூரன், முஷ்டிகன் என்னும் இரண்டு மல்லர்களை. இளம்பிராயத்தில் கம்ச சபையில் இவர்கள் இருவரையும் கிருஷ்ண பலராமர்கள் எதிர்த்துக் கொன்றனர் என்பது கதை.

132. அந்த வில்லினை முறித்த..........

இ - ள்: அந்த வில்லினை முறித்த வில்லி - அங்ஙனம் அவ்வில்லை வெட்டியெறிந்த வில் வித்தையிற் சிறந்தவனாகிய விதுரன், தனது ஆலயம் புகுத - தன்னுடைய வீட்டிற்குச் சென்றடைய, காவலர் - சபையிலுள்ள அரசர்கள், அச்சுதன் சந்தம் வில்லும் - விஷ்ணுவின் அழகிய வில்லையும், அரன் வில்லும் ஒப்பது ஒருதாமம் வில்லினை - சிவபெருமானுடைய வில்லினையும் ஒத்த ஒளியையுடைய ஒரு வில்லை, முறிப்பதே - இவன் முறித்தெறிவதா, வில்லியரில் முந்த எண்ணும் வில் உடைய விசயன் - வில் வித்தையிற் சிறந்தவர்களில் முதன்மையாக மதிக்கப்படும் காண்டீபத்தை உடைய அருச்சுனன், அமரில் வந்து முடுகினால் - போரிலே வந்து எதிர்த்தானாகில், இனி எதிர் நிற்கும் வில்லி எந்த வில்லி - இனிமேல் அவனை எதிர்த்து நிற்கும் வில்வீரன் எவன், என்று இரங்கினார் - என்று மனம் நொந்தார்கள்.

வில்வித்தையிற் சிறந்த விதுரன் தனது வில்லினை வெட்டிமுறித்தானாகையால் இனிப் போரிலே அருச்சுனனை எதிர்க்க வல்லவர் ஒருவரும் இல்லையென அரசர் வருந்தினர், என்பது. அச்சுதன் சந்தவில்லும் அரன்வில்லும் - முற்கவியிற் கூறிய 'இரண்டு வில்.'

133. கார் அனைத்தும் விடுதாரை.........

இ - ள்: உயர் பிதா மகன் - (இவைகளைக் கவனித்திருந்த) சிறந்தவனாகிய வீடுமன், உள் அழிந்து - மனம் வருந்தி, கார் அனைத்தும் விடு தாரை அன்ன - மேகங்கள் எல்லாம் பொழிகின்ற மழைத் துளிகளையொத்த, பல கணைகள் ஏவி அமர் கருதும் - அநேக அம்புகளைச் செலுத்திப் போரையே விரும்பும், வில் வீரனை பழுது உரைத்த நீ- ஒப்பற்ற வில்வித்தையிற் சிறந்தவனாகிய விதுரனை இழித்துப் பேசிய நீ, பகையை எங்ஙனே வெல்லுவாய் - உனது பகைவர்களை எவ்வாறு வெற்றி கொள்ளுவாய், தனி கொல் - தனியாகவே, பார் அனைத்தும் இனி ஐவர் ஆளும் வகை பண்ணுவித்தனை - இனிமேல் பாண்டவர்களே உலகம் முழுவதையும் ஆளும்படியாகச் செய்துவிட்டாய், அழிந்தது உன் பேர் அனைத்தும் என சில பேசினான் - உனது புகழ் முழுவதும் அழிந்துவிட்டது என்று இவ்வாறு சில வார்த்தைகளைக் கூறினான்.

விதுரனது வில்லை முறிக்கச்செய்த நீயே அச்செய்கையால் உனக்கு அழிவு தேடிக்கொண்டாய் என வீடுமன் கூறினான், என்பது. உன் பேர் அனைத்தும் என்பதனால் உனது குடும்பமே எனவும் பொருள்கொள்ளலாம்.

134. பிதாமகன் பரிவுடன்.........

இ - ள்: பிதா மகன் பரிவுடன் முனிந்து - வீடுமன் அன்புடனே கோபித்து, சில பேச - இவ்வாறு சில வார்த்தைகளைச் சொல்ல, நாசமுறு பேரனும் விதார மொய்ம்பனும் - அழிவை அடைவதற்குரிய அவனது பேரனாகிய போரில் வல்ல துரியோதனனும், விதுரன் அல்லது வில்வல்ல வீரர் பிறர் இல்லையோ - விதுரனைத் தவிர வில் வித்தையில் திறமையுள்ள வீரர் வேறு யாரும் இல்லையோ, உதாரசீலன் உயர் அங்கர் கோன் - கொடையிற் சிறந்தவனாகிய பெருமையுள்ள அங்கதேசத் தலைவன் கர்ணனது, வரி வில் ஒன்றுமே - கட்டமைந்த வில் ஒன்றுதானே, அமரில் ஐவரும் உற்று எழும் பதாதியோடு - போரிலே பாண்டவர்களும் அவர்களுடன் வரும் சேனைகளும், பட - அழியவும், பரணி பாட - பரணி என்னும் பிரபந்தத்தைப் பாடப் பெறவும், மலைந்திட அமையும் - போர் செய்தற்கு போதும்.

விதுரன் இல்லை எனினும் அங்கர்கோனாகிய கர்ணனது வில் ஒன்றே பாண்டவரை எதிர்க்கப் போதுமானது என்றான் துரியோதனன், என்பது. பரணி - தொண்ணூற்றாறுவகைப் பிரபந்தங்களில் ஒன்று. அது போர்முகத்து ஆயிரம் யானைகளைக் கொன்ற வீரனைத் தலைவனாக வைத்துப் பாடுவது.

135. நீ இருக்க.........

இ - ள்: நீ இருக்க - என் பக்கத்தில் வீடுமனாகிய நீ இருக்கவும், நெடு வில் கை ஆசிரியன் அவன் இருக்க - நீண்ட வில்லை ஏந்திய கையை



யுடைய துரோணாசாரியன் இருக்க, நிகர் அற்று அவன் சேய் இருக்க - ஒப்பற்றவனாகிய அவனது குமாரன் அசுவத்தாமன் இருக்கவும், விறல் மன்னர் இப்படி திரண்டு இருக்க - வெற்றியையுடைய அரசர் பலர் இங்கு கூடி இருக்கவும், நீள் வேய் இருக்கும் இதழ் இடையனுக்கு எதிர்சென்று நல்விருந்து செய்தவன் வெறுக்கில் என் - நீண்ட புல்லாங்குழலைப் பொருந்திய அதரத்தையுடைய இடையனாகிய கிருஷ்ணனுக்கு எதிர்கொண்டுபோய் நல்ல விருந்துபசாரம் செய்த விதுரன் வெறுத்தால் என்ன, போய் இருக்கில் என் - என்னை விட்டுத் தனியே போய் இருந்தால் என்ன, சிலை முறிக்கில் என் - வில்லை முறித்து எறிந்தால் என்ன, நம்மொடு மலைந்து எவர் போர் செய்வார் - நம்மொடு எதிர்த்துப் போர் செய்ய வல்லவர் யார்.

வீடுமன் முதலிய நீவிர் எம்மொடு இருக்கும்பொழுது நமக்கு பயமில்லை, என்பது.

136. என்று கூற.........

இ - ள்: என்று கூற - என்று இவ்வாறு துரியோதனன் சொல்லவும், விறல் அங்கர் பூபதியும் - வலிமையையுடைய அங்கதேசத் தாசனாகிய கர்ணனும், யான் இருக்க - யான் இங்கிருக்கும்பொழுது, இகல் விசயனைச் சென்று சீறி உயிர் கொள்ள வல்லவர்கள் யாவர் என்று நனி செப்புவீர் - எதிர்த்துவரும் அருச்சுனனைக் கோபத்தோடு போய்க் கொன்று வரத்தக்க வீரர் யாருளர் என்று நன்றாகச் சொல்லுகின்றீர், கன்றினால் விள எறிந்த கள்வன் இவன் - கன்றைக் கொண்டு விளாமரத்தை வீழ எறிந்த மாயவன் இக்கண்ணன், நின்று தேர் நனி கடாவினும் - தேரில் (சாரதியாக) நின்று நன்றாகச் செலுத்தினாலும், எனது ஆடல் வெம் சிலையின் ஆண்மை - எனது வெற்றியைத் தரவல்ல வில்லின் திறமையை, அன்று போரினிடை காணலாகும் - அன்று போர் செய்யும்போது நீங்கள் காண்பீர்கள்.

அருச்சுனனுக்குக் கிருட்டிணனே நின்று தேர் செலுத்தினாலும் நானிருக்கும்போது அஞ்சேல் என்று கர்ணன் அறைகூவினான், என்பது. கம்சனால் ஏவப்பட்ட கபித்தன் என்ற அசுரன் விளாமரத்தின் வடிவமாய் நின்று கண்ணனைக் கொல்ல விருக்கையில், அங்ஙனமே வத்ஸன் என்ற அசுரனும் ஒரு கன்று வடிவமாய் நிற்க, கிருஷ்ணன் கன்றைக் கொண்டு விளவிலெறிந்து, இருவரையுங் கொன்றான் என்பது கதை. இக்கவியில் 'அங்கர் பூபதியும்' என்ற எழுவாய் அடுத்த கவியில் 'உரைசெய்வான்' என்பதுடன் முற்றும்.

137. அம்பரத்தவ ருடன்று.........

இ - ள்: அம்பரத்தவர் உடன்று சீறினும் - ஆகாயத்திலுள்ள தேவர்கள்தான் பகைத்துக் கோபித்தாலும், ஒரு அம்பிலே அழிவர்

திண்ணம் - ஒரு அம்பிலேயே அழிந்துபோவது நிச்சயம், யான் வெம் பணிப்பகழி எவில் - நான் எனது கொடிய நாகாஸ்திரத்தை விடுத்தேனாயின், ஆவியுடன் மீளுவான் அமரில் விசயனோ - அருச்சுனன் உயிரோடு யுத்தத்தில் பிழைத்திருப்பானோ, இம்பரில் புகல இரு தளத்தினும் எனக்கு நேர் ஒருவர் இல்லையென்று - இவ்வுலகத்திலே சொல்லத்தக்கதாக இருபக்கத்துச் சேனையிலும் எனக்கு நிகரானவர் ஒருவரும் இல்லையென்று, உம்பர் கற்பகமும் நாண வண்மையிலுயர்ந்த வீரன் இவை உரை செய்தான் - தேவர்களின் கற்பக விருக்ஷம்தானும் கொடையில் நாணத்தக்க சிறப்புடைய வீரனாகிய கர்ணன் இங்ஙனம் கூறினான்.

எனது கையிலிருக்கும் நாகாஸ்திரத்திற்கு அருச்சுனன் தப்பமாட்டான், யாராயினும் எனக்கு நிகரில்லையென்றான் கர்ணன், என்பது. அம்பரம் - ஆகாயம்; அம்பரத்தவர் - தேவர்கள். கற்பகவிருக்ஷம் விரும்பியதெல்லாம் தரவல்லது; அதுதானும் கர்ணனது கொடைத் திறனைக் கண்டு நாணும் என்று கூறினர். பணி - பாம்பு, பணிப்பகழி - நாகாஸ்திரம். அருச்சுனன் காண்டவவனத்தை எரித்தபோது அங்கிருந்து தக்ஷகனென்னும் நாகராசனது மனைவி தன் சிறு குழந்தையை எடுத்துக் கொண்டு ஆகாய மார்க்கமாகக் கிளம்ப, அது கண்ட அருச்சுனன் தன் பாணத்தால் அப் பாம்பின் தலையைத் துணிக்க, அதில் வால் மாத்திரம் அறுப்புண்ட நாககுமாரன் பிழைத்தெழுந்து போய் அருச்சுனனை வஞ்சம் தீர்க்கும்பொருட்டு அவன் விரோதியாகிய கர்ணனைச் சேர்ந்ததாகக் கதை. அதுதான் நாகாஸ்திரம், எனப்பட்டது.

138. திசையனைத்தினும்.........

இ - ள்: திசையனைத்தினும் வளைந்த தானவரை - எல்லாத் திக்குகளிலும் வந்து சூழ்ந்துகொண்ட அசுரர்களை, இரவி வந்தது ஒரு திசையின் வாய் நிசையெனப் பொருது - சூரியன் தோற்றிய ஒரு திக்கிலுள்ள இருள் போலாகும்படி எதிர்த்து அழித்து, வானவர்க்கு அரசு அளித்து வந்த விறல் நீர்மையான் - தேவர்களுக்கு அரசைத் திருப்பிப் பெற்றுக் கொடுத்துத் திரும்பிய வெற்றியடையுந் தன்மையுடையவனை, விசயனுக்கு நிகர் நீகொலோ - அருச்சுனனுக்கு ஒப்பானவன் நீயோ, கடவுள் வெண்மதிக்கு நிகர் வெள்ளியோ - தெய்வத்தன்மையுள்ள வெண்ணிறமான சந்திரனுக்கு சுக்கிரன் ஒப்பாகுமோ, அசைவு இல் வில் தொழிலும் வல்லையோ - தளர்ச்சியில்லாத வில்வித்தையும் பயின்றவனாவாயோ, என ஓசைவிலாதவன் அறைந்தனன் - என்று ஒன்றுக்கும் தளர்ச்சியடையாத வீடுமன் கூறினான்.

அருச்சுனனுக்கு நீ எம்மாத்திரம் என வீடுமன் கர்ணனை இழித்துக் கூறினான், என்பது. அருச்சுனன் பாசுபதாஸ்திரம் பெற்றபின்னர் இந்திரனுடன் சென்று தேவலோகத்தில் நிவாதகவசர்’ காலகேயர்



என்ற அசுரர்களை யொழித்த கதையை இங்கு கூறினர். சூரியனைக் கண்ட இருள் நீங்குந் தன்மையை, ‘இரவி வந்ததொரு திசையின்வாய் நிசையென’ — என்று கூறப்பட்டது.

139. அவன் மொழிந்த மொழி.........

இ – ள்: அவன் மொழிந்த மொழி தன்செவிபடலும் - (இங்ஙனம்) அவ்வீடுமன் சொன்ன சொற்கள் தனது (கர்ணனது) இருகாதுகளிலும் பட்டவுடன், அருகிருந்து அமுது அருந்து நீ - (துரியோதனனது) பக்கத்திலேயிருந்து (அவனுடைய) உணவையே புசிக்கும் நீ, இவனுடன் சிலர் பகைக்கின் - இத் துரியோதனனுடன் எவராவது பகைமை கொண்டால், மற்று அவர்தம் இசையும் ஆண்மையும் இயம்புவாய் - எதிரிகளான அவர்களுடைய கீர்த்தியையும், பராக்கிரமத்தையுமே எடுத்துக் கூறுகின்றவனே, புவனம் ஒன்றுபட வரினும் - உலகந்தான் ஒன்றாகத் திரண்டு வந்தாலும், என்றனொடு பொருவர் ஆயின் எதிர் பொர விடாய் - என்னோடு எதிர்க்க வல்லவரானால் நேரில் வரச்செய்வாய், சிவனும் என் கணையை அஞ்சும் - சிவன் தானும் எனது நாகாஸ்திரத்தைக் கண்டால் அஞ்சுவான், என்று இரவி சிறுவன் நனி சீறினன் — என்று சூரிய குமாரனாகிய கர்ணன் மிகக் கோபித்துக் கூறினான்.

நீ என் எதிரிகளைப்பற்றிப் பெருமையாகக் கூறுகின்றாய்; எனது நாகாஸ்திரத்தைக் கொண்டு இவ்வுலகை மாத்திரமல்லப் பரம சிவனையும் பயங்கொள்ளச் செய்வேன் யான், என்று கர்ணன் கூறினான், என்பது.

140. இரவி மைந்தனொடு.........

இ – ள்: இரவி மைந்தனொடு கங்கை மைந்தன் எதிர் வாய்மை ஒன்றையு மிசைந்திலன் - சூரிய புத்திரனாகிய கர்ணனுடன் கங்கை மகனாகிய வீடுமன் எதிர்வார்த்தை யொன்றும் பேசாமல், அன்று வெம் சமரில் பொர அறிந்திடுதும் என்று - அப்போது கொடிய யுத்தகளத்திலே போர் செய்கையில் (இவனது ஆண்மையை) அறிந்துகொள்ளலாம் என்று கருதி, எழுந்து தனிபோயினான் - அங்கிருந்தெழுந்து தனியே சென்றான், அரவ வெம்கொடி உயர்த்த கோவும் - கொடிய பாம்புக்கொடியை யுயர்த்திய துரியோதனனும், இகல் அரசருக்கு விடை நல்கினன் - வலிமையுடைய அரசர்களுக்கெல்லாம் விடைகொடுத்தனுப்பினான், விரவு பைந்துளப மாலையான் - பசிய துளசிமாலையைப் பொருந்திய கண்ணபிரான், விதுரன் மனையி லுற்றது விளம்புவாம் - விதுரனது வீட்டில் போனபின்னர் நடந்ததைச் சொல்வாம்.

துரியோதனன் சபை கலைந்தது, வீடுமன் கர்ணன் திறலைப் போரிலறியலாம் என்றெண்ணிக்கொண்டு வெளியே சென்றான்; இனி விதுரன் வீட்டில் கிருஷ்ணனது விஷயங்களைக் கவனிப்பாம், என்றது.

141. பொரு சிலை முறித்த..........

இ - ள் : பொரு சிலை முறித்த வீரன் - போர்செய்தற்குரிய வில்லை முறித்தெறிந்த வீரனாகிய விதுரன், கோயிலிற் புகுந்து - தனது மாளிகையை யடைந்து, நேமிக் குரிசிலை வணங்கி - சக்கராயுதத்தை யுடைய கண்ணபிரானைத் தொழுது. ஆங்கண் இருப்ப - அங்கு இருக்கையில், அக்குரிசில் நோக்கி - அந்தக் கண்ணபிரான் அவனைப் பார்த்து, இருசிலையுண்டென்று இந்த இருநிலத்தியம்பும் வில்லின் ஒருசிலை முறித்த சீற்றம் - இரண்டு சிறந்த விற்கள் உள்ளனவென்று இந்தப் பெரிய உலகத்தில் சொல்லப்படுகின்ற விற்களுள் ஒன்றாகிய உனது வில்லை முறித்தெறிய வேண்டிய கோபம், என்கொலோ உரைசெய் என்றான் - யாது காரணம் பற்றியோ சொல் என்று கேட்டான்.

விதுரன் வில் முறித்தெறிந்த காரணத்தைக் கிருஷ்ணன் வினவினான், என்பது. இங்கும் சிவதநுசு விஷ்ணுதநுசு ஆகிய இரு விற்களைப்பற்றிக் கூறியது காண்க. வீரன் இருப்ப குரிசில் நோக்கி உரைசெய் என்றான், என முடிக்க.

142. ஆவது கருதானாகில்.........

இ - ள்: ஆவது கருதானாகில் - (ஒருவன்) நடக்கவேண்டிய காரியத்தைப்பற்றி ஆலோசியானாகிலும், அமைச்சர் சொற் கேளானாகில் - தனது மந்திரிகளது வார்த்தையைக் கேட்டு அதன்படி நடவாவிட்டாலும், வீவது குறியானாகில் - தான் அழிவதைப் பற்றிச் சிந்திக்காவிட்டாலும், விளைவதும் உணரான் ஆகில் - இனி நடக்கப்போவதின்னதென அறியானாகிலும், நா அது காவான் ஆகில் - தனது நாவை அடக்கிப் பேசாவிடினும், அவனுக்கா நடந்து போரிற் சாவது - அவனுக்காகப் போய் உதவி செய்து போரிலே சாவது, பழுதென்று அன்றோ சகத்துளோர் சாற்றுகின்றார் - குற்றமாகும் என்றல்லவோ உலகத்தவர்கள் கூறுகின்றனர்-

துஷ்டர்களுக்குப் போரிலே உதவி செய்தலாகாதென்று உலகத்தவர் கூறுகின்றனர், என்பது. இது மனுநீதியிற் கண்ட மொழிகளென விதுரன் வாய்வைத்துக் கவி விளக்குமாறு. இதற்கு மேற்கவியும் இங்ஙனே உலகானுபவத்தை விதுரன் வாய்க்கூற்றாக வைத்தமை காண்க. ஆவது, வீவது விளைவது - வினையாலணையும் பெயர். சாவது - தொழிற்பெயர்.

143. செல்வம் வந்துற்றகாலை..........

இ - ள் : மண்ணின்மேல் வாழுமாந்தர் செல்வம் வந்துற்றகாலை - இவ்வுலகத்து மனிதருக்குப் பொருள் வந்து சேர்ந்தவுடன் (அவர்கள்)



தெய்வமுஞ் சிறிதுபேணார் - கடவுளையும் சிறிது வழிபடார், சொல்வன அறிந்து சொல்லார் - தாம் சொல்லப்போவதை உணர்ந்து சொல்லமாட்டார்கள், சுற்றமும் துணையும் நோக்கார் - உறவினரென்றும் நண்பரென்றும் அன்பு பாராட்டமாட்டார்கள், வெல்வதே நினைவது அல்லால் வெம்பகை வலிது என்று உன்னார் - தாம் வெற்றிகொள்வோம் என்று எண்ணுவதேயல்லாமல் தமது எதிரிகள் மிகவும் வலியவர்கள் என்று கருதமாட்டார்கள், வல்வினை விளைவும் ஓரார் - வலிமையான ஊழ்வினையின் பயனையும் ஆராயமாட்டார்.

செல்வமிருந்தவர்கள் மதியற்றவராவர், என்பது. இதுவும் உலகானுபவத்தைக் கூறியவாறு. இவ்விரு கவிகளும் நீதி வாக்கியங்களாக மேற்கோளா யெடுத்தாளப்படத்தக்கன. இது விதுரன் வாய்க்கூற்றாகத் துரியோதனனது பேதைமையை எடுத்துணர்த்தியவாறு-

144. நினைக்கவுந் தொழவுமெட்டா........

இ - ள் : நினைக்கவும் தொழவும் எட்டா நீ - மனத்தினால் நினைத்தற்கும் மெய்மொழிகளால் வணங்குதற்கும் எட்டாத நீ, எழுந்தருளப் பெற்றும் - இங்கு வந்துசேரும் பாக்கியம் பெற்றிருந்தும், தனக்கு இது தகுதி என்று தமருடன் வாழ எண்ணான் - (துரியோதனனுக்கு) நீ சொன்ன இப்புத்திமதிகள் தகுதியானவை என்று கருதி அவன் தனது சுற்றத்தவருடன் சேர்ந்து வாழ நினைக்கவில்லை, மனக் கடுங் கனலினான் - மனத்திலே கொடிய கோபாக்கினியையுடைய அவன், தன் மனத்தினாலுரைத்த புன்சொல் - தனது மனத்திலெழுந்தவாறு நிந்தித்த இழிவு மொழிகள், எனக்கிசையாமல் - எனக்குப் பொருந்தாமையால், யானும் இருஞ்சிலை யிறுத்தது என்றான் - நான் பெரிய வில்லை முறித்தெறிந்தேன் என்று கூறினான்.

துரியோதனன் கூறிய வசைமொழிகளைத் தாங்கமாட்டாது எனது வில்லை முறித்தேன் என்றான், என்பது 'நின்னை மன மொழி மெய்களால் அடைவதே அரிது; அங்ஙனமிருக்க நேரில் தரிசனங்கொடுத்தும் அச்சந்தர்ப்பத்தை யுபயோகிக்கத் துரியோதனன் எண்ணவில்லை' என விதுரன் இரங்கினான். 'மனத்தினாலுரைத்த' என்பது - வாக்கினால் மாத்திரம் உரைத்த சொற்களல்ல, உள்ளத்திலிருந்தெழுந்தவை அவை என்க.

145. மாயனுமகிழ்ந்து........

இ - ள் : மாயனும் மகிழ்ந்து நோக்கி - கண்ணபிரானும் சந்தோஷத்தோடு விதுரனைப் பார்த்து, மாசுணம் உயர்த்த மன்னன் - பாம்புக் கொடியை உயரவெடுத்த அரசனாகிய துரியோதனன். போய் அருஞ் சேனையோடு போர்க்களம் குறுகும்போது - புறப்பட்டுச்சென்று

பெரிய சேனையோடு யுத்தகளத்தை யடையும்பொழுது, நீ அதன் அருகு நில்லா தொழியின் - நீ அவன் பக்கத்தில் நிற்காவிட்டால், உன் நேய மைந்தர் - உனது அன்புக்குரிய மக்களாகிய பாண்டவர்கள், அன்றே - அப்பொழுதுதானே, தாயமும் செல்வம் முற்றும் தரணியும் பெறுவர் - தங்கள் இராச்சியபாகமும் செல்வம் யாவும் இவ்வுலகத்தையுமே அடைவார்கள்.

உன் வலிமை பெரிது; துரியோதனன் பக்கத்தில் நீ இன்றேல் பாண்டவர் யுத்தத்தில் வெற்றிபெறுவர், என்பது.

146. ஏற்றிய நறுநெய்.........

இ-ள்: நறுநெய் வீசி ஏற்றிய இந்தனம் அடுக்கினாலும் - நல்ல தன்மையான நெய்யைச் சொரிந்து தீயேற்றி விறகுகளை அடுக்கினாலும், காற்றுவந்துறாதபோது - காற்று வந்து உதவாதபோது, கடுங்கனல் கதுவவற்றோ - பெரிய சுவாலையானது பற்ற வல்லதோ, நீற்றணி நிமலன் அன்ன நின் கையில் இற்றது ஆயின் - திருநீற்றையணிந்த குற்றமற்ற சிவன்போலும் உனது கையிலுள்ள வில் முறிந்ததானால், சீற்றவேல் அரசன் சேனை தென்புலம் படர்கை திண்ணம் - கோபம் பொருந்திய வேலாயுதத்தையுடைய துரியோதனனது சேனைகள் யாவும் இயமலோகத்துக்குச் செல்லுதல் நிச்சயம்.

உனது துணையின்றித் துரியோதனாதியரால் வெற்றிகொள்ள முடியாதென்பது. நிமலன் - மலத்தினின்று விடுபட்டவன். வற்றோ - வல்லதோ, தென்புலம் - யமலோகம், தென் திசையிலுள்ளதென்பது கற்பனை, படர்கை - கை விகுதித் தொழிற்பெயர்.

147. பன்னிய புரையில்.........

இ-ள்: பன்னிய புரையில் கேள்விப் பயன்நுகர் மனத்தாய் - சொல்லப்பட்ட குற்றமற்ற நூல்களின் பயனை யுணர்ந்த மனத்தை யுடையவனே, நின்னை மன்னவன் மொழிந்த எல்லாம் - உன்னை நிந்தித்துத் துரியோதனன் கூறியதையெல்லாம், பொறுத்தி என்று அருளி மாயோன் - மன்னித்தருள்வாய் என்று கண்ணபிரான் கூறி, அந்நகர் தன்னில் - அவ்வஸ்தினாபுரியில், வண்மை அருள் அழகு ஆண்மை பேசும் கன்னனைப் பயந்த காதற் கன்னிதன் கோயில்புக்கான் - கொடை கருணை அழகு பராக்கிரமம் ஆகிய குணங்களைச் சிறப்பித்துப் பேசப்படும் கர்ணனைக் கன்னிப் பருவத்திற் காதலுற்றுப் பெற்ற குந்தியின் வீட்டை யடைந்தான்.

கண்ணன் கர்ணனது தாயாகிய குந்தியின் வீட்டுக்குப் போனான், என்பது. கர்ணன் கொடையிலும் அழகிலும் ஆண்மையிலும் யாவரா



லும் புகழப்படுபவன். குந்தி கன்னிப்பருவத்தில் சூரியனைக் காதல் கொண்டு அதன் பேறாய்ப் பெற்ற மைந்தனே கர்ணன். கேள்வி - கேள்வியிற் கற்றறிந்தமை.

148. மண்டல மதியமன்ன.........

இ-ள்: மண்டலம் மதியம் அன்ன மாசறு முகத்தினாளும் - பூரண சந்திரன் போன்ற களங்கமில்லாத முகத்தையுடைய குந்தியும், திண்திறல் மருகன் தன்னைச் சென்று எதிர்கொண்டு கண்டு - மிக்க வலிமையுடைய தனது மருமகனான கண்ணனையடைந்து வரவேற்று நோக்கி, வெண்திரை மகர வேலை - வெண்மையான அலைகளையுடைய சுறாமீன் நிறைந்த கடலின், விரிபுனல் முகந்து - அகன்ற நீரை மொண்டு, தோன்றும் கொண்டலை மகிழ்ந்து காணும் குளிர் பசுந் தோகை போன்றாள் - ஆகாயத்தில் தோன்றும் மேகத்தைக் கண்டு சந்தோஷித்து மனம் குளிர்ச்சியடையும் பசு நிறமுள்ள மயில்போன்று மகிழ்ந்தாள்.

கண்ணனைக் கண்ட குந்தி முகிலைக் கண்ட மயில்போல மகிழ்ந்தாள், என்பது. இது உவமை. கடல் நீரைச் சூரிய வெப்பம் ஆவியாக்கி மேலெழச் செய்த முகிலை — 'வெண்டிரை மகரவேலை விரிபுனல் முகந்து தோன்றும் கொண்டல்' என்றார். சுறாமீனுள்ள கடலென 'மகர வேலை' யென்பது கவிமரபு. இங்கு முகிலுக்கு உவமேயமாக முகில் வண்ணத்தையுடைய கிருஷ்ணனும், மயிலுக்குவமேயமாக அச்சாயலையுடைய குந்தியும் கூறப்பட்டது காண்க. மண்டல மதியம் - வட்டவடிவமான (பூரண) சந்திரன். குந்தியின் சகோதரர் வசுதேவராகையால் அவர் மகன் கிருஷ்ணன் இவளுக்கு மருமகன் என்க.

149. யானுறை யில்லின்வந்த.........

இ-ள்: யானுறை யில்லின் வந்தது - யான் குடியிருக்கும் இச் சிறு வீட்டில் நீ வருதற்கு, என்ன மாதவம் என்றேத்தி - நான் என்ன பெரிய தவத்தைச் செய்தேனோ என்று பெருமையோடு வணங்கி, (குந்தி) கானுறை மைந்தர் தம்மைக் கண்டனள் போன்றாளாகி - காட்டிலே வசிக்கின்ற தனது புதல்வரைக் கண்டவன்போன்று மகிழ்ச்சி யடைந்தவளாய், தேன் உறை துளவினான் தன் செய்யமா முகத்தை நோக்கி - தேன் பொருந்திய துளசிமாலையை அணிந்த கிருட்டிணனது சிவந்த அழகிய முகத்தைப் பார்த்து, வான் உறை புரிசை மூதூர் வந்தது என் அருளி என்றாள் - ஆகாயத்தையளாவிய மதில் சூழ்ந்த இப் பழமையான நகருக்கு நீ வந்த காரணம் யாதெனச் சொல் என்றாள்.

கிருட்டிணனைப் பார்த்துக் குந்தி 'நீ இங்கு வந்த காரணம் யாது, என வினவினாள் என்பது. பாண்டவர்களைக் காண ஆவலோடிருந்தவ

ளுக்கு அவர்களைச் சந்தித்து வந்திருப்பான் கிருஷ்ணன் என்று கருதியவளாகையால் அவனைக் கண்டதே தனது புதல்வரைக்கண்ட மகிழ்ச்சியடைந்தாளென்க.

150. நின்பெரும் புதல்வர்...........

இ-ள்: நின்பெரும் புதல்வர் சொல்ல - உனது சிறப்புப்பொருந்திய புத்திரர் சொல்லியனுப்ப, நெடும்புனல் நாடுவேண்டி - மிக்க நீர்வளமுள, குருநாட்டின பங்கைப் பெறவேண்டி, வன்புடை அரசர் கோமான் மனக்கருத் தறியவந்தேன் - கல்நெஞ்சையுடைய அரசர்க்கரசனான துரியோதனனின் எண்ணத்தையறிந்து போக வந்தேன், தென்புல வேந்தன் வெஃக - தென்திசைக்குத் தலைவனான யமன் விரும்பும்படி, செருத்தொழில் புரிவன் என்றான் - போர்செய்வேனென்று அவன் கூறிவிட்டான், என் பல சொல்லின் - அதிகம் சொல்வானேன், நாளை எதிர்க்கவே இயைந்தது என்றான் - நாளைக்கே யுத்தம் ஆரம்பிக்க வேண்டியதாய் முடிந்திருக்கிறது என்றான்.

பாண்டவர்க்காகத் துரியோதனனிடம் தூது வந்தேன்; துரியோதனன் இணங்க மறுத்துவிட்டான்; ஆகையால் இனி அடுத்தது யுத்தமே என்றான், என்பது.

151. என்றலுங் குந்தி..........

இ-ள் என்றலும் - என்றிவ்வாறு கிருட்டிணன் கூறியதும், குந்தி சால இரங்கினள் - குந்தி மிகவும் மனம் வருந்தினாள், எதிர்ந்த போரில் வென்றிடுவார்கள் யாரோ - எதிர்க்கப்படும் யுத்தத்தில் யார் வெற்றி கொள்வரோ, விதியினால் அமர்க்களத்தில் பொன்றிடுவார்கள் யாரோ - ஊழ்வினையினாலே யுத்த களத்திலேயே மடிந்து படுபவர்கள் யாவரோ, என்று உளம் புலர்ந்து நொந்தாள் - என்று மனஞ் சஞ்சலப்பட்டு வருந்தினாள், அன்று அவள் தன்னைத்தேற்றி - அப்பொழுது அவளைத் தேறுதல் செய்து, ஆழியான் உரைக்கலுற்றான் - சக்கரத்தையுடைய கிருட்டிணன் பின்வருமாறு கூறினான்.

யுத்தம் என்று கேட்டதும் குந்தி மிக வருந்தினாள்; கிருட்டிணன் அவளைத் தேற்றினான், என்பது. ஆழி - திருப்பாற் கடலுக்குமாம் குந்தி இரங்கினாள் நொந்தாள் ஆழியான் உரைக்கலுற்றான் என முடிக்க. அன்று என்றது அவ்வேளையை.

152. தன்மைநா னுரைப்பக்.........

இ:ள்: தன்மை நான் உரைப்பக் கேள் - (முன்பு நடந்த) ஒரு வரலாறு நான் சொல்லக் கேளாய், நின் தந்தை தன் மனையில் நீயும் கன்னியாயிருந்து வாழுங்காலை- உனது தந்தையின் வீட்டிலே நீ கன்னிகையாயிருந்து வாழ்ந்தபோது, ஓர் முனிவன் வந்து சொன்ன மந்திரம் ஓரைந்தின் ஒன்றினால் - ஒரு முனிவன் உன்னிடம் வந்து சொல்லித் தந்த ஐந்து மந்திரங்களில் ஒன்றினால், சூரன் தன்னை முன்னினை - சூரியனை நீ தியானித்தாய், அன்று அவன் வந்து நின்முன்பு நின்றான் - அப்பொழுது சூரியனும் வந்து உன் முன்னிலையில் காட்சியளித்தான்.



இது கிருட்டிணன் கர்ணனது பிறப்பைப்பற்றிக் குந்திக்குச் சொல்லத் தொடங்குதல். துருவாசமுனிவரென்பவர் குந்தியின் தந்தையாரின் மாளிகைக்கு வந்தபோது குந்தி தேவிக்கு ஐந்து மந்திரங்களை யுபதேசித்துச் சென்றார். அவற்றை யுச்சரிப்பின் தேவர்கள் காட்சியளித்துப் புத்திர பாக்கியம் தருவர் என்று அவர் சொல்லியிருந்தார். குந்தி அதனைப் பரீக்ஷிக்க விரும்பி ஒரு மந்திரத்தைச் சொன்னதும் அங்கு சூரியன் தோன்றினானென்றது கதை. இதன் தொடர்ச்சி அடுத்த கவியில்.

153. கதிரவ னருளினாலோர்........

இ-ள்: கதிரவன் அருளினால் ஓர் கணத்திடைக் காதல்கூர - சூரியனுடைய அனுக்கிரகத்தினால் ஓர் விநாடியிற்றானே இருவர் உள்ளமும் ஒருப்பட, மதலையங் கொருவன்றன்னைப் பயந்தபின் - அப்பொழுது ஒரு குழந்தையைப் பெற்றெடுத்தபின்னர், வடுவென்று அஞ்சி- (கன்னியாயிருக்கையில் களவில் மைந்தன் பிறந்தது) வசையான காரியம் என்று பயந்து, மிதவை அம் பேழை தன்னிற் பொதிந்து நீ விட - ஒரு மிதக்கும் அழகிய பெட்டியில் வைத்து நீ (ஆற்றிலே) விடவும், அந்நதியும் அம்மகவை கங்கை நதியிடைப் படுத்ததன்றே - அந்த ஆறும் அக்குழந்தையைக் கங்காநதியிற் கொண்டுபோய்ச் சேர்த்தது.

தேவர்கள் அனுக்கிரகமாதலால் கருத் தங்காதே குழந்தை பிறக்க, அது வசையென்று குந்தி ஓர் பேழையில் வைத்து ஆற்றில் விட்டாள். அது கங்கைவழியே மிதந்து சென்றது, என்பது. நீ விட நதியும் படுத்தது, என முடிக்க.

154. காதனின் புதல்வன்.........

இ-ள்: காதல் நின் புதல்வன்றன்னை - உனது அன்பான புதல்வனை, கண்ணில்லாவரசன் பொற்றேர்ச் சூதன் வந்து எடுத்துக்கொண்டு - கண்ணில்லாத குருடனாகிய திருதராட்டிரவரசனுடைய பொன்மயமான தேரின் சாரதியொருவன் வந்தெடுத்துக்கொண்டு போய், சுதனென வளர்த்தகாலை - தனது மகனைப் பாவித்து வளர்த்து வரும்போது, ஆதபன் இவனை யாரும் கன்னன் என்று அழைக்க என்றான் - சூரியன் அசரீரியால் இப்புதல்வனை எல்லோரும் கர்ணன் என்று அழைப்பாராக என்று சொன்னான், தாதையும் விசும்பிற் சொன்ன நாமமே தக்கதென்

றான் - தந்தை (தேர்ப்பாகனும்) ஆகாயத்தில் (அசரீரி) சொன்ன பெயரே தகுதியானதென்று கூறினான்.

பிறந்தபொழுது கரண குண்டலங்களுடன் காணப்பட்டமையால் கர்ணன் என்று பெயர் உண்டானதென்பர்.

155. பண்புடைக் குமரன் கற்ற..........

இ - ள்: பண்புடைக் குமரன் கற்ற படைத்தொழில் பலவுங் கண்டு - குணவிசேடமுள்ள (உனது) குமாரனாகிய கர்ணன் கற்று வந்த போர்த்திறமை பலவற்றையுங் கண்டு, வண்பவி உயர்த்த கோமான் - அழகிய பாம்புக் கொடியை உயர்த்திய துரியோதனன், நண்புடை உரிமை எல்லா நல்கி - தனது நட்புக்கேற்றவிதமாக அவனுக்கு எல்லாச் சுதந்திரங்களுங் கொடுத்து, மாமுடியும் சூட்டி - (அங்கதேசத்துக் கதிபதியாக) சிறந்த முடியும் தரித்து, அதற்கு வாழ்வு அளித்தான் - அக் கர்ணனுக்கு நல் வாழ்க்கையைக் கொடுத்தான், மற்றை - அவன் அரச பதவி பெற்றதுமன்றி, திண்பரித் தேர்வல்லோரில் அவனை யார் செயிக்க வல்லார் - வலிமையுடைய குதிரைகள் பூட்டிய தேரை நடத்துவதிலும் அக் கர்ணனை வெற்றி கொள்பவர் யார் (ஒருவருமில்லை).

கர்ணனைத் துரியோதனன் கண்டு நட்பும் பூண்டு அங்கதேசத்துக் கதிபதியாக்கி மற்றும் சகல நலன்களுமளித்து வைத்தான், என்பது. 'நண்புடை யுரிமையெல்லாம்' என்றது - உண்மை நட்புக்கேற்றவாறு தன துரிமைகளையெல்லாம் கொடுத்து, என்க. துரியோதனனுக்கும் கர்ணனுக்கு மிடையிலிருந்த நெருங்கிய நட்பைக் கீழே 255-ம் கவியில் காண்க.

156. அந்த நின்மைந்தன்..........

இ - ள்: அந்த நின் மைந்தன்தானே - அப்படியாக வளர்ந்த உனது மகனான கர்ணனே, அருஞ்சிலை விசயனோடு - அருமையான வில் வித்தையிற் சிறந்த அருச்சுனனுடனே, வந்து எதிர் மலைய நின்றான் - போரிலே எதிர்த்து நிற்க வருகின்றான், உறவு மற்று அறியமாட்டான் - வேறு (தனக்கு அவன் தம்பி என்ற) முறை தெரியாது, சிந்தையின் ஐயந் தீர இதனை நீ தெளியச் சொல்லி - இவ்வாலாற்றை அவனுடைய மனதிலிருக்கும் சந்தேகம் தீருமாறு நீயே அவனுக்குத் தெளிவாக எடுத்துச் சொல்லி, கொந்து அவிழ் அலங்கலானைக் கூட்டுக விரைவின் அம்மா - பூங்கொத்துக்கள் விரிந்த மாலையையுடைய கர்ணனைச் சீக்கிரத்தில் (பாண்டவர்களுடன்) சேர்த்துவிடுவாயம்மா.

அக் கர்ணனே அருச்சுனனைக் கொல்ல விருக்கின்றானாகையால் அவனது உறவுமுறையைக் காட்டிக் கர்ணனை அங்ஙனம் செய்யா தொழியச் செய்வாய், என்பது.



157. தம்பிய ரைந்து பேரும்..........

இ - ள்: தம்பியர் ஐந்துபேரும் தனித்தனி யேவல்செய்ய - (அவனுடைய) தம்பிமார்களாகிய பாண்டவர்கள் ஐவரும் தனித்தனியாக அவனுக்குக் குற்றேவல்கள் செய்ய, வம்பு அவிழ் அலங்கலோடு மாமணி மகுடஞ் சூட்டி - நறுமணம் வீசுகின்ற மாலையுடன் பெரிய இரத்தினக் கிரீடந்தரித்து, அம்புவி முழுது நீயே ஆளலாம் வருக என்றால் - இந்தப் பூமி முழுவதையும் நீயே ஆளலாம் வா என்றழைத்தால், உம்பர்கா அனைய கையான் உன்னுரை மறுத்தானாகில் - (அப்படியழைக்கும்போது) தேவர்களுடைய கற்பக விருக்ஷம்போன்ற கையையுடைய கர்ணன் உனது அழைப்பை மறுத்தானாகில், (இதன் முடிபு அடுத்த கவியில்).

கர்ணனை ஏக சக்கிராதிபதியாக நியமிக்கலாம் என்று ஆசைகாட்டி அழைப்பாய், என்பது. 'உம்பர் கா அனைய கை' - கற்பக விருக்ஷம் கேட்டதெல்லாம் கொடுக்கும், அதுபோல இவன் கையும் கேட்பவர்களுக்கு எதையும் மறுக்காது என்பது.

158. எரியமு தருந்தக்கான.......

இ : ள் : எரியமு தருந்தக் கானம் எரித்தநாள் - அக்கினி தேவன் உணவாகக் கொள்ள காண்டவ வனத்தை அருச்சுனன் எரித்தகாலத்தில், அகன்றுபோன அரவினை அங்கர்கோமான் ஆசுகமாகக்கொண்டான் - அங்கிருந்து நீங்கிப்போன பாம்பைக் கர்ணன் தனது அஸ்திரமாகக் கொண்டுள்ளான், வரிசிலை விசயன் தன்மேல் மறுகணை தொடுக்காவண்ணம் - கட்டுப்பொருந்திய வில்லையேந்திய அருச்சுனன்மீது ஒருதரமேயன்றி இரண்டாவது முறையாக அம்பு தொடுக்காதவாறு, ஒரு வரம் வேண்டுக என்றான் - ஓரொரு வரம் தரும்படி கேள் என்று சொன்னான், உற்றவர்க் குறுதி சூழ்வான் - தன்னை யடைக்கலமென வந்தோர்க்குத் துணைபுரியும் கிருட்டிணமூர்த்தி.

தனது தம்பியராகிய பாண்டவர்களின் பக்கத்திற் சேரக் கர்ணன் மறுத்தானாயின், அருச்சுனன்மீது அவன் தனது நாகாஸ்திரத்தை ஒரு தரத்திற்குமேல் பிரயோகிக்காதிருக்க ஒரு வரம் வேண்டு என்றான் கிருஷ்ணன், என்பது. அருச்சுனன் காண்டவ வனத்தை அக்கினி பகவானுக் கிரையாகக் கொடுத்தபோது தப்பிச் சென்ற பாம்பின் கதை முன்னாற் கூறியுள்ளோம்.

159. மன்றலங் தெரியல்.........

இ - ள்: மன்றல் அம் தெரியல் வெய்யோன் மதலை - வாசனை பொருந்திய அழகிய மாலையையணிந்த சூரியனது குமாரனாகிய கர்ணன்,

என் மைந்தன் என்பது அன்று எனக்கு உரைத்தாயாயின் - எனது புதல்வனே என்பதை முன்னமே எனக்குச் சொல்லியிருந்தாயானால், அவனுடன் அணுக ஒட்டேன் - அத் துரியோதனனுடன் சேர விட்டிரேன், சென்று உயிர் ஒழிக்குமாறு செருவினை விளைத்து - போர்க்களத்திலே போய் உயிர் நீக்குமாறு யுத்தத்தை மூட்டிவிட்டு. பின்னை யின்று எனக்குரைத்தாய் - அதன்பின்பு இப்பொழுதுதான் ;எனக்குச் சொல்லுகின்றாய், ஐயா என் நினைந்து என்செய்தாயோ - ஐயனே என்ன காரியத்தை எண்ணி என்ன செய்தனையோ.

முன்னமே கர்ணன் என் மைந்தன் என்று கூறாது இப்பொழுது நீ கூறியதன் காரணம் உனக்கே தெரியும்; என்ன சூழ்ச்சியை எண்ணினையோ, என்பது. அன்று இன்று என்றது முன் பின் என்ற கால வேறுபாடு கருதி. ஐயா எனக் குந்தி கிருஷ்ணனை விளித்தலையும் முன்னர் கிருஷ்ணன் அவளை அம்மா என விளித்தமையையும் நோக்குக. மரியாதை கருதியென்க.

160. கான்பட்ட கனலிற் பாயுங்.........

இ - ள் : கான்பட்ட கனலிற் பாயுங் கடுங்கணை விலக்கினேனேல் - காண்டவ வனத்திலே பற்றிய நெருப்பிலிருந்தெழுந்த நாகமாகிய கொடுமையான அஸ்திரத்தை ( கர்ணன் பிரயோகிக்காமல் ) தடுத்தேனாயின், வான்பட்ட புரவித் தேரோன் மகன்படும் - ஆகாயத்திற் செல்லுகின்ற குதிரைகள் பூட்டிய தேரையுடைய சூரியனது குமாரனான கர்ணன் இறப்பான், இனி சென்று தடாது இருந்தேனாகில் - அன்றியும் நான் அங்ஙனம் போய்த் தடுக்காமலிருந்தால் - மகவான் மைந்தன் தான்பட்டு மடியும் - இந்திரகுமாரனான அருச்சுனன் இறந்துபடுவான், யான்பட்ட கொடுமை நன்றென்று - நான் படுந் துன்பம் நன்றாயிருக்கிறது என்று, என்பட்டாள் இரங்கி வீழ்ந்தாள் - மிகுந்த வருத்தத்தோடு குந்தி புலம்பிக்கொண்டு வீழ்ந்தாள்.

தடுத்தால் கர்ணன் இறப்பான்; தடாதுவிட்டால், அருச்சுனன் இறப்பான்; இருதலைக்கொள்ளிபோலானேன் என்று குந்தி வருந்தினாள் என்பது. கர்ணனது ஆயுதம் நாகாஸ்திரம்; அருச்சுனனது ஆயுதம் பாசுபதாஸ்திரம். ஆகவே நாகாஸ்திரத்தைத் தடுத்தால் கர்ணன் பாசுபதாஸ்திரத்தால் இறப்பான் என்பது. என்பட்டாள் என்பது - என்ன பாடுபட்டாள் என்ற இரக்கக் கூற்று.

161. தேக்குந்தி யகிலுஞ்...........

இ - ள் : தேக்கு உந்தி அகிலும் சாந்தும்சிந்து - தேக்கு மரங்களைத் தள்ளி அகிற்கட்டைகளையும் சந்தனக்கட்டைகளையும் அடித்துக்கொண்டு



செல்லும், நீர் நதிசூழ் செல்வக் கோக்குந்தி அரசன் பாவை - நீர் நிறைந்த ஆறுசூழ்ந்த செல்வ வளம் பொருந்திய குந்திதேசத் தரசனது மகளான குந்திதேவி, குலைத்தழுங் கொடுமை கண்டு - மனம்வருந்தி யழுகின்ற கொடுமையைப் பார்த்து,மீகுந்தி யுறிகள்தோறும் வெண்ணெயும் தயிரும் உண்ட - உயர உட்கார்ந்து உறிகளிலுள்ள வெண்ணெயையும் தயிரையும் களவாடி யுண்டவனும்,வாக்கு உந்தி மலரோன் - வேதம்தோன்றியநாபித் தாமரை மலரை யுடையவனுமாகிய கண்ணன், பின்னும் மனத்தளர் வகற்றினனே - மேலும் குந்தியின் மனச்சோர்வை நீக்க முயன்றான்.

குந்தி வருந்தக் கிருஷ்ணன் மேலும் சில கூறி அவளது வருத்தத்தை நீக்கினான், என்பது. கிருஷ்ணன் ஆயர்சேரியில் உறியேறி வெண்ணெய் திருடிய கதை இங்கு எடுத்தாளப்பட்டது. வாக்கு - வேத வாக்கு. மறையோன் சாஸ்வதியுமாம். விஷ்ணுவின் நாபிக்கமலத்தில் நான்முகனும் சாஸ்வதியும் வீற்றிருப்பரென்பது புராணிகம். மலரோன் அகற்றினன், என முடிக்க.

162. பைவருந் தலைகளைந்து.........

இ - ள் : பைவரும் தலைகள் ஐந்து படைத்த பன்னகமே போல - படத்தையுடைய ஐந்து தலைகளுள்ள பாம்புபோல, ஐவரும் படுதல் நன்றோ - பஞ்சபாண்டவர்கள் ஒருமித்திறத்தலை விரும்புகின்றனையோ, அங்கர்கோன் படுதல் நன்றோ - அங்கதேசத்ததிபதியாகிய கர்ணன் இறந்துபடுதலை விரும்புகின்றனையோ, ( இருவரில் ஒருவர் மாள்வது நிச்சயம்). உய்வு அருஞ்சமரில் ஆவி ஒருவர் போய் ஒருவர் உய்யார் - பிழைத்தற்கரிய யுத்தத்தில் (பாண்டவரில்) ஒருவர் உயிர் நீத்து மற்றை நால்வரில் ஒருவராவது உயிர் தரியார், நைவரும் துயரம்மாறி நடப்பதே கருமம் என்றான் - மனந்தளர்கின்ற துன்பத்தை விடுத்து இனி வருவனவற்றை ஆலோசிப்பதே தகுதி என்றான்.

பாண்டவரில் ஒருவராவது இறந்துபட்டால் மற்றவர்கள் உயிர் தரியார்; ஆகையால் கர்ணன் இறப்பதை விரும்புகிறாயா, அல்லது பாண்டவர் ஐவரும் இறப்பதை விரும்புகின்றனையா, என்பது. ஐந்து தலை நாகத்தின் ஒரு தலைபோனால் நாகம் உயிர் பிழைக்காதாகையால் பாண்டவர்க்குரிமை கூறியவாறு. ஆகையால், பாண்டவர் பிழைக்கக் கர்ணன் இறப்பதே விரும்பத்தக்கதெனப் புலனாயிற்று.

163. காளமா முகிலின்...........

இ - ள் : காளமா முகிலின் மேனி கரிய நாயகனுந் தேற்றி - கருமேகம்போன்ற கருமையான திருமேனியையுடைய கண்ணபிரானும் குந்தியின் துயரத்தைத்தேற்றி, மீனமாதவத்தின்மிக்க விதுரான்வாழ்மனை

யின் எய்த - மீண்டும் பெரிய தவத்தையுடைய விதுரன் வசிக்கும் வீட்டுக்குப்போக, வெய்யோன் - சூரியன், நீளமால் யானை நெற்றி நிறத்த செந் திலகம்போன்று - பெரிய யானையின் நீண்ட நெற்றியிலுள்ள செந்தூரத் திலதம்போன்று சிவந்த, வருணன் திக்கில் வாள நால் வரையில் குறுகினான் - மேற்குத்திசையிலே சக்கரவாளமலையை யடைந்தான்.

விதுரன் மாளிகைக்குக் கிருட்டிணன் போக சூரியாஸ்தமனமாயிற்று, என்பது. வருணன் திக்கு - வருணனைத் தெய்வமாகக் கொண்ட மேற்குத் திசை, வாளம் - சக்கரவாள மலையென்ற கற்பனாமலை. நாயகன் தேற்றி எய்த, வெய்யோன் குறுகினன் என முடிக்க.

164. நாற்றிசை யுலகு.........

இ - ள்: நாற்றிசை யுலகுதன்னின் நான்மறை யுணர்ந்தோர் தாமும் - நான்குதிசைகளுக் குட்பட்ட இவ்வுலகத்தில் நான்கு வேதங்களையுமுணர்ந்த அந்தணர்கள், போற்று இசை - துதித்துக் கூறுகின்ற, மாலையென்னும் பொற்புடை அணங்கு வைக - மாலைக்காலம் என்ற அழகிய பெண் வீற்றிருக்க, மாற்றிசையிலாத செம்பொன் மண்டபம் தன்னில் - மாற்றில் குறைவில்லாத சிவந்த பொன்மயமான மண்டபத்திலே, ஆதி மேற்றிசைக் கடவுளிட்ட வெயில் மணிப்பீடம் போன்றான் - பழைமையான மேற்குத் திசைக் கடவுளாகிய வருணன் அமைத்த ஒளிபொருந்திய இரத்தினப் பீடம்போன் றமைந்தான்.

மேற்குத் திசையில் சூரியவட்டம் அத்திசைக் கடவுளாகிய வருணன் மாலைக்காலம் என்ற பெண் உட்காருவதற்குப் போட்ட ஒரு ஆசனம் போன்றிருந்தது, என்பது. மாலைக்காலத்தில் அந்தணர் சந்தியாவந்தனம் செய்தலால் 'போற்றிசை' என்றார். 'போன்றான்' என்பதன் எழுவாய் இதற்கு முதற் கவியில் 'வெய்யோன்' என்பது.

165. கொண்ட மென்சிறை.........

இ - ள்: கொண்ட மென்சிறை வண்டெனும் கொழுநருக்கு இடங்கொடாமல் - மென்மையான இறகுகளையுடைய வண்டுகளாகிய கொண்ட கணவருக்கு இடம் தாராமல், முண்டகக் குலத்து மாதர் முகங்குவிந் தூடிநிற்ப - தாமரைகளாகிய நற்குலப் பெண்கள் ஊடல் கொண்டு முகம் வாடியிருக்க, கண்டு எதிர் நின்ற காதற் கயிரவக் கணிகை மாதர் - இதைப் பார்த்து எதிரிலே நின்ற அல்லி மலராகிய காதற்பரத்தையர், வண்டுறைநின்று தங்கள் வாய்மலர்ந் தழைக்கலுற்றார் - அழகிய நீர்க்கரைகளில் நின்று தங்கள் வாயைத் திறந்து அழைத்தார்கள்.

மாலைக் காலத்தில் தாமரை கூம்ப ஆம்பல் மலர்ந்தது என்பது சூரியன் அஸ்தமிக்கும் வேளையில் தங்கள் மனைவியர் ஊடி நிற்கக்



கண்ட வண்டுகளைப் பரத்தையர் தம் வாயில் நின்றழைத்தனர், என்பது. வண்டு - கணவன்; தாமரை - மனைவி; ஆம்பல் - கணிகை; துறை - வாயில். இது உருவக அணி. ஒன்றை இன்னொன்றாகப் பாவித்து வருணிப்பது.

166. கானெலா மலர்ந்த.........

இ - ள்: கானெலாம் மலர்ந்த முல்லை - காடுகளெல்லாம் மலர்ந்த முல்லைப்பூக்கள், ககனம்மீது எழுந்தது என்ன - ஆகாயத்திலே போய்க் கிடந்தன என்று சொல்லும்படி, வானெலாம் வயங்கு தாரை நிரை நிரை மலர்ந்து தோன்ற - ஆகாய வெளியெலாம் விளங்குகின்ற நட்சத்திரங்கள் வரிசை வரிசையாகப் படர்ந்து காணப்பட, வேனிலான் விழவின் வைத்த வெள்ளி வெண் கும்பமென்ன - வசந்தகாலக் கடவுளாகிய மன்மதனுடைய உற்சவ காலத்தில் வெள்ளியாற் செய்யப்பட்ட வெள்ளை நிறமான கும்பம் போன்று, தூ நிலா மதியம் வந்து குணதிசைத் தோன்றிற்றம்மா - சுத்தமான நிலவை எறிக்கும் பூரண சந்திரன் கிழக்குத் திசையிலெழுந்து காட்சியழித்தது.

இரவிலே ஆகாயத்து நட்சத்திரங்கள், முல்லை மலர்கள் பாவியது போன்றிருந்தன; சந்திரன், மன்மதனை வரவேற்க வைத்த பூரண கும்பம் போன்றிருந்தது. இது உவமை அணி. அம்மா - ஈற்றசை.

167. தூவிய னிலவு தோன்ற...........

இ - ள்: தூ இயல் நிலவு தோன்ற - சுத்தமான தன்மையுள்ள நிலாத் தோற்றியதும், துணைவரைப் பிரிந்தோர் கண்கள் - தமது கணவன்மாரைப் பிரிந்திருந்த பெண்களது கண்கள், காவியும் ஆம்பலும் பைங் கருவிள மலரும் போன்ற - நீலோற்பலங்களையும் ஆம்பலையும் பசிய கருவிள மலர்களையு மொத்திருந்தன, மேவிய மகளிர்கள் - கணவனைக் கூடியிருந்த பெண்களது கண்கள், மீன் எறி பரவை எழும் - மீன்கள் குதிக்கின்ற எழு கடல்களையும், தாவு இயல் உழையும் - தாவிப் பாய்கின்ற மானையும், காதற்சகோரமும் போன்ற - விருப்பத்தையுடைய சகோரப் பட்சியையும் போன்றிருந்தன.

நிலாத் தோன்றியதும் கணவனைப் பிரிந்த மகளிர் வருத்தமுற்றமையான் அவர்கள் கண்கள் காவி, ஆம்பல், கருவிள மலர்கள் போன்று அஞ்சாது திறந்தபடியிருந்தன. கணவனைக் கூடியுள்ளோர் கண்கள் சந்திரனைக் கண்டு கடல் கொந்தளித்தல் போன்று பொங்கியும், துள்ளு மான்போல் வெருட்சி கொண்டும், சகோரம்போல மகிழ்ச்சிகொண்டுமிருந்தன, என்பது. சகோரப்புள் நிலாவையே யுண்டு வாழ்வது என்ப

168. அரவிய லல்குலாரு.........

இ-ள்: அரவு இயல் அல்குலாரும் - பாம்பின் படத்தையொத்து அகன்ற அல்குல் தடத்தையுடைய பெண்களும், மகிழ்நரும் - அவர்கள் காதலர்களும், அன்பு கூர விரவிய அமளி எய்தி - மிகுதியான களிப்புடனே பொருந்திய படுக்கைகளையடைந்து, வீதிமா நகரியெங்கும் பரவையின் இமிர்ந்த ஓசை அமர்ந்தபின் - அந்நகரின் பெரிய தெருக்களிலெல்லாம் கடலினின் றொலிக்கும் ஓசைபோன்ற சத்தம் அடங்கிய பின்னர், பரித்தேர் வேந்தன் - குதிரைகள் பூட்டிய தேரையுடைய துரியோதனன், இரவிடைச் சூழ்ந்த வண்ணம் இன்னதென் றியம்புகின்றோம் - இரா வேளையில் செய்த சதியாலோசனை எவ்வாறு என்று கூறுவோம்.

ஊரடங்கிய பின்னர் அன்றிரவு துரியோதனன் சதியாலோசனை செய்த வரலாறு கூறுவாம், என்பது. இது கவிக்கூற்று. இராக்கால இயல்பு முதலிரு வரிகளில் கூறினார்.

169. தந்தையுந் தம்பிமாரு..........

இ-ள்: தந்தையும் - பிதாவாகிய திருதராட்டிரனும், தம்பிமாரும் துச்சாதனன் முதலிய தம்பிமார்களும், கன்னனும்—, சகுனிதானும்—, சிந்தையில் தெளிந்த கல்விச் செழுமதி யமைச்சர் தாமும் - மனத்திலே சந்தேகமின்றிக் கற்றுணர்ந்த நுண்ணறிவுடைய மந்திரிமாரும், மூந்து அரவு உயர்த்த கோமான் ஏவலால் - பழமையான பாம்புக் கொடியையுயர்த்திய துரியோதனன் கட்டளைப்படி, முழுதும் எண்ணி மந்திரம் இருப்பான் வந்து - எல்லா விஷயங்களையும் ஆராய்ந்து ஆலோசிக்க வேண்டி வந்து, ஓர் மண்டபம் குறுகினார் - அங்கே ஓர் தனி மண்டபத்திலே கூடினார்கள்.

துரியோதனன் முதலியோர் சதியாலோசனை செய்ய ஒன்று கூடினர், என்பது. ஏவலால் வந்து குறுகினர், என முடிக்க. மந்திரமிருப்பான் - ஆலோசனை செய்தற்பொருட்டு.

170. தீதறு மதிவல் லோரைச்..........

இ-ள்: செழுமதிக் குடையான் - மாட்சிமை பொருந்திய சந்திரவட்டக் குடையையுடைய துரியோதனன், தீதறு மதி வல்லோரை நோக்கி - குற்றமற்ற அறிவிற் சிறந்தவர்களைப் பார்த்து, பாதவ வனத்திற் போன பாண்டவர் தம்மை - மரம் நிறைந்த காட்டுக்குப் போன பாண்டவர்களை, மீண்டு மேதக அழைத்து - திரும்பவும் கௌரவமாக அழைத்து, நாடு வேண்டுமின் என்று மூட்டும் யாதவன் - உங்கள் இராச்சியத்தைக் கேளுங்கள் என்று தூண்டுதல் செய்யும் இடையனா



கிய கிருட்டிணன், தனித்து வந்தான் - இங்கே தனியாகத் தூது வந்திருக்கின்றான், என் செய்வது இயம்பும் என்றான் - அவனை என்ன செய்யலாம் சொல்லுங்கள் என்று கேட்டான்.

பாண்டவர்க்குத் தூதாக வந்த கிருட்டிணனே அவர்களைத் தூண்டிநிற்கிறான்; ஆகையால் அவனுக்கு இடர் விளைக்க ஒரு வழி கூறுங்கள் என்பது. பாதவம் - மரம்.

171. பெரும்படை மைந்தன்..........

இ-ள்: பெரும்படை மைந்தன் கூற - போர் செய்தற்குரிய சேனைகளையுடைய குமாரனாகிய துரியோதனன் அங்ஙனம் வினவ, தந்தையும் பொருந்தச் சொல்வான் - அவன் பிதாவாகிய திருதராட்டிரன் பின்வருமாறு பொருத்தமாக விடைசொன்னான், இரும் புலி வலையிற் பட்டால் விடுவரோ எயினர் ஆனோர் - பெரிய புலியொன்று தங்கள் வலையிலே அகப்பட்டால் வேடர் விட்டுவிடுவார்களோ, வரம்பில் வெம் சேனையோடும் வளைந்து - அளப்பற்ற கொடிய சேனையோடு போய்ச் சுற்றி நின்று, கரும்பொழுது அகலுமுன்னே - கரிய இராக்காலம் நீங்குமுன்னரே, இனி மாயன் தன்னைக் கொல்வதே கருமம் என்றான் - இனிமேல் கிருட்டிணனை (தப்பவிடாது) கொன்றுவிடுவதே செய்யத்தக்க காரியம் என்றான்.

விடியுமுன்னரே கிருட்டிணனைச் சேனைகொண்டு கொன்றுவிடுதல் தகுதி என்றான் திருதராட்டிரன், என்பது. பொருந்தச் சொல்வான் - மகனது எண்ணத்துக்கு மிகவும் பொருத்தமாக என்பது. பொறியிலகப்பட்ட புலிபோலக் கிருட்டிணன் தனிமையாக எம்மிடம் வந்து சிக்கிக் கொண்டான் என்றவாறு.

172. கண்ணிலா னுரைத்த.........

இ-ள்: கண்ணிலா னுரைத்த மாற்றங் கேட்டலும் - கண்ணில்லாத திருதராட்டிரன் கூறிய இச் சொற்களைக் கேட்டவுடன், விகன்னனும் - அவனது கடைசிப் புத்திரனாகிய விகர்ணன் என்பவன், மண்ணில் காவலோரில் ஆர் இதற்கு முன்பு தூதனை வளைந்து கொன்றார் - இவ்வுலகில் அரசர்களாயுள்ளோரில் எவராவது இதற்கு முன்பு தூதாக வந்த ஒருவரைச் சேனைகொண்டு வளைத்துக் கொன்றார்களா? எண்ணிலா இந்த எண்ணம் எவ்வழிக் கற்றது - மதியற்ற இந்த யோசனை எங்கே கற்றுக்கொண்டாய், என்று வெண்ணிலா முறுவல் செய்து விளம்பலுற்றான் - என்று (விகர்ணன்) வெண்மயமான நிலாப்போன் றொளி செய்யப் புன்னகை புரிந்து கூறினான்.

2390.

இந்தத் திட்டத்தனமான எண்ணத்தை எங்கே கற்றுக்கொண்டாய்? தூது வந்தவனை எந்த அரசராவது கொல்ல நினைப்பார்களா? என்று விகர்ணன் இழித்துக்கூறினான், என்பது. எண்ணிலா எண்ணம் - எண்ணத்தகாத காரியம்-விகர்ணன் துரியோதனனுடன் பிறந்தவருள் கடைசித்தம்பி. இவன் இராவணன் தம்பி விபீஷணன் போல நீதி தவறாதவன்.

173. மூத்தவ ரிளையோர்.........

இ - ள்: மூத்தவர் - வயதின் முதியோர்களையும், இளையோர் - குழந்தைகளையும், வேதமுனிவரர் - வேதங்களை யுணர்ந்த அந்தணர்களையும், பிணியின் மிக்கோர் - மிக நோயுள்ளவர்களையும், தோத்திரமொழிவோர் - தம்மை வணங்குபவர்களையும், மாதர் - பெண்களையும், தூதர் - தூதுவர்களையும், என்று இவரைக் கொல்லின் - ஆகிய இவர்களைக் கொன்றால், பார்த்திவர் தமக்கு வேறு பாவம் மற்று இதனினில்லை - அரசர்களுக்கு இதைப்போன்ற கொடிய பாவம் வேறில்லை, பூத்தெரிதொடையாய் - ஆராய்ந்த மலர்களாலான மாலையணிந்தவனே, பின்னும் நரகினும் புகுவர் என்றான் - பாவத்தை யனுபவிப்பதுமன்றி நரகத்திலும் போயடைவார்கள் என்றான்.

முதியோர் முதலிய இவர்களைக் கொன்றவர் நரகத்திலுறுவர், என்பது. இது விகர்ணன் எடுத்துரைக்கும் மநு தர்ம வாக்கியம், 'பாவம் மற்றிதனினில்லை' என்று கூறிவிட்டுப் 'பின்னு நரகினும் புகுவர்' என்றதனால், இம்மையில் கஷ்டமனுபவித்து மறுமையில் நரகத்திற் கிடந்து வருந்துவர் என்றார். பார்த்திவர் - அரசர்.

174. பழியுடைப் பகைஞரேனும்........

இ - ள்: பழியுடைப் பகைஞரேனும் வஞ்சனை செய்துள்ள பகைவராயிருந்தாலும், தன்பெரும் பதியில் வந்தால் - தனது பெரிய ஊருக்கு வந்தபோது, அழிவுறக் கோறல் பாவம் - அழிந்து போகும்படி கொல்லுதல் தீவினையாகும், ஆண்மையு மன்றாம் என்பார் - (அன்றியும்) அது வீரருக் கழகல்லவென்றும் கூறுவர் பெரியோர், கழிகடற்சேனை சூழக் கங்குலின் வளைந்திட்டாலும் - மிகுந்த கடல்போன்ற சேனையோடு போய் இராக்காலத்திலே சூழ்ந்துகொண்டாலும், எழிலுடைக் கொண்டல் வண்ணன் அகப்படான் எவர்க்கும் என்றான் - அழகுபொருந்திய மேகநிற மேனிக் கிருட்டிணன் ஒருவருக்கும் அகப்படப்போவதில்லை என்றான்.

கொடிய பகைவனாயிருந்தாலும் தன்வீட்டுக்கு வந்தவனைக் கொல்லலாகாது; அன்றியும் கிருட்டிணனை எவ்விதத்திலும் நீங்கள் அகப்படுத்திக்கொள்ள மாட்டீர்கள் என்றான், என்பது. பழியுற பழிவாங்க வேண்டிய அவ்வளவு தீங்குசெய்த; கழி - மிகுதி.



175. வெம்புய வலியான்..........

இ - ள்: வெம்புய வலியால் மாதை விரிதுகி லுரிந்த வீரன் - தனது கொடிய தோள் வலிமையால் திரௌபதியின் பெரிய ஆடையை அவிழ்த்த துச்சாதனன், தம்பியை முனிந்து சீறி - தனது தம்பியாகிய விகர்ணனைக் கோபித்து, தமையனை நோக்கிச் சொல்வான் - தனது அண்ணன் துரியோதனனை பார்த்துப் பின்வருமாறு கூறுவான், வம்பவிழ் அலங்கன் மார்ப - வாசனை வீசுகின்ற மாலையணிந்த மார்பையுடையவனே, இம்பர் மந்தண முரைக்க லுற்றால் - இங்கு நாம் மந்திராலோசனை செய்யும்போது, மற்று யாது சொல்ல இளைஞரை அழைத்தது என்றான் - வேறு இளைஞரை இங்கு என்ன யோசனை கூற அழைத்தாய் என்றான்.

ஆலோசனைச் சபையிலே இளைஞரை ஏன் அழைத்தாய் எனத் துச்சாதனன் கோபித்தான், என்பது. முன் 'துன்று பிணியோர்' என்ற கவியிற் கண்டது போன்று இளையோர் ஆலோசனைச் சபையில் வரத் தகாதவரென்ப. விகர்ணன் கூறிய வார்த்தைகளைத் துச்சாதனன் விரும்பவில்லை யாகலான் வயதிற் சிறியவனாகிய அவனை ஏன் அழைத்தாய் என்று துரியோதனனைச் சீறினான்.

176. அதிரதர் முதலாவுள்ள........

இ - ள்: அதிரதர் முதலாவுள்ள அவனிபர் எதிர் வளைந்து நிற்ப - அதிரதர் முதலாகவுள்ள அரசர்கள் பலர் எதிரிலே சூழ்ந்து நிற்க, முகில் தவழும் கோயில் எங்கும் எரியினை மூட்டி - மேகம் வந்து மூட்டுகின்ற (அதியுயர்ந்த விதுரனது) மாளிகையெங்கும் நெருப்பை மூட்டி, விதுரனும் அவனும் சேர வெந்திட மலைவதல்லால் - விதுரனும் அந்தக் கிருட்டிணனும் ஒன்று சேர எரிந்துபோகும்படி அழிப்பதே யல்லாமல், மதி பிறிதில்லை - வேறு யோசனை வேண்டாம், இன்னே வல் விரைந்தெழுமின் என்றான் - இப்பொழுதே மிக விரைந்து எழுங்கள் என்று கூறினான்.

விதுரனையும் கிருட்டிணனையும் ஒருங்கே வைத்து அவர்கள் இருக்கும் வீட்டுக்குத் தீ மூட்டி விடுவதுதான் நல்ல உபாயமென்றான் துச்சாதனன், என்பது. அதிரதர் - தேர் வீரர். அதிரதர், மகாரதர், சமரதர், அர்த்தரதர் என்ற நால்வகையினர்.

177. செங்கதி ரெழுந்து சீறிற்...........

இ - ள்: கன்னனும் கனன்று சொன்னான் - (அதைக் கேட்டு) கர்ணனும் கோபித்துப் பின்வருமாறு கூறினான், செங்கதிர் எழுந்து சீறிச் செறியிருள் நிற்பதுண்டோ - சிவந்த கதிர்களையுடைய சூரியன்

எழுந்து பரவினால் நெருங்கிய இருளானது எதிர்த்து நிற்குமா? இங்கிவ னிருந்த இல்லில் எரியிட வேண்டுமோ தான் - இங்கே கிருட்டிணன் இருக்கும் வீட்டுக்கு நெருப்பு வைக்கத்தான் வேண்டுமோ, வெம் கணையொன்றினாலே விளிந்திட வென்று மீள்வேன் - எனது வேகமான ஒரு பாணத்தினால் அவன் இறக்கும்படி செய்து வெற்றியோடு திரும்புவேன், கங்குலின் எழுமின் - இவ்விராத்திரியே எழுங்கள் போருக்கு, என்று.

விதுரன் வீட்டுக்குத் தீயிடத் தேவையில்லை; என்னை யனுப்புங்கள்; நானே ஒரு கணையினால் கிருட்டிணனைக் கொன்றுவிடுகிறேன் என்று கர்ணன் முழக்கஞ் செய்தான் என்பது.

178. பதிப்பெயர்ந்தேகி............

இ - ள்: பதிப் பெயர்ந் தேகி நாளைப் பகைவரைக் கூடுமாயின் - (கிருட்டிணன்) இந்நகரத்தை விட்டுப்போய் நாளைக்கு எமது பகைவர்களாகிய பாண்டவர்களைச் சேர்ந்தானாகில், விதிப்பயன் என்ன நம்மை வெம் சமர் வெல்ல வொட்டான் - ஊழ்வினைப் பயன்போல அவன் நம்மை இக் கொடிய யுத்தத்தில் வெற்றிகொள்ள விடான், மதிப்ப தென் வேறு - வேறு ஆலோசனை யென்ன, கள்ள மாயனை மனையிற் கோலிச் சதிப்பதே கருமம் - தந்திரமுள்ள கிருட்டிணனை எமது மாளிகைக் கழைத்து வஞ்சனையாற் பிடித்து வைப்பதே சரியான காரியமாம், என்று சௌபலன் பின்னுஞ் சொல்வான் - என்று கூறிய சகுனி மேலும் கூறுவான்.

கிருட்டிணன் திரும்பிப் பாண்டவரிடம் சென்றால் யுத்தத்தில் நாம் வெற்றிகொள்ள வியலாது. ஆகையால் வஞ்சனையால் நாம் அவனைப் பிடித்து வைக்கவேண்டும் என்று சகுனி கூறினான், என்பது. விதிப்பயனை ஒருவராலும் தடுக்க முடியாதாகையால் கிருட்டிணன் செய்து முடிக்க எண்ணியதையும் தடுக்க முடியாதென்று கருத 'விதிப்பயனென்ன' என்று கூறினார். சதிப்பது - சதி செய்வது, வஞ்சிப்பது.

179. கொல்லுவ தியற்கையன்று..........

இ - ள்: கொல்லுவது இயற்கையன்று - (தூதாக வந்தவரைக்) கொல்லுதல் தகுதியன்று, குழி பறித்து - ஒரு குழி தோண்டி, அரக்கரோடு மல்லரை யிருத்தி - அக்குழியில் அரக்கரையும் மல்லரையும் மறைத்து வைத்து, மேலோர் ஆசனம் வகுத்து - அக்குழியின் மேல் ஒரு ஆசனத்தை அமைத்து, நாளை எல்லிடை அழைத்து வீழ்த்தி - நாளை, பகற் பொழுதிலே அவனை வரவழைத்து அக்குழியில் விழச் செய்து, இகலுடன் விலங்கு பூட்டி - மிக வலிய கை கால் விலங்குகளைப் பூட்டி, தொல் அருஞ் சிறையில் வைத்தல் தூதருக்கு உரிமை என்றான் -



நமது பழமையான வலிய சிறையிலே அடைத்து வைத்தல்தான் தூதருக்குச் செய்யவேண்டியது என்றான் (சகுனி).

தூது வந்தவரைக் கொல்லுதலாகாது; இங்ஙனம் தந்திரமாகப் பிடித்துச் சிறையி லடைத்தல்தான் தகுதி என்று சகுனி உபாயம் கூறினான் என்பது.

180. மாதுல னுரைத்தமாற்ற.........

இ - ள்: மாதுல னுரைத்த மாற்ற மருகனு மிசைந்து - அம்மானாகிய சகுனி கூறியதற்கு மருமகனாகிய துரியோதனனும் உடன்பட்டு, கங்குற் போதிடை அனேக மல்லர் வருக எனப் புகன்று - இராத்திரியே பல மல்லர்கள் வந்து சேருங்கள் என்று கட்டளையிட்டு, தானும் நீதியினிருந்து - தானும் அம்முறைப்படியே இருந்துகொண்டு, தாழ நில அறை சமைத்த பின்னர் - மிக ஆழமாக (ஒரு குழி வெட்டி மறைத்துவிட்டு) நிலவறை கட்டிய பின்னர், ஆதி நூறாயிரம் போர் அரக்கரை அதனுள் வைத்தான் - பழைமையான போரில் வல்ல ஒரு லக்ஷம் இராக்கதர்களை அக்குழியி விருத்தினான்.

துரியோதனன் நிலவறை இயற்றினான், என்பது. நீதியினிருந்து தாழ - என்பதில் 'தனது அரச தர்மத்திலிருந்து குறைவுபட' என்னும் ஓர் அர்த்தம் புலப்படுவதை நோக்குக. இது கவியின் சொல்லழகை யுணர்த்தியவாறு.

181. மல்லர்பப் பரவர்தம்மை.........

இ - ள்: அறிவனை அழைக்க என்று - நுண்ணறிவுடைய கிருட்டிணமூர்த்தியை (மறுநாள்) அழைக்க வேண்டுமென்று, அல்லில் ஓர் கடிகை தன்னில் - அவ்விராத்திரியில் ஒரு நாழிகையில், மல்லர் பப்பரவர் தம்மை மற்றதன் இரட்டி வைத்தான் - மல்லர்களையும் பப்பர நாட்டிலுள்ள மிலேச்சர்களையும் அவ்விராக்கதர் தொகையினும் இரண்டுமடங்கு வைத்தான், வில்லுடை வீரர் தம்மை வேறதி னிரட்டி வைத்தான் - வில்லேந்திய வீரர்களை அதினினும் இரண்டு மடங்கு வைத்தான், பல்படை வல்லோர் தம்மை பதின்மடங் கதனில் வைத்தான் - பல ஆயுதங்கள் தாங்கியவர்களை அதைப்போல் பத்து மடங்கு இருக்கச் செய்தான்.

மல்லர் பப்பரவர் வில்வீரர் மற்றைய ஆயுதம் தாங்கிய வீரர் முதலியோரை அந் நிலவறையினுள் இருத்தினான், என்பது.

182. பெரும்பில வறையை........

இ - ள்: பெரும்பில அறையை வேயின் பிளப்பினால் நிரைத்து மூடி - பெரிய நிலவறையை மூங்கில் கழிகளினால் வரித்து மூடி, அரும்

பெறல் மணிகளால் ஓர் ஆசனம் அதன்மேல் ஆக்கி - அரிதாகக் கிடைக்கக்கூடிய நவரத்தினங்களாலாகிய ஓர் ஆசனத்தை அதன்மேல் வைத்து, சுரும்பிமிர் மாலை தூக்கி - வண்டுகள் மொய்க்கின்ற மாலைகளைத் தோரணமாகத் தூக்கி, தொழிலுடை விதானமேற்றி - வேலைப்பாடமைந்த விதானத்தை அவ்வாசனத்தின்மேல் நிறுத்தி, வரம்பிலா வென்றி வேலான் - அளவற்ற வெற்றியைத் தரும் வேலையுடைய துரியோதனன், மாறிலா வண்ணம் செய்தான் - யாரும் சந்தேகிக்காதவாறு அமைத்து வைத்தான்.

நிலவறையை மூடி ஆசனம் பொறியாக அமைத்து அலங்கரித்து வைத்தான் என்பது. வேலான் மூடி ஆக்கி எற்றி செய்தான் என முடிக்க.

183. அடியவர் மனத்திலுள்ள.........

இ - ள்: அடியவர் மனத்திலுள்ள - தனது பக்தர்களின் மனத்திலிருக்கும், ஆர் இருட் கங்குல் தீர்க்கும் - நிறைந்த அஞ்ஞானமாகிய இருளை அகற்றும், நெடியவன் இருக்க என்று - நீண்ட புகழையுடைய கண்ணபிரான் உட்கார என்று கருதி, நில அறை விரகிற் செய்த கடியவன் இயற்கை அஞ்சி - ஒரு நில அறையை வஞ்சனையாக அமைத்து வைத்த துட்டனாகிய துரியோதனன் குணத்துக்குப் பயந்து, கங்குலும் கடிதிற் போக - இராக்காலமும் விரைவாக நீங்க, படியவர் துயிலும் போக - உலகிலுள்ள மாந்தரது நித்திரையும் ஒழிய, பரிதியும் உதயம் செய்தான் - சூரியனும் உதயமானான்.

பொழுது விடிந்தது, என்பது. துரியோதனனது வஞ்சனைக் கஞ்சி இருள் நீங்கியது என்று வருணித்தார். கங்குல் போக பரிதி உதயஞ் செய்தான் என முடிக்க.

184. சிரந்தரு சுடிகைநாகத்.........

இ - ள்: சிரந் தரு சுடிகை நாகம் - தலையிலே உச்சிக் கொண்டையை உடைய பாம்புகளின், திரள் மணி பலவும் சிந்தி - தொகுதியான பல மாணிக்கங்களைச் சிதறி, நிரந்தரம் அருவி வீழும் நிறம் திகழ் உதயக் குன்றில் - எப்பொழுதும் சிந்தூர அருவி விழப்பெற்று அதனால் செந்நிறம் பூண்ட உதயகிரியில், பரந்தெழும் அருக்கன் - பரவி எழுந்த சூரியன், சூழ்ந்த படரிருட் கங்குல் கண்டு - சுற்றிலும் பரவிய இருண்ட இரவைக் கண்டு, புரந்தரன் கோயிலிட்ட பொங்கொளித் தீபம் போன்றான் - இந்திரனுடைய மாளிகையில் வைத்த மிகுந்த ஒளியையுடைய விளக்கை யொத்தான்.

கிழக்குத் திசையிலே சூரியோதயம் இந்திரன் மாளிகையில் வைத்த தீபம்போன்றிருந்தது, என்பது. நாகச் சுடிகை மணி சிவப்பு - உதய



கிரியிலுள்ள நாகங்களின் மணிகள் அருவியாக இழிதலால் கீழ்த்திசை சிவந்திருந்ததாம். கீழ்த்திசை இந்திரனுக்குரியது. ஆகவே அங்கு இருள் சூழ்ந்திருந்தமை கண்டு இந்திரன் மாளிகைக்கு விளக்கேற்றுவான் போன்று சூரியன் உதயமானான் என்பது.

185. தொடர்ந்தொளிருதய.........

இ - ள்: தொடர்ந் தொளிர் உதய ராகத்தோடு - தொடர்ச்சியாக ஒலிக்கின்ற சூரியோதயப் பண்ணினுடனே, உற நெருங்கி மேன்மேல் அடர்ந்து - பொருந்தி நெருக்கமாக மேலும் மேலும் மொய்த்து, அரி பரந்து காமன் ஆகம வேதம் பாட - வண்டுகள் பரவி சோலைகளிற் பொருந்தின மரங்களின் பகுதிகளிலே ஒலிக்க, தடம் கயல் மலைந்து உலாவ - குளத்திலே மீன்கள் ஒன்றோடொன்று தாக்கித் திரியவும், தாமரை முகமும் காதல் மடந்தையர் முகமும் - தாமரை மலர்களும் காதல்மிக்க பெண்களின் முகங்களும், சேர மணம் பெற மலர்ந்து - ஒருசேர நறுமணத்தைப் பெறும்படி மலர்ந்தன.

சூரியோதயத்தில் தாமரைகள் மலர்ந்தன, என்பது. இது சிலேடையாகத் தாமரை மலரும் பெண்கள் முகமும் ஒத்திருந்தவாறு கூறப்பட்டது. மேலே சொன்னது சூரியன் உதிக்கும்போது வண்டுகள் பாட, குளத்தில் மீன்கள் விளையாட தாமரை மலர்ந்தது, என்பது. பின் சிலேடையாகப் பெண்களின் கண்களை உவமித்தவாறு; தடம் கடல் - அகன்ற கயல்மீன் போன்ற கண்கள், தொடர்ந்து ஒளிர் உதயம் ராகம் தோடு உற நெருங்கி - நெடுந்தூரம் விடாது சென்று விளங்குகின்ற உதய சூரியனை யொத்த செந்நிறமான காதணியைப் பொருந்தச் சமீபித்து, மேல்மேல் அடர்ந்து - மேலும் மேலும் நெருங்கி, அரி பரந்து செவ்வரி பரந்து, காமன் ஆகம வேதம் பாட - மன்மதனது காம சாஸ்திரத்தை வெளியிடுமாறு, மலைந்துலாவ - சென்று சஞ்சரிக்கவும், என்பது.

சிலேடையாவன: தோடு - பூவிதழ், காதணி; அரி - வண்டு, செவ்வரி; கயல் - மீன், கண்கள்; மணம் - நறுமணம், மங்கலம்.

186. இருந்துயி லுணர்ந்து.........

இ - ள்: இருந்துயில் உணர்ந்து வேந்தர் யாவரும் - பெரிய தூக்கத்திலிருந் தெழுந்த எல்லா அரசர்களும், இரவிற் சற்றும் வரும் துயில் இலாத கண்ணன் வாழ் பெருங் கோயில் புக்கார் - அந்த இரவிலே கொஞ்சமும் நித்திரை வரப்பெறாத கண்ணையுடைய துரியோதனன் வாழ்கின்ற பெரிய அரண்மனையைச் சேர்ந்தனர், பெருந்துயில் அநந்தபோகப் பேரணை துறந்த மாலும் - யோகநித்திரை செய்யும் பெரிய படுக்கையாகிய ஆதிசேஷனை விட்டு இங்கு வந்த கண்ணபிரானும், அருந்துயில்

எழுந்து காலை அருங்கடன் முறையிற் செய்தான் - அருமையான நித்திரைவிட்டெழுந்து காலையிற் செய்யவேண்டிய கடன்களை முறைப்படி கழித்தான்.

கிருட்டிணன் காலையில் எழுந்து காலைக் கடன்களை முடித்தான்; துரியோதனனுக்கு அவ்விரவு முழுவதும் துயிலில்லை. காலையில் அவனரண்மனையில் அரசர்கள் வந்து கூடினர், என்பது.

187. மாதவ னிருந்தகோயில்..........

இ - ள்: மன்னன் தூதுவர் - துரியோதனனுடைய தூதுவர்கள், மாதவன் இருந்த கோவில் வந்து - கிருட்டிணன் தங்கியிருந்த விதுரனரண்மனைக்கு வந்து, ஆழியங் கைத் தோன்றலே - சக்கராயுதத்தையுடைய அழகிய கையுடன் பிறந்த அரசனே, துளப மாலே - துளசி மாலையணிந்த திருமாலே, யாதவ குலத்தோர் ஏறே - யாதவர் குலத்துக்குச் சிங்கம்போன்ற தலைவனே, எழுந்தருள்க என்றான் இன்று எம் மேதகும் அரசன் என்றார் - அரசசபைக்கு வந்தருள்க என்று எங்கள் மாட்சிமை பொருந்திய துரியோதன ராசன் கூறினன் என்று சொல்ல, முகுந்தனும் விரைந்து சென்றான் - கண்ணனும் விரைவாகப் புறப்பட்டுப் போனன்.

கிருட்டிணனை வந்தருளுமாறு துரியோதனன் தூதுவரை அனுப்ப அவனும் சென்றான், என்பது. யாதவ குலம் - யது என்ற அரசன் சம்பந்தமான குலம்.

188. கந்தடு களிற்று வேந்தன்..........

இ - ள்: கந்து அடு களிற்று வேந்தன் - கட்டுத் தறியை முறிக்கின்ற யானையை யுடைய துரியோதன ராசன், கண்ணிலா அரசும் - கண்களை யிழந்த (தந்தை) திருதராட்டிரனும், கங்கை மைந்தனும் முதலாவுள்ள மன்னரும் - கங்கை புத்திரனான வீடுமன் முதலிய அரசர்களும், மதி வல்லோரும் - அறிவிற் சிறந்த அமைச்சர்களும், தந்திர வகையினோரும் - சேனைகளின் பிரிவினரும், ஏனை யிளைஞரும் - மற்றும் தம்பிமார்களும், தன்னைச் சூழ - தன்னைச் சுற்றிலும் கூடியிருக்க, இந்திரன் இருக்கையன்ன கோயில் நடு இனிது இருந்தான் - இந்திரனுடைய வாசஸ்தானமாகிய அமராவதி போன்ற தனது சபா மண்டபத்தின் நடுவே கம்பீரமாக வீற்றிருந்தான்.

துரியோதனன் மற்றைய அரசர்களும் தம்பிமாரும் கூடியிருந்த சபையில் கொலு வீற்றிருந்தான், என்பது. தந்திரம் - சேனை, இருக்கை - இருப்பிடம். வேந்தன், சூழ இருந்தான், என முடிக்க.



189. நாமவே லரசரோடு..........

இ - ள்: நாமவேல் அரசரோடும் - அச்சத்தைத் தரும் வேல்தாங்கிய அரசர்களோடும், நால்வகைச் சேனையோடும் - நான்கு வகையான சதுரங்க சேனைகளோடும், மாமுகில் வண்ணன் வந்தான் என்றனர் வரவு கண்டோர் - கரிய மேகம்போன்ற மேனியையுடைய கிருட்டிணன் வந்துள்ளான் என்று வாயிலில் நின்ற காவலர் அறிவித்தனர், வீ மலர்த் தொடையினனும் - வண்டுகள் மொய்க்கின்ற மலர்மாலையணிந்த துரியோதனனும், வேத்திரத் தவரை நோக்கி - கையில் பிரம்பேந்திய அக்காவலாளரைப் பார்த்து, தாமரைத் தடங்கண் மாயன் தன்னையே விடுமின் என்றான் - தாமரை மலர்போன்று சிவந்த அகன்ற கண்களையுடைய கிருட்டிணனை மாத்திரம் உள்ளே வர விடுங்கள் என்று கட்டளையிட்டான்.

சதுரங்க சேனையுடன் வந்த கிருட்டிணனைத் தனியாக உள்ளேவரவிடும்படி துரியோதனன் கட்டளையிட்டான், என்பது. வீ - வண்டு; வேத்திரம் - பிரம்பு; வரவுகண்டோர் - வாயிலில் நின்று வரவை அறிவிக்கும் காவலாளர்கள். கிருட்டிணனைத் தனியாக உள்ளே வரவழைத்துச் சதிசெய்ய எண்ணினன் துரியோதனன்.

190. தன்பெருஞ் சேனை நிற்க..........

இ - ள்: தன் பெருஞ் சேனை நிற்க - தனது பெரிய சேனையானது வெளியே நிறுத்தப்படவும், தண் துழாய் அலங்கலானும் - குளிர்ச்சி பொருந்திய துளசிமாலை அணிந்த கிருட்டிணனும், இன்புற நகைத்து - பார்ப்பவர் மகிழும்படி புன்சிரிப்புக் கொண்டு, வேந்தர் இருந்த பேர் அவையின் எய்த - அரசர்கள் வீற்றிருந்த பெரிய சபையினுள் போகவும், மின்புணர் துவசம் நாக விட நிகர் மனத்தினனும் - ஒளி பொருந்திய (தனது) கொடியிலேயுள்ள பாம்பின் விடத்தையொத்த (கொடிய) மனத்தையுடைய துரியோதனன், அன்பொடு திகிரியானை - சக்கராயுதத்தையுடைய கிருட்டிணனை அன்பொடு (பார்த்து), அதன்மிசை இருக்க என்றான் - அதோ இருக்கும் ஆசனத்தில் வீற்றிருக்க என்று கூறினன்.

பொறி வைக்கப்பட்டு அமைந்திருந்த ஆசனத்தில் வீற்றிருக்கும்படி துரியோதனன் கிருட்டிணனை ஏவினன், என்பது. அவனது சூழ்ச்சியையறிந்த கிருட்டிணன் நகைத்ததை 'இன்புற நகைத்து' என்றார். அலங்கலான் நகைத்து எய்த, மனத்தினன் இருக்க என்றான், என முடிக்க.

191. இறைவ னெழிற்கதிர்.......

இ - ள்: இறைவன் எழிற்கதிர் மணிகள் அழுத்திய தவிசின் இருத்தலுமே - கண்ணபிரான் அழகும் ஒளியுமுடைய இரத்தினங்கள் பதித்த ஆசனத்தில் இருந்தவுடன், நெறு நெறு என கொடு நில வறையிற் புக - (அவ்வாசனம்) நெறு நெறு என்ற சத்தத்துடன் (கீழே) நிலவறையினுள் கொண்டு செல்ல, நெடியவன் அப்பொழுது - அப்போது பெருமையுடைய கண்ணபிரான், மறலி எனத்தகு நிருபன் இயற்றிய விரகை மனத்து உணரா - யமன் என்று சொல்லத் தகுந்த அரசனாகிய துரியோதனன் செய்த சூழ்ச்சியை மனத்தில் நினைந்து, முறுகு சினத்துடன் - மூண்டெழுந்த கோபத்துடன், அடி அதலத்துற முடி ககனத்துற - பாதங்கள் பாதாளத்திற் படவும் முடி ஆகாயத்தில் முட்டவும், (நிமிர்ந்தனன் என அடுத்த கவியில் முடியும்.)

கிருட்டிணன் அவ்வாசனத்தி லிருந்தவுடன் அது முறிந்து நிலவறையில் விழுத்தியது; உடனே அவன் விஸ்வரூப மெடுத்தான், என்பது. நெறுநெறென - ஒலிக்குறிப்பு.

192. அஞ்சின மஞ்சின மென்று.........

இ - ள்: அஞ்சினம் அஞ்சினம் என்று விரைந்து உயர் அண்டர் பணிந்திடவும் - பயந்தோம் பயந்தோம் என்று விரைவில் வந்து மேலேயுள்ள தேவர்கள் துதிக்கவும், துஞ்சினம் இன்று என வன் பணியின் கிளை துன்பம் உழந்திடவும் - இப்பொழுதே இறந்தோம் என்று வலிய பாம்புக் கூட்டங்கள் வருத்தம் எய்திடவும், வஞ்ச மனம் கொடு வஞ்சகன் - வஞ்சனையுள்ள உள்ளமுடைய துரியோதனன், இன்று இடு வஞ்சனை நன்று இது என - இன்று எனக்குச் செய்த சூழ்ச்சி நன்றாயிருக்கிறதென்று, நெஞ்சில் வெகுண்டு - உள்ளத்தில் கோபங்கொண்டு, உலகு ஒன்றும்படி நின்று நிமிர்ந்தனனே - உலகங்களெல்லாம் ஒன்றாகும்படி எழுந்து நிமிர்ந்து நின்றான்.

கிருட்டிணன் விஸ்வரூபம் கொண்டதும் முடி தேவருலகில் தாக்கியது; அடி பாதாளத்தில் தாக்கியது; எனவே தேவர்கள் நெருக்கத்தினால் வருந்தினர் என்றும், பாதாளத்திலே நாகங்கள் தாக்குப்பட்டு வருந்தின என்றும் கூறப்பட்டது. உலகொன்றுபடும்படி - மூவுலகங்களும் முட்டும்படி.

193. மல்லராக்கர் குலத்தொடு........

இ - ள்: மல்லர் - மற்போர் வீரர்களும், அரக்கர் குலத்தொடு - இராக்கத குலத்தவர்களும், பப்பரர் - பப்பர நாட்டு மிலேச்சர்களும், வாளினர் - வாட்போர் வீரரும், வேலினர் - வேல் வீரர்களும், போர் வில்லினர் - போர் செய்தலில் வல்ல வில்வீரர்களும் (ஆக), இ படி துற்ற - இப்பூமி உண்ணும்படியாக, நிலத்து அறை மேவிய வீரர் எலாம் - நிலவறையினுள் மறைந்திருந்த வீரர்களனைவரும், தத்தம் உடல் - தங்கள் தங்கள் தேகத்தை, பல கால் கொடு உதைத்திட - (கண்ணன் தனது) அனேக பாதங்களினால் உதைத்தபோது, தொல்லை இடிக்கு அயர்வு உற்று - துன்பத்தை விளைவிக்கின்ற இடியோசைக்கு சோர்வடைந்து, உயிர் இற்று உறு சுடிகை அரா என - உயிரிழந்துபோகும் மாணிக்கத்தையுடைய பாம்புகளைப்போல (சோர்வடைந்து), கல் என உட்கினர் - ஒன்றுஞ் செய்யத் தோன்றாதவர்களானார்கள்.

கிருட்டிணன் விஸ்வரூபங் கொண்டதும் நிலவறையில் அவனை எதிர்ப்பதற்காகப் பதுங்கியிருந்த வீரர்கள் செய்வ தின்னதெனத் தெரியாது விழித்தார்கள், என்பது. கல் - ஒலிக் குறிப்பு. அச்சத்தால் வாய் குழறிப் பேரிரைச்ச லிட்டனரென்பதாம். பல கால் - விஸ்வரூபத்திற் கொண்ட கால்கள்; பலம் வாய்ந்த கால் எனினும் அமையும்.

194. அற்புத பங்கய.........

இ - ள்: அ குழியின் புடையே - அந்த நிலவறையின் உள்ளே, வில் படை கொண்டவர் - வில்லும் வேறு படைக்கலங்களும் தாங்கி நின்ற வீரர்கள், அற்புத பங்கயம் நல் பதம் உந்தலின் - ஆச்சரியகரமானவையும் தாமரை மலர் போன்று அழகியவையுமான (கண்ணனது) திருவடிகள் உதைத்ததால், தத்தம் நெடுந்தலை அற்று சர்ப்ப தலம் தொறும் போய் விழுந்தன - அவரவரது பெரிய தலைகள் அறுபட்டு நாகங்கள் வசிக்கின்ற பாதாள லோகமெங்கும் போய் விழுந்ததால், வெறு உடலம் கொடு - (தலையில்லாத) வெறும் முண்டங்களை மாத்திரம் உடையராய், முன் பவனன் பொர - முன்னே வாயுதேவன் மோதிய பொழுது, முக் குவடும் துணிபட்டு முடங்கிய பொன் வெற்பு என - மூன்று சிகரங்களும் அறுக்கப்பட்டு கம்பீரமொழிந்து நின்ற மேருமலை போல நின்றனர்.

வீரர்கள் தலையிழந்து முண்டங்களாக நின்றார்கள், என்பது. தன்னைத் தொழுதார்க்கு பிறவிப்பிணியை நீக்குதலின் நற்பதமெனப்பட்டது.

195. மேய்வலி யுற்றெதிர்........

இ - ள்: வாகை பெற கதிர் வாள்கள் எடுத்தவர் (கண்ணனைச் சிறைசெய்து) வெற்றி பெறும் பொருட்டு ஒளி பொருந்திய வாள்களை ஏந்தி நின்ற வீரர்கள், கருமேகம் எழில் நிறம் திருமால் - இருண்ட மேகத்தைப் போன்ற அழகிய நிறத்தையுடைய கண்ணபிரான், மேல் வலியுற்று - (தங்களிலும்) மிகுந்த வலிமை பொருந்தியவராய், கால் விசையின் பட எதிர்வீசி - திருவடிகள் வேகத்துடனே படும்படி எதிர்த்து

வீசி, மோதுதலின் - தாங்குதலினால், பொருகாமர் புயம் துணை போய் - போர் செய்தற்குரிய அழகிய (தமது) கைகளிரண்டையும் இழந்து, கவின் நீல நிறம் வாஸவன் - அழகிய நீலநிறம் பொருந்திய இந்திரனது, நீள் வச்சிரம் படையின் - பெரிய வச்சிராயுதத்தினால், சிறகு ஈர் மால்வரை ஒத்தனர் - இறகு அறுக்கப்பட்ட பெரிய மலைகளைப் போன்றார்கள்.

கைகளை இழந்த வீரர்கள், இந்திரனது வச்சிராயுதத்தினால் சிறகை இழந்த மலைகளைப்போல் நின்றார்கள், என்பது. வாகை - இருமடியாகுபெயர்; பகைவரை வென்றோர் அக்காலத்தில் வாகைப்பூமாலை சூடுதல் வழக்கம்.

196. வெயில்விடு பைத்தலை.......

இ - ள் : அயில்கள் எடுத்தவர் - வேலாயுதங்களை ஏந்தி நின்ற வீரர்கள், வெயில்விடு பைதலை அமளிமிசை துயில் - (மாணிக்கத்தால்) ஒளி வீசுகின்ற படத்தையுடைய தலைகளைக்கொண்ட (ஆதிசேஷனாகிய) சயனத்தின்மேல் துயில்கொள்பவனும், விபுதர்களுக்கு அரியோன் - தேவர்களால் அறிதற்கு எட்டாதவனும் (ஆகிய கண்ணபிரான்), பயில உதைத்தலின் - உறுத்தும்படி உதைத்திடுதலால், அவர்கள் உரத்திடை மலர் பதம் பட்டு உருவா - அந்த வீரர்களது மார்பிலே (கண்ணபிரானது) மலர்போலும் திருவடிகள் பட்டு ஊடுருவி, மயில் கடவி கடவுளர் பகையை முருக்கிய - மயில்மேலேறிச் சென்று தேவர்களது பகைவராகிய சூரபதுமன் முதலிய அசுரர்களை அழித்த, கதிர் மகுடம் வேள் அயில் தொடு குத்திய நெடுவரை ஒத்தனர் - ஒளி பொருந்திய கிரீடத்தையுடைய சுப்பிரமணிய மூர்த்தியின் வேலாயுதத்தினால் துளைக்கப்பட்ட (கிரவுஞ்ச) மலையை ஒத்தார்கள்.

மார்பு துளைக்கப்பட்ட வீரர்கள் முருகக்கடவுளின் வேலாயுதத்தினால் துளைக்கப்பட்ட கிரவுஞ்ச மலையைப்போல நின்றார்கள், என்பது. விபுதர், விசேஷ புத்தி வாய்ந்தவர்கள்; வேள் - விரும்பப்படும் அழகுடையவன், 'மயில் கடவி...' என்ற அடைமொழியால் மன்மதனை விலக்கி நின்றது.

197. மின்சுடிகைப்புய..........

இ - ள் : எஞ்சிய பப்பரர் - (இன்னும் அழியாமல்) மிஞ்சி நின்ற பப்பர நாட்டு வீரர்கள், மின் சுடிகை புயங்கங்கள் - ஒளிபொருந்திய மாணிக்கத்தையுடைய பாம்புகள், வெரு கொளும் வெம் கருடக் கொடியோன் - அச்சங்கொள்ளும் கருடனின் உருவமெழுதிய கொடியை உடையவனாகிய கண்ணபிரான், பற்பம் பதம் வல் நகம்கொடு - தாமரை



மலர் போன்ற திருவடிகளிலுள்ள வலிய நகங்களிலே, எடுத்து உயர் வான் ககனத்து இடலால் - தூக்கி உயர்ந்து அகன்ற ஆகாயத்திலே எறிதலால், முன்பு - முன்னொருபொழுது (ஸ்ரீராமாவதாரகாலத்தில்), கலிக்கு இறை வனத்து இடை வந்து - வானரங்களுக்குத் தலைவனான சுக்கிரீவன் காட்டிலே போய், மொய்ம்பு உணர புகல்போது - (இராமபிரானது) வலிமையை அறிய விரும்பியபோது, என்பு மலைக்கு உறு பண்பை அடுத்தனர் (துந்துபியின்) எலும்பு மலைக்கு நேர்ந்த கதியை அடைந்தார்கள்.

மிஞ்சிநின்ற மிலேச்சரும் அழிந்தனர், என்பது. வாலியைத் தான் கொல்வதாகச் சுக்கிரீவனுக்கு இராமன் சொன்னபொழுது வாலியைக் கொல்லும் வலிமை இராமனுக்கிருக்குமோ எனச் சுக்கிரீவன் சந்தேகப்பட்டான். அவனது சந்தேகத்தையறிந்த இராமன், முன்பு வாலியாற் கொல்லப்பட்ட துந்துபி என்னும் அசுரனது எலும்புக் குவியலை, மலைபோலக் குவிந்து கிடந்ததை, தனது கால்விரலால் எடுத்தெறிந்து சுக்கிரீவன் சந்தேகத்தை நிவிர்த்திசெய்தான் என்பது கதை.

198. மைந்து படைத்துயர்..........

இ - ள் : மைந்து படைத்து உயர் - வலிமை பெற்று மேம்பட்ட, பாண்டவர் சொல்படி வந்த - பாண்டவர்களது வேண்டுகோளின்படி தூதாக வந்த, மலர் கழலால் உந்தி உதைத்து - தாமரை மலரையொத்த திருவடிகளைக் கொண்டு தள்ளி உதைத்தலால், உடலம்பிலம் ஒன்றி புதைய ஒளித்திடலால் - உடம்புகள் நிலவறையினுள்ளே ஒன்றாகப் புதைந்து மறைந்து விடுதலால், வல் குழியில் - கொடிய நிலவறைப் பள்ளத்திலே, திகழ் வெம் கண் அரக்கரும் - பிதுங்கிப் பயங்கரமான கண்களையுடைய இராக்கதரெல்லோரும், முன்பகல் அந்தணன் வந்து புடைத்திட - முற்காலத்திலே அகத்திய முனிவர் போய் அழுத்தியபொழுது, அஞ்சி நிலத்திடைவீழ் - பயந்து பூமிக்குள்ளே ஒடுங்கிய, விந்தமொடு ஒத்தனர் - விந்தமலையைப் போன்றார்கள்.

இராக்கதர் எல்லாரது உடம்புகளும் நிலவறையினுள்ளேயே புதைந்து மறைந்தன, என்பது. "யோகமுறு பேருயிர்க டாமுலைவுறும, லேகுநெறி யாதெனமி தித்தடியி னேறி, மேகநெடு மாலைதவழ் விந்தமெனும் விண்டோய், நாகமது நாகமுற நாகமென நின்றான்" என்ற கம்பர் பாடலையும் நோக்குக.

199. அந்த விடத்தெறி........

இ - ள் : உறி தயிர் குந்தி உண்டவர் - உறியில் உள்ள தயிரை (உயரமான இடத்திலேறிக்) குந்தியிருந்து உண்ட கண்ணபிரான்,

அந்த இடத்து - அவ்விடத்திலே, எறி பம்பரம் ஒத்து உடலம் சுழல - வீசியெறியப்பட்ட பம்பரம்போல உடம்பானது இடைவிடாது சுழலும்படி, பொன் கழல் கொண்டு சுழற்றுதலால் - (தமது ) அழகிய திருவடிகளைக்கொண்டு சுழலச் செய்ததால், குந்தம் எடுத்து எதிர் வந்து மலைந்தவர் - ஈட்டிகளை எடுத்துக்கொண்டு எதிரிலே வந்து போர் செய்த வீரர்கள், முந்து அமரர்க்கு அமுதம்தர - முன்னொரு காலத்திலே தேவர்களுக்கு அமுதம் தருகையில், மை கடல் முன் சுழல - கரிய பாற்கடல் அப்பொழுது சுழிக்கும்படி, சுழலும் மந்தரம் ஒத்தனர் - (தான்) சுழன்ற மந்தர மலையை ஒத்தார்கள்.

எதிரில் வந்து போர் செய்த வீரர்களைக் கண்ணபிரான் பம்பரமாகச் சுழற்றினார் என்பது. திருப்பாற்கடல் வெள்ளை நிறத்ததாயினும், கிருஷ்ணனின் நிழல் பிரதிபலித்ததால் 'மைக்கடல்' - எனப்பட்டது. குந்தம் - வடசொல்.

## 200. முட்டிய தொல்குரு..........

இ – ள்: முட்டிய தொல் குருதி கடல் மல்கலின் - (நிலவறை முழுவதும்) பாய்ந்த பழமையான இரத்தம் நிறைந்ததனால், முட்டி கொள் பல்விரலால் நெடு உடலம் வகிர்ப்பட்டு அதனுள் விழ - (கண்ணபிரானது) குவிந்த பல விரல்களால் (தத்தமது) பெரிய தேகமானது பிளவுபட்டு அந்த இரத்தக் கடலினுள்ளே விழும்படி, நித்தர் செய்கொல் வினையால் - ஆதியந்தமில்லாத அக் கண்ணபிரான் செய்த கொலைத்தொழிலால், வெல் கழல் எ குலம் மல்லரும் - வீரக்கழலைத் தரித்த சிறந்த வீரர்கள் எல்லோரும்; மட்டு அற வல் விறல் உற்று எதிர் செல்கவி - எல்லையற்ற வலிய வீரம் பொருந்திய (இராவணனை) எதிர்க்கச் சென்ற குரங்குகள், மை கடல் எல்லையிலே இட்டன கல் வரை ஒத்தனர் - கரிய கடல் நடுவிலே (அணை) போடப்பட்ட கற்களாகிய மலைகளை ஒத்தார்கள்.

இரத்தக் கடலிற் கிடந்த வீரர்களின் உடல்கள் 'இராமரணை' கட்டுவதற்காகக் கடலுட் போடப்பட்ட கற்களைப்போலத் தோன்றின என்பது.

## 201. எப்புவி நிற்பன........

இ – ள்: மை புயல் ஒத்து - கரிய மேகத்தைப் போன்று, ஒளிர் பச்சை நிறத்தினன் - ஒளியிடுகின்ற பசிய நிறத்தினனான கண்ணபிரான், வர்க்கம் மலர் கழலால் - பலவாகிய தாமரை மலர்போன்ற திருவடிகளால், ஒப்பு அற - நிகரில்லாதபடி, மண்குழி உற்றவரை - நிலவறைப் பள்ளத்தில் இருந்த வீரர்களை, பட ஒத்தி மிதித்தலும் -



அழியும்படி அழுத்தி மிதித்தபொழுது, இ புவனத்து உயிர் முற்றும் - இந்த நிலவுலகத்திலுள்ள பிராணிகளெல்லாம், எ புவி நிற்பன - (இப்பொழுது அழியாமல்) எந்த உலகங்கள் மிஞ்சுவன, எ கிரி நிற்பன - எந்த மலைகள் (அசையாது) நிற்கத்தக்கன, எ கடல் நிற்பன - எந்தக் கடல்கள் (கரைபுரளாது) நிலையாக நிற்க வல்லன?, என்று மயக்குற - என்று எண்ணியும் சொல்லியும் திகைப்படைய, இமையோர் எய்த்து உட்கினர் - தேவர்களும் ஏங்கி அஞ்சினார்கள்.

கிருட்டிணன், நிலவறையிலிருந்த வீரர்களை அழித்தபொழுது எல்லா உலகங்களும், மலைகளும், கடல்களும் பாதிக்கப்பட்டன, என்பது. வர்க்கம் - கூட்டம், வடசொல்.

## 202. கொண்டல் முழக்கென.........

இ – ள்: வண்டு இனம் மொய்த்து எழு - வண்டுகள் கூட்டமாக நெருங்கிப் பறக்கின்ற, வள் துளவம் தொடை - அழகிய திருத்துழாய் மாலையைத் தரித்த, வள் துவரை திருமால் - வளப்பங்கள் நிறைந்த துவாரகாபுரிக்கு அதிபதியான கண்ணபிரான், ஓசை கொண்டல் முழக்கு என - மேகத்ினது இடிபோலவும், அம்புவியை கடல் கொண்டு எழுதற்கு எதிரும் சண்டம் முழக்கு என - அழகிய நிலவுலகத்தைக் கடல் தன்னுளடக்கிக் கொண்டு மேற்கிளர்தற்குப் பொங்குகையில் உண்டாகின்ற பயங்கரமான (பிரளய) ஆரவாரம் போலவும், வல் பவனம் கிளர்ந்த முழக்கு என - வலிய காற்றின் கூட்டத்தாலுண்டாகிற பேரொலிபோலவும், அம் கண் நெருப்பு எழ - தனது அழகிய கண்களில் நெருப்புண்டாகும்படி, அண்டம் முகடு உற நின்று சிரித்தனன் - அண்டகோளத்தினது மேல் முகட்டை அளாவும்படி உயர்ந்து நின்று சிரித்திட்டான்.

விசுவரூபத்தோடு நின்று, கிருட்டிணன், பேரொலியோடு கோபச் சிரிப்புச் சிரித்தான், என்பது. சிரிப்பென்றது வெகுளிபற்றி வந்த கோபச் சிரிப்பை.

## 203. ஒன்றுப டக்கட.........

இ – ள்: அன்று - (விசுவரூபங் கொண்ட) அக்காலத்தில், தனி தனி நின்று மலைத்தருள் - வெவ்வேறாக நின்று போர் செய்தருளுகிற, அம் கைகள் பல பல - அழகிய எண்ணற்றனவான பல கைகள், கடல் அம்பு ஒன்றுபட முகப்பன - கடல் நீரை முழுவதும் ஒருங்கே மொண்டெடுக்கத் தக்கனவும், உம்பர் குலம் தருவும் சென்று முறிப்பன - மேலுலகத்திலுள்ள தேவர்களது சிறந்த கற்பக விருட்சங்களையும் அளாவிச் சென்று முறிக்க வல்லனவும், எண்திசையில் குல சிந்துரம்

எற்றுவ - எட்டுத் திக்குகளிலுமுள்ள திசையானைகளை அப்பால் தள்ள வல்லனவும், எண் குன்றம் உடைப்பன - எட்டுக் குலமலைகளையும் உடைக்க வல்லனவும், பைம் பொன் உரம் கிரி கொண்டு திரிப்பன - பசிய பொன்மயமான வலிய மகாமேருமலையை எடுத்துச் சுழற்ற வல்லனவுமாக இருந்தன.

விசுவரூபங்கொண்ட கிருட்டிணனது திருக்கைகளால் ஆகாதது ஒன்றுமில்லை, என்பது. அஷ்டகுல பர்வதங்கள் - கைலாசம், இமயம், மந்தாம், விந்தியம், நிஷதம், ஏமகூடம், நீலகிரி, கந்தமாதனம் என்பன. கொடியாரை அழித்து நல்லாரைப் பாதுகாக்கும் அருளாதலின் 'மலைத்தருள்' எனப்பட்டது.

204. துகிரிதழ் வைத்தனைப்.........

இ - ள்: தொடர்சில கைதலம் - (விசுவரூபமே மூர்த்தியினது) தொடர்ந்த சில கைகள், துகிர் இதழ் - பவழம்போலச் சிவந்த வாயிலே, நல்வலைகள் - சிறந்த (வலம்புரிச்) சங்கங்களை, வைத்து முழங்கின - வைத்து ஒலிக்கச்செய்தன, அடுசில கைதலம் - (எதிரியைக்) கொல்ல வல்ல சில கைகள், அகிலம் வெருகொள் - உலகம் அஞ்சும்படி, அரிமழு எற்றின - அணிக்கவல்ல கோடாலிப்படையை வீசின, பொரு சில கைதலம் - போர் செய்யவல்ல சில கைகள், புகலும் வடிகணை - (புகழ்ந்து) சொல்லப்படுகின்ற கூரிய அம்புகளையும், உதணம் - மொட்டம்புகளையும், எடுத்தன - ஏந்தின, சிலசில கைதலம்—, திகழ் விசயத்தொடு சிலைகள் குனித்தன - விளங்குகின்ற வெற்றியுடனே விற்களை வளைத்தன.

கிருட்டிணன் விசுவரூபங்கொண்டு தனது கைகளால் பல வேலைகளைச் செய்தான், என்பது. உதணம் - அலகில்லா அம்பு.

205. வெங்கணை யத்திரள்..........

இ - ள்: தண் பல கை தலம் - குளிர்ந்த அநேகங் கைகள், வெம் கணையம் திரள் - கொடிய அம்புகளின் கூட்டமும், திறம் குந்தம் படை - ஒளிபொருந்திய கைவேலாகிய ஆயுதங்களும், வெம்பும் உலக்கைகள் - பயங்கரமான உலக்கைகளும், போர் பொங்கிய வச்சிரம் - போரில் மிகுந்த வச்சிராயுதங்களும், உந்து கலப்பைகள் - செலுத்தப்படுகிற கலப்பைகளும், புண் கமழ் வர்க்கம் - (பகைவரது) தசை தோய்ந்த இருப்பு முட்படைகளின் கூட்டமும், அயில் - வேல்களும், எங்கும் மலைத்து எழு செம் சுரிகை திரள் - எவ்விடத்தும் போர் செய்து சிறக்கின்ற (இரத்தம் படிதலாற்) சிவந்த உடைவாள்களின் கூட்டமும், தண்டம் - கதாயுதங்களும், இவற்றினொடும் - (ஆகிய) இப்படைகளுடனே, தங்கிய சக்கரம் பந்தி தரித்தன - தனக்கே உரிய தான சக்ராயுதங்களின் வரிசைகளையும் அணிந்திருந்தன.



கிருட்டிணன் பலவகையான ஆயுதங்களையும் தரித்திருந்தான், என்பது. தங்கிய சக்கரபந்தி - சக்கரபாணி.

206. மேலெழு மங்கதிர்.........

இ - ள்: சூழ்சில பூகரம் - சுற்றிலுமுள்ள சில அழகிய கைகள், மேல் எழும் அம் கதிர் வாள் - மேல் எழுந்து விளங்குகின்ற அழகிய ஒளியையுடைய வாளாயுதங்களை, உறை போம்படி வீசின - உறை நீங்கும்படி எடுத்து எறிந்தன, வான் புடையே - ஆகாயத்தினிடத்தே, தோல் இனம் ஏந்தின - தோலினாற் செய்யப்பட்ட பலவகைப்பட்ட கேடகங்களைத் தரித்தன, நீள் கவண் ஏந்தின - நெடுந்தூரம் செல்லும் தன்மை பொருந்திய கவண்கற்களை எறிதற்கு எடுத்தன, சோரிகள் சோர்ந்திட - (பகைவரின் உடலில்) இரத்தவெள்ளமொழுக, ஞாலம் எலாம் பொரு தோமரம் வாங்கின - உலக முழுவதையும் அழிக்க வல்ல தோமரமென்னும் ஆயுதங்களை எடுத்துக்கொண்டன, நா ஒரு மூன்றன ஆம் சூழமொடு ஓங்கின - மூன்று நாக்குகளையுடைய சூலாயுதங்களைத் தாங்கி உயர்ந்தன, பாசமொடு ஓங்கின - பாசங்களோடு உயர்ந்தன.

கிருட்டிணன் பல்வகையான ஆயுதங்களைக் கைகளிலே தாங்கி விளங்கினன், என்பது, 'சில பூங்கரம்' எல்லா வாக்கியங்களுக்கும் எழுவாயாக நின்றது.

207. சிலசில கைத்தல........

இ - ள்: சிலசில கைத்தலம்—, அடுகழலில் - (பகைவரைக்) கொல்லுகின்ற திருவடிகளில், பலசெறிகழல் - நெருங்கிய பல வீரக் கழல்களை, கட்டின—, சிலசில கைதலம்—, மறுகுபுயத்திடை சுழல்கிற தோள்களில், செறிதொடை இட்டன - அடர்ந்த பூமாலைகளைத் தரித்தன, சிலசில கைதலம்—, அணிகொள் உரத்திடை - அழகியமார்பினில், (உள்ள) பணிகள் திருத்தின - ஆபரணங்களை ஒழுங்குபடுத்தின, சிலசில கைதலம்—, செறுநர் திகைத்திட பகைவர்கள் திகைப்படைய, விரல்கொடு சுட்டின - (பகைவரை) விரற்களாற் குறித்துக் காட்டின.

கிருட்டிணன் தனது திருக்கரங்களால் இன்ன இன்ன தொழில்களைச் செய்தானென்பது. மணிகொள் எனப் பிரித்து கௌஸ்துப ரத்தினத்தை யணிந்த என்றுமுரைக்கலாம்.

208. மாயிரு ஞாலமே..........

இ - ள்: மாயிரு ஞாலம் எலாம் வெளி ஆய் - மிகப்பெரிய பூவுலகமெங்கும் விளங்குகின்ற, ஒளிர் மரகதம் சோபையுற - ஒளியையுடைய பச்சை இரத்தினத்தின் காந்திபொருந்த, இருபாலும் போய் வளைந்து

வளைந்து - இருபக்கத்திலேயும் சென்று சூழ்ந்து, எதிர்பொரு முனை வெம்படையொடு - எதிர்த்துப் போர் செய்யவல்ல கூரிய நுனிபொருந்திய கொடிய படைக்கலங்களுடனே, ஆயிரம் ஆயிரம் அம்மை - பல்லாயிரக்கணக்கான அழகிய திருக்கைகள், புறப்பட - (விசுவரூபத்தினிடத்துத்) தோன்ற, (அதனைக்கண்டு; அண்டரும் மாதவரும் - தேவர்களும் மேலான தவத்தையுடைய முனிவர்களும், வியந்து பணிந்து - அதிசயித்து வணங்கி, பாயிரம் நான்மறை பாடி - முகவுரையையுடைய நான்கு வேதங்களையும்பாடி, புகழ்ந்தனர் - துதித்தார்கள்.

கிருட்டிணனது விசுவரூபத்தைக் கண்டு தேவர்களும் முனிவர்களும் வணங்கினர், என்பது. பாயிரம் என்றது பிரணவத்தை.

209. ஆரண னேயர........

இ - ள்: ஆரணனே அரனே - பிரமரூபியே உருத்திர மூர்த்தியே, புவனங்கள் அனைத்தையும் அன்று உதவும் காரணனே - உலகங்களனைத்தையும் அக்காலத்திற் படைத்தருளிய மூலகாரண மூர்த்தியே, கருணாகரனே - கருணைக் கிருப்பிடமானவனே, கமலாசனி காதலனே - தாமரை மலரில் உறையும் ஸ்ரீ இலக்குமியின் அன்புள்ள நாயகனே, வாரணம் பொதுவே ஒரு பேர் இட - கஜேந்திரன் என்ற யானை (ஆதிமூலமே என்று) பொதுவாக ஒரு பெயரிட்டுக் கூவி அழைக்க, வந்து அருளும் புயலே - உடனேவந்து அருள்செய்த முகில்வண்ணனே, நாரணனே—, முனியேல் முனியேல் என - கோபிக்காதே கோபிக்காதே என்றுகூறி, நாகர் பணிந்தனர் - மேலுலகவாசிகளான தேவர் பணிந்தனர்.

கிருட்டிணனைக் கோபிக்க வேண்டாமென்று தேவர்கள் வேண்டினார்கள், என்பது. ஆரணம் - வேதம்; பிரமம். நாரணன் - வடசொற் றிரிபு.

210. மாதவனே முனி..........

இ - ள்: மாதவனே—, முனியேல் - கோபித்தருளாதே, எமை ஆள் உடை வானவனே - எங்களை ஆட்கொண்டருளும் பெருமானே, முனியேல்—, யாதவனே - இடையர் குலத்தி லவதரித்தவனே, முனியேல்—, இதயத்திலிருப்பவனே - (அடியார்) மனதில் எழுந்தருளி இருப்பவனே, முனியேல்—, ஆதவனே - சூரியப்பிரகாசம் உடையவனே, முனியேல்—, மதி வெம்கனல் ஆனவனே - சந்திரன் கொடிய அக்கினி என்ற வடிவங்களானவனே, முனியேல்—, நீதவனே - வெண்ணெய் திருடியவனே, முனியேல் முனியேல்—, என - என்றுகூறி, நின்று பணிந்தனர் - (முனிவர்கள்) நின்று வணங்கினார்கள்.



முனிவர்கள் கிருட்டிணனைப் புகழ்ந்து கோபந் தணிந்தருள வேண்டுமென வணங்கினார்கள், என்பது. "மாயிரு ஞால" மென்ற கவியில் தேவர்களும் முனிவர்களும் புகழ்ந்தனரெனக் கூறி, அடுத்த "ஆரணனே" என்ற கவியில் தேவர்கள் புகழ்ந்த விதம் கூறப்பட்டதால், இந்தக் கவியில் "முனிவர்" எனத் தோன்றா எழுவாய் வருவிக்கப்பட்டது. நீதவனே - நீதியுடையவனே என்றுரைப்பினு மமையும்.

211. கங்கை மகன்கதி.........

இ - ள்: கங்கை மகன் - பீஷ்மரும், கதிரோன் மகன் - கர்ணனும், அம்பிகை காதல் மகன் - அம்பிகையின் ஆசை மைந்தனான திருதராட்டிரனும், தனயர் - (அவனது) புதல்வர் பலரும், அங்கு அவையின்கண்ணிருந்த நர அதிபர் - அப்பொழுது சபையிலிருந்த பல அரசர்களும், அடைய எழுந்து அடைவே - எல்லாரும் ஒருங்கே எழுந்திருந்து முறையாக, செம் கை குவித்த சிரத்தினர் ஆய் - சிவந்த கைகளைத் தலைமேற் கூப்பியவர்களாய், உணர்வு ஒன்றிய சிந்தையர் ஆய் - பகுத்தறிவு பொருந்தியவர்களாகி, இன்று எங்கள் பிழைப்பினைப் பொறுத்தருள் என்று - இப்பொழுது எங்கள் பிழைகளை மன்னித்தருள்வாயாக என்று சொல்லி, பணிந்தனர் - வணங்கினார்கள்.

அந்தச் சபையிலிருந்த பெரியார்கள் தங்கள் பிழையைப் பொறுத்தருளுமாறு வேண்டினார்கள், என்பது. 'உணர் வொன்றிய சிந்தை' பகுத்தறிவு.

212. கண்ணபொ றுத்தருள்........

இ - ள்: கண்ண - ஸ்ரீகண்ணபிரானே, மனத்து திண்ணம் உணர்வு ஒன்றும் இலாதவர் செய்த பெரும்பிழை - மனத்தில் உறுதியான அறிவு சிறிதேனும் இல்லாதவர்களாகிய நாங்கள் செய்த பெரிய குற்றங்களை, நீ பொறுத்தருள்—, வெண்ணெய் அருந்திய கள்வ - வெண்ணெயைத் திருடி உண்டவனே, பொறுத்தருள்—, கார்வண்ண - மேகம்போன்ற கரிய நிறத்தை யுடையவனே, பொறுத்தருள்—, வாம - பேரழகு பொருந்தியவனே, பொறுத்தருள்—, வரத - வரங்களைத் தருபவனே, பொறுத்தருள்—, என்று-என்றுசொல்லித் துதித்து, அண்ணல் மலர் கழல் சென்னியில் வைத்து - பெருமையிற் சிறந்த கண்ணபிரானது தாமரை மலர்போன்ற திருவடிகளைத் (தமது) தலைமீது வைத்து வணங்கி, அன்று எதிர் துதித்தனர் - அப்பொழுது முன்னே நின்று வணங்கினார்கள்.

தாங்கள் செய்த பிழையைப் பொறுத்தருளும்படி அச் சபையிலிருந்தவர்கள் ஸ்ரீ கிருட்டிணனை வேண்டினார்கள், என்பது. கண்ணன் கிருஷ்ணனென்னும் வடமொழிச் சிதைவு.

213. தேவரும் வாசவ.........

இ-ள்: தேவரும் - தேவர்களும், வாசவனும் - (அவர்கட்கு அரசனாகிய) இந்திரனும், தவரும் - முனிவர்களும், திசைமுகனும் - நான்முகனாகிய பிரமாவும், நர அதிபரும் - அரசர்களும், யாவரும் - (மற்றும்) எல்லாரும், ஆயிரம் நாமமும் அன்பினோடு எண்ணி இறைஞ்சுதலால் - (கண்ணபிரானது) ஆயிரம் திருப்பெயர்களையும் காதலோடு தியானித்து வணங்கியதால், மூவரும் ஒன்று என நின்றருள் நாதனும் - மும்மூர்த்திகளும் ஒருவரே என்று சொல்லத்தக்க விதமாக நின்றருளிய கண்ணபிரானும், முனிவு தவிர்ந்து அருளா - கோபந் தணிந்தருளி, மீவரும் அண்டம் உறும் திருமேனி - மேன்மைபொருந்திய அண்டகோள முழுவதினும் பரந்த (தனது) விசுவரூபத்தை, மீளவும் ஒடுங்கினன் - (முன்போல) மறுபடியும் சுருக்கிக்கொண்டான்.

ஸ்ரீ கிருட்டிணன் தனது சுயரூபத்தை அடைந்தான், என்பது. ஸஹஸ்ரநாமன் என்பது திருமாலின் பெயர்.

214. தன்னி னுயர்ந்தவர்..........

இ-ள்: தன்னில் உயர்ந்தவர் யாவரும் இலா முகில் - தனக்கு மேம்பட்டவர் எவராயினும் இல்லாத மேகவண்ணனாகிய கண்ணபிரான், சதுர்மறையின்படியே - நான்கு வேதங்களிற் கூறியுள்ள வண்ணமே, எங்கிலும் திருஅடியில் மறைந்திட - பூலோகம் முழுவதும் தனது திருவடியின்கீழ் மறைந்து போகும்படி, இப்படி நின்றிடவும் - இப்படி (பெரிய விசுவரூபத்துடன்) நின்ற பொழுதிலும், பின்னையும் - அவ்வடிவமொடுங்கிய பின்பும் (துரியோதனன்), நெஞ்சு அஞ்சி அயர்ந்திலன் - மனம் பயந்து சோர்ந்திலன், ஆசனமும் பெயர்ந்திலன் - (இருந்த) ஆசனத்தை விட்டு அசைந்தானல்லன், சென்னியிலும் கரம் வைத்திலன் - தன் தலையின்மேற் கைகளை வைத்(து நமஸ்கரித்)தானல்லன், சிறிதும் வண்புகழ் மொழிந்திலன் - கொஞ்சமாவது (கண்ணபிரானது) மேலான கீர்த்தியைக் கூறினானல்லன்.

ஸ்ரீ கிருஷ்ணனுக்குத் துரியோதனன் சிறிதாவது பயப்படவுமில்லை, மரியாதை செலுத்தவுமில்லை, என்பது. 'வண்புகழ் சிறிது மொழிதல்' - உபசாரவார்த்தை கூறல்.

215. தொல்லவை யின்கணி........

இ-ள்: தொல் அவையின்கண் இருந்த நர அதிப - பழமை வாய்ந்த (சந்திரவம்ச) இராசசபையிலே வீற்றிருக்கின்ற அரசனே!, துன் மதியால் எனை நீ கொல்ல நினைந்தது - (உனது) கெட்ட எண்ணத்தினால் என்னை நீ கொல்ல நினைத்தது, நன்று - நல்லது,



என - என்று கூறி, எம்பெருமான் - எனது தலைவனான கண்ணபிரான், வல் திறல் கூறினன் - (தனது) மேம்பட்ட வலிமையைக் கூறலானான், ஒல்லையின் நின் குலம் முற்றும் மடிந்திட - விரைவிலே உனது வம்சம் முழுவதும் அழியும்படி, உற்று மலைந்து - எதிர்த்துப் போர் செய்து, ஓர் கணத்து எல்லையின் - ஒரு நொடிப்பொழுதிலே, வெம் சமர் நூறுவன் - கொடிய சண்டையிற் பொடியாக்குவேன், யாவரும் - (உனது வம்சத்தினர்) எல்லாரும், வான் உலகு ஏறுவர் - (இறந்து) மேலுலகத்துக்குச் செல்லுவார்கள்.

ஸ்ரீ கிருட்டிணன் தனது வலிமையைத் துரியோதனனுக் கெடுத்துச் சொன்னான், என்பது.

216. அஞ்சின நின்னைய........

இ-ள்: அன்று - (நீ நம்மைப் படைத்துணை வேண்டிய) அக்காலத்தில் பெரும் சமர்வாய் வெம் சுடர் ஆயுதம் ஒன்றும் எடுத்திலம் என்று - பெரிய யுத்தத்தில் கொடிய ஒளியையுடைய படைக்கலமொன்றையும் (உனக்கு எதிராக) எடுக்க மாட்டோம் என்று, நின்னுடன் விளம்பியதும் - உனக்குச் சொன்னதும், (திரௌபதியைத் துகிலுரிந்தபொழுது) எதிர் வந்து எஞ்ச மலைந்து உயிர் கொள்ளுதும் என்று - எதிரில் வந்து (நீங்கள்) இறக்கும்படி போர்புரிந்து உயிர் வாங்குவோமென்று, தனித்தனியே பஞ்ச பாண்டவர் கூறிய - தனித்தனியே பஞ்ச பாண்டவருங் கூறிய, வஞ்சின வாசகமும் பழுது ஆம் எனவே - சபத மொழிகளும் வீணாகப் போய்விடுமென்று நினைத்தே, நின்னை அழித்திட அஞ்சினம் - உன்னைக் கொல்ல நாம் தயங்கினோம்.

எனது வார்த்தையும் பாண்டவர் வார்த்தையும் தவறாமலிருப்பதற்காகவே நான் உன்னைக் கொல்லாமல் விட்டேன், என்பது.

217. என்றுரை யாடி.........

இ-ள்: என்று உரை ஆடி - என்று வீரவார்த்தை சொல்லி, நெடுங்கடல் வண்ணன் - பெரிய கடல்போலுங் கருநிறமுடைய கண்ணன், எழுந்தருள - (சபையிலிருந்து) செல்ல, (அப்பொழுது) பணி சேர் கொடியோனை அலார் எ முடிமன்னரும் - பாம்பின் கொடியையுடைய துரியோதனனை யொழிந்தவராகிய கிரீடாதிபதிகளான எல்லா அரசரும், பிறகே சென்றனர் —, (அப்பொழுது கண்ணன்) நின்று —, உபசாரம் உரைத்து —, அவர் தம்மை நிறுத்தி - அவ்வரசர்களை யெல்லாம் பின்தொடராது நிறுத்தி, அனந்தரமே - அதன் பின்பாக, வல் திறல் அங்கர் பிரானொடு - மிக்க வலிமையையுடைய அங்கநாட்

டாசனான கர்ணனுடனே, ஒரு வாசகங் கூறினன் - (இரகசியமாக) ஒரு வார்த்தையைக்கூறினான். அதனைப் பின்வரும் மூன்று கவிகளாற் காண்க.

மன்று - வினைமாற்று. அசையுமாம்.

218. வண்மையி னானுயர்.........

இ - ள்: வண்மையினால் உயர் - கொடையினால் சிறந்த, அங்கர் குல அதிப! - அங்க தேசத்தி லுள்ளாரது கூட்டத்துக்குத் தலைவனே, மதி குலம் வாழ்வு உற வந்து - சந்திரகுலம் சிறப்படையும்படியாக (அம்மரபில்) வந்து பிறந்து, உண்மையினால் உயர் - சத்தியத்தாற் சிறந்த, மன்னர் ஐவரும் - பாண்டவ ராசர் ஐந்துபேரும், உன்னில் உனக்கு இளையோர் - ஆலோசித்துப் பார்க்குமிடத்து உனக்குத் தம்பியராவர், (அது எப்படியெனில்) பெண்மையினால் உயர் குந்தி வயிற்றிடை - பெண்மைக் குணங்களிற் சிறந்த குந்தி தேவியினது வயிற்றிலே, பெருமையினால் இதயம் திண்மையினால் உயர் நின்னையும் - பெருந்தன்மையினாலும் மனவுறுதியினாலுஞ் சிறந்த உன்னையும், அன்போடு - அன்புடனே, தினகரன் - சூரியன், நல்கினன் - (பஞ்சபாண்டவர்களுக்கு முன்பு) பெற்றான்.

இதயத் திண்மை - தைரியம். வண்மை - இரப்போர்க்கு இல்லையென்னாது கொடுத்தல்.

219. ஏயு நெடுங்கொடி.........

இ - ள்: (சூரியன் உன்னைப் பெற்றபின்பு குந்திதேவியிடத்தில்) ஏயும் நெடு கொடி முரசு உடையோனை - பொருந்திய பெரிய முரசக் கொடியையுடைய உதிட்டிரன், எழில் தருமன் - அழகிய எமதரும இராசன், தர - உண்டாக்க, வாயு—, வீமனை - வீமசேனனை, வழங்கினன் - பெற்றான், வாசவனும் - இந்திரனும், விஜயனை - அருச்சுனனை, நல்கினன் - பெற்றான், ஆயுள் நிகழ்த்திடு வேதம் மருத்துவர் - ஆயுளைப் பற்றிக் கூறுகிற வேதத்தை யறிந்த தேவ வைத்தியர்களான அசுவினி தேவர்கள், செம் தேயு எனும் திறல் நகுலனையும் சகதேவனையும் - செந்நிறமுள்ள அக்கினி எனத்தகும் பராக்கிரமத்தையுடைய நகுலன் சகாதேவன் என்னும் இரட்டைப் பிள்ளைகளை, பெரிது அன்பொடு அளித்தனர் - மிகுந்த அன்புடனே பெற்றார்கள்.

மருத்துவர் - மருந்தின் தன்மையறிந்து செய்து தருபவர், என்பது. வெற்றிக்கு ஏற்ற கொடி என்பார் - 'ஏயு நெடுங்கொடி முரசு' எனப்பட்டது.

220. அந்தணன் முன்தரு..........

இ - ள்: அந்தணன் - துருவாச முனிவன், முன் தரு - முன்னே (கன்னிகையாயிருக்கையில்) உபதேசித்த, மந்திரம் ஐந்தினில் - ஐந்து



மந்திரங்களால், அறுவரையும் - உங்க ளாறுபேரையும், கடவுள் குந்தி பயந்தனள் — தேவாம்சமுள்ள குந்தி பெற்றாள், யான் இனி பல கூறுவது என் - நான் இனிமேல் பலவார்த்தை பேசுவதில் என்ன பயன்?, உங்களில் நீர் இந்த நிலம் பெறுவீர் - உங்களுக்குள்ளே நீங்கள் இந்த இராச்சியத்தைப் பெற்றுக்கொள்ளக்கடவீர், தவிர்கின் - அங்ஙனம் பெறாது விட்டால், இனி பெற உரியார் வேறு யார் - இனிப் பெறுதற்கு உரியவர் வேறு யாவர், எவருமிலர்—, (ஆதலால்) இனி - இப்பொழுது, நும்பியர் தம்மொடு வந்து சேர்க - உன் தம்பிமாரோடு வந்து சேருவாயாக, என - என்று, மாயன் மொழிந்தனன் - கண்ணன் (கன்னனுக்குக்) கூறியருளினன்.

கண்ணன் தந்திரமாகக் கூறி மித்திரபேதஞ் செய்தமை நோக்கி இங்கே கண்ணனை 'மாயன்' என்றார்.

221. கன்றால் விளவின்..........

இ - ள்: கன்றால் விளவின் கனி உகுத்தும் - ஒரு மாயக் கன்றைக் கொண்டு (ஒரு வஞ்சனை) விளாமரத்தின் பழங்களைக் கீழே சிந்தும்படி செய்தும், குழையால் நிரையின் கணம் அழைத்தும் - வேய்ங்குழலிசையால் பசுக்களின் கூட்டத்தை ஒருங்கு வரவழைத்தும், குன்றால் மழையின் குலம் தடுத்தும் - கோவர்த்தன மலையினால் மேகங்களின் கூட்டத்தை மறித்தும், குலவும் - மகிழ்கின்ற, கோபாலா - கோபாலனென்னும் அழகிய நாமமுடையவனே, இன்று எனது பிறப்பு உணர்ந்தேன் - இப்பொழுது (நீ சொல்ல) என்னுடைய பிறந்த வரலாற்றை அறிந்தேன், என்று - என்ற காரணத்தினால், அன்பு உருகி - அன்பினால் மனங்கரைந்து, எம்பியர்பால் - என் தம்பியரான பாண்டவரிடம், சென்றால் - (துரியோதனனை விட்டு) போனால், நீ அறிய—, செகத்தார் - இவ்வுலகத்துச் சனங்கள், என்னை—, சிரியாரோ - (பரிகாசம்பண்ணி) சிரியாதிருப்பார்களோ? [சிரிப்பரே என்றபடி].

222. ஆரென் றறிய..........

இ - ள்: (துரியோதனன்) ஆர் என்று அறிய தகாத எனை - இன்னாரென்று அறிவதற்குத் தகுதியில்லாத என்னை, அரசும் ஆக்கி - இராஜகுலத்தவனென வைத்து, முடிசூட்டி - கிரீடாபிஷேகமுஞ் செய்வித்து, தனது சீரும் திறமும் பெரு திருவும் - தனக்குரிய சிறப்புக்களையும் அதிகாரத்தையும் பெரிய செல்வத்தையும், எனக்கே தெரிந்து அளித்தனன் - எனக்கு மாத்திரம் தன் மனமறிந்து கொடுத்தான், (அப்படியிருக்க) இன்று - இப்பொழுது, பார் அறிய - உலகத்தவர் யாவரும் அறியும்படி, நூற்றுவர்க்கும் (துரியோதனாதியர்) நூறு பேருக்

கும், பழிதீர் வென்றி பாண்டவர்க்கும் - பழிப்புக் கிடமில்லாத வெற்றியை யுடைய பாண்டவர்களுக்கும், போர் என்று - யுத்தம் நேர்வதென்று, அறிந்தும் - தெரிந்திருந்தும், செய்நன்றி போற்றாதவரின் - செய்த உபகாரத்தை நினையாது மறப்பவர்போல, போவேனோ ? - ( துரியோதனனை விட்டுச் ) செல்வேனோ ? [ஒருபோதும் செல்லமாட்டேன் என்றபடி, ]

'பழிதீர் வென்றி' என்ற அடை, பாண்டவர் மேல் ஏற்றிக் கன்னன் கூற்றாகக் கவிகூறுவதால், பாண்டவர்பால் கன்னனுக்கு அபிமான முண்டாயிற்று என்பது விளங்கும்

223. இரவிக்குரிய.........

இ - ள் : இரவிக்கு உரிய திருமதலை - சூரியனுக்குரிய செல்வப் புதல்வனான கர்ணன், இ ஆறு உரைக்க - இவ்வாறு சொல்ல, இசை வண்டு விரவி பயிலும் துழாய் முடியோன் - இசைபாடுகின்ற வண்டுகள் கலந்து மொய்க்கப்பெற்ற திருத்துழாய் மாலையையணிந்த திருமுடியை யுடைய கண்ணன், வேறு ஓர் மொழியும் விளம்பாமல் - வேறொரு வார்த்தையும் பேசாதுவிட்டு, உரம் வில் தட தோள் உரவோனை - வலிமை மிக்க வில்லை ஏந்திய பெரிய தோள்களின் வலிமையையுடைய அக்கன்னனை. ஏகு என்று அருளி - நீ செல்வாயாக வென்று அன்போடு அனுப்பிவிட்டு, ஒரு சார் வெம்புரவித் தாமா நின்றானை - (அங்கு) ஒரு பக்கத்தில் நின்றவனாகிய ( போரிற் ) கொடிய அசுவத்தாமனை, வருக என்று அழைத்து - வருவாயாக வென்று அருகிற் கூப்பிட்டு, புகல்கின்றான் - இரகசியமாக ( சில வார்த்தை ) கூறுகின்றான்.

அவை பின்வருமாறு :

224. போயே கானம்........

இ - ள் : சேயே அனைய - முருகக் கடவுளையே ஒத்த, சிலைமுனிவன் சேயே - வில்லாசிரியனாகிய துரோணாசாரியனது புத்திரனே, கானம் பல போயே திரிந்து - காடுகள் பலவற்றிற் சென்றுகொண்டே அலைந்து, புகன்ற விரதம் பொய்யாதோர் ஆயே - (வனவாசம் அஞ்ஞாத வாசங்களைப்பற்றிக்) கூறிய விரதமொழியைத் தவறாமல் நிறைவேற்றினவர்களாகியே, வந்த - மீண்டுவந்த, பாண்டவர்கள் - பாண்டுபுத்திரர்களுக்காக, ஐந்து ஊர் வேண்ட - ஐந்து ஊராயினும் ( கொடுக்கும்படி ) பிரார்த்திக்க, மறுத்தற்கு - ( துரியோதனன் கொடுக்கமாட்டேனென்று) தடுத்துச் சொன்னதற்கு, நாளை செருகளத்தில் - இனி விரைவில் நடக்கும் போர்க்களத்தில், நீயே கரி - நீயே சாட்சியாவாய், என்று—, எடுத்து உரைத்தான் - (அசுவத்தாமனை நோக்கி) எடுத்துக்



கூறியருளினான், நெடியோன் - எல்லாப் பெருமையு முடையவனும், துளபமுடியோன் - திருத்துழாய் மாலையையணிந்த திருமுடியையுடையவனுமாகிய கண்ணபிரான்.

225. ஆனவுன தாண்மைக்கு...........

இ - ள் : ஞான அதிபனே - அறிவுக்குத் தலைவனாக வுள்ளவனே, ஆன - (எப்பொழுதும்) நீங்காத, உனது ஆண்மைக்கு - உனது பராக்கிரமத்துக்கு, நிகர் - சமானமாக, அவனிதலத்தில் - பூலோகத்தில், வேறு உண்டோ - வேறு யாரிடத்திலேனும் பராக்கிரமமுள்ளதோ? போர் களத்தில் யுத்தகளத்திலே, நாகம் கொடியோன் - பாம்புக்கொடியை யுடைய துரியோதனன், உன்னை—, பணிந்து - வணங்கி, சேனாபதி ஆகு என்றாலும் - சேனைத்தலைவனாக வேண்டுமென்று சொன்னாலும், செலுத்தேன் என்று - அச் சேனைத் தலைமையை நடத்தமாட்டேனென்று, நீ மறுத்தி ஆனால் - நீ தடுத்துவிடுவாயானால், ஐவரும் - பாண்டவரைந்து பேரும், உய்வர் - பிழைத்திடுவார்கள், அவர்பால் உனக்கும் அன்பு உண்டே - அப்பாண்டவர் பக்கல் உனக்கு அன்புள்ளதன்றோ ? (எ - று)

அசுவத்தாமனை நோக்கிக் கண்ணன் கூறியவற்றிலிருந்து அசுவத்தாமனது பராக்கிரமம் விளங்கும்.

226. ஆயோதனத்தி........

இ - ள் : இ ஆறு - இந்தப்படி, மாயோன்-கண்ணபிரான், ஆயோதனத்தில் அடல் அடரி ஏறு அனையான் தன்னை - போரில் வலிமையை யுடைய ஆண்சிங்கத்தைப் போன்றவனான அசுவத்தாமனை (விழித்து), உரைத்து - கூறி, தன்விரலின் மணி ஆழியை - தனது கைவிரலிலுள்ள இரத்தினமிழைத்த மோதிரத்தை, மண்ணிடை வீழ்த்தான் - பூமியிலே (தானாக விழுந்ததுபோலத் தோன்ற) நழுவவிட்டருளினான், (அப்பொழுது) அதனை அம்மோதிரத்தை, சேயோன் - முருகக்கடவுள் போன்ற அசுவத்தாமன், எடுத்து - கையிலெடுத்து, அவன் தன் செம் கை கொடுக்க-அக் கண்ணபிரானது சிவந்த கையிலே கொடுத்திட, (எம் பெருமான்) வாங்காமல் - (உடனே கையில்) வாங்கிக் கொள்ளாமல், தூயோய் - பரிசுத்தியுடையவனே! அகல் வான் மீது - பரந்த ஆகாயத்தில், பருதிதனை - சூரியனை, ஊர்கோள் - மண்டலம், சூழ்ந்தது - சுற்றிற்று, என்று - என்று சொல்லி.

227. வரித்தாமரைக்கட்.........

இ - ள் : வரி (சிவந்த) இரேகைகளையுடைய, தாமரை - செந்தாமரை மலர்போன்ற, கண் - திருக்கண்களையுடைய, திரு நெடுமால் -

சிறந்த பெரிய கண்ணபிரான், வான்வாய் நோக்க - ஆகாயத்தினிடத்தைப் பார்க்க, வரிவில் கை பரித் தாமாவும் - கட்டமைந்த வில்வித்தையில் வல்ல கையையுடைய அசுவத்தாமனும், ஆழியுடன் - (கையிலெடுத்த) மோதிரத்துடனே, பரிதி வடிவந்தனை பார்த்தான் - சூரியனது உருவத்தைப் பார்த்திட்டான், (இச்செயல்களைப் பார்த்து) இருந்த பேரவையோர் - பெரிய சபையிலிருந்தவர்களெல்லாரும், கிரிதாழ் கவிகை கருகள்வன் - கோவர்த்தனமலையாகிய கவிந்த குடையையேந்திய கருநிறமுள்ள மாயவனாகிய கண்ணன், கிளர்நூல் முனிவன் மைந்தனையும் - விளங்குகின்ற முப்புரி நூலையுடைய துரோணாசாரியனது புத்திரனான அசுவத்தாமனையும், பிரித்தான் - (துரியோதனனின்றும்) பேதப்படுத்தினான், அவனும் - அவ்வசுவத்தாமனும், சூழ்உற்றான் - சபதஞ் செய்து கொடுத்தான், என்றார் - என்று (தங்களுக்குள்) கூறினார்கள்.

கண்ணனது இச்செய்கை, அசுவத்தாமன் பூமியைத்தொட்டு ஆகாயத்தை நோக்கிச் சபதஞ்செய்தவாறு தோற்றிற்று. இதனால், கௌரவர் யாவர்க்கும் நம்பிக்கை கெடும்படி சூழ்ச்சி செய்ததுபோல் புலனாயிற்று.

228. தனிவந்தகலுங்.........

இ—ள்: இடி எறு அன்னான் - பேரிடியையொத்த (கொடியவனாகிய) துரியோதனன், துனிவந்து - கோபம்மிகுந்து, அரசர்முகம்நோக்கி - மற்றையரசர்களது முகத்தைப்பார்த்து, தடசாபம் முனிவன் புதல்வன் - பெரிய வில்வித்தையில் வல்ல துரோணாசாரியனது புத்திரனான அசுவத்தாமா, தனி வந்து அகலும் தூதனை - தனியேவந்து செல்கின்ற தூதனான கிருஷ்ணனை, தானேபோய் அணுகி - தானாகவே போய்ச்சேர்ந்து, மோதிரம் தொட்டு - (அவனது) மோதிரத்தைக் கையில்வாங்கி, முன்னர் - எதிரில், அரு சூள - அருமையான பிரதிக்ஞையை, மொழிகின்றான் - சொல்லுகின்றவனானான், (ஆகையால்) இனிவந்து உறவு ஆய் நின்றாலும் - (இவன்) இனிமேல்வந்து நட்புடையவனாய் நின்றாலும், இவனை எங்ஙன் தெளிவது - இவனை எவ்வாறு நம்புவது?, என் - என்று சொன்னான்—.

கண்ணன் அசுவத்தாமாவைக் கூப்பிட்டதும் அசுவத்தாமன் பூமியினின்று மோதிரத்தை எடுத்ததும், தூரத்திலிருந்துபார்த்த துரியோதனனுக்குத் தெரியாவாதலால், இவ்வாறு கூறினான். தானே அணுகி என்பதற்கு - நமது கட்டளை இல்லாமல் தானே சென்று என்றும் கூறலாம்.

229. துளியார் மதுவின்.........

இ—ள்: துளி ஆர் - துளித்தல் பொருந்திய, மதுவின் - தேனையுடைய, வலம்புரிதார் - நந்தியாவட்டைப் பூமாலையையுடைய, துரி



யோதனன்—, தான்—, சொல்லியதும் - சொன்னவார்த்தையும், ஒளி ஆர் அவையில் - விளக்கம் பொருந்திய அச்சபையிலே, வாள் வேந்தர் - ஆயுதங்களையுடைய அரசர், ஒருவர்க்கு ஒருவர் உரைத்தனவும் - ஒருத்தருக்கு ஒருத்தர் சொன்ன வார்த்தைகளும், களியானை அனான் செவிபடலும் - மதக்களிப்பையுடைய ஆண்யானையைப்போன்ற அசுவத்தாமனது காதுகளிற் கேள்விப்பட்டவளவிலே, (அவன்) சித்தங்கலங்கி - மனம் நிலைகுலைந்து, இவர் என்னை தெளியாவண்ணம் - இவர்கள் என்னை நம்பாதபடி, திருமால் - கண்ணன், பேதித்தான் - மாறுபாடு செய்தான், என்றே சிந்தித்தான் - என்று எண்ணினான்.

230. தண்ணந் துளப.........

இ-ள்: தண் அம் துளபம் முடியோனும் - குளிர்ந்த அழகிய திருத்துழாய் மாலையை யணிந்த முடியையுடைய கண்ணனும், இளையோன் தனக்கு விடை நல்கி - அசுவத்தாமனுக்கு விடைகொடுத்தனுப்பி, (அதன்பின்) தனித்து அங்கு இருந்து - அங்கு ஓரிடத்தில் தனியேயிருந்து, தன்மனத்தின் எண்ணம் பலித்தது என மகிழ்ந்தே - தன் மனத்திற் கருதிய கருத்து முழுவதும் நிறைவேறி விட்டதென்று மகிழ்ச்சிகொண்டே, விண்நின்ற அமரர் மிக துதிக்க விதுரன் மனையில் மேவியபின் - ஆகாயத்திலே வந்துநின்ற தேவர்கள் மிகுதியாகத் துதிசெய்யாநிற்க விதுரனது மாளிகையில் எழுந்தருளியபின்பு, திண்ணம் கடவுள் குலம் அரசன் வரும் ஆறு அறிந்து சிந்தித்தான் - கலங்காத மனவுறுதியையுடைய தேவர் கூட்டத்துக்கு அரசனான இந்திரன் அருகில் வரும்படி ஆலோசித்து நினைத்தான்.

கண்ணன் தன் எண்ணம் பலித்ததை நினைத்துச் சந்தோஷங் கொண்டான். விதுரன் மனையில் தனியேயிருந்து இந்திரனை வருமாறு சிந்தித்தான், என்பது.

231. அந்தக் கணத்தில்.........

இ-ள்: அந்தக் கணத்தில் - அங்ஙனம் வரும்படி நினைத்த அந்த நிமிஷத்திலேயே, வந்து—, இறைஞ்சும் - வணங்கின, ஆகண்டலனை - இந்திரனை, முகம் நோக்கி - முகத்தைப் பார்த்து, கந்தம் துளபம் முடியோனும் - நறுமணத்தையுடைய திருத்துழாய் மாலையைத் தரித்த திருமுடியையுடையவனான கண்ணனும், கண்ணும் கருத்தும் களிகூர - (தனது) கண்களும் மனமுங் களிப்புமிக, தந்தம் தொழிலின் அரிசுமந்த தவிசின் இடையே உடன் இருத்தி - யானைத் தந்தத்தாலமைந்த விசித்திர வேலைப்பாட்டையுடைய சிங்கஞ் சுமந்த வடிவமாகச் செய்யப்பட்டதொரு ஆசனத்தினிடத்திலே உடனே (அவனை) வீற்றிருக்கச்

செய்து, முந்த கருதுகின்ற வினை முடிப்பான் - பிரதானமாகத் தான் நினைக்கின்ற காரியத்தை நிறைவேற்றுதற் பொருட்டு, உபாயம் மொழி கின்றான் - தந்திரத்தைக் கூறுகின்றவனானான்.

மைந்தனுக்கு நன்மை செய்யும்பொருட்டுத் தந்தையாகிய இந்திரனை வரவழைத்தான், என்பது.

232. கிரியின் சிறகை.........

இ - ள் : கிரியின் சிறகை அரிபடையாய் - மலைகளின் இறகுகளை அறுத்திட்ட வச்சிராயுதமுடையவனே !, கேண்மோ - (யான் சொல்வதைக்) கேட்பாயாக, ஆண்மை களம் மீதில் - பராக்கிரமத்தைக் காட்டுதற்கிடமான போர்க்களத்து முனையில், வரி வெம் சிலை கை விசயனுக்கு மாறு ஆய் - கட்டமைந்த கொடிய வில்லையேந்திய கையையுடைய அருச்சுனனுக்குச் சத்துருவாகி, முனிந்து வருகின்ற - (நெடுநாளாக) கோபங்கொண்டு வருகின்ற, எரியும் கனல் வாய் விடம் அரவு ஒன்று - பற்றியெரிகிற நெருப்புப்போன்ற நுனியையுடையதொரு விஷப்பாம்பு, இவனுக்கு உற்ற பகை ஆன அரியின் புதல்வன் தனக்கு - இவ்வருச்சுனனுக்கு மிகுந்த பகையாளியாகிய சூரியபுத்திரனான கர்ணனுக்கு, ஒரு பேர் அம்பு ஆகியது - ஒரு பெரிய அஸ்திரமாயமைந்திருப்பதை, அறியாதார் ஆர் - (உலகத்தில்) அறியாதவர் எவர்? [எவருமில்லை; பிரசித்தமாக யாவரும் அறிவர் என்றபடி.]

எரியுங் கனல்வாய் அரவு என்பதற்கு - காண்டவ வனத்தில் எரிகிற அக்கினியினின்று எழுந்த அம்பென்றும் உரைக்கலாம்.

233. கன்னன் விசயன்.........

இ - ள் : (அந்த அம்பைக்கொண்டு) கன்னன் விசயன் தனைக் கொல்லின் - கர்ணன் அருச்சுனனைக் கொன்றுவிட்டால், கடல் பார் முழுதும் - கடல்சூழ்ந்த பூலோகம் முழுவதும், கண் இல்லா மன்னன் புதல்வன் தனக்கே ஆம் - திருதராட்டிர புதல்வனான துரியோதனனுக்கே உரியதாய்விடும், (அதுவுமல்லாமல் அருச்சுனன் இறந்தால்) ஒழிந்தோர் தாமும் மடிந்திடுவர் - மற்றப் பாண்டவர்களும் இறந்துவிடுவார்கள், (இவ்வாறு) முன்னம் சூதில் மொழிந்த பகை முடியாது இருக்கின் - முன்னே சூதுபோர் நிகழ்ந்தபொழுது (அருச்சுனன் முதலியோர் கர்ணன் முதலியோரைக் கொல்வதாகக்) கூறின சபத வார்த்தை நிறைவேறாமலிருந்தால், அவர்க்கு அன்று - (அருச்சுனன் முதலிய) அப் பாண்டவருக்கு மாத்திரமே பழியாகாது, நின் நெஞ்சு அறிய யான் அறிய - உன் மனம் அறியவும் நான் அறியவும், நினக்கே வசையும் நிலையும் ஏ - (அருச்சுனனது தந்தையான) உனக்கே பழிப்பும் (அழியாது நிச்சயமாய்) நிலைநிற்பதாகும். ஏற்றேகாரம் - தேற்றம்.



கண்ணன் இந்திரனைத் தன்வழிப்படுத்துவதற்கு இவ்வாறு கூறினான், என்பது.

234. கவசங் கனக.........

இ - ள் : (தான் பிறந்தபொழுதே உடம்புடன் பிறந்த) கவசம் - கவசமும், குண்டலம் - பொன்மயமான குண்டலமென்னும் காதணியும், என்ற இரண்டு - என்று சொல்லப்பட்ட இவ்விரண்டையும், புனையின் - தரித்திருப்பானானால், கற்ப அந்த திவசம் பொரினும் - கல்பகாலத்தின் முடிவுநாள் வரையிற் போர் செய்தாலும், கன்னன் உயிர் செகுப்பார் - கன்னனது உயிரை ஒழிப்பவர், மண்ணில் சிலர் உண்டோ - பூமியில் (யாரேனும்) சிலருளரோ? [எவருமில்லை], (ஆதலால்) இளைஞர் அவசம் உற - பந்துக்கள் (சோகத்தாற்) பரவசத்தை யடையவும், துணைவர் அரற்ற - உடன்பிறந்தவர்கள் கதறிப் புலம்பவும், களத்தில் - போர்க்களத்தில், அடு குரங்கு துவசம் படைத்தோன் - (பகையை) அழிக்க வல்ல குரங்கின் வடிவத்தை யெழுதின கொடியைப் பெற்ற அருச்சுனன், படும் - (கன்னனால்) இறப்பான், பயந் துணைவர் - அவனைப் பெற்றவனும் (எனக்குச்) சிநேகிதனுமாகிய இந்திரனே, இன்னே சொன்னேனே - (அதனை முன் சாக்கிரதையாக) இப்பொழுதே (உன்னிடங்) கூறிவிட்டேன்.

குரங்குக் கொடி - காண்டவ தகன காலத்தில் அக்கினி தேவனால் தேருடன் அருச்சுனனுக்குக் கொடுக்கப்பட்டது. கல்பம் பிரமனாயுள். கவசகுண்டலங்களுக்கு இத்தன்மை சூரியனா லமைந்துள்ளது.

235. வல்லார் வல்ல.........

இ - ள் : வல்லார் வல்ல கலைஞருக்கும் - வல்லவர்களுள்ளும் வல்லவராகிய சாஸ்திர ஞான முடையோர்க்கும், மறை நூலவர்க்கும் - வேதமாகிய நூலில் வல்ல பிராமணர்களுக்கும், கடவுளர்க்கும் - தேவர்களுக்கும், இல்லாதவர்க்கும் - பொருளில்லாத ஏழைகளுக்கும், உள்ளவர்க்கும் - பொருளுள்ள செல்வவான்களுக்கும், இரந்தோர் தமக்கும் - யாசித்தவர்களுக்கும், துறந்தோர்க்கும் - (பற்றுக்களை விட்ட) துறவிகளுக்கும், சொல்லாதவர்க்கும் சொல்பவர்க்கும் - (தமது குறையைச்) சொல்லாதவர்களுக்கும் சொல்பவர்களுக்கும், சூளும் சமய அதிபர்களுக்கும் - ஆராய்ச்சி செய்கின்ற வெவ்வேறு மதங்களுக்குத் தலைவர்களானவர்களுக்கும், அல்லாதவர்க்கும் - இவரொழிந்த மற்று மெல்லோர்க்கும், (சிறிதும் வேறுபாடு இல்லாமல்) இரவி மகன் - சூரிய புத்திரனான கர்ணன், அரிய தானம் அளிக்கின்றான் - (மற்றவர்களாற் கொடுத்தற்கு) அரியதான தானங்களைக் கொடுக்கின்றான்.

இல்லாதவர்க்கும் உள்ளவர்க்கும் இரந்தோர்க்கும் அறந்தோர்க்கும் கற்றவர்க்கும் கல்லாதவர்க்கும் புகழ்ந்தோர்க்கும் இகழ்ந்தோர்க்கும் பகைவருக்கும் பிறரால் அளிக்க அரியதான தானங்களைச் செய்கின்றான் சூரியன் புதல்வனான கன்னன்.

236. மைந்தற் குறுதி.........

இ - ள்: நீ—, மைந்தற்கு உறுதி வேண்டின்-உன் மகனான அருச்சுனனுக்கு நன்மையைப்பெற விரும்புவாயானால், வல்லே - விரைவிலே, முனிவர் வடிவு ஆகி - முனிவர்க்குரிய உருவத்தையுடையவனாய், சந்தம் பனுவல் இசைமாலை தான் ஆகானை - அழகிய பாடல்களிலமைந்த வரிசையான கீர்த்தியையுடையதான குணத்துக்கு இருப்பிடமான கர்ணனை, விரைந்து எய்தி - துரிதமாக அடைந்து, அந்தக் கவசகுண்டலங்கள் அளிப்பாய் என்றால்—அவனுடம்பிலுள்ள கவசத்தையும் குண்டலங்களையும் கொடுத்திடுவாயென்று வேண்டினால், இத்தப் புவியில் அவன் ஒன்றும் மறுத்து அறியான் - இந்த உலகத்தில் அக் கன்னன் ஒரு பொருளையும் (கொடுக்கமாட்டேனென்று) மறுத்தறியமாட்டான், உயிரே எனினும் ஈந்திடுவான் - (இரக்கப்படுவது) தனது உயிரேயாயினும் (தவறாது) கொடுத்திடுவான்.

"சந்தப் பனுவ லிசைமாலை" என்ற அடைமொழியால் பாட்டின் புகழ் இவனுக்குச் சிறப்பாக அமைந்துள்ளதை விளக்கினார். உயிரினும் இன்றியமையாதது வேறொன்று இன்றாதலால், 'உயிரே எனினும்' என்னும் ஏகாரம் உம்மையும் உயர்வு சிறப்புமாம்.

237. இரண்டு மவன்பா..........

இ - ள்: இரண்டும் - (மேற்கூறிய) கவசகுண்டலமாகிய இரண்டு பொருள்களையும், அவன்பால் நீ கவரின் - அக் கன்னனிடத்தினின்று நீ பெற்றுக்கொண்டு வந்தால், இ படி அரசர் - இந்தப் பூலோகத்திலுள்ள அரசர்கள் எல்லோரும், இருந்தேர் ஊர்ந்து - பெரிய தேரின்மேலேறிச் செலுத்தி, திரண்டு வரினும் - (ஒரு தொகையாகக்) கூடிவந்தாலும், வெம் சமரில்-கொடியயுத்தத்தில், திண்தேர் விசயன் எதிர்நில்லார்-வலிய இரதத்தையுடைய அருச்சுனனுக்கு எதிரில் நிற்கமாட்டார்கள், மூண்டு பொருவில் கன்னனும் - பகைத்துப் போர் செய்கின்ற வில்லில் வல்ல அக் கன்னனும், தன் முன்னே எய்தி - அவ் வருச்சுனனுக்கு எதிரில் வந்து, முடி சிதறி - (அவனம்பால்) தலை சிதறப்பெற்று, புரண்டு - கீழ்விழுந்து உருண்டு, மறியும் - இறப்பான், என - என்று (ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி உபாயங்) கூற, (உடனே) புத்தேள் அரசன் - தேவர்களுக்கு அரசனான இந்திரன், வணங்கி - (கண்ணபிரானை) நமஸ்கரித்து, போகின்றான் - (கன்னனிடஞ்) செல்பவனானான்.



கவச குண்டலங்களைக் கன்னனிடமிருந்து கவர்ந்துவிட்டாயானால், அருச்சுனனைப் போரில் வெல்லக்கூடியவர் யாருமில்லை என்பதாம்.

238. தண்டு தாளெனக்.........

இ - ள்: தண்டு தாள் என - (நடக்கும் ஆற்றல் குறைதலால் கையிலூன்றிப் பிடித்த) தடி கால் போல (உடலுக்கு ஆதாரமாய்) நிற்கவும், உடல் குனிந்து அலமர - உடம்பு கூன் வளைந்து தளரவும், தாள் இணை தளர்ந்து தள்ளாட - இரண்டு கால்களும் சோர்வை யடைந்து (நடக்கவொட்டாமல்) நடுங்கவும், யாவரும் கண்டு கை தொழ - எல்லோரும் (தனது விருத்த வேதிய வடிவத்தைப்) பார்த்து நன்கு மதித்துக் கைகூப்பி வணங்கவும், கவித்த கை குடையுடன் - மேலே கவியுமாறு பிடித்த சிறிய குடையுடனே, கங்கை நீர் நுரையை மொண்டு மேல் உற சொரிந்தது ஆம் என நரை - கங்கா நதியினது நீரின் நுரையை மொண்டெடுத்து மேலே மிகுதியாகச் சொரிந்தது போலவுள்ள வெள்ளை மயிர்களும், திரையுடன் - தோல் சுருங்குதலும் (ஆகிய இவற்றுடனே), மூப்பு ஒரு வடிவம் கொண்டது ஆம் என - முதுமைப் பருவமே ஒரு புருஷ ரூபத்தைக் கொண்டாற் போன்றதாமென்று சொல்லும்படி, கொற்றவன் வாயில் சென்று அடைந்தான் - வெற்றியையுடைய கர்ணனது வீட்டின் வாயிலைப் போய்ச் சேர்ந்தான்.

கங்காநதி இயல்பாகவே வெண்ணிறமான நீரையுடையதாதலால் நரையின் மிக்க வெண்மைக்கு அதை உவமை கூறினார், என்பது.

239. அடுத்த தானமும் பரிசிலு.........

இ - ள்: (இந்திரன் பெருங் கிழ வேடத்துடன் மிக மெதுவாகச் சென்று சேர்தற்குக் காலதாமதமேற்பட்டதனால்) இரவலர்க்கு - யாசகர்களுக்கு, அடுத்த தானமும் - செய்தற்குரிய தானங்களையும், பரிசிலும் - வெகுமானங்களையும், அருளுடன் - கருணையுடனே, முன் பகல் அளவும் - பகலின் முன்பொழுது கழியும் வரையிலும், கொடுத்து—, நாயகன் - எங்கள் தலைவனான கர்ணன், புகுந்தனன் - உள்ளே சென்று விட்டான், (ஆதலால்) நாளை நீர் குறுகுமின் - நாளைக்கு நீர் வாரும், என்று - என்று சொல்லி, தடுத்த - (முதலிற்) தடைகூறின, அவன் கோயில் வாயிலோர் - அக்கன்னனது அரண்மனையின் வாசற் காவலாளர்கள், மீளவும் - மறுபடி சென்று, உணர்த்தலின் - (விருத்த வேதியனது வருகையைக் கன்னனுக்குத்) தெரிவித்ததனால், தலைவனும் - எசமானான கர்ணனும், வருக என - (அவரை உள்ளே) வரவிடுங்க ளென்று சொல்ல, விரைவான் விடுத்த - துரிதமாக உள்ளே அழைத்துவந்து விடப்பட்ட, நால் மறை முனியை - நான்கு வேதங்களும் வல்ல அம்

முனிவனை, முன் காண்டலும் - எதிரிற் பார்த்தவளவிலே, வேந்தனும் - கர்ணமகாராசனும், தொழுது - கைகூப்பி அஞ்சலிசெய்து, அடிவீழ்ந்தான் - அவன் திருவடிகளில் வீழ்ந்து (சாஷ்டாங்கமாக) நமஸ்கரித்தான்.

தடுத்த வாயிலோர் மீளவும் உணர்த்தியமை - இவனது மூப்பின் முதிர்ச்சியை நோக்கி எழுந்த இரக்கம் போலும்.

240. என்ன மாதவம்.........

இ - ள் : (கர்ணன் வணங்கியபின் வந்த அந்தணரைப் பார்த்து நீ—, ஈண்டு - இவ்விடத்தில், பரிந்து - அன்புகொண்டு, எழுந்தருளுதற்கு - கருணையோடு வருவதற்கு, என்ன மாதவம் புரிந்தனன் - (நான்) என்ன பெருந்தவத்தைச் செய்தன்ளேனோ?, என்று - என்று (உபசார வார்த்தை) கூறி, பொன்னின் ஆசனத்து இருத்தி - பொன் மயமானதொரு ஆசனத்திலே எழுந்தருளப்பண்ணி, மெய்' அருளுடன் - உண்மையான கருணையுடனே, பூசையும் - உபசாரங்களையும், முறை புரிய - நூல்முறைமைப்படி செய்ய, (அப்பொழுது) அன்ன வேதியன் - அந்தப் பிராமணன், தளர்ந்த என் நடையினால் - மிகத் தளர்ச்சி பெற்றுள்ள எனது நடையினாலே, பின் பகல் ஆனதே - (நான் வந்து சேர்தற்குப்) பிற்பகற் பொழுதாய் விட்டது, என்று சொன்ன வேலையின் - என்று சொன்ன பொழுது, (கன்னன்) நகைத்து - சிரித்து, நீ சொன்னவை யாவையும் உனக்கு அளிப்பன் என்றான் - (காலங்கடந்தாலும்) நீ விரும்பிச் சொன்ன பொருள்களையெல்லாம் (இப்பொழுது உனக்கு நான்) கொடுப்பேன், என்று கூறினான்.

முற்பகல் கழிந்துபோனதால் வேண்டும் பொருளைக் கொடுக்க மாட்டானென்று இந்திரன் தன்னை இகழ்ச்சியாய்க் கருதிக்கொண்டமையை நோக்கிக் கர்ணன் சிரித்தான் ; மிகுந்த அன்பால் முகமலர்ந்து சிரித்தனன் என்பதுமாம்.

241. அருத்தி யீதல்.........

இ - ள் : அருத்தி ஈதல் - (எனக்கு) விருப்பமான பொருளைக் கொடுத்தல், பொன் சுரதருவினுக்கும் - பொன்மயமான தேவதருவாகிய கற்பக விருட்சத்துக்கும், அரிது - அருமையானதாம், (அங்ஙனமிருக்க) நீ அளித்தியோ - நீ கொடுத்திடுவாயோ?, என்று—, விருத்த வேதியன் - அந்தக் கிழப்பிராமணன், மொழிந்திட - சொல்ல, நகைத்து - சிரித்து, மெய் உயிர் நீ விழைந்து இரந்தாலும் - எனது உடம்பிலுள்ள உயிரை நீ விரும்பிக் கேட்டாலும், கருத்தினோடு - மனச்சம்மதியுடனே, உனக்கு அளித்திலேன் எனின் - உனக்குக் கொடாமற் போவேனானால்,



(யான்) எதிர் சுறுத்தவர் - எதிரிற் கோபித்து நின்ற பகைவர்கள், கண் இணை சிவப்ப - இரண்டு கண்களுஞ் சிவக்கும்படி, உருத்த - உக்கிரமாகச் செய்கிற, போரினில் - யுத்தத்தில், புறந்தரு - முதுகு கொடுத்துச் செல்கிற, கிருபர் - அரசர்கள், போய் உறு - (மறுமையிற்) போய்ச் சேர்கிற, பதம் - துர்க்கதியை, உறுவன் - அடைவேன், என்று உரைத்தான் - என்று கூறினான். மற்று - வினை.

கருத்தின்றிக் கொடுத்தல், சிறப்புடைய தானமானது. இங்கே நகைத்தல் - தன்னைப் பிறன் இகழ்ந்தமை காரணமாக வந்தது.

242. வந்த வந்தணன்........

இ - ள் : (அதுகேட்டு) வந்த அந்தணன் - இரப்பதற்கு வந்த அந்தணன், கவசகுண்டலங்களை வாங்கி நீ எனக்கு வழங்கு என்ன - (கூடப்பிறந்த) கவசங்களையும் குண்டலங்களையும் (உன் உடம்பினின்று) கழற்றி நீ எனக்குக் கொடு என்று கேட்க, (உடனே) அவன் - அக் கன்னன், தந்தனன் பெறுக என வழங்க - கொடுத்துவிட்டேன் பெற்றுக்கொள்வாயாக என்று சொல்லி (அவற்றை அவனுக்கு) கொடுக்கும் போதினில், விண் தலத்தில் - ஆகாயத்தினிடத்திலே, ஓர் தனி அசரீரி - ஒப்பில்லாததொரு ஆகாயவாணி, (கன்னனை நோக்கி) மாயவன் இந்திரன் தனை விரகினால் ஏவினான் - கண்ணன் இந்திரனை வஞ்சனையால் (இங்ஙனம்) அனுப்பினான் (ஆகையால்), நீ வழங்கல் - நீ கொடுத்திடாதே, எனவும் - என்று சொல்லவும், (அது கேட்ட பின்னும்) இல்லையென்னுமல் செம்சுடர் தினகரன் சிறுவன் - சிவந்த கிரணங்களையுடைய சூரியனது புத்திரனான கர்ணன், சிந்தையின் கண் ஓர் கலக்கம் அற்று - மனத்திற் சிறிதுஞ் சஞ்சலமில்லாமல், அளித்தனன் - கொடுத்திட்டான்.

கர்ணனது எல்லையில்லா வள்ளன்மை இதனால் விளங்கிற்று. அசரீரி - உடம்புடைய தல்லாத சொல் தெய்வம். ஒருருவமும் கண்ணுக்குப் புலப்படாமற் பேச்சு மாத்திரம் கேட்பது. சூரியனேவலால் இங்ஙனம் கூறிற்று.

243. அண்டர் யாவரு மலர்.........

இ - ள் : (கன்னன் கவச குண்டலங்களைக் கொடுத்த பொழுது) அண்டர் யாவரும் - தேவர்களெல்லாரும், அந்தர துந்துபி ஆர்ப்ப - ஆகாயத்திலுள்ள தேவ துந்துபி வாத்தியங்கள் முழங்க, அவர் மலர் மழை பொழிந்தனர் - புஷ்பவருஷத்தைச் சொரிந்தார்கள், கொண்டல் வாகனன் - மேகத்தை வாகனமாகவுடைய இந்திரன், கொண்ட மெய் ஒழிந்து - (தான் கபடமாக) எடுத்த கிழப் பிராமண வடிவம் நீங்கி, தன்

கோலம் மெய்யுடன் வெளிநின்றான் கண்டு - அங்ஙனம் தேவராசனான இந்திரன் தன்னிடம் வந்து இரந்து பெற்றதைப் பார்த்து, மா மனம் உருகி - பெருமைக் குணமுடைய தனது மனங் கரைந்து, கலைத்திடும் - மிக மகிழ்கின்ற, கன்னனுக்கு—, அ நெடுங் கடவுள் - அந்தச் சிறந்த தேவனான இந்திரன், மற்று - பின்பு, மண்டு போரினில் வயம் தரும் இது என - கொடுமையாகிய மிக்க யுத்தத்தில் வெற்றியைக் கொடுக்கும் இவ்வாயுதம் என்று கூறி, ஒரு கொற்றம் வேல் எடுத்து - வெற்றியைத் தருவதொரு வேலாயுதத்தைக் கையிலெடுத்து, கொடுப்ப என மேற்கவியோடு தொடரும்.

அலர்மழை பொழிதல் - பூக்களை மழைபோல மிகுதியாகச் சொரிதல். தெய்வத்தன்மையால், இந்திரன் நினைத்த மாத்திரத்தில் 'வேல்' இந்திரன் கையில் வந்தது.

244. வெலற் கருந்திறல்.........

இ - ள்: (இவ் வேலாயுதத்தை) நீ—, வெலற்கு அருந்திறல் விசயன் மேல் ஒழித்து - (எவராலும்) வெல்லுதற்கு முடியாத வல்லமையையுடைய அருச்சுனன்மேற் பிரயோகிப்பதை விட்டு, வெம் சினம் மடங்கல்போல் - கொடிய கோபத்தையுடைய ஆண்சிங்கம்போல, நெஞ்சில் கலக்கம் ஒன்று அற - மனத்தில் நிலை கலங்குதல் சிறிதுமில்லாமல், பொரு - போர் செய்கிற, திறல் - வல்லமையை, புனைந்திடு - மேற்கொண்டுள்ள, கடோற்கசன் காளை தன் - (வீமன் மகனாகிய) கடோற்கசனென்னும் இளவீரனது, உயிரே - பிராணனே, எதிர்வந்து மலைந்தபோது - (அவன்) எதிரில்வந்து போர்செய்தபொழுது, இதற்கு இலக்கு என - இந்த ஆயுதத்துக்குக் குறியாக இருக்க, ஏவு - (இதனை அவன்மீது) பிரயோகிப்பாய், என - என்று சொல்லி, மறையையும் இயம்பி - (அதற்குரிய) மந்திரத்தையும் உபதேசித்து, சொலற்கு அரும்புகழ் சுரபதி - (எவராலுஞ்சரி) சொல்லுதற்கு முடியாத கீர்த்தியையுடைய தேவராசனான இந்திரன், கொடுப்ப - (அந்த வேலைக்) கொடுக்க, அ தோன்றலும் - அந்தக் கர்ணராசனும், தொழுது - (இந்திரனை) வணங்கி, கைக்கொண்டான் - (அவ்வாயுதத்தைப் பணிவோடு) பெற்றுக்கொண்டான்.

கடோற்கசன் வரலாறு வேத்திரகீயச் சருக்கத்துள் கூறப்பட்டது. மடங்கல் - பிடரிமயிர் மடங்குதலையுடையதெனத் தொழிலாகு பெயராய் வந்த காரணக்குறி யென்பர்.

245. நிரந்தரம் புகழ்........

இ - ள்: புரந்தரன் - இந்திரன், நெஞ்சு உற மகிழ்ந்து - மனம் மிக மகிழ்ச்சி பெற்று, நிரந்தரம் புகழ் நிலை பெறும் கன்னனை அவண் நிறுத்தி - எக்காலத்தும் கீர்த்தி நிலைபெற்ற கர்ணனை அவ்விடத்திலே நிற்கச்செய்து (தான் விடை பெற்றுக்கொண்டு), பசுந்தண் துழாய் அணிந்திடும் புயல் வண்ணன் இருந்த உழி போந்து - பசியநிறமான குளிர்ந்த திருத்துழாய் மாலையைத் தரித்திட்ட காளமேகத்தையடைந்து, தான் சென்று இரந்து மொழிந்ததும் - தான் கன்னனிடம் போய் யாசித்துச் சொன்னதையும், அவ்வளவு ஈந்ததும் - (அம்மாத்திரத்தில்) அவன் தனக்குக் கொடுத்ததையும், ஆங்கு அவற்கு இசைத்தான் - அவ்விடத்தில் (அப்பொழுது) அக் கண்ணனுக்குக் கூறினான், வரம் தரும் திருமால் - (வேண்டுவோர்க்கு வேண்டிய) வரங்களை யெல்லாம் கொடுத்தருளுகிற திருமகள் கொழுநனான கண்ணன், அதை வினவி - அந்த இந்திரன் வார்த்தையைக் கேட்டு, அவ் வாசவன் தனக்கு உரை வழங்கும் - அந்த இந்திரனுக்கு ஒருவார்த்தை கூறுவான்.

புயல்வண்ணன் இருந்துழி - விதுரன் மாளிகை. மனம் மிக மகிழ்தற்குக் காரணம், கண்ணன் கட்டளைப்படியும் தான் விரும்பினபடியும் அருச்சுனனுக்கு அபாயமுண்டாகாதவாறு கன்னனிடம் கவச குண்டலங்களைப் பெற்றுவிட்டது. எல்லாவரங்களையும் எல்லோர்க்குந் தரவல்ல எம்பெருமான் தான் ஒருவனை இரந்ததும், மற்றொருவனை இரக்கும்படி பிறனைத் தூண்டினதும், மனிதனாக அவதரித்ததற்கேற்ற திருவிளையாடலேயாம் என்பது தோன்ற 'வரந்தரு திருமால்' என்றார்.

246. உண்மையாகவெஞ்.........

இ - ள்: வெம் சமர் முகத்து - கொடிய போர்முனையிலே, எறி படை ஒன்றும் வந்து - (பகைவர்) வீசுகிற ஆயுதமொன்றும் வந்து, உண்மை ஆக உடல் உற ஒட்டா - மெய்யாக உடம்பிற் படுதற்கு இடங்கொடாத, திண்மையால் - வல்லமையினாலே, உயர் - சிறந்த, கவச குண்டலங்களை - கவசத்தையுங் குண்டலங்களையும், சென்று இரந்தவற்கு - போய் யாசித்தவனுக்கு, இவன் கொடுத்தான் - இக் கர்ணன் கொடுத்திட்டான்; இயம்பு இலா புல் செல்வர் - இயற்கையில் நற்குணமில்லாத இழிவான செல்வமுடையவர்கள், எண்மை ஆயினும் - (இரக்கப்படும் பொருள் தம்மாற் கொடுப்பதற்கு) எளியதாயிருந்தாலும், கிளைஞரே ஏற்பினும் - அதனையிரப்பவர் (நெருங்கிய) உறவினர் (அல்லது நண்பர்களே) ஆனாலும், ஈயார் - (ஒன்றையும்) கொடுக்க மாட்டார்கள், வண்மையாளர் - கொடையாளிகளோவெனின், தம் ஆர் உயிர் - (இரக்கப்படுவது) தமது அரிய உயிரேயானாலும், மாற்றலார் கேட்பினும் - (அதனைப்) பகைவர்கள் வந்து இரந்தாலும், மறுக்கிலார் - தடுத்துக் கொடாதொழியார்கள், என்று - என்று சொல்லி, (விடைகொடுத்ததன்பின், என மேற்கவியோடு தொடரும்.)

உத்தமரது தானச் சிறப்பை எடுத்துக் கூறுவார் அதற்கெதிராகிய அதமரது லோப குணத்தினிழிவையும் உடனெடுத்துக் காட்டினார். 'கர்ணன் மிகுந்த கொடையாளி' என்ற சிறப்புப் பொருளை 'உத்தமரது உதார குணம் இத்தன்மையது' என்ற பொதுப் பொருள்கொண்டு விளங்க வைத்தது வேற்றுப்பொருள்வைப்பணி. மாற்றலார் - தம்மிடத்து மனத்தை மாற்றும் இயல்புடையவரென உடன்பாட்டுக் குறிப்புவினையாலணையும் பெயராகிய காரணக்குறி.

247. வாசவன் றனக்கு........

இ - ள்: வாசவன் தனக்கு - இந்திரனுக்கு, விடைகொடுத்ததன் பின் - செலவு கொடுத்தனுப்பிய பின்பு, கேசவன் - கண்ணன், வந்த காரியந்தனைமுடிப்பான் - (தான் திருவுள்ளத்திற் கருதி) வந்த தொழிலை நிறைவேற்றும் பொருட்டு, தனது தாதையோடு உதித்த கேண்மை கூர் தெரிவையைக் கிட்டி - தனது தந்தையாகிய வசுதேவருடன் பிறந்த [தனது அத்தையாகிய] (யாவரிடத்தும்) அன்புமிக்க குந்திதேவியை அடைந்து, தேசவன் தந்த குரிசில்பால் விரைவின் செல்க என - ஒளிமிகுதியையுடைய சூரியன் பெற்ற குமாரனான கர்ணனிடத்திற் சீக்கிரமாகச் செல்வாயென்று சொல்ல, பயந்த சேயிழையும் - (அவனைப்) பெற்றவளாகிய குந்திதேவியும், பாசம் முன்உற - (மைந்தனாகிய கன்னன் பக்கல்) அன்பு (தனக்கு) முன்செல்ல, மால் ஏவலால் - கண்ணனது கட்டளைப்படி, தனது பாதபங்கயம் சிவப்பித்தாள் - தன்னுடைய தாமரைமலர்போன்ற கால்களைச் சிவக்கச்செய்தாள்.

கண்ணன் குந்தியைக் கன்னனிடம் அனுப்பினானென்பதாம். தெரிவை - ஈண்டுப் பெண் என்ற அளவில் நின்றது. அப் பருவத்துக் குரிய வயதெல்லை இருபத்தாறுமுதல் முப்பத்தொன்றளவுமாம். சேயிழை - பண்புத்தொகை அன்மொழி.

248. வந்துகுந்திநின்.........

இ - ள்: (இங்ஙனம் குந்தி கர்ணன்வீட்டுக்கு நடந்து சென்று சேர்கையில்) குந்தி வந்துநின் கோயில் எய்தினன் என வாயிலோர் உரைத்திட - குந்திதேவி வந்து உனது சிறந்த அரண்மனையை அடைந்தாளென்று வாயில் காவலாளர் (கன்னனிடஞ்) சொல்ல, மைந்தன் - புத்திரனாகிய கர்ணன், மூந்தும் அன்புடன் - மிகுந்த அன்புடனே, எதிர்கொண்டு - எதிர்கொண்டுவந்து, தொழுது - வணங்கி, நல் முறைமையால் - (சாஸ்திரங்களில் தாய்க்குச் செய்யும்படி சொன்ன) நல்ல உபசாரமுறை தவறாமல், ஆசனத்து இருத்தி - (சிறந்ததோர்) ஆசனத்திலே வீற்றிருக்கச் செய்து, இந்துவின் கதிர் கண்டு மேல் மேலும் உற்று இரங்கி வான் கரை கடந்து ஏறும் சிந்து வெண்



திரை சிந்து ஒத்து உருகும் தெரிவையோடு - சந்திரனது கிரணத்தைப் பார்த்து (மிக மகிழ்ந்து மேலே மேலே பொங்கி ஒலித்துப் பெரிய கரையைக் கடந்து மீதெழுந்து வீசுகின்ற வெண்மையான அலைகளையுடைய கடலைப்போன்று மனம் மிக மகிழ்கிற அக் குந்தியுடனே, சில உரை செப்பும் - சில வார்த்தைகளைக் கூறுவான்.

கன்னன் குந்தியை வரவேற் றுபசரித்தா னென்பதாம். சந்திரனைக் கண்டு கடல் பொங்குவது பிரசித்தம். கர்ணனுக்குச் சந்திரனையும் அவனது தாய்க்குச் சந்திரனது உற்பத்தி ஸ்தானமாகிய கடலையும் உவமை கூறினார். நான்காமடியிலுள்ள சிந்து என்னுஞ் சொல் இரண்டனுள் முன்னது - தமிழ் வினைப்பகுதி; பின்னது விந்து வென்னும் வடமொழிப்பெயர்.

249. அன்னைவந்ததென்.........

இ - ள்: 'அன்னை - தாயே! வந்தது - (நீ என்னிடம்) வந்தது, என் அரு தவம் பயன் - எனது அருமையான தவத்தின் பயனும்', என - என்று சொல்லி, அன்பினால்—, இன்பு உற வணங்கி - மகிழ்ச்சி பொருந்த அவளை நமஸ்கரித்து வந்த ஆறு என்னை என்ன - (நீ இங்கே) 'வந்த காரியம் என்ன'? என்று கேட்க, மற்று - பின்பு, அவளும் - அக்குந்தியும், யான் உனக்கு ஈன்ற தாய் என்று - 'நான் உனக்குப் பெற்ற தாயாவேன்' என்று (முதலிற் சுருக்கமாகக் கூறி), (உடனே) தவம் முனி - தவத்திற் சிறந்த தூர்வாச முனிவன், முன்னை - இளம்பிராயத்திலே, வந்து—, ஒரு மந்திரம் - ஒரு மந்திரத்தை, மொழிந்ததும் - (தனக்கு) உபதேசித்தருளினதையும், கதிரவன் அருளால் - சூரியனது அனுக்கிரகத்தால், பின்னை - பின்பு, வந்ததும் - (கன்னன்) பிறந்ததையும், பேழையில் விடுத்ததும் - (தான் அவனைப்) பெட்டியில் (வைத்து நதியிற்) செலுத்தினதையும், (ஆகிய வரலாறுகளை) பிழை இலாது உரைத்திட - தவறுதலில்லாமற் சொல்ல, கேட்டு - (கர்ணன்) செவியுற்று.

கன்னனுக்குத் தான் தாய் என்பதைக் குந்தி கூறினாளென்பதாம். 'சாபத் தானும் சாபமொழி தன்னால் உளருந் தவத்தாலுங், கோபத் தானும் பேர்படைத்த கொடிய முனிவன் துருவாசன்' ஆதலின் 'தவமுனி' என்றார். உனக்கு ஈன்றதாய் - நான்காம் வேற்றுமை முறைப்பொருள்.

250. மாயனார் விரகிது.........

இ - ள்: உவந்து அளித்திடும் வள்ளல் - (தன்னை வந்து அடைபவர்க்கு வேண்டிய பொருள்களை) மகிழ்ச்சியோடு கொடுத்திருக்கிற உதாரகுணமுள்ளவனாகிய கர்ணன், இது மாயனார் விரகு என மனத்

தினில் மதித்து - (இங்ஙனம் இவள் சொல்லும்) இது கண்ணபிரானது வஞ்சனையாக இருத்தலும் கூடுமென்று மனத்திலே நினைத்து, (அவளை நோக்கி) நீ அ நாள் எனை பயந்தவள் என்னினும் - நீ அக்காலத்தில் என்னைப் பெற்றவளென்று சொன்னாலும், நின் மொழி நெஞ்சு உற தேறேன் - உன் வார்த்தை மனத்திற் பொருந்த நம்ப மாட்டேன், பேய் அனார் சிலர் - பேயையொத்தவராகிய சில மகளிர், பேர் அறிவு இன்மையால் - சிறந்த அறிவு இல்லாமையால், எனக்கு பெற்ற தாய் என வந்து - எனக்கு ஈன்ற தாயாவேனென்று (தனித் தனி உறவு கூறி வந்து, தூய நாகரின் அமைந்து ஓர் துகிலால் - பரிசுத்த குணமுள்ள தேவர்களால் அமைக்கப்பட்டவொரு வஸ்திரத்தால், துன்பம் உற்று - மரணவேதனையடைந்து, என்பு உரு ஆனார் - எலும்பு மாத்திரம் மிகுந்த வடிவமானார்கள்.

குந்தி கூறியதை நம்பாமல் கன்னன் அவளை எச்சரித்தானென்பதாம். கன்னன் தாய் இன்னாள்தானென்பது தெரியாதபடியினால், கொடைவள்ளலான கன்னனது தாயென்ற புகழையும் பொருளையும் விரும்பிப் பலமகளிர் தாம், தாம் தாயெனக் கூறினர். இதன் காரணமாகக் கன்னன் தேவர்களை வேண்ட, அவர்கள் தெய்வத்தன்மையுள்ள ஆடையைக் கொடுத்து, 'உண்மைத் தாயைத்தவிர மற்றவரிதனை அணிந்தால் இறப்பர்' என்றும் கூறிப்போயினார். இந்த ஆடையினாற் பரீட்சிக்கப்பட்ட மகளிர் பலர் உடலெரிபட்டு இறந்தனரென்பது வரலாறு.

251. அடாது செய்தவர்........

இ - ள்: 'அடாது செய்தவர் - தகாத காரியத்தைச்செய்தவர்கள், படாத பட்டனர் - படுதற்கரிய பாடுபட்டு இங்ஙனம் ஒழிந்தார்கள்', எனும் - என்று சொன்ன, அங்கர் கோன் அருள் மொழி - கர்ணனது கருணையோடு கூடிய வார்த்தையை, கேட்டு—, தடாது அன்பு உடை கெடாதது மொழி பகர் தையலும் - (எவராலும்) தடுக்கப்படாத அன்புடையவளும் குற்றமில்லாத பரிசுத்தமான சொற்களைச் சொல்பவளுமாகிய அழகிய அக்குந்தியும், மையலின் தவிர்ந்து - மயக்கத்தினின்று நீங்கி, 'படாம் அது என் கையில் தருக என - அந்த வஸ்திரத்தை எனது கையிலே கொடுப்பாய்' என்று சொல்லி, வருதலும் - (அவனாற் கொடுக்கப்பட்டு அது தன் கைக்கு) வந்தவளவிலே, 'பயந்திலேன் எனில் எனை முனி என்று - (யான் இவனைப்) பெற்றவனல்லேனானால் என்னைக் கோபித்தழிப்பாய்' என்று (அத் தெய்வ வஸ்திரத்தை நோக்கிச்) சொல்லி, எடா விரித்து அலைத்து உடல் பட போர்த்து - (அதனை) எடுத்துப் பிரித்து உதறித் தன் உடம்பிலே படும்படி



போர்த்துக்கொண்டு, எதிர் - (அக் கர்ணனது) எதிரிலே, ஈன்றதாய் ஆம் என - பெற்றதாய் இவளேயாம் என்று தெளியும்படி, இருந்தாள் - வீற்றிருந்தாள்.

கன்னன் கொடுத்த ஆடையை யணிந்து குந்தி தானே அவனது தாயென்பதை நம்பும்படி செய்தாளென்பதாம். அடாது, படாது - எதிர்மறை ஒன்றன்பால் வினையாலணையும் பெயர்கள். 'அடாது செய்தவர் படாது படுவர்' என்பது பழமொழி.

252. இருந்ததாயீன்ற..........

இ - ள்: இருந்த தாய் - (இங்ஙனம் ஆசனத்தில்) வீற்றிருந்த தாயான குந்திதேவி, ஈன்ற அன்று போல் - பெற்ற அந்நாளிற் போல, உருகி - மனம் மிக அன்புகொண்டு, இரு தட கொங்கைபால் சொரிந்தாள் - தனது பெரிய இரண்டு தனங்களினின்றும் பாலைச் சொரிய விட்டாள், (அப்பொழுது) இரவி சேய் - சூரிய புத்திரனான கர்ணன், விரும்பி - (தாய் பக்கல்) அன்புகொண்டு, அருந்துவான்போல - (அம் முலைப்பாலை) உண்பவன்போல, ஆகாத்துடன் - ஆசையுடனே, புளகு ஆனான் - உடம்பு மயிர் சிலிர்க்கப்பெற்றான், புரிந்ததாய் - (இங்ஙனஞ்) செய்த தாயான அக்குந்தி, அன்போடு—, இறுகுற தழுவி - (அவனை) நன்றாக அணைத்துக்கொண்டு, பொன் முடி மோயினள் உயிரா - அழகிய அவனது உச்சியை மோந்து பெருமூச்சுவிட்டு, 'நான் உனை அன்றே பரிந்து வளர்த்து எடுக்கப் பாக்கியம் செய்திலேன் என்றாள் - நான் உன்னைப் பெற்ற அக்காலத்திலேயே அன்புகொண்டு எடுத்து வளர்க்க நல்வினைப்பயன் பெற்றேனில்லை' என்று கூறினாள்.

மிகுந்த அன்பினால், இப்பொழுது தனங்களிற் பால் சுரந்தது என்க. மோயினன் - முற்றெச்சம். உடம்பில் மயிர் சிலிர்த்தல் அன்பின் மெய்ப்பாடு.

253. வருகவென் மதலா.........

இ - ள்: (பின்பு குந்தி கர்ணனைப் பார்த்து) என் மதலாய் - எனது புத்திரனே!, வருக - (என்னுடன்) வருவாயாக, இளைஞர் ஐவரும் - (பாண்டவர்களாகிய உன்) தம்பியரைந்துபேரும், நின் மலர் அடி அன்பினால் வணங்கி - உனது தாமரை மலர்போலும் பாதங்களை அன்பால் நமஸ்கரித்து, உரிமையால் - க்ஷத்திரிய தரும முறைப்படி, மனம் ஒத்து ஏவலே புரிய - மனம் ஒருமித்து நீயேவின சிறு குற்றேவல் தொழில்களையே செய்ய, ஒரு தனி - ஒப்பற்ற தனியாய், செய்ய கோல் ஓச்சி - (நீ) செங்கோலை நடத்தி, அரசு எலாம் வந்து

உன் கடைத்தலை வணங்க - அரசர்களெல்லாரும் வந்து உனது வாயிற் புறத்தில் நின்று வணங்கவும், ஆண்மையும் செல்வமும் விளங்க - வீரமும் செல்வமும் விளங்கவும், குரு குல அதிபர்க்கு குரிசில் ஆய் - குருகுலத்து அரசர்கட்கெல்லாம் அரசனாய், வாழ்வு கூர்வதே - வாழ்க்கை மிக வேண்டுவதே, கடன் - (நீ செய்தற்கு உரிய) கடமை, என - என்று, குறித்தாள் - குறிப்பிட்டுக் கூறினாள்.

குந்தி, கன்னனைத் தன்னுடன் வரும்படி வேண்டினாள் என்பதாம். தலைக்கடை - கடைத்தலையென முன் பின்னாக மாறி நின்றது; இலக்கணப் போலி.

254. பெற்றநீர் மகவன்........

இ - ள்: பெற்ற நீர் - (என்னை) ஈன்ற நீர், மகவு அன்பு இலாமையோ - புத்திர வாத்சலிய மில்லாமையினாலோ ?, அன்றி - அல்லது, பெரு பழி நாணியோ - பெரிய லோகாபாவதத்துக்கு வெட்கப்பட்டோ ?, விடுத்தீர் - (என்னை) விட்டுவிட்டீர், அற்றைநாள் தொடங்கி - அன்றைய தினம் முதல், இன்று அளவும் - இற்றைவரையிலும், என்னை—, ஆர் உயிர் துணை என கருதி - அருமையான உயிரோடொத்த நண்பனாக நினைத்து, (துரியோதனன்) கொற்றம் மா மகுடம் புனைந்து - வெற்றியை விளக்குகிற சிறந்த கிரீடத்தை (எனக்குச்) சூட்டி, அரசு அளித்து - (அங்கதேசத்து) அரசாட்சியையுங் கொடுத்து, கூட உண்டு - (என்னை) உடன் வைத்துக்கொண்டு புசித்து, உரிய தம்பியரும் சுற்றமானவரும் என் அடி வணங்க - (அவனுக்கு) உரிய தம்பிமார்களாகிய துச்சாதனன் முதலியோரும் (மற்றும் அவனுடைய) உறவினரானவர்களும் எனது பாதங்களை நமஸ்கரிக்க, தோற்றமும் ஏற்றமும் அளித்தான் - பிரசித்தியான பேரையும் உயர்வையும் (எனக்குக்) கொடுத்தருளினான்.

குந்தி கன்னனைப் பழிக்கஞ்சி விடுத்தது அன்பில்லாது விடுத்தது போலுமாகையினால் இதுவோ அதுவோ என விகற்பித்தான். ஏற்றம் - ஏறுதல், மேம்பாடு; தொழிற்பெயர்.

255. மடந்தை பொற்றிரு.........

இ - ள்: மாசு அற திகழும் ஏகாந்தம் இடந்தனில் - குற்றமில்லாமல் விளங்குவதொரு இரகசியமான இடத்திலே, நான்—, மடந்தை பொன் திரு மேகலை மணி உக புரிந்து - (துரியோதனன் மனைவியான) பாநுமதியினது பொன்னாலாகிய அழகிய மேகலாபரணத்தின் மணிகளைச் சிந்தும்படி செய்து, அயர்ந்து இருப்ப - செயலற்றுச் சிந்தித்திருக்க, (அப்பொழுது துரியோதனன் வந்து), 'எடுக்கவோ கோக்கவோ என்றான் - (இம்மணிகளை நான்) எடுத்துக் கொடுப்பேனாகவா? கோத்துக்கெடுப்பேனாகவா?' என்று (எனக்கு அச்சம் நீங்கும்படி) அன்போடு கேட்டான்; (அப்படிப்பட்ட) வேல் இராச ராசனுக்கு - வேலில் வல்ல துரியோதன ராஜனுக்கு, திடம்படுத்திடல் - உறுதியை உண்டாக்குதற்கு, செருமுனை சென்று (நான்) போர்க்களத்திலே போய், செம் சோறு கடன் கழிப்பதுவே - (அவன்) செவ்வையாகப் போட்டுவந்த சோற்றுக்குரிய கடனைத் தீர்ப்பதே, எனக்கு இனி புகழும் கருமமும் தருமமும் - எனக்கு இனிமேல் கீர்த்தி தருவதும் செய்யத்தக்க தொழிலும் அறமுமாம்,' என்றான் - என்று (கன்னன் குந்தியை நோக்கிக்) கூறினான்.



துரியோதனன் தன்னிடத்துக் காட்டிய விசுவாசத்தைக் கன்னன் குந்திக்கு எடுத்துக்காட்டிப் பாண்டவரிடம் தான் வரமுடியாதென்பதை விளக்கினானென்பதாம். கன்னபருவத்தில் 'வெஞ்சோற்றோடினிதருந்தி யமுதருந்தும் விண்ணவர்போ லிந்நெடுநாள் விழைந்து வாழ்ந்தேன், செஞ்சோற்றுக் கடனின்றே கழியேனாகிற் றிண்டோள்கள் வளர்த்ததனாற் செயல்வே றுண்டோ' எனவும், 'செருவிலெனதுயிரனைய தோழற் காகச் செஞ்சோற்றுக் கடன் கழித்தேன்' எனவும் கூறுவது காண்க.

256. பின்னையும்பற்பன்........

இ - ள்: மைந்தனும் - புத்திரனான கர்ணனும், பின்னையும் பல பல மொழிந்தபின் - பின்னும் அநேக வார்த்தைகளைச் சொன்னபின்பு, 'பலவும் பேசி என் - பல வார்த்தைகளையுஞ் சொல்லிப் பயன் என்ன ?, பூசலோ விளைந்தது - யுத்தமோ உண்டாய்விட்டது, நீர் இங்கு உன்னி வந்தது என் - நீர் இவ்விடத்தில் (என்னிடத்தில்) நினைத்து வந்த காரியம் யாது,? கரவாது உண்மையால் உள்ள ஆறு உரைமின் - ஒளிக்காமல் மெய்யாக உள்ளபடி சொல்லும்,' என்ன - என்று, இ பரிசினால் உரைப்ப - இந்த விதமாகச் சொல்ல, அன்னை - தாயான குந்தி, நன்று அற துறந்த அன்றையினும் - பெற்று (உடனே) நீங்கும்படி விட்ட அந்நாளிலும் (அதிகமாக), நெஞ்சு அழிந்து - மனம் வருந்தி, இருகண் நீர் சொரிய - தனது இரண்டு கண்களினின்றும் நீர் பெருக, அலறி — கதறி, வாய் குழறி - வார்த்தை தடுமாறி, நொந்து - வருந்தி, அழுதாள் - புலம்பினாள்.

தன்னை நாடிவந்த காரியம் யாதெனக் குந்தியைக் கன்னன் வினவினானென்பதாம். இங்கே 'பெற்றமனம் பித்து பிள்ளை மனம் கல்லு' என்ற பழமொழியையும் உற்று நோக்குக. 'அறற்றுறந்து', என்றும் பாடம். அறல் - நீர்; நீரிலே தள்ளிவிட்ட என்பது பொருள்.

257. ஆண்டுமாமகனு........

இ - ள்: ஆண்டு - அப்பொழுது, மா மகனும் - பெரிய மூதற் புத்திரனான கர்ணனும், இரு கண் நீர் துடைத்து - (அவளது) இரண்டு கண்களினின்றும் பெருகுகிற நீரைத் துடைத்து, அ அன்னையை பல் முறை தேற்றி - அப்படி அழுகிற தாயைப் பலதரம் சமாதானப்படுத்தி, மூண்ட வல்வினையின் பயன் அலாது யார்க்கும் முயற்சியால் வருவது ஒன்று உண்டோ - (முற்பிறப்பிற் செய்யப்பட்டு இப்பிறப்பிற்) பயன்தா நின்ற வலிய கருமத்தின் பயன் சேர்வதேயல்லாமல் எவர்க்கும் தமது பிரயத்தனத்தால் விளைவதொரு பயன் உண்டோ? (இல்லையென்றபடி). வேண்டும் யாவையுமே தருகுவேன் - (யான் எல்லோர்க்கும்) விரும்பிக் கேட்ட பொருள்கள் எல்லாவற்றையுமே கொடுக்கும் இயல்புடையேன், (ஆதலால்) நீரும் வேண்டிய வேண்டுக - நீரும் (இதுதவிர) உமக்கு வேண்டிய பொருள்களை வேண்டுவீராக, என்ன - என்று சொல்ல, பாண்டுவின் திரு மா மனைவியும் - பாண்டு மகாராசனது சிறந்த பெரிய மூத்த மனைவியான குந்தியும், அதற்கு - அக் கன்னன் வார்த்தைக்கு, பண்பினால் - இனிமையாக, இன்னன பகர்வாள் - இவ் வார்த்தைகளைக் கூறுவாள்.

தாயைத் தேற்றி வேண்டியவற்றைக் கேட்குமாறு வேண்டினானென்பதாம். எல்லாம் பழவினையின்படியே நடக்கும்; நான் வரவில்லையே என்பதனால் வருந்தவேண்டாம் எனக் கன்னன் தேற்றினான்.

258. பார்த்தன்வெஞ்சமரி..........

இ - ள்: பார்த்தன் - அருச்சுனன், வெம்சமரில் - கொடிய யுத்தத்தில், நின்னுடன் மலைந்தால் - உன்னுடன் போர் செய்தால், (அப்பொழுது நீ) பகை பெரு பாந்தள் அம் பகழி - (அவனுக்கு முன்னே தொடங்கிப்) பகையாயுள்ள பெரிய சிறந்த நாகாஸ்திரத்தை, கோத்தலும் - (அவன்மேல் ஒருதரந்) தொடுத்தவளவில், பிழைத்தால் - (அவன் அதற்குத்) தப்பிப் பிழைப்பானானால், மறத்தும் நீ விடுத்து கோறல் - மறுபடியும் (அந்த அஸ்திரத்தை) நீ (அவன்மேற்) பிரயோகித்து (அவனை)க் கொல்லாதே, என்று ஒரு வரம் குறித்தாள் - என்று சொல்லி ஒரு வார்த்தைக் குறிப்பிட்டு வேண்டினாள், 'வாய்த்த மற்றவர்கள் - பொருந்தின மற்றைப் பாண்டவர்கள் நால்வரை, இளைஞர் என்று - தம்பிமார்களெனக் கொண்டு, அவரை மலையல் - அவர்களைக் கொல்லாதே', என்று ஒரு வரம் குறித்தாள் —, மூத்தவன் - தமையனான கர்ணன், காதல் இளைஞர் தம் பொருட்டு - அன்புக்குரிய தனது தம்பியர்களுக்காக, மொழிந்தமை - (தாய் இங்ஙனஞ்) சொன்னதை, கேட்டு —, இவை மொழிவான் - இவ் வார்த்தைகளைக் கூறுவான்.



கன்னனிடம் குந்தி அருச்சுனன்மேல் இரண்டாம்முறை நாகாஸ்திரத்தைப் பிரயோகிக்க வேண்டாமெனவும் மற்றப் பாண்டவர்களைக் கொல்லவேண்டாமெனவும் வேண்டினாளென்பதாம். கோறல், மலையல் - எதிர்மறை ஒருமை ஏவல்கள். மலையல் என்பதற்குப் போர் செய்யாதே எனப் பொருள் கூறின் மேலே யுத்தபருவங்களோடு மாறுபடும்.

259. தெறுகணையொன்று.........

இ - ள்: 'தெறு கணை ஒன்று தொடுக்கவும் - அழிக்க வல்ல அஸ்திரத்தை ஒருமுறை பிரயோகிக்கவும், முனைந்து செரு செய்வோன் சென்னியோடு இருந்தால் - எதிர்த்துப் போர் செய்யும் பகைவன் தலை துணிக்கப்படாமல் அதனோடு பிழைத்திருந்தால், மறு கணை தொடுப்பது - (அதன்மேல் அந்த அஸ்திரத்தை) இரண்டாம் முறை விடுப்பது, மன்னவர்க்கு - அரசர்களுக்கு, ஆண்மையோ - பராக்கிரமமாகுமோ?, வலியோ - வலிமையோ? மானமோ - பெருமையோ? அறமோ - தருமமாகுமோ? (ஆகாதென்றபடி), உறுகணை ஒன்றே பார்த்தன்மேல் தொடுப்பன் - (நான்) அடைந்துள்ள நாகாஸ்திரத்தை ஒருதரமே அருச்சுனன்மேற் பிரயோகிப்பேன், ஒழிந்துளோர் உய்வர் - அவனொழிந்த பாண்டவர் நால்வரும் (என்னாற் கொல்லப்படாமற்) பிழைத்திடுவார்கள், என்று உரைத்தான் - என்று கூறினான், (யாவனெனில்) தறுகணர் அலர்க்கும் - கொடியவரல்லாத நல்லவர்க்கும், தறுகண் ஆனவர்க்கும் - கொடுமையையுடையோர்க்கும், (வேறுபாடின்றி) தண் அளி நிறைந்த - குளிர்ச்சியான கருணை நிரம்பின, செம் கண்ணன் - சிவந்த கண்களையுடைய கர்ணன்.

குந்தி கோரிய இருவரங்களையும் கன்னன் அளித்தானென்பதாம். 'ஆண்மையோ வலியோ மானமோ மன்னவர்க்கறமோ' எனக் கன்னன் அடுக்கி அடுக்கிக் கேட்டது, முதல் வரத்தை நீ கேட்டிருக்கத் தேவையேயில்லை' என்னுந் தொனிப்பட நிற்பது காண்க.

260. பெருவரமிரண்டும்..........

இ - ள்: பெரு வரம் இரண்டும் பெற்றபின் - பெரிய வரங்கள் இரண்டையும் (குந்தி தன்னிடம்) பெற்றபின்பு, (கன்னன்) தன்னை பெற்ற தாயினை கரம் குவித்து - தன்னைப்பெற்ற தாயாகிய அவளைக் கைகூப்பி வணங்கி, 'உலகில் சர அசரங்களுக்கு எலாம் தாயீர் - உலகத்திலுள்ள சராசரப் பொருள்களெல்லாவற்றிற்குந் தாயாகவுள்ளவரே!, எனக்கும் தரு வரம் இரண்டு உள - எனக்கும் (நீர்) கொடுக்கவேண்டிய வரங்கள் இரண்டு உண்டு, (அவை யாவையெனில்), வெருவரும் அமரில் - அஞ்சத்தக்க யுத்தகளத்திலே, பார்த்தனால் அடியேன்

வீழ்ந்தபோது - அருச்சுனனுல் நான் இறந்து விழும்போது, அவனிபர் அறிய - அரசர்களெல்லாருமறியும்படி, மருவரு முலை பால் எனக்கு அளித்து - மனம்பொருந்திய (உமது) முலைப்பாலை எனக்குக் கொடுத்து, உம்தம் மகன் எனும் வாய்மையும் உரைப்பீர் - உம்முடைய புத்திரன் யானென்ற உண்மையையும் வெளியிட்டுக் கூறுவீர்.

தனது தாயைச் சராசரங்கட்கெல்லாந் தாயெனக் கன்னன் விளித்தது நெடுங்காலந் தாய் யாரென்பதை அறியாமலிருந்து தாயன்பிற்காக அவன் ஏங்கி வருந்தியதை உணர்த்துகிறது. 'வீரர்களான பாண்டவரைப் பெற்ற குந்தியே கன்னனையும் பெற்ருள்' என்பதை உலகமறிய வேண்டுமென விரும்பி இந்த வரத்தைக் கேட்டானென்க.

261. உய்வருந்திறல்.........

இ - ள்: உய்வு அரு திறல் வெம் போர் முடிப்பு அளவும் - தப்புதலருமையான வலிய கொடிய பாரதப்போர் முடிக்கிறவரையிலும், உமக்கு நான் மகன் எனும் தன்மை ஐவரும் அறியாவண்ணம் நீர் காப்பீர் - உமக்கு நான் புத்திரனென்கிற உண்மையைப் பாண்டவர் ஐந்துபேரும் அறியாதபடி நீர் மறைத்துவைக்கக் கடவீர், அல்லது - அங்ஙனமன்றி, அங்கு அவர் சிறிது அறியின் - அப்படி அவர்கள் சிறிதாயினும் அறிந்தாரானுல், மை வரும் கடல் பார் அனைத்தையும் எனக்கே வழங்குவர் - கருநிறம்பொருந்திய கடல்சூழ்ந்த பூமி முழுவதையும் எனக்கே கொடுத்திடுவார்கள், வழங்கினுல் (அங்ஙனம்) கொடுத்தால், யான்—, என் கைவரும் துணைவன் தனக்கு அலால் வழங்கேன் - எனக்குப் (பலகாலமாகப்) பயின்று வந்த சிநேகிதனான துரியோதனனுக்கு (அதனைக் கொடுப்பேனே) அல்லாமல் (பிறர்க்குக்) கொடுக்க மாட்டேன், ஈது கடைப்பிடி கருமம் - இது உறுதியாகக் கொண்ட செயலாம், என்ருன் - என்று (கர்ணன் குந்தியை நோக்கிக்) கூறினுன்.

பாரத யுத்தம் முடியும் வரை நான் உனது மகனென்ற இரகசியத்தைப் பாண்டவரறியாமற் காப்பாற்றவேண்டுமென்பதைக் கன்னன் குந்தியிடம் தனது இரண்டாவது வரமாகக் கோரினுனென்பதாம். 'ஈது கருமம் கடைப்பிடி' என மாற்றி 'இந்தக் கருமத்தைத் தவருமற் செய்வாய்' எனப் பொருள் கூறுவது, 'நீர் காப்பீர்' என்பது போல மரியாதையாக விளித்த இடங்களுடன் மாறுபடுமென விடுக்க.

262. என்றலுமதுகேட்..........

இ - ள்: என்றலும் - என்று (கன்னன்) சொன்னவளவிலே, அது கேட்டு—, ஈன்ற தாய் - (அவனைப் பெற்ற தாயாகிய குந்தி, ஒக்கும் என்று கொண்டு - (இவை) தருமென்று உடன்பட்டு, இவரம் நேர்ந்து - இந்த இரண்டு வரங்களையுங் கொடுத்து, வல் துயர் மேன்மேல் வரை - கொடிய துன்பம் மேலே மேலே அதிகப்பட்டு வளர, யான் தளரா வகை - நான் தளர்ச்சியடையாதபடி, உனக்கு முன் உயிர் பெயர்வது - உனக்கு முன்னே (நான்) உயிர் நீங்குவது, இனி என்று - இனி எக்காலத்திலோ?, என - என்றுசொல்லி, தன் கண்கள் நீர் சொரிய - தனது கண்கள் நீரைப் பெருக்க, இனைந்து - சோகித்து, நைந்து - வாடி, அழுது அழுது - மிகப் பலம்பி இரங்கி - இரக்கமுற்று, என்று அருள் மதலை தனை தழீஇ - சூரியன் பெற்ற பிள்ளையான அக் கன்னனைத் தழுவி, நிறுத்தி - (அங்கே அவனை) நிறுத்திவிட்டு (விடைபெற்று) யாதவன் இருந்த உழி சென்ருள் - கண்ணன் இருந்த இடத்துக்குப் போனுள்.

கன்னனிடம் விடைபெற்றுக் குந்தி கண்ணனையடைந்தாளென்பதாம். என்று - ஒளியையுடையதெனக் காரணப்பெயர்; பகுதி; எல் - ஒளி.

263. கண்ணனுங் குந்தி.........

இ - ள்: கண்ணனும்—, குந்தி கன்னனோடு உரைத்த கருத்து எலாம் - குந்தி கர்ணனுடன் சொன்ன எண்ணங்களையெல்லாம், திருத்தம் ஆ கேட்டு - செவ்வையாகக்கேட்டு, ஆங்கு எண்ணமும் முடிந்தது என மகிழ்ந்து - அக் கன்னனிடத்திலுந் தான் எண்ணிய எண்ணம் நிறைவேறிற்றென்று சந்தோஷித்து, அந்த அணங்கையும் இல்லிடை இருத்தி - சிறந்த மகளாகிய அக்குந்தியையும் வீட்டிலிருக்கச்செய்து, தண் அளியுடன் தன் பின் வரும் நிருபர் தம்மையும் முறை முறை நிறுத்தி - குளிர்ச்சியான அன்புடனே தன் பின்னே தொடர்ந்து வருகிற அரசர்களையும் ஒருவ ரொருவராக நிற்கச் செய்துவிட்டு, பண் அமை தட தேர் மீது கொண்டு - அலங்காரம் அமைந்த (தனது) பெரிய தேரின்மேலேறிக்கொண்டு, அன்றே பாண்டவர் உறை நகர் (அடைந்தான் - அப்பொழுதே புறப்பட்டுப் பாண்டவர்கள் வசிக்கிற உபப்பிலாவிய ) நகரத்தைச் சேர்ந்தான்.

கண்ணன் தனது எண்ணம் கன்னனிடத்திலும் திருப்தியாக நிறைவேறியதைக் குறித்து மகிழ்ந்து, உடனேயே பாண்டவர்கள் வசிக்கிற நகரத்தை யடைந்தானென்பதாம்.

264. தூதுபோயரவத்.........

இ - ள்: தூது போய் - (தான்) தூது சென்று, அரவம் துவசனோடு - துரியோதனனுடனே, உறுதி சொன்னதும் - நன்மை தருவதான சமாதான வார்த்தையைக் கூறியதையும், அவன் - அத்துரியோ

தனன், மறுத்து - (அதற்கு உடன்படாது) தடுத்து, சினந்து-கோபித்து, மோது போர் புரியத் துணிந்ததும் - தாக்குகின்ற யுத்தத்தைச் செய்ய நிச்சயித்ததையும், விதுரன்—, முரிவில் இறுத்ததும் - வலிமையயுடைய [அல்லது பழைய] தனது வில்லையொடித்துப் போட்டு விட்டதையும், கங்குல் போது - இராக்காலத்தில், (ஆலோசித்துத் துரியோதனன்), வஞ்சம் போர் விளைத்ததும் - வஞ்சனையான யுத்தத்தை (நிலவறையில்) அமைத்து வைத்ததையும், கன்னன்—, புரந்தரற்கு ஈந்ததும் - இந்திரனுக்கு (த் தனது கவச குண்டலங்களை)க் கொடுத்ததையும், பயந்த மாது போய் வரங்கள் பெற்றவை ஒழிய மற்று எலாம் - பெற்ற தாயான குந்தி சென்று (கர்ணனிடத்து) வரங்கள் பெற்றவற்றைத் தவிர மற்றுமுள்ள எல்லாச் செய்திகளையும், மைத்துனர்க்கு உரைத்தான் - (ஸ்ரீ கிருஷ்ணபகவான் தனது) மைத்துனர்களாகிய பாண்டவர்களுக்குக் கூறியருளினான்.

குந்தி கன்னனிடம் வரம்பெற்றதைக் கூறாதது, குந்தி கன்னனுக்குக் கொடுத்த வரங்கள் நோக்கியென்க. மற்றெல்லாம் என்றதில் அசுவத்தாமனைப் பேதித்தது மடங்கும்.

கிருட்டிணன் தூதுச் சருக்க உரை முற்றிற்று.